"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

தை - மாசி - பங்குனி 1999

25ஆவது சிறப்பிதழ்

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £2.00




7 DAYS A WEEK, 11.00AM TO 7.00PM.

**JAS Musicals Ltd**

108A The Broadway, southall Middx, UB1 1QF, UK.

தரமான வாத்தியக் கருவிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள்

நேரில் வாருங்கள் அல்லது தபாலில் தொடர்பு கொள்ளுங்கள்

மணி 6 ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் ஒலி 25

கலசம்
KALASAM
தை-மாசி-பங்குனி 1999

# கடவுளை நேசியுங்கள்!
# உறவுகளைக் காப்பாற்றுங்கள்!

சற்று நில்லுங்கள்!

நாம் உரையாடவேண்டிய நேரம் இன்று உருவாகியிருக்கின்றது! இது கலசத்தின் இருபத்தைந்தாவது இதழ்! மனம் விட்டு உரையாடுவோம்! நாடு துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும்போது சமயத்துக்காக இவ்வளவு பணத்தை விரயம் செய்ய வேண்டுமா என்ற வினா மீண்டும் மீண்டும் எழுகின்றது. இதற்குப் பல தடவை நாம் உறுதியான பதிலை வழங்கியிருக்கிறோம். எப்படித்தான் நாம் விளக்கமளித்தபோதும் மக்களின் குழப்பநிலை தவிர்க்கமுடியாததாகவே இருக்கின்றது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற சைவ மகாநாட்டிலே பிரபல சமயப்பேச்சாளர் இலங்கையிலிருந்து வந்து, ஈழமண்ணில் விடுதலைப் போராட்டம் தோல்வி அடைவதற்கு அவர்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக இருப்பதுதான் என்று மொட்டையாகவும் அறிவிலித்தனமாகவும் பேசிய பேச்சு இன்று சமயவாதிகளை மக்கள் ஐயக்கண்ணோடு பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு உருவாக்கியிருக்கின்றது.

ஆதலால் சமய வாதிகள் உண்மையில் ஆண்டவனை நேசித்தால் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும்.

சமயத்தின் உள்ளர்த்தங்களைப் புரிந்து கொள்ளாத இந்த **மனனம் பண்ணிப்பேசும் பேச்சாளர்கள்** தங்களைத் தாங்களே மேதாவிகள் என்று நினைத்துக் கொண்டு உதிர்க்கும் கருத்துக்களால் மக்கள் குழப்பநிலைக்கு உள்ளாகின்றனர். இந்த மேதாவிகள் தயவு செய்து சமூகத்துக்கு அறிவுரை செய்வதிலிருந்து ஒதுங்கிக்கொள்வது சமூகத்துக்குச் செய்யும் பெரும் உதவியாக இருக்கும் என்று எண்ணுகின்றோம்.

பூமியில் எமக்குக் கிடைத்துள்ள வடிவம், இறைவனை வழிபடுவதற்காகவும் துன்பப்படும் ஆன்மாக்களுக்கு உதவி செய்வதற்காகவுமே என்ற நம்பிக்கை வழி வந்தவர்கள் நாங்கள்.

நாட்டிலே நடக்கின்ற யுத்தம் அநியாயத்துக்கெதிரான ஆன்மிக யுத்தம் என்பதனை ஏற்றுக்கொண்டவர்கள் நாங்கள்.

ஆனால் அநியாயத்துக்கெதிராக ஒரு திருஞானசம்பந்தர்போல் , அல்லது மாணிக்கவாசகர்போல், துணிந்து குரல் எழுப்ப முடியாத முதுகெலும்பற்றவர்களாக சமயவாதிகளான நாங்கள் இருப்பதனால், அழுகைக்குரலை நாங்கள் விதியென்று கூறித் தப்பித்துக்கொள்ளுகின்றோம். பசியால் அழும் குழந்தையைப் பார்த்து, **சொற்றுணை வேதியன்** பாடு, எல்லாம் சரி வரும் என்கின்ற ஈவிரக்கமற்றவர்களாக, சமயநம்பிக்கையைச் சிதைப்பவர்களாக மாறிவிட்டோம். வன்னி மண்ணிற் குழந்தைகளின் பசித்துன்பம் தாங்காது தற்கொலை செய்யும் பெற்றாரின் ஈமைச்சடங்குகளுக்குச் சிவபுராணம் பாடத் தயாராகிக் கொண்டிருக்கின்றோம்.

இதையெல்லாம் சிந்தனையோடு கேட்டால், எமக்கு நாஸ்திகர் என்ற பட்டம் இட்டுவிட்டு ஒய்யாரமாகச் சத்தமிட்டுத் தேவாரம் பாடிக் கொண் டிருக்கிறது ஒரு புராணபடனக் கூட்டம்.

கடவுள் கருணையின் வடிவமல்லவா!

துன்பப்படுதல் முன்வினைப்பயன்தான். ஆனால் ஒரு ஆன்மா இன்னொரு ஆன்மாவுக்குத் துணை நிற்க வேண்டுமென்பதுதானே நமது சைவசமயத் தத்துவம். அதைவிடுத்துத் துன்பப்படுபவர்களைக் கண்டும் காணதவர்போற் சென்றுகொண்டு பக்தர்களாக வேடம் போடுபவர்கள்தானே நாஸ்திகர்கள் எனும் பெயருக்குரியவர்கள்!

தயவு செய்து யதார்த்தத்துக்கு வாருங்கள்!

கடவுளைக் கல்நெஞ்சன் ஆக்கிவிடாதீர்கள்!

கண்ணைத்திறந்து பாருங்கள்!

ஆயிரம் தேவாரம்பாடிக் கண்ணை மூடித் தவம் இருப்பதைவிட வாழ்வற்றுத் தவிக்கும் ஒரு பிள்ளையின் வாழ்வைப் பொறுப்பேற்று வளர்ப்பதே உண்மையிற் கடவுளை நேசிப்பதாகும்.

நேசியுங்கள் கடவுளை!! காப்பாற்றுங்கள் உறவுகளை!!!

–ஆசிரியர்

## நாவுக்கரசர் நல்கிய பொங்கல் வாழ்த்து

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையும் அன்றே

ஆசிரியர்: திரு மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர் : திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகம்: திரு வ.இ. இராமநாதன் துணை நிர்வாகம்: திரு சிவ. அசோகன்
நிர்வாகக்குழு
திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு சி. அற்புதானந்தன், Dr.ந. நவநீதராசா, திரு இ. சிவானந்தராஜா, திரு சி. தர்மலிங்கம்
வெளியீடு : சைவ முன்னேற்றச் சங்கம்(பிரித்தானியா),
42, Stoneleigh Road, Clayhall, Ilford Essex, IG5 0JD, England Tel/Fax:0181 550 4233
இலங்கையில் தொடர்பு: Mr. K. Balasubramaniam, 131 Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka
ஜேர்மனியில் தொடர்பு: Mr. K.Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin, Germany. Tel: 030 251 0209
டென்மார்க்கில் தொடர்பு: Mr.R.Rajendram,Bjergmarken 21.ST,TV,4300 Holbeck,Denmark
Mr.K.Mohanarajah, Gronnehave Strade, 16 st.th 4500 Nykobing .ST Denmark



# நாவலரின் சமயப்பணி

த. சண்முகசுந்தரம்

மதத்தலைவரில் சிலர் தாம் வாழும் காலத்திலேயே பெரும்புகழுடன் இருப்பர்: ஆனால் அவர் மறைந்த பின்னர் சிலகாலத்திலேயே அவரின் புகழ் குன்றிவிடும். இன்னும் சிலதலைவர்களுடைய புகழ் அவர் வாழ்நாளிலேயே பரவுவதில்லை. அவரின் மறைவுக்குப் பின் அவரின் புகழ் படிப்படியாகப் பரவி வரலாற்றிலேயே நிலையான இடத்தைப் பிடித்து விடும். இன்னும் ஒரு சாரார் இருக்கின்றனர், இவர்களைக் கொடுத்துவைத்தவர்கள் என்றே சொல்லவேண்டும். இவர் வாழும் பொழுதே இவரின் பெயரும் புகழும் நன்கு பரவிவிடும். இவர்களின் மறைவிற்குப்பின்னர் இவரின் செல்வாக்கு மேலும் வளர்ந்து விடும். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர். இவர் ஐம்பத்தேழு வயதுவரை உயிர் வாழ்ந்தவர். தன்னுடைய இருபத்துமூன்றாவது வயது தொடக்கம் மறையும் வரை சைவப் பெரும்பணி செய்தவர். இவருக்கு ஈழத்தில் ஈடிணையற்ற மதிப்பிருந்தது. தமிழ்நாட்டிலும் அப்படியே. இவர்காலத்து வாழ்ந்த அறிஞர் குழாத்தினர் இவரின் பரந்த அறிவைப் பாராட்டினர். திறமையைக் கண்டு வியந்தனர். பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். நாவலர் மறைந்து நூறு ஆண்டுகள் கடந்து விட்டன. இன்றும்கூடச் சைவ அறிஞர் பலரும் நாவலர் இதுபற்றி என்ன கூறினார்? நாவலர் இதுபற்றி என்ன எழுதினார்? இன்று இவர் உயிர்வாழ்ந்தால் இதுபற்றி என்னகூறுவார்? என்ற வினாக்களை எழுப்பி விடைகாண முயலுகின்றனர். இந்தப் போக்கு ஒன்றே நாவலருக்கு ஒரு வகையில் இக்காலமக்கள் செய்யும் மரியாதை.

திருக்குறள் தனிச் சிறப்புடைய நூல். இதனை ஒவ்வொருவரும் தாம் வாழ்ந்த காலத்திற்கு ஏற்ப விளக்கத் தலைப்படுகின்றனர். நாவலரின் வாழ்க்கையும் காலத்திற்கு ஏற்ப விளக்குகின்ற முயற்சியும் மேற்கொள்ளப்படுகின்றது. நாவலரின் சைவத் தொண்டை ஆராயும்போது உள்ளத்தில் கொள்ளவேண்டியவை பல. அவற்றுள் முக்கியமானவை சிலவற்றைமட்டும் கவனிக்கலாம். தான்வாழ்ந்த காலத்திலே நாவலர் பெரும் மலைபோல நிமிர்ந்து நின்றவர். அவருடைய ஒழுக்கம், அறிவு, ஆற்றல், தியாகம், இறையன்பு என்பன மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அறிஞர் அவரிடம் கிட்டப் போகவே தயங்கினர். **நாவலர் அவதாரம் எனச் சிலர் கருதினர். இந்த அவதாரப்பட்டஞ் சூட்டும் முயற்சியை நாவலர் வெறுத்தார்: கண்டித்தார். இதனால் இவரின் புகழ் மேலும் ஒருபடி ஓங்கியது.** நாவலர் அவதாரம் ஐந்தாம்குரவர் என்ற கருத்து இன்றும் நிலவுகின்றது. நாவலருக்குக் குருபூசை எடுப்பது என்று பெருவழக்கு. நாவலர் வாக்குத் திருவாக்கு எனக்கருதும் அன்பர் பலர் இருக்கின்றனர். இன்னும் சிலர் நாவலர் வாழ்ந்த காலத்தில் அவரை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வன்மையாக எதிர்த்தனர். அவரின் உயிருக்கு உலைவைக்கவும் முயன்றனர் என்பர். இன்றும் நாவல்ரை எதிர்ப்பவர் இருக்கின்றனர். தமிழ் நாட்டிலே நாவலருக்கு உரிய இடம் சிறிது சிறிதாக மறுக்கப்படுகின்றது என்ற உள்ளக் கொதிப்பும் இருக்கின்றது. இந்நிலையிலே, நாவலரின் உண்மையான மதப்பணி யாது? நாவலரின் கோட்பாடு எது? நாவலர் சமயத்தொண்டு

மூலம் எதைச் சாதித்தார்? எதைச் சாதிக்க முயன்றார்? அதில் அவர்கண்ட வெற்றி யாது? இன்று நாவலரின் தாக்கம் எது? காலத்தை வென்று நிற்கின்ற மதப்பணியின் அம்சம் எது? என்ற வினாக்களுக்கு விடைகாண அறிஞர் முன்வரல்வேண்டும். இதுவே நாவலருக்குச் சைவ உலகம் செய்யக்கூடிய கைமாறு.

நாவலர் ஒரு யுகத்திலே பிறந்து வளர்ந்தவர், இன்னும் ஒரு யுகத்திலே வாழ்ந்தவர், மேலும் ஒரு யுகத்தை உருவாக்க உழைத்தவர். நாவலர் பிறந்து வளர்ந்த யுகம் நிலமானிய யுகம். ஈழத்திலே ஐரோப்பியர் ஆட்சி தோன்றிய பின்னரும் நிலமானிய முறை நிலவியது. நிலமானிய அமைப்பு முறையிலே சிறந்து விளங்கிய குடும்பம் ஒன்றிலே இவர் பிறந்து வளர்ந்தார். பழைய கல்வி மரபை ஒட்டியே இவரின் கல்வி நடந்தது. இதனைத் திண்ணைப் பள்ளிக் கல்விமுறை எனலாம். இன்னாரிடம் பாடம் கேட்டவர் என்றுதான் அந்தக் காலத்திலே ஒருவரைப் பாராட்டுவர். மேலும் கல்வியின் நோக்கம் கடவுளை யடைதல் என்பதே அக்காலக் கோட்பாடாக இருந்தது. இந்த யுகத்திற்கு ஏற்பவே நாவலரின் கல்வி அமைந்தது. நிலமானிய முறை ஒருபுறம் இருக்க, வேறு ஒரு யுகம் ஈழத்திலே தோன்றியது. ஆங்கிலேயர் ஆட்சியின் பயனாகப் புதிய மத்திய வகுப்பினர் தோன்றினர். இந்த வகுப்பினரின் தோற்றம் கிறித்துவ சூழ்நிலையிலே ஆங்கிலக்கல்வி மூலமும் நிகழத் தொடங்கியது. இதற்கேற்ப ஆறுமுகம் ஆங்கிலக்கல்வி பெறச் சென்றார். இந்தப் புதுயுகம் என்னும் அச்சிலே வார்த்து எடுக்க நாவல–ரை அவரின் குடும்பத்தினர் முயன்றனர். அச்சுப் பிளந்து வெடித்தது. அந்த அச்சிலே நாவலரை அடக்க முடியாது போயிற்று. இளம் ஆறுமுகம், இந்தப் புதுயுகத்தை எதிர்க்கத் தலைப்பட்டார், புதுயுகம் ஒன்றைக் காணத் துடி துடித்தார். ஆங்கிலேயர் தோற்றுவிக்க முயலுகின்ற புதுயுகம் பழமையை அழித்துக் கேட்டைக் கொண்டுவரும் என்பதை நாவலர் நன்கு உணர்ந்தார். நாவலர் புதுயுகம் காண முயன்றார் என்பதிலும் பார்க்கப் பழமைக்கு மெருகு கொடுத்து அதன்மூலம் பழமையை நிலைநாட்டிப் புதுயுகம் காண முயன்றார் என்பதே பொருத்தம். இப்படியான முயற்சி தென்னிலங்கையிலும் நடைபெற்றது. சில வேளைகளில் தனிமனிதன் முடிவு வரலாற்றையே மாற்றி அமைத்துவிடும். பழமையில் தன் கல்வியைத் தொடங்கி, புதுமையில் அதனை வளர்த்த நாவலர் கற்றாய்ந்து ஒழுகினார். தானும் கற்றார், ஆய்ந்தார், ஒழுகினார். பிறரையும் கற்கச் செய்தார், ஆய்வு செய்ய வைத்தார், ஒழுக வைத்தார். இதுவே நாவலருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது.

நாவலர் பின்பற்றிய நெறி சைவ நெறி. சைவநீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்பது அவர் கோட்பாடு. நாவலர் காலத்திலே சைவநெறி விளங்கவில்லை. அதனை விளங்கச் செய்யவேண்டிய நிலை இருந்தது. இதனை அவர் வேதாகம எல்லைக்குள் நின்றே செய்ய விரும்பினார். வேதத்தின் பழமையையும் அதன் கோட்பாட்டையும் அவர் போற்றினார். அக்காலத்திலே வேதம்தான் எல்லாம் என்ற கருத்து நிலவியது. நாவலர் வாழ்ந்த காலத்தை வரலாற்று அடிப்படையில் நோக்கலாம். நாவலரின் கருத்து யாவும் முளை கொண்டு வளர்ந்து பயிராகின. நாவலர் மறைந்த பின்னரே, சிந்துவெளிப் பண்பாட்டு ஆய்வு தொடங்கியது. ஆகவே அக்கால மரபுப்படி நாவலர் வேதாகம கோட்பாட்டையே போற்றிப் பின்பற்றினார். சிந்துவெளி நாதரிகமே சிவவழிபாட்டை உருவாக்கியது என இன்று ஆராய்ச்சியாளர் நிறுவ முயலுகின்றனர். சிந்து வெளியிலே கண்டெடுக்கப்பட்ட சிவனை யொத்த கொம்புக்கடவுள், சிவலிங்கம், தாய்மைக் கடவுள் மதவழிபாட்டுச் சான்று, இடப வழிபாடு என்பவற்றை நாவலர் அறிந்திருந்தால், தன் கருத்துக்களை மாற்றியிருக்கவும் கூடும். நாவலரின் சமயக் கோட்பாடு யாவும் வேதாகமவழி தமிழில் அழுந்த சைவத் திருநூல்களை மையமாக வைத்தே உருவாகின. ஐரோப்பிய வரலாற்று உணர்வு சரியாக உருவாகாத காலம் நாவலரின் காலம்.

நாவலரிடமிருந்த இருந்த கூரிய அறிவை அவருடன் வாழ்ந்து பழகிய எல்லோரும் மெச்சினர். வெறும் அறிவினால் மட்டும் நாவலர் தன் சாதனைகளை நிலைநாட்டவில்லை எனவும் ஒருசாரார் கருதுவர். அவருக்கு இறை அனுபவம் ஏற்பட்டது. அதனை அவர் வெளிக்காட்டவில்லை. ஆங்கிலம் கற்கும் போதும் கிறித்தவச் சூழ்நிலையில் கற்பிக்கும்போதும் நாவலர் அறிவுடன் இறையன்பையும் வளர்த்தார் எனவும் கொள்ளலாம். ஆகவே நாவலருக்கு உள்ளத்திலே அடித்தளத்தில் இறைஉணர்வு இருந்து வந்தது. இப்படியான உணர்வே அவரைத் தூண்டியது, இதுபற்றி ஆராய்ச்சியாளர் போதிய கவனஞ்செலுத்த வேண்டும். மத உலகிலே பெரிய சாதனைகளை நிலைநாட்டியவர் யாவரும் இறை இன்பம் பெற்றவர். நாவலர் பிறந்தது 1822இல், மறைந்தது 1889இல். பகவான் இராமகிருட்டினர் பிறந்தது 1836இல், மறைந்தது 1885இல். தன் சிந்தனை மூலமும் தியானம் மூலமும் புதியவழியை ஏற்படுத்தியவர் பகவான்

இராமகிட்டினர். அவர் இறை அனுபவத்தைத் தன் 23 ஆம் வயது வரையிலே பெற்றார், தாய்மைக்கடவுளை வணங்கிய இவர் இந்தியாவிலே சமரசத்தைப் போதித்துப் புதியவழியை உருவாக்கினார். அதற்கு முன்னரே நாவலர் விழிப்புணர்ச்சி பெற்று இலங்கையிலும் இந்தியாவிலும் மதவிழிப் புணர்ச்சியைத் தூண்டிவிட்டார். பகவான் சமரசம் பேசினார், நாவலர் திரும்பத்திரும்பச் சைவத்தை நிலைநாட்டவேண்டும் எனப் பேசினார். புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே இந்துசமயம் தோன்றியது, இதன் முக்கியமான உட்பிரிவுகள் ஆறு. இவற்றைத்தவிர அங்கு சமணமும் பௌத்தமும் தோன்றின. இசிலாமும் சிறித்தவமும் புகுந்தன. இந்துமதத்தின் உட்பிரிவுகளுக்குள் கூடப் பூசல் ஏற்படுவது வழக்கம். இருந்தும் பரந்த பரதகண்டம் இந்து மதங்கள் எல்லாவற்றிற்கும் இடம் கொடுத்தது. ஆகவே சமரசம் பேசுவது அங்கு சாத்தியம். பகவானைத் தொடர்ந்து பலரும் சமரசம் பற்றி எழுதினர், பாடினர், பேசினர் ஆனால் புண்ணியபூமி இரண்டு நாடாகப் பிளந்து இப்போது மூன்று நாடாகிவிட்டது என்பர். சமரசம் என்னும் சீரியநோக்குத் தோல்வி கண்டுவிட்டது என்பர். இருந்தும் இலட்சியவாதியின் தோல்வி, இலட்சியமற்றவரின் வெற்றியிலும் பார்க்க மாண்புடையது என்பதும் உண்மை. நிற்க, இலங்கையையும் நாவலரையும் நோக்கலாம். இலங்கை மிகச் சிறிய நாடு. இதில் சைவ மக்களின் தொகை குறைவு. போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது கத்தோலிக்க மதம் புகுத்தப்பட்டது. ஈழத்துப்பாடல் பெற்ற தலங்களும் ஏனைய தலங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. போர்த்துக்கேயரை விரட்டிய ஒல்லாந்தரும் இலங்கையில் தமது புரட்டசுத்தாந்து மதத்திற்கே முதலிடம் கொடுத்தனர். இதனால் சைவம் நலிந்தது. ஒல்லாந்தரை விரட்டிய ஆங்கிலேயர் சைவ சமய வளர்ச்சிக்கெதிராக மறைமுகமான உத்திகளைக் கையாண்டனர். இந்தச் சூழ்நிலையிலே சமரசம் பேசுவதோ, ஒப்புநோக்கி ஆய்தலோ இயலாத அலுவல். தன்வீடு தீப்பற்றி எரியும் போது, பிறன்வீட்டு அழகைச் சுவைப்பது எப்படி? அந்தப் பிறவீட்டான்தான் வீட்டிற்குத் தீயையும் வைத்துவிட்டான். ஈழத்து யாழ்ப்பாணத்தை மையமாக வைத்துப் போர்க் கொடியை உயர்த்தினார் நாவலர். இந்த வகையிலே அவரை மதத்தலைவர் என்பதிலும் பார்க்க மதத் தளபதி என்பதே பொருத்தம் போலத் தெரிகின்றது. நாவலர், மேலைநாட்டவரையும், அவரின் மதத்தாக்கத்தையும் எதிர்த்தார். ஆனால் அந்த எதிர்ப்பிலே வெறுப்புணர்ச்சி கிடையாது. ஆங்கிலேயரையும் அவரின் பேரரசுக் கோட்பாட்டையும் மகாத்மாகாந்தி எதிர்த்தார். வெறுப்புணர்ச்சி அவருக்கு இல்லை. இதனாலேதான் இந்தியா விடுதலை பெற்ற பின்னருங்கூட, இங்கிலாந்து இந்திய உறவைக் காந்தி விரும்பினார்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின்போது மக்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டனர். அவர்கள் தொடர்ந்தும் அதே மதத்தையே அனுட்டித்து வந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியின்போது கத்தோலிக்க மத அனுட்டானத்திற்குத் தடை இல்லை, ஆகவே கத்தோலிக்கத் திருச்சபைக்குப் புதிய மந்தை பெருமளவிலே தேவையில்லை. இருப்பது போதும் என்ற நிலையில் இத்திருச்சபை இருந்திருக்கலாம். ஆங்கிலேயரின் ஆட்சியின் நிழலில் இலங்கைக்குள் புகுந்தனர் புரட்டசுந்தாந்துகளின் பல்வேறு பிரிவினர். இவர்களுக்கும் புது மந்தை பெருமளவில் தேவைப்பட்டது. ஆகவே தம் மதமாற்ற முயற்சியில் இவர் ஈடுபட்டனர். இதனால் நாவலர் சேனாதிபதியாக மாறினார். இந்த முயற்சியில் ஈடுபட்ட நாவலர் தன் போராட்ட முயற்சியை இந்தியாவிற்கும் எடுத்துச்சென்றார். இந்தியாவிற்கு அச்சுக்கூடம் வாங்கப்போனவர் நாவலராகத் திரும்பி வந்தார் என்ற கருத்தும் நிலவுகின்றது. இருந்தும் நாவலர் மேற்கொண்ட இந்தியத்தூது திட்டமிட்ட செயல் என்பதே பொருத்தம். தமிழ்நாட்டிற் சைவத்தை வளர்க்கவேண்டும், இலங்கையிலே அதனை மீட்கவேண்டும் இதுவே நாவலரின் இலட்சியம்.

இலங்கையில் நாவலர் பின்பற்றிய வழிக்கும், இந்தியாவில் அவர் பின்பற்றிய வழிக்கும் இலட்சியம் ஒன்றேதான். அது சைவசமய வளர்ச்சி. இருந்தும் அவர் இரண்டு நாடுகளிலும் கையாண்ட வழிவகை சற்று வேறுபட்டிருந்தன. இதுவரை காலமும் இந்தியாவிலே தோன்றிய இயக்கம் யாவும் ஈழத்தைப் பாதித்தன. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு பௌத்தத்தின் வருகை. ஆனால் 19 ஆம் நூற்றாண்டிலே இலங்கையில் தோன்றிய இயக்கம் இந்தியாவிலே தாக்கத்தை ஏற்படுத்தியது, தெற்குத் தென்கிழக்கு ஆசிய விழிப் புணர்ச்சிக்கு வழிகோலியது. இதுதான் நாவலரின் பெருமைக்குரிய முயற்சி, யாழ்ப்பாணத்தை மையமாக வைத்து அவர் செய்த முயற்சியில் வேகத்தைக் காணலாம். இங்கே கோயில்களைத் திருப்பிக் கட்டவேண்டிய நிலை இருந்தது. சைவமரபுகளை நிலைநாட்ட வேண்டியதாயிற்று. இங்கே சைவம் என்னும் கட்டிடத்தைக் கட்டி எழுப்ப வேண்டியதாயிற்று. இந்தியாவில் சைவம் என்னும் கட்டிடம் இருந்தது. அதன்மீது படிந்துள்ள

தூசுகளைத் தட்டிப் புதுப்பிக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தில்லி இசிலாமியர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்போரின் படையெடுப்பால் சைவ வளர்ச்சி தடைப்பட்டது. இருந்தும் பாடல் பெற்ற தலம் பலவும் இயங்கிவந்தன. மடாதிபதிகளும், பிரபுக்களும், நிலச் சுவாந்தரும் சைவவளர்ச்சிக்கு உதவி வந்தனர். ஆகலே தமிழ்நாட்டிலே சைவம் இயங்கி வந்தது. அதற்குப் புதியதொரு ஊக்கத்தை நாவலர் அளித்தார்.

கோயில்களை மையமாக வைத்தே நாவலர் தன் மதப்பணிகளை மேற்கொண்டார். மக்களைக் கோயிலுக்கு வரச் செய்வதே நாவலரின் நோக்கம். மக்கள் என்னும் போது அந்தக்காலத்திலே வரணாச்சிரம தர்மம் நிலவியது என்பதைக் கருத்திலே கொள்ளல் வேண்டும். வர்ணார்சிரம தர்மத்தை ஒழிக்கவேண்டும் எனப் போராடிய மகாத்மாகாந்தி வர்ணாச்சிரமதர்மம் தொடக்கத்தில் ஆத்மீகக் கோட்பாடாக இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். அது இக்காலத்துக்கு ஒவ்வாதது என்பதையும் ஏற்றார். காந்திக்கு முன்னர் வாழ்ந்த நாவலர் அக்காலச் சமுதாயக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு அந்த எல்லைக்குள் நின்றுதான் பணிபுரிந்தார், ஆனால் போலி மதகுருமாரும், நேர்மையற்ற அறங்காவலரும் நாவலரின் கடும் தாக்குதலுக்கு ஆளாகினர். கோயில்கள் யாவும் வேதாகம அடிப்படையிலே மறுசீரமைக்கப்படல் வேண்டும் என்பது நாவலரின் இலட்சியம், ஆகவே கோயில்களில் வேதியரே பூசை செய்யவேண்டும் என்பதற்கு ஆவன செய்தார். வேதியர் நடத்துகின்ற கிரியை முறையைப் பெரிதும் விரும்பிய நாவலர் ஆசாரமற்ற வேதியரை மிகவும் வன்மையாகக் கண்டித்தார். நாவலரின் மதிப்பைப் பெற்ற வேதியர் சிலரில் ஒருவர் யாழ்ப்பாணத்து விளைவேலி அந்தணர் வேதக்குட்டி. ஆசாரமற்ற வேதியரிடம் திருநீறு வாங்கவும் நாவலர் மறுத்தார். இங்கே சிறிய முரண்பாடு ஒன்று இருப்பதையும் காணலாம். வேதியரின் கிரயை முறையை ஆதரித்த நாவலர் வேதியரைப் பகிரங்கமாகக் கண்டித்தார். இதனால் நாவலருக்குச் சகிப்புத்தன்மை இல்லை எனவும் சிலர் கருதினர். இலட்சிய வேட்கை கொண்ட சமயத் தொண்டர் பலரிடமும் இப்படியான போக்கு இருப்பது இயல்புதானே. புராண படனத்தை ஊக்குவித்தார் நாவலர். இக்காலத்திற்கு ஏற்பச் சைவச் சொற்பொழிவுகளைத் தானே நடத்தினார். பிறரை நடத்தும் படியும் ஊக்குவித்தார். சொற்பொழிவுகள் யாவற்றையும் சைவப்பொருளை மையமாக வைத்து நடத்தினார். பழைய கோட்பாட்டையே நிலைநாட்ட நாவலர் புதுவழிகளைக் கையாண்டார். நாவலருக்கு இசைப்புலமை இருந்தது. கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல் என்ற கோட்பாட்டையே நாவலர் பின்பற்றினார். இதனாலேதான் நந்தன் கீர்த்தனை பாடிப் பெரும்புகழ் பெற்ற கோபாலகிருட்டின பாரதியாருக்கு நாவலர், கேளாமலே சன்மானம் வழங்கிப் பாராட்டினார்.


இருந்தும் **நாவலர், கண்ணகி வழிபாட்டையும் நல்லூரில் இடம் பெற்றுவந்த வேல் வழிபாட்டையும் கண்டித்தார்.**

வேதாகம முறைக்கு முரண்பாடானவற்றைக் கண்டித்தல் நாவலரின் போக்கு. கண்ணகி வழிபாட்டை நாவலர் கண்டித்ததற்குரிய முக்கிய காரணம் கண்ணகி சமணச் செட்டிச்சி என்பதே. மற்றொரு காரணமும் உண்டு. கண்ணகியை வேதாகம கடவுளர் மத்தியில் வைத்துப் பூசை செய்வது நாவலரின் கருத்துப்படி மகாதுரோகம். இதனால் நாவலரின் வழிமுறையைப் பின்பற்றுபவர், கற்பினிற் சிறந்தவள் கண்ணகி என்ற கருத்தை மறுத்து சீதைக்குத்தான் கற்பு இருந்தது என வாதிட்டனர். தமிழுக்குரிய சிறப்பான நூல் சிலப்பதிகாரம் என்பதை இச்சாரார் மறந்தனர் போலும். மேலும் வீரரை, பத்தினிப் பெண்களை வணங்குவது தமிழன் கண்ட மரபு என்பதை இச்சாரார் ஏற்கவில்லை. சிலப்பதிகாரம் தமிழ் மக்கள் மீதும் சிங்களமக்கள்மீதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இச்சாரார் உணரவில்லை. மிகப் பெரியவர்களின் அறிவைச் சில வேளைகளில் சிறிய விருப்பு வெறுப்பு மறைத்துவிடுவதும் வழக்கம் தானே? பழையகாலம் தொடக்கம் வேல் வழிபாடு, மர வழிபாடு, கிராமியக் கடவுளர் வழிபாடு தமிழ்கூறும் நல்லுலகில் நிலவி வருகின்றன. நாவலர் வேதாகம முறை வழிபாட்டையே விரும்பியவர். இலட்சிய ஈடுபாட்டினால், நல்லூரில் இடம்பெற்ற வேல்வழிபாட்டை நாவலர் ஏற்கவில்லை. நல்லூர் முருகன் கோவிலில் மூலமூர்த்தி அம்பு வடிவமாக இருப்பதும், அதற்குப் பக்கத்தில் அம்மையர் இருவரையும் எழுந்தருளச் செய்ததும் ஆகம விரோதம். இந்தச் செயல் நாவலரின் உள்ளத்தை வருத்தியது என்பர். வேலை இப்படி வணங்குவது ஆகம விரோதம் என்றபடியால் நாவலர் இதனைத் தனக்குரிய பாணியில் எதிர்த்தார். ஆறுமுக நாவலரின் வேதாகமப் பற்று வேறும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. மிகவும் பழைய காலத்திலிருந்து நிலவிவந்த கிராமியக் கோயில்கள் யாவும் வேதாகம கிரியை முறையைப் பின்பற்றும் கோயிலாக மாறத் தொடங்கின. கண்ணகி,


கண்ணகை அம்மனாக மாறிப் பின்னர் இராச இராசேஸ்வரியாக மாறியதும் யாழ்ப்பாணத்திலேதான். இருந்தும் கிராமிய வழிபாடு முற்றாக மறைந்து விடவில்லை என்பதும் மகிழ்ச்சிக்குரிய அலுவல். வேல் அருள் மழையைப் பொழிகின்றது, பத்தினி வழிபாடு இன்றும் நிலவுகின்றது. காலத்தை வென்று நிற்கும் நாவலரின் நற்பணி அவரின் சைவத் திரு நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சி. சைத் திருநூல் என்றால் நாவலரின் பதிப்பே என்ற முடிபு இன்றும் நிலவுகின்றது. நாவலரின் பதிப்பு என்றால் பிழை இல்லாத புடம் செய்துள்ள பதிப்பு என்பது காலம் அளித்த தீர்ப்பு. இந்தத்துறையில் நாவலரின் தொண்டு நிகரற்றது. இதனைச் செய்ய அவர்பட்ட இன்னல் இம்மட்டன்று. அவருடைய பணிக்குச் சற்று மாசுபடியச் செய்ய ஒருசாரார் முயன்றனர். அவரின் தொண்டைக் குறைத்து மதிப்பீடு செய்யவும் சிலர் கருதினர். நாவலரின் சமயத்திருநூற்பதிப்பு வேலைப்பணி கருங்கல் மலைபோல் உயர்ந்து நிற்கின்றது. இந்த மலையை நோக்கி வேகமாகக் கல்லை எறிந்தால் எறிந்தவரிடம் கல் மிகவும் வேகமாகத் திரும்பிவரும். மலைக்கு எதுவும் நடக்காது. எறிந்தவருக்குத்தான் கைநோகும். காலத்தையொட்டி நாவலர் மற்றுமொரு பணியிலே இறங்கினார். சமயத்திருநூல்கள் யாவும் பாடலாகவே அமைந்திருக்கின்றன. இவற்றுள் முக்கியமான சிலவற்றை நாவலர் உரைநடையிலே எழுதினார். உரை நடையிலே கைதேர்ந்கவல்லாளர் நாவலர். கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும் எளிதிலே பயன்படும் பொருட்டுக் சத்தியரூபமாக நூலைச்செய்தார். இங்கு கற்றவர் யார்? மற்றோர் யார்? என்பது கவனிக்கப்படல் வேண்டும். செய்யுளில் உள்ள நூல்களைக் கற்று விளங்கக்கூடியவர் கற்றவர். சற்று எழுத்து வாசனை உடையவர். மற்றவர் எழுத்துவாசனை இல்லாதவர்தான். அக்காலத்திலே பெரும் தொகையாக இருந்தனர். இந்த உரைநடை நூல்களைப் பிறர்வாசிக்கக் கேட்டும் கல்லாதவர் இன்புறலாம். வல்லார் வாய்க் கேட்டு அறிக என்ற நிலை மாறி ஒருவர் வாசிக்க மற்றவர் கேட்டறியலாம் என்ற நிலையை இந்த உரை நூல்கள் உருவாக்கின. விவிலிய நூலை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்குப் பெயர்த்ததினால் ஏற்பட்ட அனுபவத்தை நாவலர் சைவம் வளம் பெறப் பயன்படுத்தினார்.


நாவலர் நிகழ்த்திய போராட்டங்களுள் தலைசிறந்தது நல்லூர் முருகனாலயத்தில் நடக்க இருந்த ஆட்டுக்கடாப் பலி நிறுத்தம். கோயிலின் சொத்துக் கோயிலுக்கே உரியது என்பது நாவலர் கருத்து. இக்கருத்துக்கு மாறாக எது நடந்தாலும் நாவலர் பொறுக்கமாட்டார். நாவலரைக்கண்டு கோவில் அறங்காவலர் பலரும் அஞ்சி நடுங்கினர்.

நாவலர் சமுதாயத்தை விட்டுத் தூர ஓடவில்லை. சமுதாயத்துடன் ஒட்டி வாழ்ந்துகொண்டு சமுதாயத்தை விழிப்புணர்ச்சி பெறச் செய்து வழிகாட்ட முயன்றவர் நாவலர். அதில் பெரும் வெற்றியும் கண்டவர். நாவலர் குறிப்பாக ஈழத்தின் மதவரலாற்றிலும் சிறப்பாகத் தமிழ் வரலாற்றிலும் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ளார்.



**இறைவனிடம் அசையாத நம்பிக்கை,**
**உலகின் எதையும் சார்ந்து வாழாத**
**தன்மை– இவை கொண்ட**
**ஒரு புதிய மனித குலத்தை நான்**
**இங்கே உருவாக்கப்போகின்றேன்.**
**– சுவாமி விவேகானந்தர்–**





# திருமுகங்கள்

சிவயோக சுவாமிகள்

## நான் யார்?

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று நீ ஆத்மா.

ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவசித்தாந்தம்.

இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே.

எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய் கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

## ஓம் தத் சத்

அகமுகமாகு. அப்போதே ஆனந்தமுண்டாகும். எதனால் கண் காணுகிறது.? எதனால் காது கேட்கின்றது ?. எதனால் மூக்கு முகருகின்றது? எதனால் வாய் பேசுகின்றது? அது தான் ஆத்துமா அல்லது கடவுள். எவ்வளவு சுலபமானவழி. நினைத்துப் பார். அனைத்தும் உன் கைவசம். ஒருகணம் நீ ஊன்றி யோசிப்பாயா னால் நீ அதுவென உனக்கு நன்கு புலனாகும். உன்னுள்ளே தெய்வீகத் தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்துக்கே சக்கராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப்புப் பிறப்பாகிய சமுத்திரத்திற் கிடந்து திக்குமுக்குப்படுவாய்.

எழுந்திரு. விழித்துக்கொள். உன்னை இனி ஒன்றும் வெற்றியெடுக்க முடியாது. விளக்கு எரியவேண்டுமாயின் திரியும் எண்ணெயும் வேண்டும். நீ பிரகாசமடைய வேண்டினால் ஓயாமல் ஓம் தத் சத் என உணர்ச்சியோடு (அதாவது உயிரை எழுப்பி) பிரார்த்தனை செய். சீக்கிரம் புத்தகத்தை முடி.

நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள். எங்களுக்குள் ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துவத்துள் வைக்கப்பட்ட வர்களாகவும் இருக்கின்றோம். வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்களாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர். ஒழுக்கத்தினால் வசீகரப்படுத்தப்பட்டோர்க்கன்றி மற்றையோர்க்கு இவ்வுண்மை புலப்படாது. அதுபற்றியே தன்னுயிர்போல் மன்னுயிர் யாவையும் நேசித்தல் வேண்டுமென்று மகத்துக்களால் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் யாவும் ஒழுக்கத்திலேயே தங்கியிருக்கின்றன. இவ்வொழுக்கவழியில் நின்று எல்லாம் நாம் என்று பாவனை செய்து வரவர அற்புதமான அநுபவங்கள் மூலமாக நாங்கள் சடப் பொருள் அல்ல, சித்துப் பொருளென்று தெளியலாகும்.

## அஞ்சேல்

அஞ்சுவதுயாதொன்றுமில்லை, அஞ்சவருவதியாதொன்று மில்லையென்னுமான்றோர் மெய்ம்மொழி நம்மைப் பிறப்பிறப்பாகிய கடலைக் கடப்பிக்குந் தெப்பம். இதைத் துணையாகக் கொண்டவெமக் கென்னகுறை? ஆதலால் நிறைந்த மனத்துடன் இந்தப் பெரும் பிரயாணத்தைச் செய்வோமாக.

அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து.

இப்படிக்கு

**என்றும் மறவாதவன்.**

## காசியிலிருந்து எழுதிய கடிதம்

தேடித்திரிந்து காசிக்கு வந்து கண்டேன் விசுவநாதனை என்னுள் வாடித்திரிந்து வருந்த வேண்டாம். தேடிய பூடு காலுக்குள்ளே என்ற தெவிட்டா வாசகமொன்றுண்டு. இவ்விடத்திலும் மனிதர்களெல்லாம் எங்களைப் போலே தானிருக்கின்றார்கள். நூதனமான காரணமொன்றும் பூதலமீதிலில்லவே இல்லை. இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தாரெல்லாருக்குமாகக் கருமாதிக ளெல்லாஞ் செய்து முடிந்து விட்டன.

இனிமேல் உங்களுக்கியைந்தபடி அன்பாக உலகில் நடந்து ஆண்டவன் அடிக்கீழ் அமர்ந்து வாழ்க.

30-11-40

உ

சிவமயம்

இதோ பார். நான் உனக்கு மிகவும் அணித்தாயிருக்கின்றேன். என்னைக் காண்கிறாயா? நல்ல கூர்மையாய்ப் பார். உள்ளேயிருக்கின்றேன். பின் நீயேன் என்னை உனக்கு வேறாய் நினைக்கின்றாய்?
நீயொரு கெட்டிக்காரனல்லவா? உனக்கு என்ன குறை? ஒரு குறையுமில்லையல்லவா? உனது கடமையை நீ நல்லாய்ச் செய் யாவரிடத்தும் அன்பாயிரு. அதாவது உன்னைப்போல எவரையும் பார். பின்னால் வருவனவற்றைப் பாடம் பண்ணு.

**அரும்பிய கொன்றை அணிந்த சென்னியன்**
**ஆறும் பிறையும் சூடிய அழகன்**
**இறையவன் மறையவன் ஏழுலகாளி**
**ஈசன் மழுப்படை தாங்கிய கையன்**
**உம்பர் தலைவன் உயர்கை லாயனே**

—ஈசுரமாமலை ஔவையார்.

---

உ

சிவமயம்

பகைத்தலும் விரும்புதலும் இல்லாதவன் சந்நியாசியாயினுஞ் சரி, இல்லறத்தானாயினுஞ் சரி அவனே பரமபுருடன். அதாவது அவன் சீவன் முத்தனென்று பெரியோர் சொல்லுகின்றார்கள். இயற்கையோடு அளவளாவி வாழுதல்தான் பேரின்பம். அது ஒரு மாதிரியல்ல உண்மை உணர்ச்சி. தனக்குத் தான் உண்மையாக விருந்தால் யாவும் விளங்கும். தன்னைப் போல மற்றவர்களையும் நேசித்தலே தவம். அதுவே அறம்.

**எங்குஞ் சிவம்.**

---

உ

சிவமயம்

யாவும் நமது ஊர். யாவரும் நமது கேளிர். நன்மை தீமை நாம் தர வருவன. பிறராலன்று. பிறர் காய்ந்த வழிக் காய்கிலம். உவந்தவழி உவக்கிலம். யாவும் திருவருளென்பது நன்கு அறிவோம். நம்மைச் சூழவரவிருக்கும் மலைகள் திருமாலைப் போல் பச்சைப் பசேலெனக் காணப்படுகின்றன. இரைந்து விரைந்து செல்லு மருவிகளின் இனிய சத்தம் திருமாலின் கரத்திலிருந்து இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கும் பாஞ்ச சன்னியத்தை ஒத்தன. சந்திரனுஞ் சூரியனு மிருபாரிக ளிருபக்கத்தும் விளங்குவது போல் விளங்குகின்றன. மரக்கொம்பரிலிருந்து தீங்குரலாற் பாடும் பட்சிகள் அக் கண்ணன் புல்லாங் குழல் பாடுவதை ஒத்திருக்கின்றன. தேயிலை கொய்யும் மகளிர் திருமாலின் இனிய பத்தரான கோபிகாஸ்திரிகளை நேர்வர். இவ்விடத்துக் கறங்கும் முரசம் துரியோதனுடனே போருக்குச் சென்ற பஞ்சபாண்டவரின் தேவரின் மீது அடிக்கப்படும் பேரிகையை இசைந்தது. எப்படித் திருமால் சகல வளங்களுடனுந் துவாரகையில் விளங்கினானோ அப்படியே இம்மலை இவ்விடத்து மிளிர்கின்றது. கண்ணனுடைய விருந்தினராக நாம் இவணிருக்கிறேம். ஒன்று கூறுவதும் உவந்து கேட்குதி நன்று தீதென நாட்கழிந்தன. என்று காணுவம் என்ற எண்ணமே, இன்றும் எம்மை இசைந்து வாட்டிற்று.

**என்றும் மறவாதவன்.**

---

உ

சிவமயம்

சொல்வதை மிகவும் கவனமாகக்கேள். நீ யார்? உடம்பா? மனமா? அன்றிக் கண், காது வாய் மூக்கு முதலிய அவயங்களா? இல்லை ஏன்? எனது உடம்பு எனது கையென்று சொல்லுகிறதனால் நான் உடம்பை விட வேறு பொருளல்லவா? ஆம் பின்னை நான் எப்படிப்பட்டவன். அழிவில்லாதவன். ஆகையால் எனக்குப் பயம் முதலியன வரலாமா? இல்லை ஆனால் சரீர மனதர்மத்தையொட்டிப் பாவத்திற்குப் பயப்பட வேண்டும். புண்ணியத்தைச் செய்யவேண்டும். புத்திமான்கள் இப்படி நினைந்தும் செய்தும் பேரின்பத்திற்கு இம்மையிலும் , மறுமையிலும் பாத்திரமுள்ளாராகின்றனர். நிலம் நீர் காற்று நெருப்பு வானம் இவைகளாலாக்கப்பட்ட வீட்டில் பகவான் வசிக்கின்றார். ஆனபடியால் வீட்டைச் சுத்தமாயும் மனத்தைச் சுத்தமாயும் வைத்து அமைதியாய் நட.

**என்றும் மறவாதவன்.**

---

உ

சிவமயம்

உனக்குச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. நாங்களெல்லாம் தேவ சந்நிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு பெரும் சத்தியம். யாவும் இருந்தபடியே நடந்து வருகின்றது. கிலேசமோ, அன்போ பகையோ இவையாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே நாமும் அப்படியே. பிறப்பைப் போல

இறப்பு. புகழைப் போல இகழ். நன்மையைப் போலத் தீமை. முழுதும் உண்மை. முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும் இயங்காமல் இயங்கு. முடிவைக் காணோம்.

அதுதான். சுற்றிச் சுற்றிச் சுப்பருடைய கொல்லை.

**என்றும் மறவாதவன்.**

---

உ

சிவமயம்

நான், நீ . ஐயா, அம்மா, அண்ணர், அக்காமார்.அத்தை, அப்பாச்சி, பெரியையா, சீனியையா, சின்னையா, கந்தசாமி, கணபதி, வைரவர், வீரபத்திரர், காளி, கூளி, கிருஷ்ணன், கிறிஸ்து, புத்தன், முகம்மது, இராசரத்தின மாமா,சோமா மாமா, செல்லத்துரை மாமா, கன்று, பசு, ஆடு, குதிரை, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் மேடம் இடபம், மிதுனம், கர்க்கடகம்,சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம், கும்பம், மீனம், ஊர்வன, பறப்பன, கிடப்பன, நடப்பன, மலை, கடல்,வாவி, குளம், கொடி,செடி,என்று அளவிடக்கூடாமல் விரிந்து நிற்கிற ஒன்றுதான் கடவுள் . இதை விடவேறில்லை என்று தியானிக்கிறவன் தான் உண்மையான பக்தனென்று சொல்லப்படுகின்றான். இவனுக்கு இந்த உலகில் வெறுப்பானவர்களும் பிரியமானவர்களுமில்லை.

**என்றும் பிறவாதவன்**

---

உ

சிவமயம்

வருடப்பிறப்பாய்விட்டது. நீங்கள் நல்ல பலகாரவகை செய்வீர்கள். பட்டுவேட்டி கட்டுவீர்கள். வீடு வெள்ளையடிப்பீர்கள். கோவிலுக்குப் போவீர்கள். சுவாமிக்கு நெய்வேத்தியாபிஷேகம் முதலியவகைகள் செய்விப்பீர்கள். நானோ சாந்தமென்னும் புனலாடிப் பொறுமை என்கிற உத்தரீயம் பூண்டு வறுமையென்று சொல்லப்படுங் குருவின் போதனைை கேட்டு மாசற்ற மனத்தைத் தரும் வெண்ணீறணிந்து வேண்டாமை-யென்னும் விழுச்செல்வத்தையே மேலும் மேலும் தருமாறு பணிந்து அஞ்சாமை யென்கின்ற கேடகத்தை யுடையவனாய்ச் சுப்பிரமணிய சுவாமி யினுடைய நெஞ்சிலே மிதித்து விளையாடுவேன்.

**என்றும் மறவாதவன்.**

உ

சிவமயம்

பார் எல்லாம் சிவமயமாய் இருக்கின்றன. அப்போது நீ யார்? நான் யார்? ஐயா யார்? மற்றும் எல்லாம் என்ன? சிவமல்லவா? இன்னுஞ் சந்தேகமா? பயமா? பார் நான் உன்னுடனும் நீ என்னுடனும் எல்லாம் ஒன்றாகவும் ஒன்று எல்லாமாகவும் ஒருவிதமான மாறுதலும் அடையாமல் இருந்தபடியே இருக்கின்றது. எழுந்திரு. வரவரப்படி.

காலமில்லை. சுகம் சுகம் சுகம்.

**பிறவாதவனிறவாதவன்.**

---

உ

சிவமயம்

உலகமு முயிரு மாகியு மாகா
அலகில் சோதி யடிமலர் பரவி
ஒன்று சொற்றுது முவந்து கேண்மதி
என்றும் நாங்க ளெல்லாஞ் சிவன்செயல்
ஒன்றுக்கு மஞ்சேல் ஒருவனே தெய்வம்
நன்று தீதென நாடி நீ கவலலை
இன்று தொட்டுப் பணமெனக் கனுப்பாதே
தொன்று தொட்டுப் பணந்தொல்லை யென்பர்
முன்னும் பின்னு மெண்ணிமலை யாதே
உன்னுள்ளு மென்னுள்ளு மிருப்ப தொன்றே
சொன்ன வாசகஞ் சித்த சுத்தியைத் தரும்
ஒன்னலர் தம்மை யுவந்துகொள்
என்ன புதுமை யீண்டுண் டெனவறி

**ஒருநாளுமறவா**

**யோகசுவாமி.**

---

உ

சிவமயம்

நான் உங்களுக்குச் சொல்லக்கூடியது ஒன்றுண்டு. நீங்கள் உங்கள் கடமையை வழுவாது செய்யுங்கள். உங்களுக்குப் பகவான் நல்லருள்புரிவார். எல்லாருக்கும் என் அன்பார்ந்த வணக்கத்தைச் செய்கின்றேன்.

**இப்படிக்கு**

**அவனே தானே**

**செய்வன திருந்தச் செய்**

**மூத்தோர் வார்த்தை அமிர்தம்.**



# குழந்தை ஸ்வாமி

## கிழவியும் குழவியும்

கிழப் பாட்டி ஒருத்தி பாட்டி என்றால் காலை நீட்டிக் கொண்டு இருந்த இடத்திலேயே கிடப்பவள். ஆனால் இந்தப் பாட்டி அப்படி இல்லை. இவள் நின்ற இடத்தில் நிற்காமல் இந்தத் தமிழ்நாடு முழுக்கச் சுற்றிக்கொண்டே இருந்தாள். ஒரு குக்கிராமம் பாக்கியில்லாமல் ஊர் ஊராக, தெருத் தெருவாக ஓடிக்கொண்டேயிருந்தாள். அந்தப்பாட்டிக்கு அப்படி ஒரு உற்சாக சக்தி இருந்தது. பாட்டி விஷயம் இப்படி இருக்கட்டும்.

குழந்தை ஒன்று கஷுக் முஷுக் என்று நல்ல ஆரோக்கியமாக இருக்கிற குழந்தை அது. குழந்தை என்றால் பொதுவாக என்ன பண்ணும்? துள்ளி விளையாடும். ஒரு க்ஷணம்கூட இருந்த இடத்தில் இருக்காமல் துரு துரு என்று ஓடிக்கொண்டேயிருக்கும். ஆனால் இந்தக் குழந்தை இதற்கு நேர் மாறுதல். உட்கார்ந்த இடத்தைவிட்டு அது அசைவதில்லை.

வேடிக்கையான பாட்டி, வேடிக்கையான குழந்தை! குழந்தை மாதிரி பாட்டி ஓடிக் கொண்டிருக்கிறாள். பாட்டி மாதிரி குழந்தை இருந்த இடத்தைவிட்டு நகராமல் உட்கார்ந்திருக்கிறது.

ஆனால் அந்தப் பாட்டி தள்ளாத வயசிலும் அத்தனை உற்சாகத்தோடு ஓடி ஆடிக் கொண்டிருந்ததற்கு இந்தக் குழந்தைதான் காரணம். இந்தக் குழந்தை கொடுத்த சக்தியினால்தான் அவள் அவ்வளவு காரியம் செய்தாள். இந்தப் பிள்ளை யார்?

பிள்ளை என்றாலே அவர்தான். மரியாதையாகப் பிள்ளையார் என்கிறோமே அவர்தான் அந்தக் குழந்தை. யாராவது ஒருத்தர் இடத்தைவிட்டு நகராமல் இருந்தால் கல்லுப் பிள்ளையார் மாதிரி என்று சொல்வது வழக்கம்! சகல உலகங்களுக்கும் தாய் தந்தையான பார்வதி பரமேச்வரர்களின் மூத்த பிள்ளை அவர். அதனால்தான் தமிழ் நாட்டில் அவரைப் பிள்ளையார் என்று சொல்கிறோம்.

மற்ற இடங்களில் அவரை கணேஷ்(கணேசர்), கணபதி என்பார்கள். சிவபெருமானின் படைகளுக்கு, பூதகணங்களுக்கெல்லாம் பிள்ளையார்தான் தலைவர், ஈசர், பதி. அதனால் கணேசர், கணபதி என்று பெயர். இவருக்கு மேலே தலைவர் யாரும் கிடையாது. எல்லாவற்றுக்கும் முந்தியவராக, முதல்வராக, மேலாக இருப்பவர் அவர். அவருக்கு மேலே இன்னொரு தலைவர்(நாயகர்) இல்லை. அதனால் விநாயகர் என்றும் பெயர் வி என்பது சில சமயங்களில் ஒன்றை உயர்த்திக் காட்டுவதற்கும், சில சமயங்களில் ஒன்றுக்கு எதிரமறையானதைக் குறிப்பிடவும் வார்த்தைக்கு முதலில் வரும். இங்கே நாயகன் இல்லாதவர் என்று எதிர்மறையாக வருகிறது. தமக்குமேல் ஒரு நாயகன் இல்லாதவர் என்று அர்த்தம்.

அவர் செய்யாத அநுக்கிரஹம் இல்லை. குறிப்பாக நமக்கு வருகிற விக்கினங்களை யெல்லாம் அழிக்கிறவர் அவர்தான். ஆகையால் விக்நேச்வரர் என்றும் அவரைச் சொல்கிறோம். எந்தக் காரியத்துக்கும் தடை வராமல் இருப்பதற்காகவே முதலில் இவரைப் பிரார்த்திக்கிறோம். முதல் பூசை இவருக்குத்தான். கஜமுகன், கஜராஜன் இப்படியெல்லாம் அவருக்குப் பெயர் இருக்கிறது. யானை முகத்தோடு அவர் விளங்குவதால் இந்தப் பெயர்கள் வந்திருக்கின்றன.

யானைக்குத் தேகபலம் மிகவும் அதிகம். ஆனாலும் அது சிங்கம், புலிபோல் மற்றப் பிராணிகளை ஹிம்சிப்பதில்லை. பர்மா, மலையாளம் மாதிரி இடங்களில் ஜனங்களுக்காக யானைகள்தான் பெரிய பெரிய காரியங்களைச் செய்கின்றன. பிள்ளையாரும் இப்படித்தான் ரொம்ப சக்தி வாய்ந்தவர், ஆனாலும் அதைக் காட்டிக் கெடுதல் செய்யாமல் நமக்கெல்லாம் நன்மையே செய்து கொண்டிருப்பார். யானைக்கு புத்தி கூர்மை, ஞாபகசக்தி எல்லாம் மிக அதிகம். பிள்ளையார் அறிவே வடிவானவர்.

யானை என்ன செய்தாலும் அழகாயிருக்கிறது. அது அசக்கி அசக்கி நடப்பது, சாப்பிடுவது, காதை ஆட்டுவது, தும்பிக்கையைத் தூக்குவது, எல்லாம் பார்க்க ஆனந்தமாயிருக்கிறது. அதன் முகத்தைப் பார்த்தாலே பரம சாந்தமாக இருக்கிறது. சின்னக் கண்களானாலும், அமைதியாக, அன்பாக இருக்கின்றன. மிருக வர்க்கத்தில் நாம் பார்த்துக் கொண்டேயிருப்பது

யானையைத்தான்.

மனித வரக்கத்தில் குழந்தை என்றால் அதைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்போல் தோன்றுகிறது. கெட்ட எண்ணமே இல்லாதது குழந்தை. ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருப்பது குழந்தை. அதைப் பார்த்தாலே நமக்கும் சந்தோஷமாக இருக்கிறது.

பிள்ளையார் யானைக்கு யானை, குழந்தைக்குக் குழந்தை. ஆனால் அவரை எத்தனை பார்த்தாலும் போதும் என்ற திருப்தி உண்டாவதில்லை. கள்ளம் கபடம் இல்லாத குழந்தை மனசு அவருக்கு. குழந்தைபோல் நல்ல உள்ளம், யானை மாதிரி தேக பலம், புத்தி கூர்மை, எல்லாவற்றுக்கும் மேலாக தெவிட்டாத அழகு ஆனந்தம் பொங்கிக் கொண்டிருக்கிற ரூபம்.

சேராத தெல்லாம் அவரிடம் ஸ்வபாவமாகச் சேருகிறது. கழுத்துக்குக் கீழே குழந்தை, மனித வர்க்கம், மேலே முகம் யானை மிருக வர்க்கம். ஆனால் அவர் வாஸ்தவத்தில் தேவ வர்க்கம். தேவர்களுக்குள் முதல் பூஜை பெறும் தெய்வமாக இருக்கிறார்கள்.

குழந்தையாக இருந்துகொண்டே மஹா பெரிய தத்வங்களுக்கு ரூபகமாக (personification) இருக்கிற பிள்ளையாரிடம் பல தினுசான மாறுபாடுகள் (contrasts) இதிலே ஓர் அழகு. வித்தியாசமானதெல்லாம் அவரிடம் சேர்ந்திருப்பதாலேயே அவரிடம் எல்லாம் ஐக்கியம் என்றாகிறது. உதாரணமாக, ஒருகையில் ஒடிந்த தந்தம் என்றால், இன்னொரு கையிலே கொழுக்கட்டை வைத்திருக்கிறார். அதற்குள் தித்திப்பாக இருக்கிற வஸ்துவுக்குப் பெயர் பூர்ணம். பூர்ணம் என்றால் முழுமை. ஒரு கையில் இருக்கிற தந்தம் மூளி இன்னொன்றிலோ முழுமை. எல்லாம் நிறைந்த பூரணப் பொருள் பிள்ளையாரேதான். இதை அறிந்து கொள்வது தான் பேரானந்தம். ஆனந்தத்துக்கு இன்னொரு பேர் மோதம், மோதகம். கொழுக்கட்டைக்கும் மோதகம் என்றே பேர்.

இன்னொரு மாறுபாடு, பிள்ளையார் குழந்தை. அதனால் பிரம்மசாரி. ஆனால் இவர் யானையாக வந்து வள்ளியை விரட்டியதால்தான் அவள் ஸுப்ரம்மண்ய ஸ்வாமியைக் கல்யாணம் செய்து கொண்டாள். இன்றைக்கும் கல்யாணம் ஆகவேண்டுமானால் இந்தக் கட்டைப்பிரம்மச்சாரியை வேண்டிக்கொள்கிறார்கள். இதற்கு என்ன அர்த்தம்? அவர் இருக்கிற நிலையில் அவருக்கு வேண்டாததையெல்லாம் கூட, அவர் நிலைக்கு மாறாக இருக்கிற நமக்கு பரம கருணையோடு கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூக்கிவிடுகிறார்.

கல்லுப்பிள்ளையார் என்பதற்கே தாம் உட்காரந்த இடத்தை விட்டு அசையாமலே இருந்தாலும், பக்தர்களை ஒரே தூக்காக தூக்கி உச்சத்தில் சேர்த்து விடுவார். அவ்வையாரை இப்படித்தான் கடைசியில், தாம் இருக்கிற இடத்திலிருந்தே, தும்பிக்கையால் ஒரு தூக்குத் தூக்கிக் கைலாயத்திலேயே கொண்டு சேர்த்து விட்டார்!

பிள்ளையாரைப் பார்க்க பார்க்க நமக்கு மேலே மேலே இப்படிப் பல தத்துவம் தோன்றுகிறது. இதுவும் நம் அறிவின் அளவுக்கு எவ்வளவு எட்டுகிறதோ அவ்வளவு தான். வாஸ்தவத்தில் நமக்குத் தெரிவதற்கும் அதிகமாக அவரிடம் பெருமைகள் அளவிட முடியாமல் இருக்கின்றன.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பார்கள். தெய்வமே குழந்தையாக வந்துவிட்டது பிள்ளையாரில். அதனால் அவரைக் குழந்தை ஸ்வாமியாகக் கொண்டாடுகின்ற தமிழ் நாட்டில் ஒரு மூலை முடுக்கு பாக்கி இல்லாமல் எங்கு பார்த்தாலும் உட்கார்ந்து கொண்டு அநுக்கிரஹம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

அவர் செய்த அனுக்கிரஹத்தினால்தான் அந்தப் பாட்டி தமிழ் நாடு முழுவதும் ஒடிக்கொண்டிருக்கிறார் அந்தப் பாட்டியார் என்றால், அவள்தான் அவ்வையார். பிள்ளையார்— அவ்வையார்.

**தமிழ் நாட்டின் சிறப்பு**

அவ்வையாரைவிடத் தமிழ் நாட்டுக்கு உபகாரம் செய்தவர் இல்லை. ஆயிரம் காலமாக இந்தத் தேசத்தில் ஒழுக்கமும் பக்தியும் இருந்து வந்திருக்கிறதென்றால் அது முக்கியமாக அவ்வையாரால்தான்.

முளைக்கிறபோதே, குழந்தைகளாக இருக்கிறபோதே, நல்ல ஒழுக்கத்தையும், பக்தியையும், உண்டாக்கி விட்டால்தான் பிறகு அவை நிலைத்து நிற்கும். தமிழ் நாட்டில் எத்தனையோ மகாகவிகள், பக்தர்கள் இருந்திருக்கிறார்கள் ஆனால் அவர்கள் பாடியது முக்கியமாகப் பெரியவர்களுக்குத்தான். அவ்வையாருக்கு அவர்களைவிடக் கவிதா சக்தியோ, பத்தியோ குறைச்சல் இல்லை. அவள் ரொம்பப் பெரியவள், ஞானி, யோக சாஸ்த்திரத்தில் கரை கண்டவள். ஆனாலும் அவள் குழந்தைகளை நல்லவர்களாக்க வேண்டும் என்பதில் முக்கியமாகக் கவனம் வைத்து, அவர்களுக்கு நல்ல குணங்களையும், ஒழுக்கத்தையும், நீதியையும், தெய்வ பக்தியையும் போதனை செய்து பாடினாள்.

பேரக் குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டுமே என்ற

கரிசனத்தோடு ஒரு பாட்டி நல்லது சொல்வது மாதிரி அவ்வைப் பாட்டி அத்தனை தமிழ்க் குழந்தைகளுக்கும் உபதேசம் செய்தாள். அவளுடைய அன்பின் விசேஷத்தால் அவளுக்கப்புறம் எத்தனையோ தலைமுறைகள் ஆனபிறகு, இப்போதும் நாம் குழந்தையாகப் படிக்க ஆரம்பிக்கிறபோதே, அவளுடைய ஆத்திசூடி தான் முதலில் வருகிறது.

முதல் பூஜை பிள்ளையாருக்கு. முதல் படிப்பு அவ்வையார் பாடல்.

இத்தனை ஆயிரம் வருஷங்களாக அவளுடைய வார்த்தை எப்படி அழியாமல் தொடர்ந்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் அவளுடைய வாக்கின் சக்திதான். பரம சத்தியமான ஒன்றை, நிறைந்த அன்போடு சொல்லிவிட்டால், அப்படிப்பட்ட சொல் ஆயிரம் காலமானாலும் அழியாமல் நிற்கிறது. அவ்வை இப்படி அன்போடு உண்மைகளை உபதேசித்தாள். நம்மில் கம்பர், புகழேந்தி, இளங்கோ போன்ற கவிகளைப் படிக்காதவர்கள் இருக்கலாம். ஆனால் அவ்வை வாக்கு ஒன்றாவது தெரியாதவர் இருக்க முடியாது.

அவ்வையாருக்கு இத்தனை வாக்கு சக்தி எங்கேயிருந்து வந்தது? வாக்குச் சக்தி மட்டும் இல்லை, அவளுக்கு ரொம்பவும் தேக சக்தியும் இருந்திருக்கிறது. அதனால்தான் ஐயோ தமிழக் குழந்தை ஒன்றுக்குக்கூட நம் வாக்கு கிடைக்காமல் போகக் கூடாதே! ஒவ்வொரு குழந்தைக்கும் நாம் இந்த உபதேசங்களைக் கொடுக்க வேண்டுமே! என்ற பரிவோடு அந்தப் பாட்டி ஒரு சிரமமும் மிச்சம் இல்லாமல் ஓடி ஓடிப் போய், குழந்தைகளைத் தேடித் தேடி அவர்களுக்குத் தன் நூல்களைப் பரிந்து பரிந்து போதித்தாள். இந்தத் தேக சக்தி அவளுக்கு எப்படி வந்தது? பிள்ளையார்தான் அவளுக்கு இந்தச் சக்திகளையெல்லாம் கொடுத்தார்.

அவ்வையார் பெரிய பிள்ளையார் பக்தை. அந்தக் குழந்தை சுவாமியை வேண்டிக் கொண்டுதான் அவள் சின்ன வயசிலேயே கிழவியாகிவிட்டாள். ஏன் அப்படிச் செய்தாள்? வாலிபமாகவும், நடுத்தர வயதாகவும் இருந்தால் ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்தவேண்டியிருக்கும். பக்திக்குக் குடும்ப வாழ்க்கை இடையூறு என்பதாலேயே, இடையூறுகளை எல்லாம் போக்கும் விக்நேச்வரரை வேண்டிக்கொண்டு கிழவியாகிவிட்டாள்.

சுப்ரம்மண்ய ஸ்வாமிக்குக் கல்யாணமாக சகாயம் பண்ணின பிள்ளையார் இவளைக் கல்யாணமேயில்லாத பாட்டி ஆக்கினார்! யாருக்கு எதைத் தரவேண்டுமோ அதைத் தருவார். இவளைச் சிறு பிராயத்திலேயே கிழவியாக்கிவிட்டார். ஆனால் அவர் குழந்தை சுவாமி அல்லவா? அதனால், இவள் தன்னிடம் மட்டும் எப்போது பார்த்தாலும் பக்தியாக இருந்தால் போதாது, இவளால் எல்லாக் குழந்தைகளும் நன்மை பெற வேண்டும் என்று நினைத்தார். ஒரு சின்னக் குடும்பம் வேண்டாம் என்று கிழவி ஆனவளை அத்தனை குழந்தைகளையும் கொண்ட பெரிய தமிழ் நாட்டுக் குடும்பத்துக்கே உபதேசம் செய்கிற பாட்டியாக்கி விட்டார்!

அவளும் சந்தோஷமாக அந்தக் காரியத்தைச் செய்தாள். மாறி மாறிப் பிள்ளையாரைத் தியானித்துப் பூஜிப்பதும், குழந்தைகளுக்கெல்லாம் உபதேசம் பண்ணுவதுமாகத் தன் வாழ்க்கையைக் கழித்தாள்.

அந்தப் பாட்டி அன்றைக்குச் சுற்றினாள். இன்றைக்கு நானும் எத்தனையோ சுற்றியிருக்கிறேன். அவள் தமிழ் நாடு மட்டும் சுற்றினாள். நான் இன்னும் மலையாளம், தெலுங்கு தேசம், பொங்கல், ஹிந்துஸ்தானி தேசம் என்று பல இடங்கள் சுற்றியிருக்கிறேன். அங்கெல்லாம் நான் பார்க்காமல், இந்தத் தமிழ் நாட்டில் மட்டும் பார்க்கும் விசேஷம் என்ன வென்றால், தமிழ்நாடு ஒன்றிலேயே இப்படிச் சந்துபொந்து மரத்தடி, ஆற்றங்கரை எங்கே பார்ததாலும் ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பதுதான்! தமிழ் நாட்டை விட்டுக் கொஞ்சம் தாண்டிப் போனால் கூட இப்படிக் காணோம்! பிள்ளையார் தமக்குப் பெரிசாக ராஜகோபுரம், பிராகாரம் கட்டிக் கோயில் எழுப்ப வேண்டும் என்று நினைக்கவில்லை. சின்னதாக ஒரு சந்நிதி வைத்து விட்டாலும் அவருக்குப் போதும். தகரக் கொட்டகை போட்டால்கூட அவருக்குத் திருப்திதான்! அதுகூட வேண்டாம்! ஒரு கட்டிடமும் கூரையும் இல்லாமல் வானம் பார்க்க அரசமரத்தடியில் அவர் பாட்டுக்கு அமர்ந்து அநுக்கிரகம் பண்ணிக் கொண்டிருப்பார். ஆற்றங்கரையில் எங்கே பார்த்தாலும் நன்றாக உட்கார்ந்து கொண்டு ஆனந்தமாக இருப்பார்.

இந்தத் தமிழ்த் தேசத்தில் மட்டும் ஏன் இந்த விசேஷம் என்று கேட்டால், அவ்வையாருடைய விசேஷம்தான் இது என்று தோன்றுகிறது. அவள் தமிழ் நாட்டில் ஓடாத இடமில்லை அல்லவா, அவள் போன இடத்திலெல்லாம் அவளுடைய இஷ்ட தெய்வமான பிள்ளையாரும் வந்து உட்கார்ந்து கொண்டு விட்டார்! தமிழ் நாட்டின் சிறப்புக்கள் என்று புஸ்தகங்களில் எத்தனையோ விஷயங்கள் போடுகிறார்கள். ஆனால் எனக்குத் தெரிகிற பெரிய சிறப்பு இங்கே எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில் கொண்டிருக்கிறதுதான்.

**உலகுக்கெல்லாம் சொந்தமானவர்**

பிள்ளையார் ஏழை எளியவர்களுக்கெல்லாம் சுவாமி. மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், சாணியிலும் கூட எவரும் ஒரு பிள்ளையாரைப் பிடித்து பூஜை செய்துவிடலாம். அவர் எளிதில் சந்தோஷப்படுகிறவர். எங்கே, எப்படி, எதில் கூப்பிட்டாலும் உடனே வந்து அந்தக் கல்லோ, களிமண்ணோ அதற்குள்ளிருந்து கொண்டு அருள் செய்வார். அவரை வழிபட நிறைய சாஸ்த்திரம் படிக்க வேண்டும் என்பதில்லை. ஒன்றும் படிக்காதவனுக்கும், அவன் கூப்பிட்ட குரலுக்கும் வந்துவிடுவார்.

மற்ற தேவதா விக்கிரஹங்களில் ஸாங்கோபாங்கமாகப் பிராணப் பிரதிஷ்டை என்று பண்ணி, அவற்றில் அந்தந்த தேவதைகளின் ஜீவ கலையை உண் டாக்குவது போல் பிள்ளையாருக்குப் பண்ண வேண்டுமென்பதில்லை. பாவித்த மாத்திரத்தில் எந்த மூர்த்தியிலும் அவர் வந்து விடுகிறார் என்று சொல்வதுண்டு.

மற்ற ஸ்வாமிகளைத் தரிசனம் செய்வது என்றால், நாம் அதற்காக ஒரு காலம் பார்த்து, குளித்து முழுகி, அர்ச்சனை சாமான்கள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போக வேண்டியிருக்கிறது. கோயிலுக்குப் போனாலும் நேரே அந்த சுவாமியிடம் போய்விட முடியாது. பிராகாரம் சுற்றிக் கொண்டு உள்ளே போகவேண்டும். அப்போதும் கூட சுவாமிக்கு ரொம்பப் பக்கத்தில் போகக்கூடாது. கொஞ்சம் தள்ளித்தான் நிற்க வேண் டும். பிள்ளையார் இப்படி இல்லை. எந்த சமயமானாலும் சரி, நாம் ஆபீஸுக்கோ, ஸ்கூலுக்கோ, கடைக்கோ போய் வருகிறபோதுகூட, ஒரு முக்கில் பிள்ளையார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்த மாத்திரத்தில் நாமாக நெற்றியில் குட்டிக் கொண்டு ஒரு தோப்புக்கரணம் போட்டுவிட்டு நடை–யைக் கட்டுகிறோம். இதிலேயே நமக்குச் சொல்லத் தெரியாத ஒரு நிம்மதி சந்தோஷம் உண்டாகிறது.

அவருக்குக் கோயில் என்று இருப்பதே ஒரு அறைதான். அதனால் ஒரு பேதமும் இல்லாமல் யாரும் கிட்டே போய்த் தரிசிக்க முடிகிறது. எல்லோருக்கும் அவர் ஸ்வாதீனம். பிராகாரங்கள் எல்லாம் தாண்டி உள்ளுக்குள்ளே உட்கார்ந்திருக்கிற சுவாமிகளைவிட, இப்படி எங்கே பார்த்தாலும் நட்ட நடுவில் உட்கார்ந்திருக்கிற பிள்ளையார்தான் தப்பாமல் ஜனங்களை இழுத்துத் தோப்புக்கரணம் வாங்கிக் கொண்டு விடுகிறார்.

பிள்ளையார் வழிபாட்டுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது, நெற்றியில் குட்டிக்கொள்வது, தோப்புக் கரணம் போடுவது ஆகியவை பிள்ளையார் ஒருவருக்கே உரியவை. பிள்ளையார் சந்நிதியில், இரண்டு கைகளையும் மறித்து நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளவேண்டும். இப்படியே இரண்டு கைகளையும் மறித்துக் காதுகளைப் பிடித்துக் கொண்டு, முட்டிக்கால் தரையில் படுகிறமாதிரி தோப்புக் கரணம் போடவேண்டும். இவை எதற்கு என்றால்:

யோக சாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால் எப்படி மனசையும் நல்லதாக மாற்றிக்கொள்ளலாம் என்று வழி சொல்லியிருக்கிறது. நம் உடம்பைப் பல தினுசாக வளைத்துச் செய்கிற அப்பியாசங்களால், சுவாசத்தின் கதியில் உண்டாக்கிக் கொள்கிற மாறுதல்களால் நம் உள்ளம் உயர்வதற்கான வழி அந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வது, தோப்புக்கரணம் போடுவது இவற்றால் நம் நாடிகளின் சலனம் மாறும், மனசில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையோடு செய்தால் பலன் தெரியும்.

குழந்தைகளுக்காக நீதி நூல்களைச் செய்த அவ்வையார் பெரியவர்களுக்குக்கூட எளிதில் புரியாத பெரிய யோக தத்துவங்களை வைத்துப் பிள்ளையார் மேலேயே ஒரு ஸ்தோத்திரம் செய்திருக்கிறாள். அதற்கு விநாயகர் அகவல் என்று பெயர். அளவில் சின்னதுதான் அந்த அகவல் ஸ்தோத்திரம்.

பிள்ளையாரை நினைக்கிறபோது அவ்வையாரையும் நாம் சேர்த்து நினைத்தால் இரட்டிப்பு அநுக்கிரகம் கிடைக்கும். விநாயகர் அகவலைச் சொன்னால் இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் நினைத்ததாகும். எல்லோரும் இதைச் செய்யவேண்டும். வெள்ளிக்கிழமைதோறும் பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போய் விநாயகர் அகவல் சொல்லி விக்நேச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணவேண்டும்.

பிள்ளையாருக்கு எல்லோரும் சொந்தம், பிள்ளையார் எல்லோருக்கும் சொந்தம். ஏழை எளியவருக்கும், சாஸ்த்திரம் படிக்காத சாமானிய ஜனங்களுக்கும் கூடச் சொந்தம். மற்ற ஸ்வாமிகள் நைவேத்திய விநியோகத்தில் பெரிய மநுஷ்யர்களுக்குத்தான் முதலிடம். பிள்ளையாரோ தமக்குப் போடுகிற சிதறுகாய் இவர்களுக்குப் போகாமல் ஏழைக் குழந்தைகளுக்கே போகும்படியாக வைத்துக் கொண்டிருக்கிறார். எல்லோரும் அகவல் சொல்லி அவரை வழிபட வேண்டும். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இதில்

அதிக உரிமை உண்டு. அவ்வை பெண்ணாகப் பிறந்ததால், பெண்கள் எல்லோருக்கும் அவளுடைய இந்த ஸ்தோத்திரத்தில் பாத்தியதை ஜாஸ்த்தி. அவள் குழந்தைகளுக்கு உபதேசித்த பாட்டி. விநாயகரும் குழந்தைத் தெய்வம். அதனால் அவளுடைய அகவலைக் குழந்தைகள் யாவரும் அவர்முன் பாடி சமர்ப்பிக்கவேண்டும். கொஞ்சம் கடமுட என்றிருக்கிறதே, அர்த்தம் புரிந்தாலும் புரியாவிட்டாலும் அவ்வையின் வாக்குக்கே நன்மை செய்கிற சக்தி உண்டு என்று நம்பி அகவலைப் பொட்டை நெட்டுருப் போட்டுச் சொன்னாலும் போதும், அதனால் நாமும் சேமம் அடைவோம். நாடும் சேமம் அடையும்

அழகான பெட்டி ஒன்று கிடைக்கிறது. அதற்குள் நிறைய ரத்தினங்கள் இருக்கின்றன. ஆனாலும் பெட்டியைத் திறக்கச் சாவியைக் காணோம். அதனால் பெட்டி வேண்டாம் என்று விட்டு விடுவோமா? சாவி கிடைக்கிறபோது கிடைக்கட்டும் என்று பெட்டியை வைத்துக்கொள்வோம் அல்லவா. இப்போது பெட்டியை விட்டுவிட்டால் பிறகு சாவி கிடைத்தாலும் பிரயோசனமில்லையே? விநாயகர் அகவல் அப்படிப்பட்ட அழகான பெட்டி. அதற்குள்ளே யோக சாஸ்திர விஷயங்கள் ரத்தினம் மாதிரி உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்கிற புத்தி(சாவி) இப்போது நம்மிடம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. இப்போதே பிடித்து அதைச் சொரல்லிக்கொண்டிருப்போம். சொல்லச் சொல்ல தானே அர்த்தம் புரிய ஆரம்பிக்கும். பிள்ளையாரே அது புரிவதற்கான அநுக்கிரகத்தைச் செய்வார்.

பிள்ளையார் எல்லாருக்கும் நல்லவர், எல்லாருக்கும் வேண்டியவர். சொந்தம். **சிவசம்பந்தமான லிங்கம், அம்பாள், முருகன் முதலிய விக்கிரகங்களைப் பெருமாள் கோயிலில் பார்க்க முடியாது. ஆனால் பிள்ளையாரும் சிவகுடும்பத்தைத்தான் சேர்ந்தவர் என்றாலும், விஷ்ணு ஆலயங்களில் கூடப் பிள்ளையார் மட்டும் இருப்பார்.** தும்பிக்கை ஆழ்வார் என்று அவருக்குப் பெயர் சொல்லுவார்கள். மதச் சண்டைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் அவர்.

அதனால்தான் புத்தமதம், ஜைனமதம் எல்லாவற்றிலும் கூட அவரை வழிபடுகிறார்கள். தமிழ் நாட்டிலிருப்பது போல் மற்ற ராஜ்யங்களில் தடுக்கி விழுந்த இடமெல்லாம் விநாயகர் இல்லாவிட்டாலுங் கூட பாரத தேசத்திலுள்ள அத்தனை ஸ்தலங்களிலும் ஓரிடத்திலாவது அவர் இருப்பார். கன்னியாகுமரியிலும் பிள்ளையார், இமயத்தின் கோடியில் கேதாரத்திலும் ஒரு பிள்ளையார் என்று ஒரு கணபதி பக்தர் என்னிடம் பெருமைப்பட்டுக் கொண்டார்.

நம் தேசத்தில் மட்டும்தான் என்றில்லை. ஜப்பானிலிருந்து மெக்ஸிகோ வரை உலகத்தின் எல்லாத் தேசங்களிலும் விநாயகர் விக்கிரஹம் அகப்படுகிறது. லோகம் பூராவும் உள்ள சகல நாடுகளிலும் அவரைப் பல தினுசான மூர்த்திகளில் வழிபடுகிறார்கள்

அப்படி லோகம் முழுவதற்கும் சொந்தமாக இருக்கப்பட்டவரை நாம் எல்லோரும் தவறாமல் ஆராதிக்க வேண்டும். வசதி இருப்பவர்கள் அவருக்கு மோதகமும், மற்ற பக்ஷணமும், பழங்களும் நிறைய நிவேதனம் செய்து, குழந்தைகளுக்கு விநியோகம் பண்ணவேண்டும். அவர் குழந்தையாக வந்த சுவாமி. குழந்தை என்றால் அது கொழுகொழு என்று இருக்கவேண்டும். அதற்கு நிறைய ஆகாரம் கொடுக்கவேண்டும். பிள்ளையாரின் தொப்பை வாடாமல் அவருக்கு நிறைய நிவேதனம் செய்யவேண்டும். வெள்ளிக்கிழமை தோறும் அவருக்கு சிதறுகாய் போட்டுக் குழந்தைகளை சந்தோசப்படுத்த வேண்டும். பெரியவர்கள் இவ்வாறு மற்றக் குழந்தைகளை மகிழ்வித்தால், ஈசன் குழந்தைகளாக்கித் தம்மோடு விளையாடச் செய்வார்.

பெரியவர்களானால் துக்கமும், தொல்லையும் தான் குழந்தை சுவாமியோடு சேர்ந்து இந்தத் துக்கத்தைத் தொலைத்து அவரைப்போல் ஆனந்தமாகிவிட வேண்டும். அவர் எப்போதும் பேரானந்தத்தைப் பொங்க விடுபவர். நாம் உண்மையாக பக்தி செய்தால் நம்மையும் அப்படி ஆக்குவார்.

தமிழ் நாட்டின் பாக்கியமாகத் திரும்பிய இடமெல்லாம் அமர்ந்திருக்கும் அவரை நாம் எந்நாளும் மறக்கக் கூடாது. நாம் எல்லோரும் தவறாமல் பிள்ளையார் கோயிலுக்குப் போவது, தேங்காய் உடைப்பது விநாயகர் அகவல் சொல்வது என்று வைத்துக்கொண்டால் இப்போதிருக்கிற இத்தனை ஆயிரம் கோயிலுங்கூடப் போதாது. புதிதாகக் கட்ட வேண்டியிருக்கும்.

புதிதாகப் பிள்ளையார் கோயில் கட்டி மூர்த்திப் பிரதிஷ்டை செய்வதில் வேடிக்கையாக ஒரு உலக வழக்கு இருக்கிறது. அதாவது புதிதாகப் பிள்ளையார் விக்கிரகம் அடிக்கக் கொடுக்காமல், ஏற்கனவே ஒரு கோயிலில் இருக்கிற பிள்ளையாரைத் திருடிக் கொண்டு வந்துதான் புதுக்கோயிலில் வைக்கவேண்டும் என்பார்கள். இது என்ன சாதாரண விஷயங்களில் திருட்டு கூடாது என்றால் தெய்வக் காரியத்தில் போய்த் திருட்டுச் செய்யலாமா என்று தோன்றுகிறதல்லவா. பிள்ளையாரைத் திருடலாம் என்றால் தான் ஒவ்வொரு கோயிலைச் சேரந்தவர்களும் நம் பிள்ளையார் எங்கே

திருட்டுப் போய் விடுவாரோ என்ற பயத்தால் அவரை அல்லும் பகலும் கவனித்துக் கொள்வார்கள். இப்போது பல ஊர்களில் கவனக் குறைவால், சுவாமியைக் காணோம் என்று செய்தி வருகிற மாதிரி நடக்காமல் இருக்கும். அதற்காகவே இப்படி ஒரு திருட்டு வழக்கத்தைச் சொல்லி வருகிறார்கள் போலிருக்கிறது. பிள்ளையார் நினைப்பு நம் ஜனங்களுக்கு நீங்கவே கூடாது என்றுதான் இம்மாதிரியான ஏற்பாடுகளை நம் பெரியவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். நமக்கு எப்போதும் துணை அவர்தான்.

நமக்கும், நாட்டுக்கும், உலகுக்கும் எல்லா க்ஷேமங்களும் உண்டாவதற்கு அவ்வையார் மூலம் பிள்ளையாரைப் பிடிப்பதே வழி.

**JEYAKASTHURI SATELITE**


**லண்டன் வாழ் தமிழ் மக்களுக்கு மிகக்குறைந்த விலையில்**

தமிழ் ஒளி 1 ,
தமிழ் ஒளி 2 (விரைவில்) ஆகிய சேவைகளைக் கண்டுகளிக்க டிஜிட்டல் டெக்கோடர் இணைப்பு துரித சேவையில் செய்து தரப்படும்.

**இணைப்புக்குப் பின்னான சேவைகட்கான வசதியும் செய்து கொடுக்கப்படும்.**

**இத் துரித மலிவுச்சேவை குறித்த சில நாட்களுக்கு மட்டுமே. உடனே தொடர்பு கொள்ளுங்கள்**

தொடர்புகளுக்கு:
**SHANKAR**
**0181 220 6647**
**0956 166 847**



மரணம்வரை உழையுங்கள்,
நான் உங்களுடன் இருக்கிறேன்.
நான் மசைந்த பிறகு
என் ஆன்மா
உங்களுக்கு வழிகாட்டும்.
–சுவாமி விவேகானந்தர்



# நினைத்தாலும் முடியாத செயல்பலதை முடிக்கின்றார் ! வாழியவே!

**சிவஸ்ரீ கயிலை நாகநாதசிவம் குருக்கள்**



குறையாத வழிபாடு துவளாத தொண்டருள்ளம்
இறைவனின் அருளாசி இதமான இசை இன்பம்
நிறைவான கவனிப்பு நிம்மதியால் தமிழ்மக்கள்
மறையாத புகழோடு வளர்ந்துவரும் சங்கமிது

கலைகளை வளர்க்கின்றார் கருத்தரங்கம் அமைக்கின்றார்
நிலையாக உணர்வோங்க கலசமதை வளர்க்கின்றார்
அலையலையாய் தொடர்ந்துவரும் மதமாற்றம் தவிர்க்கின்றார்
தலைமையிடம் ஏற்றுநின்று தெய்வப்பணி புரிகின்றார்

விஞ்ஞானம் பெருகிவிடும் விந்தை கலிகாலமதில்
மெஞ்ஞானம் சிறந்திடவே சமயப்பணி புரிகின்றார்
செய்நன்றி மறவாமல் சான்றோரை கௌரவித்து
ஐங்கரனின் அருளோடு தொண்டாற்றி மகிழ்கின்றார்

கயிலாயத் திருமலையில் அருளாட்சி புரிந்துவரும்
மைவிழியாள் பார்வதிதன் பதிசிவனார் திருவருளால்
வையத்துள் சைவமதை தமிழோடு வளர்த்துவரும்
சைவ முன்னேற்றச் சங்கம் தழைத்தோங்கிச் சிறந்திடுக

சங்கத்தின் செய்தியொடு சமயத்தமிழ்ச் சிறப்பதனை
மங்காமல் வெளிக்கொணரும் மதிப்பான புத்தகமாம்
தங்கக் கலசமதை கற்றுணர்ந்த அறிஞர்கள்
உங்களுக்காகத் தானே உயர்வோடு தருகின்றார்

குணத்தாலும் குறையாத தனத்தாலும் வளத்தாலும்
மனத்தாலும் மாறாத வார்த்தையாலும் மதிப்போடு
இனத்தாலும் இறைவன் இசைவான அருளாலும்
நினைத்தாலும் முடியாத செயல்பலதை முடிக்கின்றார்

# வரலாறு

பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதனால் எமது வாழ்க்கையை மாற்றி அமைத்து உயர்வு பெறச் செய்யலாம். அதற்கு வேண்டிய அவதான ஆற்றலும் மெய்யுணர்தலும் திடசங்கற்பமும் எம்மிடம் இல்லாவிடின் முன்னேறுதல் இயலாததாகும். தனித்தனியே அவர்களுடைய வரலாற்றைப் படிப்பதைவிட, அவர்களுள் இருவரை ஒப்பு நோக்கிப் படித்தல் கூடிய பலனுடையதாகும். ஒப்பு நோக்கும்போது எமது மனத்தில் எவரிடமும் அபிமானமோ துவேஷமோ இருத்தல் கூடாது. மதச் சார்பு இருப்பின் ஒருவருக்கு இயற்கையாகவே தனது மதத் தலைவர் மீது அபிமானமோ அல்லது பற்றுதலோ உண்டாகும். இதன் காரணமாகப் பிற மதத் தலைவர் மீது துவேஷம் ஏற்படுதல் சகஜமாகும். இங்ஙனம் துவேஷ மனப்பான்மையுடன் பிறமதத் தலைவரை நோக்குவதால் ஒருவர் தன்னைத் தானே தாழ்த்திக் கொள்வார். **திருமந்திர ஆசிரியராகிய திருமூலரும் தம்மபத ஆசிரயரான புத்தபிரானும் சமாதி நிலை பெற்ற சீலர்களாவர்.** சம நோக்கு அல்லது சம திருஷ்டியே சமாதி நிலையின் சிறப்பு அம்சமாகும். எனவே நாம் திருமூலரையும் புத்தபிரானையும் சமமாக நோக்கிப் பயின்று ஒழுகினால் எமக்கும் சமாதி நிலை நிச்சயமாகக் கிட்டும்.

இருவரும் துறவறத்தையே மேற்கொண்டபோதும் இல்லறத்தாருக்கும் நல்வழி காட்டி உள்ளனர். இருவரும் சமஸ்கிருத மொழியை நன்கு பயின்றிருந்தபோதும், தாம் வாழ்ந்த பகுதிகளில் வசித்த பொதுமக்களின் தாய்மொழி மூலமே தமது உபதேசங்களைச் செய்துள்ளனர். தெய்வீக மொழி என அக்காலத்தில் கருதப்பட்ட சமஸ்கிருதத்தை விட்டுப் பொதுமக்களுடைய தாய்மொழியாகிய தமிழில் திருமூலரும், பாளியில் புத்தபிரானும் உபதேசிக்கத் துணிந்தமை ஒரு புரட்சியாகும். திருமூலர் வாழ்ந்த காலத்தைப் பற்றியோ அல்லது அவருடைய குடும்ப வரலாற்றைப் பற்றியோ திட்டவட்டமாகக் கூறுதல் கஸ்ரமாகும். அவருடைய வரலாற்றில் அற்புதங்களும், அசாதாரண நிகழ்ச்சிகளும் ஏற்பட்டதாகப் புராண வாயிலாக அறிகிறோம். புத்தபிரான் வாழ்ந்த காலம் இன்றைக்கு 2686 ஆண்டுகள் முன்பதாகும் என்பதை வரையறுத்துக் கூறுவதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. வரலாற்றுக் குறிப்புகள்தானும் திருமூலர் காலத்தில் கிடைக்கவில்லை. எனவே சம காலத்தில் அவருடன் வாழும் பெரும்பான்மையான சைவ மக்களிடம் இல்லாமை குறைபாடாகும்.

புத்தபிரான் சத்தியதரிசனம் பெற்றமுறையும் திருமூலரைப் போன்றதாகும். தியான சமாதி மூலம் அவர் பெற்ற உள்ளொளியே அவருக்குச் சத்தியதரிசனம் நல்கிற்று. எந்த ஒரு குருவும் அவருக்குப் புற உலகிலிருந்து போதித்து மெஞ்ஞானம் வழங்கவில்லை. விவேகப் படைப்புச் சக்தி உள்ளிருந்து மலர்ந்ததன் மூலமே நான்கு உண்மைகளையும் அட்டாங்க உயர்நெறியையும் கண்டுபிடித்தார். கோசல நாட்டில் கபிலவஸ்து என்னும் தலைநகரில் கி.மு. 623 ஆம் ஆண்டு அவர் சாக்கிய அரசகுலத்திற் பிறந்தார். துன்பமே தெரியாதபடி சகல அரச போகங்களுடன் வளர்க்கப்பட்டார். கௌதமர் அல்லது சித்தார்த்தர் என்னும் இயற்பெயர் பெற்றார். அரண்மனையை முதல் முதலாக விட்டு வெளியே உலாவச் சென்றபோது, நரைத்து கூனிப் பொல்லுப் பிடித்த ஒரு வயோதிபரையும், உடல் மெலிந்த அவலட்சணமான நோயாளியையும், அதைத் தொடர்ந்து மயானத்துக்குக் கொண்டு செல்லப்படும் ஒரு பிரேதத்தையும் அவதானித்தார். கடைசியாக அன்று ஒரு துறவி கம்பீரமாக வீதி வழியே உலாவிச் செல்வதைக் கண்டார். இக் காட்சிகள் அவருக்கு உலகியலைப் பற்றிப் படம்பிடித்துக் காட்டின. துன்பத்தைப் பற்றிய முழுமையான உண்மை விளக்கத்தையும் அதை நீக்க வேண்டிய நெறியையும் அறிய ஆவலுற்றார். மணம் முடித்த இளம் அரசி யசோதராவையும், குழந்தை இராகுலனையும் துறந்தார். அரச போகமே வேண்டாம் எனத் துணிந்தார்.

ஆறு வருடங்களாகப் பல இடமும் அலைந்து எத்தனையோ ரிஷிகளிடமும் குருமார்களிடமும் உபதேசம் பெற்றார். அறிவு நூல்களைப் பயின்றார். ஞான போதம் கிடைக்கவில்லை. நோன்பு, விரதங்கள், பலவிதமான சுய சித்திரவதைகள் யாவும் அனுசரித்தார். பலன் எதுவும் கிட்டவில்லை. இவற்றைக் கைவிட்டு ஓர் அரசமர நிழலில் தியான சமாதியில் தவமுயற்சி எடுத்தார். நான்கு வாரங்கள் மட்டும் தீவிரமான சிரத்தையுடன் தியானத்தில் ஆழ்ந்தார். ஆறு வருடங்களாகப் பிறரிடமிருந்து பெற முயற்சித்த ஞான போதத்தை நான்கு வாரங்களில் தியான சமாதி மூலம் சுயமாகவே உள்ளிருந்து ஞானபோதம் மலரப் பெற்றமை அவர்கள் புரிந்த சாதனையின் ஒருமைப்பாட்டை நன்கு விளக்குகிறது. புத்தபிரான் தாம் கண்டுபிடித்த தர்ம

சக்கரத்தை உலகில் சுழலவிட்டார். திருமூலர் தாம் கண்டுபிடித்த சிதம்பர சக்கரத்தை உலகில் சுழல விட்டார். இந்துக்களுக்கும் புத்த மதத்தவர்களுக்கும் இவ்விரு சக்கரங்களுக்கும் உள்ள ஒற்றுமையும் மர்மமும் சரிவரப் புலப்படாது இருத்தல் ஆச்சரிய மாகும்.

இயற்கையாக இயங்கும் வியாபகமான சக்தியை தர்ம சக்கரம் என வட்டவடிவில் புத்தபிரான் விளக்குகிறார். அதே சக்தியை சிதம்பர சக்கரமாக எடுத்துக் காட்டுகிறார் திருமூலர். சிதம்பர சக்கரத்தையே சிவசக்தியென இன்னொரு சொற்றொடரால் விளக்கு கிறார். நிலையில்லாத உலகம் அனைத்தும் வியா பித்துள்ளது சிவசக்தி என்பதைத் திருமூலரும் தர்மசக்தி என்பதை புத்த பிரானும் ஒருமுகமாக ஏற்கின்றனர். அழியாத தர்ம சக்கரத்தை அழியவிடாது பாதுகாத்து வருகிறோம் என எவரும் கூறுதல் பேதைமை ஆகும். உலக வரலாற்றிலே அரசியலையே துறந்து ஞானபோதம் பெற்றவர்கள் எங்கே?

அரசியலைத் தழுவும் மதத் தலைவர்களும் குருமார்களும் எங்கே? மதங்கள் அழியக்கூடும். தர்மம் என்றும் அழியாது. மக்கள் தர்மத்தை மறத்தல் கூடும். அதனால் தர்மம் அழிகிறதெனக் கூச்சலிடுதல் முறையற்றதாகும்.

புத்த பிரானுடைய சரித்திரத்திலே குறிப்பிடக்கூடிய ஒரு சம்பவம் அவர் பிறந்த தினமும், ஞான போதம் பெற்ற தினமும், நிருவாணம் அடைந்த தினமும் ஒன்றாகுதல் ஆகும். அப் பொன் நாள் வைகாசிப் பௌர்ணமி தினமாகும். இவை மூன்றும் இத் தினத்திலேயே நடந்தது ஆச்சரியமாகும். புத்தபிரான் பிறந்த தினத்தைக் கொண்டாடும்போது இதனால் ஞானம், போதம், நிருவாணம் பற்றிய விழிப்புணர்வு பௌத்த மக்களிடம் ஏற்பட வாய்ப்புண்டு. வைகாசிப் பௌர்ணமி தினத்தை இலங்கையில் உள்ள புத்த மதத்தவர்கள் வெசாக் பெருநாளாக மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். நோன்பு இருக்கின்றனர். அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் யாவும் தான தர்மமாக யாத்திரீகர்களின் நன்மைக்காக உன்னதமாக, நடத்துகின்றனர். பௌத்த குருமார்களால் விசேட தர்ம போதனைகளும் பிரித் ஓதலும் நிகழ்த்தப்படுகின்றன. நாடு பூராவும் பௌத்த மக்கள் வாழும் பகுதிகளில் புத்த பிரானுடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் கண்கவர் வர்ணங்களால் தீட்டப்பட்ட அற்புதமான ஓவியப் பந்தல் கோபுரங்கள் தற்காலிகமாக நிறுவப்படுகின்றன. மின் தீப அலங்காரத்தினால் இரவு நேரத்தில் அவை இந்திர லோகம் போலக் காட்சியளிக்கும். அவற்றைத் தரிசிப்பவர் பரவசம் அடைதல் சகஜமாகும். புத்தமதம் பிறந்தது இந்தியாவிலாகும். ஆனால் அது வளர்ந்து பேணப்படுவது சிறிலங்காவிலாகும். இதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் இந்திய சக்கரவர்த்தி தர்ம அசோகனாவார். அவர் தன் மகன் மகிந்தன் மூலம் புத்த சின்னமாகிய அரச மரக் கிளையையும், மகள் சங்கமித்திரை மூலம் புத்த தந்த தாதுவையும் இலங்கைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பிவைத்தார். மகிந்த தேரோ இலங்கையில் புத்த மதத்தை முதன் முதலாகப் பரப்பினார். அரசமரம் புராதன தலைநகராகிய அனுராதபுரத்திலும் புத்த தந்ததாது கண்டியிலுள்ள தலதா மாளிகையிலும் இன்று உலகப் பிரசித்த பெற்று விளங்குகின்றன. வருடந்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் இவற்றை விழா எடுத்து தரிசித்து வருகின்றனர்.

இலங்கையில் வாழும் பௌத்த சிங்கள மக்கள் புத்தபிரானுக்கும் தம்மபதத்துக்கும் கொடுக்கும் மதிப்பும் அனுசரணையும் போல் சைவத்தமிழ் மக்கள் திருமூலருக்கும் திருமந்திரத்திற்கும் கொடுப்பதாக இல்லை. **சைவக் கோவில்களில் ஓதப்படும் பஞ்ச தோத்திரங்களிற் கூடத் திருமந்திரம் சேர்க்கப்படு வதில்லை.** சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் முதன்மையானது திருமந்திரமாகினும் அவை அங்ஙனம் கணிப்பதில்லை. திருமூலருடைய சரித்திரத்தில் கூடு விட்டுக் கூடு பாய்வதற்கும் மூவாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்வதற்கும் வேறு அசாதாரணமான அற்புத நிகழ்ச்சிகளுக்கும் இடங் கொடுத்துப் போற்றப்படுதல் பொது மக்களுக்கு நன்மை பயப்பதாக இல்லை. திருமூலர் இடையர் குலத்தைச் சேர்ந்தவரா அல்லது குரு குலத்தைச் சேர்ந்தவரா என்பதைக் கூடச் சந்தேகத்திற்கிடமாக்கி வாதிடுதல் பேதைமையாகும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாக உள்ளது. அதாவது அவர் புத்தபிரானுக்கு முன்பே **வருணாச்சிரம மனுதர்மத்தையும் புறச் சடங்கு வேள்விகளையும் நிராகரித்துள்ளார் என்பதாகும். அவருடைய புரட்சிக் கொள்கைகளையும் புறக் கணித்த வைதீகப் பிராமணர்கள் அவரையும் அவருடைய திருமந்திரத்தையும் இருட்டடிப்புச் செய்தனர். சைவ வரலாற்றில் அவருக்கு இன்னும் உரிய இடங்கொடுத்து நாயன்மார்கள் நால்வரைப் போலப் போற்றப் படுவதில்லை.**

புத்தபிரான் நிருவாணம் அடைந்த சொற்ப

காலத்துக்குள்ளேயே முதற் புத்த சங்கம் ஸ்தாபிக கப்பட்டுப் புத்த தர்மத்தின் புனிதத் தன்மையைப் பாதுகாக்கும் பணியில் அவருடைய சீடர்களான மஹா காசியப்பாவும் உபாலியும் ஆனந்தாவும் ஈடுபட்டு வெற்றிகண்டனர். அதன் பிற்பாடு காலத்துக்குக் காலம் மூன்று முக்கியமான புத்த சங்கங்கள் கூட்டப்பட்டு புத்த சாசனத்தைப் பாதுகாத்துப் பேணும் முயற்சி தீவிரமாக எடுக்கப்பட்டுள்ளது. திருமந்திர வரலாற்றில் இத்தகைய முயற்சி மருந்துக்கேனும் எடுத்ததாகப் புலப்படவில்லை. திருமந்திரத்தின் புனிதத்தைப் பாதுபாப்பதற்குப் பதிலாக அதன் பாடல்களுள்ளே பல இடைச் சொருகல்களைப் புகுத்தியுள்ளார்கள். அதுவும் போதாது என்று அதன் மூலப்பிரதியை மண்ணுள் புதைத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மறைத்து வைத்தார்கள் தர்மபதத்தைப் போல **திருமந்திரம் பிரசித்தி பெறாததற்குக் காரணம் பிறமதத்தவர்கள் அல்லர். பல சைவ வைதீகத் தலைவர்களிடம் நிலவிய பிற்போக்குவாதம் திருமந்திரத்தைத் தலைதூக்க விடவில்லை.**

திருமூலருக்கு அவர் வாழ்ந்த காலத்தில் எதிர்ப்புக்கள் தோன்றவில்லை. புத்தபிரானுக்கோ எனின் அவர் வாழ்ந்த காலத்திலே பல எதிர்ப்புக்கள் நேர்ந்தன. அவற்றை எல்லாம் மிகவும் சாமர்த்தியமாக முகங்கொடுத்து வெல்லும் விவேக ஆற்றலை அவர் தியான சமாதி மூலம் பெற்றிருந்தார். ஆரம்ப காலத்தில் மாரன் என்னும் தீய தெய்வத்தினினால் அவருடைய உயிருக்கே ஆபத்து உண்டாகியது. அவரைத் தவமுயற்சியிலிருந்து திசை திருப்ப முயன்ற மாரன், அவருக்குச் சுவர்க்க வாழ்க்கை பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி அவருடைய தவத்தைக் குலைக்க முயன்றான். அவர் சுவர்க்கத்தைக்கூட விரும்பாத துறவியாகத் திகழ்ந்தார். அவரைக் கொல்வதற்குப் பாணங்களைத் தொடுத்தான். பாணங்கள் யாவும் மலர்களாக மாறிப் புத்தபிரான் மீது வீழ்ந்தன. அவருடைய இனத்தவனான தேவதத்தன் என்பவன் அவர்மீது துவேஷம் கொண்டான் அவருடைய போதனைகளை எதிர்த்தான். தேவதத்தன் புத்த சங்கத்தில் ஒரு பிக்குவாக இருந்தும்கூட அவரைச் சதிகள் செய்து எதிர்த்தான். சதிகள் மூலம் புத்தபிரானைக் கொல்ல முயன்றான். முடியவில்லை. எனவே புத்த சங்கத்துக்கு மாறான ஒரு சங்கத்தை ஸ்தாபித்தான். தன்னப்பம் தன்னையே சுடும் என்பதற்கிணங்க அவனுடைய தீவினையே அவனைச் சுட்டது. ஒருநாள் எதிர்பாராதபடி தனது வாயினால் இரத்தம் கொட்டி அவன் மாண்டான். தமது எண்பதாவது வயதில் புத்தபிரான் சுந்தன் என்னும் இரும்புக் கொல்லன் அளித்த அன்னதானத்தை உட்கொண்டு நோய்வாய்ப்பட்டார். எனினும் அவர் நோயையும் பொருட்படுத்தாது குசிமா நகரத்துக்குச் சமூகமளித்துத் தான் பிறந்ததொரு சூழ்நிலையில் நிருவாணம் அடைந்தார்.

அவர் மோட்சம் அடையுமுன்பு தனது அந்தரங்க பரிசாரகரான ஆனந்தாவிடம் தர்மத்தையும் விநயத்தையுமே எதிர்காலத்தில் அதிகாரமாகக் கொள்ளும்படியும் வேறு தனி நபர் எவரையும் அதிகாரியாக ஏற்க வேண்டாம் எனவும் அறிவுரை வழங்கினார். அவர் மொழிந்த கடைசி உரை இதுவாகும் பிக்குமார்களே தோன்றிய யாவும் அழியும் என்பதைவிட நான் இப்பொழுது உங்களுக்குக் கூறவேண்டியது ஒன்றும் இல்லை. விடுதலைக்காக ஆர்வத்துடன் முயற்சியுங்கள்.

திருமூலரும் புத்தபிரானும் தாம் பெற்ற அறநெறியால் வரும் தூய இன்பத்தை இவ்வையகமும் பெறுமாறு திருமந்திரத்தையும் தம்மபதத்தையும் உலகுக்கு அருளிச் சென்றனர். புத்தபிரானோ எனின் தீர்க்க தரிதனத்துடன் புத்த சங்கத்தையும் நிறுவி அதைச் செயற்பட வேண்டிய விநயத்தையும் (விதி முறைகளையும்) ஆக்கிச் சென்றுள்ளார். கௌதமி விசாகா முதலிய பெண்களுக்கும் தனிச் சங்கம் வகிக்கும் உரிமையையும் நிலை நாட்டியுள்ளார். இத்துறையில் திருமூலர் அக்கறை எடுக்காதபடியால் திருமந்திர அறநெறி தமிழ் நாட்டில் தனி இடம் பெற வாய்ப்பு ஏற்படவில்லை.



# சிவயோகம்

## அருள்மிகு இலண்டன் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம்

### மூன்றாம் ஆண்டு சித்திரா பௌர்ணமி மகோற்சவப் பத்திரிகை

### 15-01-1999 தொடக்கம் 05-05-99 புதன் வரை

எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரியம்மன் திருவருள் துணை கொண்டு 21 நாட்கள் வருடாந்திர பெருவிழா கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறவுள்ளது. அனைவரும் வருகை தந்து அம்பாளின் அருள் பெற்றேகுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

| | |
|---|---|
| 15-04-99 வியாழன் | பிள்ளையார் திருவிழா |
| காலை | 9.30 மணிக்கு அனுக்ஞை, விக்னேஸ்வர பூசை |
| | 10.00 மணிக்கு கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் |
| | 12.00 மணிக்கு விசேட பூசை |
| மாலை | 6.00 மணிக்கு விநாயகர் அபிஷேகம் |
| | 8.00 மணிக்கு விநாயகர் ஆலயவலம் |
| 16-04-99 வெள்ளி | மாலை 9.00 மணிக்குக் கொடியேற்றம். |
| 17-04-99 இலிருந்து தொடர்ந்து தினசரி | |
| காலை | 10.00 மணிக்கு கலச பூசை |
| காலை | 10.30 மணிக்கு அபிஷேகம் |
| மதியம் | 12.00 மணிக்கு பகற் பூசை |
| மாலை | 05.00 மணிக்கு யாகசாலைப் பூசை |
| மாலை | 06.00 மணிக்கு அபிஷேகம் |
| இரவு | 08.00 மணிக்கு விஷேட பூசை |
| இரவு | 08.30 மணிக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வலம் |
| 29-04-99 வியாழன் இரவு 9.00 மணிக்குத் தேர்த்திருவிழா | |
| 30-04-99 வெள்ளி சித்திரா பௌர்ணமி காலை 10.45 மணிக்குமேல் | |
| | 11.00 மணிக்குள் தீர்த்தம் |
| மாலை | 6.00 மணிக் அம்பாள் சன்னிதியில் பௌர்ணமிப் பொங்கல் |
| இரவு | 8.30 மணிக்கு அம்பாள் புஷ்ப விமானத்தில் ஆலய வலம் |
| 01-05-99 செவ்வாய் | இரவு 8.30 மணிக்கு முருகன் திருவிழா |
| 02-05-99 புதன் | இரவு 8.30 மணிக்கு சாகம்பரி அலங்காரத்திருவிழா |
| 03-05-99 வியாழன் | இரவு 8.30 மணிக்கு ஊஞ்சல் திருவிழா |
| 04-05-99 வெள்ளி | இரவு 8.30 மணிக்கு பூங்காவனம் |
| 05-05-99 சனி | இரவு 8.30 மணிக்கு வைரவர் மடை |

**15-04-99 தொடக்கம் 05-05-99 வரை தினசரி மாலை 7 மணி முதல் 8 மணிலரை திருமதி சரஸ்வதி ராமநாதன் அவர்களது சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்**

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.

**500 இருக்கைகள்**
**அழகிய மணவறைகள்**
**அலங்கார ஜோடனைகள்**
**இசைக் கருவிகள்**
**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்

தொடர்புகட்கு:
நிர்வாகி
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**

# ஈழநாட்டு முருகன் ஆலயங்கள்

வடமொழியிலும், செந்தமிழிலும் நூற்றுக்கணக்கான திருநாமங்கள் உள்ள எங்கள் வழிபடுதெய்வமும் குலதெய்வமுமாய் விளங்கும் முருகப் பெருமானுக்குப் பரத்துவமும் வியாபகமும் அதிகமாகும். இந்த வகையிற் பெருமானாருக்கு எங்கள் நாட்டிற் பலவாய திருக்கோயில்களும் வேற்கோட்டங்களும், மடாலயங்களும் உள. எம்பெருமானார் தேவர்கள் நிவேதிக்கும் நிவேதனத்தைத் திருவமுது செய்தருளும் வகையிற் குறவர்கள், பக்தர்கள் நிவேதிக்கும் தினைமா, புற்கை முதலியவற்றையும், திருவமுது செய்து திருவருள் பாலித்தருளுபவர். அவரே கலியுக வரதர், கண்கண்ட தெய்வம் என்பது படிப்பறிவில்லாத மக்களும் ஒப்புக் கொண்ட உண்மை. குன்றமெறிந்த குமரவேல் அன்று இரண்டாம் தமிழ்ச்சங்கத்து நூலறிபுலவனாய்த் தலைவனாய் இருந்தார் என்பர். அந்த இடைச் சங்கம் அமைந்த இடம் கபாடபுரம் என்பர். அந்தக் கபாடபுரம் தானும் கடலிடை அமிழ்ந்த தென்னகம் என்பர். அத்தென்னகத்துப் பஃறுளியாறும், குமரி கொடுங்கடல் கொள்ள, அவ்விரு ஆறுகளுக்கும் இடைப்பட்ட குறையே ஆற்றிடைக்குறை எனப்படும் நிலமென்க.

இலங்கை என்பதன் கருத்து ஆற்றிடைக்குறை என்பதால் இந்த நிலப்பரப்புக் கபாடபுரத்தின் எஞ்சிய பகுதி. ஆகவே, நாம் இடைச்சங்ககாலத்து நிலப்பரப்பையே குடியிருப்பாகக் கொண்ட பழந்தமிழராவோம். நாம் எங்கிருந்தும் வந்தவரல்லோம். இங்கேயே வாழ்ந்த வராவோம்.

நாம் கபாடபுரத்தினரன்றிச் செந்தமிழ்ப் பரமாசாரியராய முருகப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமான பெரும் பக்தருமாவோம். எனவே எங்கள் வழிபடு தெய்வமாகிய முருகப் பெருமானே எங்கள் குலதெய்வமுமாவர். எம்பெருமானர் எமக்குப் பெருவிருப்பத்தைத் தருபவரும், விருப்பத்தை நிறைவேற்றுபவருமாகவே அவரை நாம் வேள் என வழங்கி வணங்கி வந்தோம். அவரும்தான் செம்மேனியெம்மான். எனவே நாம் அவரைச் செவ்வேள் என்றே வணங்கினோம்.

மிகப்பழைய தமிழ் நூல்களுள் ஓங்கு பரிபாடல் எனவுயர்வு பெற்ற பரிபாடலிற் செவ்வேள் என்றே வணங்கினோம். பின்னர் பத்துப்பாட்டு என்னும் தொகுதியில் முதலில் அமைந்த திருமுருகாற்றுப்படை என்னும் திருமுறையில் முருகன் என்றே வழிபட்டோம். இந்த வகையில் எம்பெருமானாருக்கு நாளடைவில் நம்மவர் பலவாய திருநாமங்களைத் தம் மனதுக்கினிமையாக இட்டு வணங்கினர். அழகு, இளமை, மணம், தெய்வத் தன்மை உள்ள எங்கள் இறைவனைத் தேவதேவ தேவாதி தேவப் பெருமாளே என்று ஆராமையோடு பாடி மகிழ்ந்தனர். எங்கள் பெருமான் எம்மவருக்கு வாழ்வும், வளமும் வரமும் அளித்தருளிய வகையில் அவரை நெடும் பண்டைக் காலமாக நம்மவர் துன்னித்துன்னி வழிபட்டு அன்பும் அருளும் அறனும் பெற்றனர். எங்கள் பெருமான் பெறலரும் பரிசுகள் அருளுவதிற் பெரிய வரப்பிரசாதி. செந்தமிழ் வளர்த்த பைந்தமிழ்ச் சங்கங்களுள் பழையனபோக மூன்றாம் சங்கம் இன்றைய கூடல் என்னும் மதுரையில் நடைபெற்றது. அதிற் கவியரங்கேறிய புலவர் பெரு மக்களுள் ஈழத்துப் பூதன்மகனார் தேவன் என்பாரும் ஒருவர். அவர் நற்றிணை, அகநானூறு முதலாய அகத்திணைத் தொகுப்புகளிற் பாடல்கள் தந்துள்ளனர். அங்கெல்லாம் முருகனைப் பற்றியும் அவன் கைவேல் ஏந்திய பூசாரியைப் பற்றியும் பாடியிருக்கின்றார். முருகன் எமது பாரம்பரியத்துப் பழைமையான தெய்வம். எம்மவர் முருகனை முன்னிட்டே தம் மக்களுக்குப் பெயர்கள் வைத்தழைத்தனர்.

**பல்கலைப் புலவர்**
**க.சி.குலரத்தினம்**

பெண்பிள்ளைகள் வள்ளி, தேவயானை தேவியர் திருநாமங்களைப் பெற்றிருந்தார்கள். எம்மவர் அவரைக் காலத்துக்குக் காலம் வரங்கொண்டு உய்தி பெற்ற பெருவாழ்வில் வாழ்த்தி வணங்கிய போது வேலன் என்றனர, கந்தன் என்றனர், சுப்பிரமணியன் என்றனர், சண்முகன் என்றனர், ஆறுமுகன் என்றனர். தமிழிடையே தோத்திர நூல்கள் எழுந்த காலத்திற் பலவிதமான பிரபந்தங்கள் செய்தனர். புராணங்கள் எழுந்த காலத்தில் பல புராணங்கள் செய்தனர்.

எம்பெருமான் புகழ்கூறும் புராணங்களுள் தலையாயது கந்தபுராணம். கந்தபுராணத்தைப் புராண நாயகம் என்று கொண்டாடுவர். கந்த புராணத்தை எத்தனை தரம் திருப்பித் திருப்பிப் படித்தும் கேட்டும் நயந்தும் ஆறாமை பெறாத அடியவர்கள் அதனை ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானோரிடைப் புராணபடனஞ் செய்தும் விரித்துரைத்தும் வந்தனர். இந்த வகையில் ஆறுமுக நாவலர் அதனை அதியற்புத அதிமதுர சுத்த செந்தமிழ் எனக் கண்டு கொண்டாடித் தூய வசன நடையில் எழுதி இன்பங் கண்டார். அவரின் மாணாக்கராய செந்திநாத ஐயர் அவர்கள் அந்தப்பாற் கடலைக் கடைந்து வெண்ணெய் எடுத்தாற் போல, கந்தபுராண நவநீதம் என்னும் நூலை நயந்து எழுதினார்.

கந்த புராணத்தை அதன் பரிமளிப்புப் புறம் போகாதவாறு பட்டுத்துணியால் சுற்றி பூசையில் வைப்பாரும் இருந்தனர். மக்களை மேலவராக்கித் தூயவராக்கிய கதை கந்த புராணக்கதையாகும்.

இங்ஙனமாய் கந்த புராணத்தின் கதாநாயகமாய்க் கந்தவேள் எழுந்தருள் செய்வதற்கும் அடியார்கள் அன்பர்கள் முதியவர்களையும் மூத்தவர்களையும் முன்புகவிட்டுப் புகுவார் அவர்கள் பின்புகுந்து வழிபட்டு வரம் பெறுவதற்கும் மூத்த தமிழகமாய் இலங் கையிற் பலவாய திருக்கோயில்கள் ஆங்காங்கே உளவாயின. அங்கெல்லாம் அக்கினிப்பூ எனவும் வழங்கும் முருகப் பெருமானாய குறிஞ்சிக்குமரன் எழுந்தருளி மலர்ந்திருப்பர். அவரை வழிபடச் சென்ற வர்களின் வரவை முன்னரே அறிந்தவராய் அவர், அறிவன் நின் வரவு என வரவேற்று வரமீந்தருளுவர். கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணம் போல வென்றி மலைக் கவிராயரின் திருச்செந்தூர் புராணமும் எங்களை வாழ்வித்து உய்தி தந்து வந்துள்ளது.

இங்ஙனமாகச் சிவபூமி என்று பெயர் பெற்ற எங்கள் திருநாட்டிற் சிவனாருக்குரிய ஈஸ்வரங்கள் என்னும் திருக்கோயில்கள் போல எங்கள் முருகப்பெருமா னுக்கும் பலவாய கோயில்கள் மடாலயங்கள் எழுந்துள்ளன.

ஐம்முகச் சிவனாருக்கு அறிகுறியாக அருவுருவத் திருமேனியாகச் சிவலிங்கம் அமைந்தாற்போல, எங்கள் முருகப் பெருமானாருக்கும் அருவுருவம் எனத்தகும் அவரின் சக்திவேல் வழிபடும் இடத்தில் எழுந்தருளியுள்ளது. இத்தகைய வேற்கோட்டங்கள் வடக்கிலும் கிழக்கிலும் பரவலாக உள்ளன. இவற்றைவிட இன்னும் தமிழர் குடியிருக்கும் பிரதேசங்கள் எங்கும் முருகப் பெருமானுக்கும், கந்தன் என்றும் சுப்பிரமணியன் என்றும் திருநாமங்கள் கொண்ட திருக்கோயில்களும் பரவலாக உள்ளன. குடாநாடு எனவுள்ள பிரதேசத்தில் நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, பொலிகண்டி முதலாய தலங்களிற் பெருங் கோயில்கள் உள்ளன. இன்னும் துன்னாலை, கந்தசுவாமி கோயில், பண்ணாகம் முருகமூர்த்தி கோயில், நவாலி முருகமூர்த்தி கோயில், அட்டகிரி கந்தசுவாமி கோயில், தாவடிக் கந்தசுவாமி கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்பனவும் பிறவும் உள்ளன.

இவையிவ்வாறாகத் தீவுப் பகுதிகளில் மண்டைதீவு, சரவணை, வேலணை, முதலிய பகுதிகளிலும் புங்குடுதீவிலும், சாந்நித்தியம் நிறைந்த கோயில்கள் உள்ளன. மேலைக் கரம்பன் முருகமூர்த்தி கோயில் மகாவித்துவான் கணேச ஐயர் முதலாய பெரிய வர்கள் பிரபந்தங்கள் பெற்றது. அப்பாற் காரைநகரிற் குறிச்சிகள்தோறும் குமாரக்கடவுளுக்குத் திருக் கோயில்கள் உள்ளன. மணற்பிட்டி சிவசுப்பி ரமணியர் கோயில், காரைநகர் கதிர்காமசுவாமி கோயில், கருங்காலி முருகமூர்த்தி கோயில் முதலியனவும் பிறவும் உள்ளன.

மிகப் பழைய ஊராய வட்டுக்கோட்டையில் அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயில் முதலாய பல கோயில்கள் உள்ளன. சில கோயில்களிற் பலவாய பரிவார தெய்வங்கள் உள்ளன. உற்சவங்கள் உள்ளூர் மக்களையன்றி வெளியூர்களின் மக்களையும் பெருந்திரளாக இழுக்கும் தன்மை வாய்ந்தனவாயுள்ளன. சில கோயில்களில் மூலமூர்த்தி வேலாயுதப் பெருமானாகவே இருப்ப எழுந்தருளிகள் பலவாய மூர்த்தி பேதங்களில் அமைந்துள்ளன.

முருகனுக்குச் சிறப்பாய ஆறுமுகச் சிவவடிவம் ஆறுமுகசுவாமி என்னும் திருநாமத்தோடு அழகெலாந்திரண்டொன்றாகி அற்புதமாய மைந்துள்ளது.

இங்ஙனம் சிறியனவும், பெரியனவுமாக அமைந்த திருக்கோயில்களிற் பொதுவாகப் பெருமளவில் நடைபெறும் பக்திமயமான விழா கந்தசஷ்டி நாள்களின் விழாவாகும். சந்தசஷ்டியில் நடைபெறும் சூரன்போர் மிக விமரிசையாக நடைபெறுதல் யாழ்ப்

பாணத்துக்கே சிறப்பான விழாவாகும்.

முருகனுக்குரிய படைவீடுகள் தமிழ் நாட்டிலே இருந்த போதிலும் குன்று தோறாடுதல் என்பது நிலையான நின்ற பண்பேயாதலால் இங்கெல்லாம் முருகனுக்கேயுரிய முதியமரபு வழிவழி பாட்டு முறைகள் முட்டின்றி நடைபெறுகின்றன. கலியுகவரதன் என்றும், கண்கண்ட தெய்வம் என்றும் நாம் வணங்க எழுந்தருளியுள்ள முருகப் பெருமானின் பேரருள் இருந்தவாறு,

## சிவச்சின்னங்கள்

சைவ சமயத்தைச் சார்ந்தவர்களிடம் முக்கியமான அம்சமாகக் கருதப்படுவன சிவச்சின்னங்கள் மூன்று ஆகும். முதலிரண்டு சின்னங்களான திருநீறும், உருத்திராட்சமணியும் புறத்தே உடலில் அணியக் கூடியனவாகும். மூன்றாவது சின்னம் பஞ்சாட்சரம் எனப்படும். திருவைந்தெழுத்து இதனை எப்போதும் எந்த நிலையிலும் அகத்திலே அணி பெறச் செய்தல் வேண்டும்.

WITH BEST COMPLIMENTS FROM

RAJA & CO

SOLICITORS

ADMINISTRATORS OF OATHS

295 BALHAM HIGH ROAD
TOOTING BEC, LONDON SW 17
TEL: 0181 682 2585
FAX: 0181 682 2575

MARKANDAN & CO

SOLICITORS

*Empowered to Administer Oaths*

THAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

LEGAL AID

TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303

# கருணையின் மூலம் கலியுக தெய்வம் கந்தனே

— வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் —

*அருணையில் இடைகழியில் உரககிரியில் புவியில் அழகிய*
*செருத்தணியில் வாழ் கற்பகாடவியில்*
*அறிவும்அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப்பொழுதில் அறிவித்த வேதியன்*

*நாலாதி வேதமும் நாதாந்த போதமும் கடந்த கந்தப் பெருமான், அயிலும், மயிலும் அறமும், நிறமுமுடைய பெருமான் என்று அருணை முனிவர்சந்ததமும் போற்றும் செந்தமிழ்ப் பெருமான்.*

*"எந்தை சக்திகள் உயிரெல்லாம் ஒடுங்குறும் எல்லை*
*முந்துபோல ஒன்றாகியே கூடிய முறைபோல்*
*அந்தமில்ல தோர், மூவிரு வடிவும் ஒன்றாகி*
*கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமாரன்".*

உயிர்கள் எல்லாம் சர்வசங்கார காலத்தில் ஒடுங்கும் போது இறைவனது அனைத்துச் சக்திகளும் ஒன்றுபடுவது போல, ஆறு திருவுருவங்களும் ஒன்றாகிக் "கந்தன்" என்ற திருநாமத்தைப் பெற்றான் மலைமகள் மைந்தன். "கந்து" என்ற சொல்லடியாகப் பிறந்த பெயரே கந்தன். கந்துடை நிலையிற் கந்தனை உணர்பவரே உணர்வின் வல்லோராவர். கந்தன் முக்காலத்தும், எக்காலத்தும் அழிவில்லாதவன். அண்டிய வரைத் தன் பன்னிருகரங்களாலும் தழைத்து எடுக்கும் தாய்மைப் பண்பாளன். அவன் தாங்கிய ஆறுமுகமும், பன்னிரு கரமும் அண்டியவர்களை அரவணைக்கவே. இதனை நக்கீரர் எடுத்துப்படைக்கும் அழகே அழகு. சிந்திப்பவர்களின் இரு வினையைச் சிந்தும் வேற்பெருமானின் ஆறுமுகங்களுக்கு மேல் ஆறு மணி முடிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு முடியும் தாமம், முகுடம், பதுமம், கிம்புரி, கோடகம் என்ற ஐந்தழகுறுப்புக்களை உடையதாய் மின்னலைப் பழிக்கும் மணிகள் பதித்தனவாய் சென்னியிற் பொலிய முகங்களின் இரு பக்கங்களிலும் திகழும் மகர குண்டலங்கள் ஒளியை உமிழ, இக்காட்சி விண்ணில் ஒளிவீசும் வெண் திங்களை விட்டு நீங்காத விண்மீன்களைப் போல ஒளிவீசுகின்றனவாம்.

ஆறுதிருமுகங்களைப் பெருமான் கொண்டதற்கு அமைந்த நிலையும் சிந்தனைக்கு விருந்தே.

1.சர்வஞ்ஞத்துவம், திருப்தி, அநாதி போதம், ஆனந்த சக்தி, அலுப்தசக்தி, ஸ்வதந்திரம என்ற குணங்கள் ஆறு.

2. இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி, ஆதிசக்தி, பராசக்தி, குடிலாசக்தி எனச் சக்திகள் ஆறு

3. அகரம், உகரம், மகரம், நாதம், விந்து, கலை எனத் தத்துவங்கள் ஆறு

4. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மேல், கீழ் எனத் திசைகள் ஆறு.

5. மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை தத்துவம் என அத்துவாக்கள் ஆறு

6. ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம், என நிலைகள் ஆறு

7. கணபதி, பிரம்மா, திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், எனக் கடவுளர் அறுவர்

8.பிரணவமும், பஞ்சாசாத்திரமும் சேர்ந்து ஆறு.

தாரக எழுத்தும் சாரபெழுத்தஞ்சும்
வாரண முகவன் மலரோன் திருமால்
வருத்தமில் உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன்
உருத்தெளிந்திட நம் உருவே யாகம்
ஆறுமாமுகத்து அமர்ந்தும் இதுவே
வேறிலையென்று மெய்ம்மொழி செப்பீர்

(சிற்றம்பலநாடிகள்)

9.ஞானப் பிரகாசம், ஞானானந்தப்ரகாசம், சர்வஞான வியாபகப்ரகாசம், சுத்த ஞான சாட்சிப்ரகாசம் சர்வபரிசுத்த பிரமஞானாந்த அருட்ப்ரகாசம் அநாதி நித்ய பிரம ஞானானாந்த சிவப்பிரகாசம் என ஒளி ஆறு

10.ஈசானம், தற்புருடம் அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற சிவபெருமானது ஐந்து திருமுகங்களுடன் சக்தியின் திருமுகமும் ஒன்று ஆக ஆறு.

உலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் அவனே. அணுவில்

அணுவாயும், அண்டத்தில் அண்டமாயும் நீக்கமற நிறைந்துள்ளவன் அவனே. நாம் செல்லும் வழி (ஆறு)யாகி, எல்லாம் கடந்த நிலையில் அடங்கி (ஆறு) நிற்பவனும் அவனே. அச் சச்சிதானந்தப் பரம் பொருளே "கந்தன்" எனும் நாமம் தாங்கி நம் வாழ்வுக்கோர் பற்றுக்கோடாக இலங்கு கிறான். பரிசிலர் தாங்கும் உருகெழு நெடுவேள் தலைச் சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்தவன். ஆராய்ந்தது மட்டுமே போதாது ஆட்கொள்ளவும் வேண்டும் என்ற கருணையினால் உக்கிரகுமார பாண்டியனாக உதித்து, செந்தமிழ்ப் பாண்டி நாட்டை ஆண்டவன். "கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடமாட்டேன்" என்று சாதித்த பொய்யாமொழிப் புலவரின் வாக்கைப் பொய்யாக்கி, முட்டைப் பெயரைத் தாங்கிச் செந்தமிழ் மாந்திய சீர்த்தியாளன், முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் கருணைப் பெருங்கடல்.

பல வண்ண மணிகளை இழைத்து ஒன்றுபடுத்தும் நூல் போல, உலகத்துக் கவினையெல்லாம் ஒன்றாக்கி நிற்கின்ற முருகியற் பொருள். கண்ணிற்கு வண்ண மாக, காதிற்கு நாதமாக, மூக்கிற்கு நுகர்ச்சியாக, நாவிற்குச் சுவையாக, உடலிற்கு ஊற்றின்பமாக இருப்பவன் முருகன். உலகின் அழகையெல்லாம் ஒரு சேரத்தாங்கி, அழியா அழகாய், அழகே உருவாய்ச் சாவா, மூவாப் பேரின்ப வடிவாய், சத்தியச் சுடராகித் திகழ்பவன் முருகன்.

முருகனை வாழ்வியல் மூலமாகக் கொண் டார்க்குக் குறை அணுகாது. காரணம்,

**தேவர்கள் தேவே ஓலம், சிறந்த சிற்பரனே ஓலம்**
**மேவலர்க் கிடியே ஓலம், வேற்படை விமலா ஓலம்**
**பாவலர்க் கெளியாய் ஓலம், பன்னிரு புயத்தாய் ஓலம்,**
**மூவரும் ஆகிநின்ற மூர்த்தியே ஓலம், ஓலம்**

என்று கத்திய தேவர்கள் துயர் தீர்த்த பெருமான். அவுணர் குலமடங்கப் பொடியாக்கிய பெருமான். ஓராயிரம் பேரைப் புடைத்துண்ணும் "கற்கிமுகி" என்னும் பூதத்தைத் தனது அனல்கக்கும் வேலால் அழித்த வேற்பெருமான்.

**"ஓராயிரம் பேரை வருடத்தில் ஒருநாளில்**
**உண்கின்ற கற்கிமுகிதான்**
**ஒன்று குறையாகியிடும் அன்று நக்கீரர் வர**
**ஓடிப் பிடித்த வரையும்**
**காராய குன்றத் தடைத்து நியதிக்**
**கடன்துறை முடிக்க அகலக்**
**கருதி முருகாறவர் உரைத்தருள நீலக்**
**கலாப மயில் ஊறி யணுகிப்**
**பேரான குன்றத் திறந் திவுளி முகியைப்**
**பிளந்து நக்கீரர் தமையும்**
**பெரிய வேல் கொண்டு புனல் கண்டு சுனை மூழ்கிப்**
**பிரான் முகலி நதியின் மேவச்**
**சீராய திருவருள் புரிந்தகர னூராளி**
**சிறுதேர் உருட்டி யருளே!**
**செயசெயன அமரர் தொழ அசுரர் முடி சிதறு முனி**
**சிறுதேர் உருட்டி யருளே!!**

என மார்க்கசகாயத் தேவரும் முருகனது ஒப்பற்ற புகழ் பாடுவார்.

'ஏறுமா நாட்டு நல்லியக் கோடன்'

என்ற சிற்றரசனது நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்துகொள்ள அரசனும் வேலூர்க் கோட்டைக்குச் சென்று வேலனை வழிபட, முருகப் பெருமானின் ஆணைப்படி கோயிற் கேணியிலுள்ள பூவைப் பறித்து முருக நாமம் கூறிப் பகைமேற் செலுத்த அதுவே உயிரைக் குடிக்கும் படையாகி மாற்றலரை அழித்தது. இதனை

"திறல் வேல் நுதியிற் பூத்த கேணி
விறல் வேல் வென்றி வேலோர் எய்தி"

என்ற சிறுபாணாற்றுப்படை வரிகளால் அறியலாம். செந்தமிழ்த் தாயான ஔவைக்கு அருள் புரிந்ததும், கச்சியப்பரின் புத்ரகா மேஷ யாகத்திலே யாகரட்சக மூர்த்தியாகத் தோன்றியதும், கலங்கித் திகைத்த கச்சியப்பருக்குக் 'கந்தபுராணம்' பாடக் கைகொடுத்ததும், குமரகுருபரரின் ஊமை நீக்கிக் 'கலிவெண்பா' கேட்டு உகந்ததும், முருகே பரமென வாழ்ந்த பாம்பனடிகட்குக் கருணை செய்ததும், கலியுகத் தெய்வமாம் கந்தக் கடவுளின் திருவருள் விளைவுகள். 'கலிக்கும் கிலிக்கும் கந்தனே துணை' 'சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை, சுப்பிரமணியனுக்கு விஞ்சிய தெய்வ முமில்லை'. அன்பர்களின் வினைபோக்கி வாழ்வளித்து இதய வாரிதிக்குள் உறவாகும் குறமகள் கொழுநனைப் போற்றிடுவோம் துயர் போக்கிடுவோம்.

# பன்னிரு திருமுறைகளில் முருகன்

டாக்டர் க.வேலாயுதபிள்ளை

பன்னிரு திருமுறைகளுட் பல இடங்களில் முருகன் கூறப்பட்டுள்ளார். ஒன்பதாந் திருமுறையுள் சேந்தனார் திருவிடைக்கழிப் பதிகமென முருகனுக்கெனத் தனியானதோர் பதிகம் பாடியுள்ளார். பதினோராந் திருமுறையுள் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை என்னும் திவ்விய பாடலைக் காண முடிகின்றது.

பத்தாந் திருமுறையாகிய திருமந்திரத்துள் இரு பாடல்களுள் திருமூலர் முருகனை வருணிக்கும் முறை மற்றைய திருமுறைகளுட் கூறப்பட்டுள்ள முறையிலிருந்து வேறுபாடாய் உள்ளதாலும் விரிவுடைக் கருத்துக்கள் அமைந்தமையாலும் அவை முதலிற் கருதற்பாலன. நான்காந் தந்திரத்துள் நவகுண்டம் என்னும் பகுதியுள் வரும் பாடல்

**"எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்**
**தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்**
**கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்**
**மைந்தன் இவனென்று மாட்டிக் கொள்ளீரே"**
*—1026*

எமது தந்தையாகிய சிவனுக்குச் சுடரே திருவுருவம். இச்சுடருக்கு ஆறு பொறிகள். அவை ஆறு வட்டங்களாய்த் திகழ்வன. அவ்வாறு வட்டங்களின்றே ஆறுமுகனான சண்முகன் தோன்றலுற்றான். தந்தையின் முன்னே முருகன் தோன்றலால் அதிற் கந்தனாய்ச் சிவன் கலந்துள்ளான். இதனாற் கந்தன் சிவனெனக் கொள்ளப்படுகின்றான். சீவனுக்குச் சிவ சந்நிதானத்தில் ஆறு ஆதாரங்களும் ஒன்றுபட்டு விளங்கும். ஆதலாற் சீவனைச் சிவகுமாரன் என்பர். தந்தைக்கு உரிய தன்மையைக் குமாரன் பெறுதலாற் சிவகுமாரன் எனப்படுகின்றான். சிவனுடன் ஒன்றுபட்ட நிலையிற் கந்தன் எனப்படுகின்றான்.

அஞ்சு முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றுமென்பர். சதாசிவ மூர்த்திக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என ஐம்முகங்கள் உள என்று ஆகமம் கூறும். இவையன்றிக் கீழ் நோக்கிய முகம் ஒன்றுண்டு. அதுவே அதோமுகமாகும். அதனைத் தரிசித்தல் அதோமுக தரிசனமெனப்படும். இரண்டாந் தந்திரத்துள் அதோமுக தரிசனம் என்ற பகுதியுள்ளும் ஆறுமுகன் — முருகன் விளம்பப்படுகின்றான்.

**"எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்ற**
**வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல**
**அம்பவள மேனி ஆறுமுகன் போயவர்**
**தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே** *520*

ஒளிமண்டல வாசிகளாகிய தேவர்கள், இருள்மண்டல வாசிகளாகிய அசுரர்களாற் துன்புறுத்தப்பட்டனர். துன்பஞ் சகிக்க வொண்ணாத் தேவர்கள், எம்பெருமானாகிய சிவபிரானிடம் சென்று, அசுரனுடைய வலிமையையும் தமது இயலாமையுஞ் சொல்லி, இறைவா முறையாகுமோ என ஓலமிட்டனர். அப்பொழுது **அழகிய பவளம் போன்ற மேனியை உடைய ஆறுமுகனே நீ சென்று தேவரின் பகைவர்களை அழித்து வருவாயாக** என்று இறைவன் பணித்தனன். இவ்விறைவனே தற்பரனாக உள்ளான்.

சிவனது ஆணையால் ஆறுமுகன் அசுரரைத் தொலைத்துத் தேவர்களைக் காத்தருளினார் என்பது இப்பாடலாற் தெரியத்தக்கதாய் உள்ளது.

மேல் வருவனவற்றாற் பந்தாந் திருமுறைக்கு முன்னிடம் ஏன் கொடுக்கப்பட்டது என்றும், பின்னைய பாடலுக்கு முன்னிடம் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதும் புலனாகும்.

தேவார, திருவாசக திருவிசைப்பாக்களுள் (திருவிடைக் கழிப்பதிகம் நீங்கலாக) முருகன் பெரும்பாலும் சிவபிரானின் மகனாகவே காட்டப்பட்டுள்ளார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் **"தழை மயிலேறன் தாதையோ தான்"** எனத் தொடங்கும் பாடலிலும் **"மாயச்சூரன் றறுத்த மைந்தன் றாதை"** என காயச் செவ்விக் காமற் காய்ந்த" என்னும் பாடலிலுள்ளும் **"பெற்று முகந்தது கந்தனையே"** என உற்றுமை சேர்வது மெய்யினையே என்னும் பாடலிலும், **"அமரர் தருங்குமரவேள் தந்தை"** என **"ஊறினா ரோசையுள்"** என்னும் பாடலகத்தேயும், **"மட மயிலூர்தி தாதை"** என, இடமயிலன்ன சாயன் என்னும் பாடலிலும், **"வள்ளி முலைதோய் குமரன் தாதை"** என அவ்வாறே தொடங்கும் பாடலிலும், சிவபிரானின் மைந்தனாக முருகன் கூறப்பட்டுள்ளார்.

திருநாவுக்கரசர், முருகனை மகனாகவும் சிவனைத் தந்தையாகவும் பாடிய முறைமையும் பாடல்களும் வருமாறு:

| முறைமை | பாடல்கள் |
|---|---|
| ஆறுகொலா மவர் தம் மகனார் முகம் | ஆறுகொலா மவரங்கம் படைத்தன |
| நங் கடம் பனைப் பெற்றவள் பங்கினன் | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| சமர சூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன் தாதை | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| சேந்தனை மகனாக் கொண்டார் | செல்வியைப் பாகங் கொண்டார் |
| கடம்பர் காளை தாதை | உடம்பெனும் மனையகத்துள் |
| சூரட்ட வேலன் தாதை | ஆரட்ட தேனும் |
| பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும் | படை மலிந்த மழுவாளும் |
| கோழிக் கொடியோன் தன் தாதை போலும் | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| வள்ளி மணாளற்குத் தாதை | கள்ளி முது காட்டி லாடி கண்டாய் |
| முருகவேள் தனைப் பயந்தாய் | முக்கணா போற்றி |
| முருக வேட்குத் தந்தை காண் | முந்தை காண் |

## சுந்தரர் திருமுறைப் பாடல்கள்

| முறை | பாடல் |
|---|---|
| குறவனார் தம்மகள், தம்மகனார் மணவாட்டி | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| பொன்னாவை மயிலூர்தி முருகவேள் தாதை | அவ்வாறே தொடங்கும் பாடல் |
| செட்டியப்பனை | |
| அங்கை வேலோன் குமரன் பிள்ளை | திங்கள் தங்க சடைக் கண் |

## மாணிக்க வாசகர் கூறிய முறையும் பாடல்களும் வருவன.

| முறை | பாடல் |
|---|---|
| நல் வேலன் தாதை | சுந்தர நீறணிந்து |
| குமரன் தாதைக்கே உந்தீபற | பாலக னார்க் கன்று பாற்கடல் |

## கருவூர்த்தேவர் (திருவிசைப்பா)

| முறை | பாடல் |
|---|---|
| திரு மகன் முருகன் | திருமகன் முருகன் |

பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத்துள் ஒரே ஒரு பாடலில் மட்டும் முருகன் கூறப்பட்டுள்ளார். **சரவணத்தனயரோடும்** எனச் செய்ய மேனிக் கருங் குஞ்சி என்ற பாடலில் கூறப்பட்டுள்ளது.

தந்தை மகன் உறவு கூறப்படாது முருகன் நாமம் அமைந்துள்ள பாடல்களும் உள. அவை மேல் வருவன. திருஞான சம்பந்தர் **அருகரொடு** எனப் பாடும் பாடலிற் கருங்குழல் மடவார் கடி குறிஞ்சி யது பாடி முருகனது பெருமைபகர் முதுகுன்றம் சேயடைந்த சேய்ஞ்ஞலூரிற் செல்வன் என்பன அவை,

__திருநாவுக்கரசர்__ "குமரன் வணங்குங் கழற் பூரணன்"என நாரணனொடு நான் முகன் இந்திரன் என வரும் பாடல் முன்னை யார் மயில் ஊர்தி முருகவேள் தன்னை யாரெனில் தான் ஓர் தலைமகன் கோவாய இந்திரனுள்ளிட்டராக எனத் தொடங்கும் பாடலுட் குமரனும் விக்கின விநாயகனும் போற்றிசைப்ப எனப் பாடப்பட்டுள்ளது. சரவணத்தான் கைதொழுது சாரும் அடி என்பன அரவணையான் சிந்தித் தரற்றும் அடி எனவரும் பாடலிற் காணலாம்.

__சுந்தரமூர்த்திநாயனார்:__ "திங்கள் நம்பி முடிமேல்" எனவரும் பாடலுள் "குமரன் முதல் தேவர் தங்கள் நம்பி" என்றனர்.

__கருவூர்த் தேவர்:__ "குமர விநாயக சனக அம்பலத் தமரர் சேகரனே" எனத் "தனதனற் றோழா" என்ற திருவிசைப்பாவுள் முருகனை அழைத்தனர்.

இப்பாடல்கள் சகலவற்றையும் நோக்கும் போது முருகன் தெய்வயானையுடன் வள்ளி போன்று இணைப்புறாதது கண்கூடு.

முருகன் குமரனாக எட்டுப் பாடல்களுட் கூறப்பட்டுள்ளனர். குமரவேள் என இரு பாடல் களுட் காண முடிகின்றது. முருகனாக பாடல்களுள் வர்ணிக்கப்படுகின்றான். கடம்பன் என இரு பாடல்களுட் பெயர் பெறுகிறார். வேலன் என்ற பெயர் நான்கு இடங்களிற் காணப்படுகின்றது. சேய்ஞ்ஞலூரன் என ஓரிடத்தும், சேந்தன் என ஓரிடத்தும் பெயர் பெறுகிறார். சூர் தடிந்த செயல் மூவிடத்துக் கூறப்பட்டுள்ளது. செட்டி என ஓரிடத்துப் பெயர் கூறப்பட்டுள்ளது. கோழிக் கொடியோனாக ஓரிடத்துக் கொள்ளப்பட்டமை காணலாம். வள்ளிமணாளன் என்ற கருத்து நான்கிடத்தே காண முடிகின்றது. சரவணத்தான் என ஈரிடத்திற் பெயர் பெறுகின்றார். ஆறுமுகன் என்றும் பன்னிரு கண்களுடையவர் என்றும் ஒவ்வோர் இடத்திற் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

கருங்குழன் மடவார் கடி குறிஞ்சி யதுபாடி முருகனது பெருமைபகர் முது குன்றம் என்றவிடத்து முருகன் குறிஞ்சி நிலத் தெய்வம் என்பது திருஞான சம்பந்தராற் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

# கந்தபுராணக் கவியமுதம்

சிவஞானவாரிதி ஞானசிரோன்மணி
குமார.குருசுவாமி B.A

கந்தனது புராணம் கந்தபுராணம் எனப்படும். கச்சியப்பதியில் எழுந்தருளியிருக்கும் விகட சக்கரக் கணபதி துணை கொண்டு கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணம் என்னும் அருமை வாய்ந்த புராணத்தைப் பாடினார். முருகப் பெருமானே **திகடசக்கர** என அடியெடுத்துக் கொடுக்க, முருகப் பெருமானது பாதார விந்தங்களை இதயத்தில் இருத்திப் பாடப்பெற்ற நூல் கந்தபுராணமாகும். ஒவ்வொரு நாளும் தாம் இயற்றிய பாடல்களை எழுதி முடித்துக் கயிறுசாத்தி ஏடுகளைக் காஞ்சி முருகன் சந்நிதியில் வைத்துவிட்டு, கச்சியப்ப சிவாசாரியார் தமது இல்லத்திற்குத் திரும்புவது வழக்கம். மறுநாட்காலை ஆலயத்திற்குச் சென்று பூஜை முடித்து, ஏடுகளை வழிபட்டு எடுத்துப் பார்க்கும் போது, சில இடங்க ளிலே திருத்தம் செய்யப் பெற்றிருப்பதைப் பார்த்துக் கச்சியப்ப சிவா சாரியார் பரவசம் அடைந்து முருகப் பெருமானை நெஞ்சாரத் துதித்துக் கந்த புராணத்தைப் பாடி நிறைவு செய்தார் என்ற வரலாறு மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

கந்தபுராணம் சைவசித்தாந்த சாத்திரங்களுக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக அமைந்த இலக்கியமாகும். சாத்திரங்கள் உண்மைக் கோட்பாடுகளை விளக்குவன. எனினும் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாதனவாயுமிருப்பன. மனிதர்களுக்கும், இறைவனுக்கும், உலகத்திற்கும் இடையிலான தொடர்பையும், திருவருள் ஆன்மாக்களிடத்திலே பதியும் நிலையையும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறும் புராணம் கந்தபுராணமாகும்.

இறைவன் பூவுலகிலே மானிட தேகம் தாங்கிப் பிறவி எடுத்த மனிதர்களுக்கு அருள் பொழிவதற்காக எடுத்தருளிய அவதாரமே முருகப் பெருமானது தோற்றமாகும் என்பது கந்தபுராணம் எமக்குத் தெரிவிக்கும் அரிய செய்தியாகும்.

அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

(உற்பத்திக் காண்டம்)

ஒரு நாமம், ஒருருவம் என்றில்லாத அகிலலோக நாதராக விளங்கும் சிவபரம்பொருள், உலகத்திலுள்ள மனிதர்கள் அருள் பெற்று உய்திபெறும் பொருட்டு உலக உற்பத்திக்காலத்துத் தாமே பிரம்மம் என்று தருக்குற்ற பிரமாவுக்கும் விஷ்ணுவுக்கும் நடுவே ஜோதிப் பிழம்பாகத் தோன்றி நீங்கள் இருவரும் பிரம மம் அல்லவென்று அறிவுறுத்திய சிவபரம் பொருளே கருணை மிகுந்த ஆறு திருவதனங் களுடனும் பன்னிரண்டு திருப்புயங்களுடனும் இளமை, அழகு, திருவருட் பொலிவுயாவும் தோன்றும்படியாகப் பூமியில் வந்து உதித்தனன் என்று பதியிலக்கணத்தின் தன்மையை நினைவுப டுத்துகின்றார் கச்சியப்ப சிவாசாரியார்.

கந்தபுராணத்திலே நான்கு திருமணங்கள் விவரிக்கப்படுகின்றன. நவரசகாவியச் சிறப்புக்கள் பொதிந்து பொலிவு பெறும் கந்தபுராணத்திலே, முதலாவதாக, தக்கன் மகளாக வளர்ந்து தாக்ஷாயணி என்னும் பெயர்பெற்ற அம்பிகை கல்யாணம் இடம் பெறுகின்றது. திருமண வைபவத்தின்போது, கன்னிகாதானம் செய்து கொடுக்கும் தருணத்திலே, தக்கன் தனது கைகளுக்குள், சிவபெருமானது திருக்கரங்களைப் பற்றிக் கொண்டு சிவபெருமானது கைகள் தனது கைகளுக்குள் அடக்கம். ஆதலினாலே "தானே சிவனை விடப் பெரியவன்" என்று நினைத்தான். உடனே சிவபெருமான் மணமண்டபத்திலிருந்தும் மறைந்துவிட்டார். தக்கன் தற்பெருமை கொண்டான். ஆணவத்தால் மமதையுற்றான். செருக்குற்ற தக்கன் முன்னிலையிலிருந்தும் அமலன் இறைவன் மறைந்தருளினார். ஆணவம் இருளை விடக் கொடியது. ஆணவச் செருக்குற்றோர் தெய்வ சாந்நித்தியத்தை உணரமாட்டார் என்பதனை இங்கு தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார் கச்சியப்ப சிவாசாரியார்.

மணமகன் மணமேடையிலிருந்து மறைந்ததனால், திருமண வைபவத்திற் கலந்துகொள்ள வந்த தேவர்கள், கந்தருவர், சித்தர்கள், வித்தியாதரர், முனிவர் அனைவரும் அகன்று சென்றனர். இதனால் தக்கன் அவமானமுற்றான். தனது அவமானத்தைப் போக்குவதற்கு எண்ணிய தக்கன் பெரும் யாகம் செய்ய விரும்பினான். சிவபெருமான் மீது தீராப்பகை கொண்டான். சிவபெருமானை அழைக்காது, யாகத்தைத் தொடங்கினான். அவிப் பொருள் உண்ண ஆசைப்பட்ட தேவர்கள் தக்கனுடைய யாகசாலைக்கு வந்தனர். தாக்ஷாயணி சிவ பெருமானுக்கு அழைப்புப் பெற்றுத் தருவதற்காகத் தக்கனது யாகசாலைக்கு வந்தாள். சிவபெருமானுக்கு அழைப்பு அனுப்புமாறு தந்தையாகிய தக்கனிடம் இரந்தாள். தக்கன் சிவபெருமானை அவமரியாதையாகப் பேசியதுடன் தாக்ஷாயணியின் வேண்டுகோளையும் நிராகரித்துவிட்டான். அவமானத்

துடன் தக்கனது ஓமத்தீயினுட் புகுந்த தாக்ஷாயணி இறைவனது திருமுன்பு தோன்றினாள். தக்கனது செருக்கினையும் தேவர்களது பேராசையினையும் அடக்குவதற்காக வீரபத்திரர் அனுப்பப்பட்டார். சிவபெருமானது ஆணைப்படி தக்கயாகம் குழம்பியது. தேவர்களும் அடித்து விரட்டப் பட்டனர். சிவபெருமானை மதியாது தொடங்கும் கருமங்கள் யாவும் அனர்த்தமாகும் என்பதை எடுத்துக் காட்டியவாறு காண்க.

தாக்ஷாயணியின் வேண்டுகோளுக்கிணங்க, மலையரசன் இமயவரம்பனது தவத்திற்கிணங்க, பார்வதி தேவியாக அம்பிகை திருவவதாரம் செய்தனள். தேவர்கள் சிவநிந்தைக்கு உடந்தையாக இருந்ததை அடக்கும் பொருட்டு, காசிப முனிவருக்கும் மாயை என்னும் அரக்கிக்கும் பிறந்த புதல்வராகக் கருதப்படும் சூரபதுமன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகியோரது தவத்தினை ஏற்றுச் சிவபெருமான் அரிய வரங்களை அருளிச் செய்தார். அவுணபதியாகக் கருதப்படும் சூரபத்மன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தின் மகிமையால் தேவர்களை வென்று அடிமைப்படுத்தினான். அடிமையாகிக் குற்றேவல் செய்த தேவர்கள் மிகுந்த துன்பத்தை அனுபவித்தனர். சிவநிந்தை தீராத இடும்பை தரும் ஓயாத துன்பத்தில் வேதனைப்பட நேரிடும் என்பது இங்கு அறிவுறுத்தப்பட்டது.

தனியே இருந்த சிவன் அம்பிகையைப் பிரிந்து இருக்கின்றார். அம்பிகையோடு கூடிய இறைவனே அருள்புரிய வல்லவராவார். எனவே, அம்பிகையைத் திருமணம் செய்வதற்குச் சிவபெருமானைத் தூண்டுமாறு மன்மதனைச் சிவபெருமானிடத்துத் தூதாகத் தேவர்கள் அனுப்பினர். இறைவன் தக்ஷிணாமூர்த்தியாகக் கல்லால நிழலின்கண் சனக, சனாதன, சனந்தன, சனற்குமாரர்களாய நான்கு முனிவர்களுக்கும் வேதங்கள், சாத்திரங்கள் கூறும் உண்மையை, ஆன்மா திருவருளை நாடி நிற்றல் என்பதைக் குறிக்குமாறு முதலில் மாயா மலத்திலிருந்து ஆன்மா நீங்குதல் வேண்டும். நில்லாதனவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாண்மை கடை அதன் பின் நல்வினை தீவினை இரண்டையும் சமமாக நோக்கும் இருவினை ஒப்பு ஏற்பட வேண்டும். இருவினை ஒப்பு ஏற்பட்டால் மலபரிபாகம் நிகழும். மலபரிபாகத்தில் ஆணவமலம் வலிகெட்டு நிற்கும் போது இறையருள் தானாகவே பதியும் என்பதை உணர்த்தும் சுட்டுவிரலும் பெருவிரலும் இணைந்த சின்முத்திரை காட்டி உபதேசம் செய்தபின் யோகத்திலிருந்த பார்வதிக்கு அருள் பொழியத் திருவருட்பாங்குடன் வீற்றிருக்கும் போது மன்மதன் தாமரை அம்பை இறைவன் மீது செலுத்துவானாயினான். மன்மதனது ஆணை ஏனைய ஆன்மாக்களுக்குப் பொருந்தும். ஆனால் சிவபெருமான் காமவிகாரத்தினாற் பார்வதி பரிணயத்திற்கு உடன்பட்டவர் அல்லர் என்பதை உலகறியச் செய்வதற்கு மன்மதனைச் சாம்பராகும்படி சிவபெருமான் செய்தருளினார். மனிதர்களைப் போலச் சிவபெருமானை நினைப்பது தவறு என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

பார்வதி கல்யாணத்தின் பின்பே ரதிதேவியின் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் மன்மதனுக்கு உயிர்ப் பிச்சையளித்தருளினார்.

ஆணும் பெண்ணும் சேர்ந்தால், குழந்தை பிறக்கும். அதேபோலச் சிவபெருமானும் பார்வதி தேவியும் ஒரு குழந்தை பெற்றுத்தந்தால், தமது குறை தீரும், சிவகுமாரன் சூராதி அவுணர்களது துன்பத்திலிருந்து விடுதலை பெற்றுத் தருவார் எனத் தேவர்கள் கருதினர். அவர்கள் சிவபெருமானிடத்திற் சென்று தங்கள் துயர்தீர்க்கும் ஒரு குழந்தை "நின்னையே நிகர்க்க நீ தரல் வேண்டும் என்று இரந்து வேண்டுதல்" செய்தனர்.

சிவபெருமான் ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் என்னும் தமது ஆறு திருவதனங்களிலிருந்தும் ஆறு நெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவிக்க, அதனை அக்கினி தாங்க முடியாது கங்கையிடம் சமர்ப்பிக்க, கங்கையானது சரவணப் பொய்கையிடத்திலே சேர்ப்பித்தது. சரவணப் பொய்கையிலே ஆறு குழந்தைகள் திருவவதாரமானதை அம்பிகை அறிந்தும் ஏதும் அறியாதவளாக, அக்குழந்தைகளது விவரத்தைச் சிவபெருமானிடம் கேட்டனள். அப்பொழுது சிவபெருமான் விபரத்தைச் சொல்லி, நமது சக்தி அறுமுகன் அவனும் யாமும் பேதகமின்றாம் (கந்தபுராணம்) என அறிவுறுத்தியதிலிருந்து, சிவன்வேறு முருகன் வேறு என்ற கருதுவது அறியாமை, சிவனும் முருகனும் ஒரே அருளுருவமே என்று எம்மை உய்த்துணர வைக்கின்றது கந்தபுராணம்.

தேவர்களது துயர்துடைக்கத் தோன்றிய முருகனுடைய திருவவதாரத்திலே முதலில் நிகழ்வது தாரகாசுர சம்ஹாரம். தாரகன் மாயாமலத்தின் உருவகமாகச் சித்தரிக்கப்படுகின்றான். கிரௌஞ்ச மலையாகக் காட்சியளித்த தாரகாசுரன் தனது மாயையினால் இலட்சம் பூத சேனைகளையும், ஒன்பது கணத் தலைவர்களையும் மயக்கினான். உலகத்திலே காலத்திற்குக் காலம் பல மத, போதகர்கள் தோன்றித் தாம் கூறும் நெறியே சரி என வாதிடுவது வழமை. சிவபரம்பொருளை மெய் என நம்பாத மத போதனை எதுவாயினும் அது மாயா வாதக் கொள்கையாகும். ஒரு போதும் ஆன்மா ஈடேற்றத்திற்கு வழிவகுக்க மாட்டாது. கிரௌஞ்ச மலையும் பல பாதைகள் உடையதாகக் காட்சி கொடுத்தது. அவற்றில் நுழைந்த வீரவாகு தேவர் முதலானோர் தமது கெட்டித்தனத்தால்

வழிகாண்போம் என்று எண்ணி, வழி தெரியாது மாயையின் தந்திரத்தால் மாட்டுப்பட்டனர். சமயவாதிகளின் பல்வகைப்பட்ட சாதுர்யமான வாதங்களுக்கு உவமானமாகக் கிரௌஞ்சமலையின் பாதைகள் வருணிக்கப்படுகின்றன. சிவபெருமானது கருணை நாடாத போதனை எதுவும் சாதனைக்கு உதவாது, வேதனையேதரும் என்பதற்குச் சிறந்த உதாரணமாக அமைகிறது. முருகப் பெருமானது திருக்கரத்திலிருக்கும் ஞானசக்தியாகிய வேல் கிரௌஞ்சமலையைப் பொடி செய்து வீரவாகு தேவர் முதலாய கணத் தலைவர்கள் ஒன்பது பேரையும் இலட்சம் பூதங்களையும் மீட்டது என்னும் செய்தி கந்தபுராணத்திலே கூறப்படுகிறது. மத போதனாசிரியர்களது சுயவிளம்பரமும் வெற்றார வாரத் தோற்றமும் பகட்டான மயக்க நிலையும் மெய்யுணர்வைத் தரமாட்டாது. அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் நிலை இறைவனது திருப்பாதங்களை நினைப்பற நினைவர் செஞ்சரணார விந்தங்கள் பதியும்பேறு பெறுவர் என்பது கந்தபுராணத்திலே கச்சியப்ப சிவாசாரியார் எடுத்துக் காட்டும் விளக்கமாகும்.

கருமத்தாற் கருமி சிறப்படைகிறான். எக்கரும மாயினும் அதில் விருப்போ வெறுப்போ இருத்தலா காது என்பதே இருவினை ஒப்பின் கருத்து. சிங்கமுகாசுரன் இருவினை ஒப்பின் உதாரணமாக கந்தபுராணத்திலே எடுத்துக் காட்டுப்பட்டுள்ளான். ஆணவமலத்தினால் எதையும் சாதிக்க முடியாது என்பதை "அசுரர் தவம்" எடுத்துக் காட்டுகிறது. சூரபதுமன் தனது உடலை அரிந்து ஓம குண்டத்தில் இட்டுத் தன்னையே ஓமாக்கினிக்கு இரையாக்கி விடுகிறான். சிங்கமுகாசுரன் தனது செயற்றிறனால் யாகத்தை நிறைவு செய்து சிவபெருமானது திருவருட் பேற்றிற்குப் பாத்திரமாகிறான். தனது அண்ணன் சூரபதுமனையும் இறையருளால் உயிர் பெற்றெழச் செய்கிறான். முருகப் பெருமானது பேராற்றல் அனைத்தையும் நன்கு உணர்ந்தவனாகிறான். சூரபதுமனது அமைச்சரவையில் மந்திராலோச னையின் போது, முருகனுடைய பெருமைகள் அனைத்தையும் தனது தமையனுக்கு எடுத்துக் கூறுகிறான். ஆயினும் சூரபதுமன் முருகப் பெருமானை எதிர்த்துப் போர் புரியச் செல்லுமாறு பணித்தபோது, முடிபு எது என்று தெரிந்திருந்த போதும், உக்கிரமாகப் போராடி, முருகப் பெருமானது வேலாயுதத்தினால் அழிவுறுகின்றான். சிங்கமுகாசுரனுடைய பங்கு கந்தபுராணத்திலே கர்மவினையின் இயல்புகளையும், இருவினை ஒப்பின் ஒப்புயர்வற்ற தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

சூரபதுமன் ஆணவத்தின் சாயலாகவே எடுத்துக் காட்டப்படுகிறான். ஆணவம் அகங்கார, மமகார உணர்வினை ஏற்படுத்துவது. நான், எனது என்னும் எண்ணங்கள் மிக்கவனாகவே சூரபதுமன் முருகப் பெருமானுடன் போரிடுகின்றான். போர் முனையில், படைகள் யாவற்றையும் இழந்து தனியனாக நின்று தனது தாயை நினைக்கின்றான். மாயை மகன் முன் தோன்றுகின்றாள். தனது படைவீரர் யாவரையும் உயிர்பெற்றெழுமாறு செய்யும்படி தாயைக் கேட்கின்றான். எல்லாவற்றையும் இழந்து நிற்கும் போது முருகனிடம் சரணாகதி அடைவதற்கு அவனது தன்மானம் இடம் கொடுக்கவில்லை. தனியனாக நிற்கும் சூரபதுமன் முன்பாக, முருகப் பெருமான் தனது பரமேஸ்வர வடிவத்தை எடுத்துக் கொண்டு சூரபதுமனுக்குச் சிறிது நல்லுணர்வினை அருளிச் செய்ய.

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டு மங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றிவற் காளா யென்றும்
வாழுதல் வேண்டும் ஆனாற் தடுத்தது மான மொன்றே (கந்தபுராணம்)

முருகப் பெருமானது விஸ்வரூப தரிசனத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த சூரன் **என்னையறியாமலே எனது கருவிகரணங்கள் அக்கினியிலிடப்பட்ட மெழுகு போல உருகுகின்றன. என்னதோ இங்கு அதிகாரம் என்று குறிப்பிடுகின்றான். ஆயினும் தனது தன்மான உணர்வு தடுக்கிறது என்றும் கூறுகிறான்**. இதுவே ஆணவத்தின் இயல்பு. ஆணவம் தன்னையும் காட்டாது திருவருளையும் சாரவிடாது. இறுதியாக முருகப் பெருமானது ஞானமாகிய வேலாயுதத் தினாலே இரு கூறாகப் பிளக்கப்பட்ட சூரபதுமன் சேவலும் மயிலுமாக வேற்றுருக் கொள்கின்றான். நான் என்பது சேவலாகவும் எனது என்பது மயிலாகவும் மாறுகிறது. "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க மல மாயை தன்னொடுவல் வினை இன்றே" (சிவஞானபோதம்)

ஆன்மாக்கள் இயல்பாகவே மாயாமலத்திலிருந்து நீங்கி, இருவினை ஒப்பின் மூலம் மலபரிபாகம் பெற்று ஆணவவலி கெட்டு நிற்கும் போது திருவருள் பதிகிறது என்பதை எடுத்து விளக்கும் வகையில் தாரகன் சம்ஹாரம் முதலிலும், சிங்கமுகன் சம்ஹாரம் அடுத்தும், சூரபதுமனை ஆட்கொண்ட நிலை தொடர்ந்தும், கூறியபின் தெய்வயானையம்மை திருக்கல்யாணம் விவரிக்கப்படுகின்றது. ஆன்மாக்கள் மெய்ஞ்ஞான நெறி நின்று முத்தியடைவதைத் தெய்வயானை திருமணம் விளக்குகின்றது.

சாத்திரங்கள் கற்கும் வாய்ப்பின்றிச் சாதாரண நிலையிலுள்ள ஆன்மாக்கள் முத்திபெறும் வாய்ப்பைக் குறிப்பிடுவதே வள்ளி திருமணமாகும். ஆன்மாக்கள் யாவும் பெண்ணாகவும் இறைவன் ஒருவனே ஆணாகவும் சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. ஆன்மா திருவருளை நாடி நிற்றலே பிறவி எடுத்ததன் நோக்கமாகும். இறைவன் எம்மை ஆட்கொள்வதற்கு என்றும் காத்திருக்கின்றான். திருவருளை நாடாதிருப்பது எமது குறையே.


"தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்"

(திருவாசகம், திருவெம்பாவை) என மணிவாசகர் குறிப்பிடுவதை எண்ணிப் பார்க்கும்போது இறைவனே கருணை கூர்ந்து எமக்கு அருள் புரிவான் என்பது தெளிவாகிறது. வள்ளி திருமணத்திலும், ஆன்மாவாகிய வள்ளியை ஆட்கொள்வதற்கு முருகன் தானே கருணை கூர்ந்து எழுந்தருளுகிறான். முருகப் பெருமான் வள்ளியை ஆட்கொள்வதற்கு வேட்டுவக் கோலத்துடன் காட்சி கொடுக்கின்றான். முதலில் ஆன்மா இறையருளை இனங்காண முடியாமல் மௌனமாயிருக்கிறது. பல திருவிளையாடல்கள் புரிந்து இறையருளின் பாங்கினை ஆன்மாவாகிய வள்ளிக்கு ஆன்ம நாயகனாகிய முருகன் உணர வைக்கின்றான். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களாகிய ஆறு மலைகளையுங் கடந்து ஏழாவது மலையாகிய சகஸ்ரார பத்மத்திலே, அமிர்தமண்டலமாகிய சுனையிலே ஆன்மாவாகிய வள்ளிக்குக் காட்டி, பேரின்பப் பெருவாழ்வு அளித்தபோது வள்ளி, முன்னேயிவ்வுருவம் காட்டி முயங்காமற் கொன்னே கழித்தீர் என்று கூறும் கழிவிரக்க வார்த்தைகள் சிந்தனைக்கு நல்விருந்து. முருகன் ஆன்மாவைப் பரிபக்குவ நிலைக்கு ஆளாக்கி அதன் பின்பே திருவருள் புரிந்த வரலாற்றைக் கந்தபுராணத்தில் விளக்கியுள்ளார் கச்சியப்ப சிவாசாரியார்.

ஆன்மா திருவருளை நுகர்ந்த போதும், மனப்பக்குவம் ஏற்படுவதும், புலனொடுக்கம் அமைவதும் முத்திப் பேற்றிற்கு அத்தியாவசியமானது. அந்த முத்திப் பேற்றினை விளக்குவதே வேல். சேவல் கூவியதும், மனம், புலன்கள் யாவும் செயலற்ற தன்மை அடைந்ததையும், பின்னர் மனமே ஒரு முகப்பட்டுத் திருவருளிலே ஆன்மாவைத் திளைக்க வைத்த நிலையையும் விளக்குவதே வள்ளி திருமணம் என்னும் பகுதியில் கச்சியப்ப சிவாசாரியார் கூறும் செய்தியாகும்.

கந்தபுராணம், ஆன்மா திருவருளிலே திளைத்துப் பேரின்பப் பெருவாழ்வு பெறுதலை விவரிக்கின்றது. **உலகில் மானிடப் பிறவி எடுத்த அனைவரும் சிவபெருமானது திருவருட் பேற்றினை நுகர்வதற்கு அருகதை உடையவர்கள் என்பது கந்தபுராணத்திலே மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.** முருகப் பெருமான் உலக மக்கள் உய்திபெறும் பொருட்டே திருவவதாரம் செய்தார் என்பதை நன்கு உணர்ந்து நாமெல்லோரும் வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமானுடைய பாதார விந்தங்களைத் துதித்து இறவாத இன்ப அன்பு வேண்டிப் பேரின்பப் பெருவாழ்வு பெற்று முத்தி இன்பத்திலே திளைப்போமாக.

## சிவலிங்க வழிபாடு



**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

என்கிறார் மாணிக்கவாசகர்.


தென்னாடுடைய சிவன் என்பதால் சைவ வழிபாடு தென்னாட்டில்தான் தோன்றியிருக்கவேண்டும் என்பதே பல சைவ மக்களின் சித்தாந்தம். அதற்கேற்ப சிவலிங்க வழிபாடும் அண்ணாமலையிலேயே எழுந்திருக்கின்றது. அதன் பின்னரே நாடு முழுவதும் சிவலிங்கங்கள் தோன்றியிருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

நமது ஆலயங்களில் சிவபெருமானை லிங்க ரூபமாகவே வைத்திருக்கிறார்கள். இது ஏன்?

நம் முன்னோர் அருவ வழிபாடு, உருவ வழிபாடு , அருவுருவ வழிபாடு என்ற மூன்று முறைகளை வகுத்தனர். எந்த உருவமும் இல்லாத இறைவனை மனதில் தியானிக்க ஏதாவது ஒரு மார்க்கம் வேண்டும். உருவத்தை மனதில் தியானித்து வழிபடவே நடராஜர் தட்சிணாமூர்த்தி போன்ற மூர்த்திகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். அருவுருவ வழிபாடு– ஒரு சின்னத்தை வழிபடுதல். இவ் வழிபாட்டினருக்கு உதவியாகவே லிங்கம், மகாமேரு, பாதம் போன்றவைகள் ஏற்பட்டிருக்கின்றன. அருவ வழிபாட்டினர் வழிபடுவது வானவெளி என்ற திருச்சிற்றம்பலம், இம்முறையில் வழிபடுபவர்களை முறையே சீலத்தார், நோன்பினர், செற–ிவினர் என்று முறையே அழைப்பதுண்டு

அருவுருவ வழிபாட்டிற்கு லிங்கத்தை ஏற்படுத்துவானேன்? சைவர்கள் மட்டுமே லிங்கத்தை வழிபடுவது என்று இன்று இருப்பதுபோல அன்று இருக்கவில்லை. சிவலிங்கத்தை எல்லாருமே வழிபட்டனர். அதில் சிவம் இருக்கிறது. விஸ்ணு இருக்கின்றார்.பிரம்மன் இருக்கிறார். எல்லாக் கடவுளரையும் ஒன்று சேர்த்தே லிங்கம் விளங்குகின்றது.

# முருகன் அருள் பெற்ற புலவர்கள்



*செந்தமிழ்ச் செல்வர்*
*டாக்டர் ம.வே.ஜயராமன்*
*எம்.எ.,டி.லிட்.*

முருகன் என்பது இனிய தமிழ்ப்பெயர். இளமையும் எழிலும் இனிமையும் உடையவன் என்பது இதன் பொருள். இத்தமிழ்ப் பெயர் கொண்ட முருகன் செந்தமிழ்க் கடவுள். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பெருமான் முருகன். குன்றம் எறிந்த குமரவேள் தமிழ்ச்சங்கப் புலவர்களுள் ஒருவன். இறையனார் களவியலுக்கு நக்கீரர் உரையே சிறந்தது என உணர்த்திய உருத்திரசன்மன் முருகப் பெருமானின் திரு அவதாரம் என்பர். நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தரும் முருகனின் திருவவதாரமாகக் கருதப்படுகிறார். இத்தகைய தமிழ் முருகனின் அருள் பெற்ற புலவர்கள் பலர். அவர்கள் தமிழால் முருகன் அருள் பெற்றவர்கள். முருகன் அருளால் தமிழ் பெற்றவர்கள் எனவும் இயம்பலாம். அவர்களிற் சிலரைப் பற்றி இக்கட்டுரையிற் காண்போம்.

## நக்கீரர்

நக்கீரர் சங்கப் புலவர்களிற் தலைசிறந்தவர். இவர் ஒருநாள் இறைவழிபாடு செய்யுங்கால் ஓர் அற்புத நிகழ்ச்சியைக் கண்டு சிந்தனை கலைந்தார். வழிபாடு சிதறியது. இறைவழிபாட்டிலே தவறியவர்களை ஒரு பூதம் எடுத்துச்சென்று புடைத்து உண்டு விடுமாம். நக்கீரர் இப்பூதத்திடம் சிக்கிக்கொண்டார். அது அவரைப் புடைத்துண்ணத் தொடங்கியது. அப்போது அவர் முருகன் மீது திரு முருகாற்றுப்படை என்ற நூலைப்பாடி முருகன் அருள் பெற்றுத் தப்பிப் பிழைத்துக் கொண்டார். இந்நூலின் பெருமை இத்தகையது. முருகாற்றுப்படை என்றால் முருகனிடம் ஆற்றுப்படுத்துதல் என்பது பொருள். முருகனை ஆற்றுப்படுத்துதல் எனவும் கொள்வர். முருகாற்றுப்படை முருகனின் ஆற்றுப்படை வீடுகளையும் அங்கு அவன் எழுந்தருளி அருள் புரிவதையும் அழகுற விளக்குவது. திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பன அப்படை வீடுகள். இம் முருகாற்றுப்படையை ஓதின், முருகன் அருள் பெற்றுய்யலாம்.

காலை ஞாயிறு கடல்மீது எழுந்து தோன்றும் காட்சியைப் போலச் சேயோன் முருகன் நீல மயில் மீது செவ்வொளியாய்க் காட்சி தருகின்றான். இவ்வாறு தொடங்குகின்றது இந்நூல்.

இந்நூலில் முருகனின் திருமுகங்கள் ஆறும் திருக்கைகள் பன்னிரண்டும் செய்யும் தொழில்கள் இனிது விளக்கப்படுகின்றன. அறுவர் பயந்த ஆலமர் செல்வன், ஆல்கெழு கடவுட் புதல்வன், மலைமகள், மகன், மாற்றோர் கூற்று, நூலறி புலவன், குறிஞ்சிக் கிழவன், பெரும்பெயர் முருகன் எனப் பலவாறு முருகன் போற்றப்படுகிறான். இந்நூலைச் சார்ந்து ஓதப்படும் வெண்பா ஒன்று முருகனின் பெருமையைக் கூறும் பாங்கே ஒரு தனிப்பாங்கு. அது வருமாறு:

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்"
(அஞ்சுமுகம் — அஞ்சும் முகம், வெஞ்சமர்— கொடும்போர், இருகால்— முருகனின் இரு திருவடிகள்)

## அருணகிரிநாதர்

'வாக்கிற்கு அருணகிரி' எனப்பாராட்டப்படும் அருணகிரிநாதர் முருகனின் திருவருள் மிக்கவர். சந்தக்கவி பாடுவதிலே தனிப்புகழ் படைத்தவர். இவரியற்றிய திருப்புகழும், கந்தர் அநுபூதியும், கந்தர் அலங்காரமும், கந்தர் அந்தாதியும் முருகன் புகழ் பேசுவன. அவன் அருள்பெற்றுத்தர வல்லன. முருகனது ஆறு திருமுகங்களின் பெருமை கூறும் திருப்புகழ் இனியது. எளியது. அது வருமாறு:

"ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

பெண் மாயையில் மூழ்கிக் கெட்டழியாது நின்திருமலர்த்தாள் தந்து ஆண்டருள்வது எந் நாளோ? என்று முருகனை இறைஞ்சும் திருப்புகழில் மாதர் கண்களுக்கு இவர் அடுக்கிக் கூறும் உவமை நயம் வியக்கத் தக்கது. இலக்கிய எழில் மிக்கது. சந்தச் சால்பு வாய்ந்தது. அப்பகுதி இதோ!

வெஞ்ச ரோருக மோகடு நஞ்ச மோகய லோநெடு
வின்ப சாகர மோவடு வகிரோ மூன்
வெந்து போனபு ராதன சம்ப ராரிபு ராரியை
வென்ற சாபமோ கரு விளையோ கண்?

தாமரை மலர், நஞ்சு, கயல், கடல், மாவடுப்பிளவு, காமன் அம்பு, கருவிளை மலர் என ஏழு உவமைகளை இங்ஙனம் அடுக்கிக் கூறிய புலவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

தகுதியற்ற மனிதர்களை நாடிப் பலவாறு பாடி வீணாக அழியாமல் முருகன் அருள் பெற்று உய்ய விரும்பும் அருணகிரியாரின் தமிழ் அமிழ்து எங்ஙனம் இனிக்கின்றது பாருங்கள்!

**"வஞ்சக லோபமூடர் தம்பொரு ளூர்**
**மஞ்சரி கோதுவை தூது பலபாவின்**
**வண்புகழ் பாரிகாரி யென்றிசை வாதுகூறி**
**வந்தியர் போலவீணே அழியாதே**
**செஞ்சரண் நாதகீத கிண்கிணி நீலமாலை**
**திண்டிறல் வேல்மயூர முகமாறும்**
**செந்தமிழ் நாளும் ஓதி உய்ந்திட ஞானம் ஊறு**
**செங்கனி வாயிலோர் சொல் அருள்வாயே!**

'மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை
பொடிக்கொள் மேனியன் புண்ணியன் புகலூரர் பாடுமின் புலவீர் காள்
அடுக்குமேலமர் உலக மாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே". எனும் சுந்தரர் தேவாரம் இதனுடன் ஒப்புநோக்கி மகிழத்தக்கது.

கந்தர் அநுபூதி முருகன் அருள்பெற வழிகாட்டும். யான் என்னும் செருக்கற்றால் கடவுள் நிலை தெளிவாகுமாம். கடவுள் அருள் பெற்றுத் தந்துவிடுமாம்! அந்த இன்பம் சொல்லில் அடங்குமோ?

**"ஆனா அமுதே! அயில்வேல் அரசே!**
**ஞானா கரனே! நவிலத் தகுமோ?**
**யானா கியவென் னைவிழுங் கிவெறும்**
**தானாய் நிலைநின் றதுதற் பரமே!** என்ற பாடல் அதனை விளக்கும்

கடவுள் எப்படிப்பட்டவன்? இப்பாடலைக் கேளுங்கள்!

**"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!"**

கடவுள் உருவாயும் இருப்பான், அருவாயும் இருப்பான். உள்ளதும் அவன், இல்லதும் அவனே. மணமும் மலரும் அவனே. மணியும் ஒளியும் அவனே. கருவும், உயிரும் கதியும் விதியும் அவனே. அவன் குருவாய் வந்து அருள் பாலிப்பான். எவ்வளவு பெரிய உண்மை!

கந்தர் அலங்காரப் பாடல் ஒன்றில் முருகனின் தமிழ் ஆர்வம் மிளிர்கின்றது. தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் என்ற பட்டம் முருகனுக்குச் சூட்டப்படுகின்றது!

"மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கே வாழவைப்போன் வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான் தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே"

வள்ளி மணாளன், மால்மருகன், உமையாள் திருமகன் இன்னருள் புரிவான். இங்ஙனம் பாடியருளிய அருணகிரியாரின் புகழ் ஏட்டில் அடங்குமோ?

## குமரகுருபர அடிகள்

ஐந்து அகவை வரை வாய் பேசாத மூங்கைப் பிள்ளையாய் இருந்தார் இவர். பெற்றோர் இவரைத் திருச்செந்தூர் முருகப் பெருமான் திருமுன் கிடத்தி மூங்கைத்தன்மை நீங்க வேண்டுமென்று முருகனை வேண்டிக் கொண்டனர். முருகன் அருள் கிட்டியது குழந்தை திருவாய் மலர்ந்தது. பேசத் தொடங்கும் போதே முருகன் புகழ் ஓதும் கந்தர் கலிவெண்

பாவைப் பாடி முருகனைப் புகழலாயிற்று.

**'பூமேவு செங்கமலப் புத்தேளும்'** என்று அடியெடுத்துப் பாவிசைத்த குமரகுருபரரின் பக்தி வரம்பின்றிப் பொங்கி வழிந்தது. முருகன் அருளால் தமிழாற்றல் கைவரப் பெற்றுப் பல நூல்களை இயற்றிய பெருமை இவருக்குண்டு. தமிழ் கொழிக்கும் தாமிரபரணியிலிருந்து வழிபல கடந்து வடநாடு சென்றார் இவர். தமிழோடு இந்துஸ்தானியிலும் வல்லவராகிக் கங்கைக் கரையிற் காசியம்பதியிலே திருமடம் ஒன்றை நிறுவித் தமிழும் சைவமும் வளர்த்தார். இவரியற்றிய பிரபந்தங்கள் பதின் மூன்றையும் பற்றிக் கூறப்புகின் அதுவே ஒரு தனி நூலாக வளர்ந்துவிடும். ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பதற்கிணங்கச் சிற்சில சுவைப் பகுதிகளை மட்டும் இங்கே சுட்டிச் செல்வது சாலும். கந்தர் கலிவெண்பாவில் இவர், "முருகா! நீ என் இடுக்கண் களையவேண்டும். என் உள்ளத்தில் உல்லாசமாக அமர்ந்திருக்க வேண்டும். பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்க வேண்டும். மும்மலங் களையும் நீக்கியருள வேண்டும். நின் பழைய அடியார்களுடன் கூட்டுவிக்க வேண்டும். வீட்டின்பம் நல்க வேண்டும். நின் செந்தாமரைத் திருவடிகளைக் காட்டி என்னை ஆட்கொள்ள வேண்டும்". என வேண்டுவது இவர்தம் உள்ளக் கிடக்கையைப் புலப்படுத்தும். சகலகலா வல்லிமாலையிலும் இவர் கலைமகளிடம், **"பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் பயனும் என்பாற் கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்!"** எனவும் **"நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும் பணியிற் பணித்தருள்வாய்"**. எனவும் இறைஞ்சுகின்றார். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மீனாட்சியம்மையை **"எறிதரங்கம் உடுக்கும் புவனங் கடந்து நின்ற ஒருவன் திருவுளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே!"** எனவும் **"பிறைமௌலிப் பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்விருந்தே!"** எனவும், **"அருள் பழுத்த கொழும்பே!"** எனவும் விளிப்பது கற்பார் உளத்தே பசுமரத்தாணி போற் பதியும். முத்துக்குமாரசுவாமி பிள்ளத் தமிழில் "கூனேறு மதிநுதல் தெய்வக் குறப்பெண் குறிப்பறிந்து அருகணைந்து, **'உன் குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்க'** எனக் குறையிரந்து அவள் தொண்டை வாய்த் தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்" என்ற பகுதியிலே தமிழ் கொஞ்சி விளையாடுகின்றது! இப்பிள்ளைத் தமிழின் வருகைப்பருவத்து இரண்டாம் பாடல் முருகன் செய்த சிறுகுறும்புகளை அழகொழுக அடுக்கிக் காட்டும். குமரகுருபர முனிவரன் கற்பனை வளமும் அணிநயங்களும் செப்பருந் திறத்தன. இவர் அருளிய மீனாட்சியம்மை குறம் பாமரரையும் பரவசப்படுத்தும் எளிய இனிய நடைவாய்ந்தது. பண்டார மும்மணிக் கோவை இவரது குருபக்திக்குச் சான்று. சிதம்பரச் செய்யுட் கோவை யாப்பிலக்கணத்திற்கு இலக்கியம். மதுரை, காசி, கயிலைக் கலம்பகங்கள் இவர்தம் கலப்பகத் திறனைப் பறைசாற்றும். நீதிநெறி விளக்கமோ திருக்குறளின் சாரமாய்த் திகழ்கின்றது. **"மலரவனாகிய பிரமன் தமிழ்ப்புலவர்களுக்கு இணையாகான். அவன் படைக்கும் உடம்பு மாய்ந்து விடும். ஆனால் புலவர் படைக்கும் உடம்பு மாய்வதே இல்லை"** என ஒரு பாடல் ( நீதிநெறி விளக்கம் —6) நயமுற இயம்பும்.

## பகழிக் கூத்தர்

பகழிக்கூத்தர் பிறப்பால் வைணவ அந்தணர். அப்பர் பெருமானை வாட்டியது போல் சூலைநோய் இவரையும் வாட்டியது. மருந்துகள் ஏதும் பலனளிக்கவில்லை. திருச்செந்தில் முருகன் மீது பிள்ளைத் தமிழ்பாடி அவன் திருவருளால் அந்நோய் நீங்கப் பெற்றார். திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் சுவை மிக்கது. கற்பனை சிறந்தது. அணிநயம் வாய்ந்தது. இஃது இன்றும் திருச்செந்தூர்க் கோயிலில் ஓதுவார்களால் ஓதப்பட்டு வருகின்றது. இதனைப் பாராயணம் செய்து நோய் தீரப்பெற்றோர் பலர். முருகனை முத்தம் தருமாறு வேண்டும் பாடல் நயம் மிக்கது. முருகனின் கனிவாய் முத்தத்திற்கு எந்த முத்தும் இணையில்லையாம்.

**"கடற்கரையில் வலம்புரிச் சங்குகள் ஈன்ற முத்திற்கும், களிற்றுத் தந்தத்தில் விளையும் முத்திற்கும், நெல் முத்திற்கும், மேகம் தரும் முத்திற்கும் விலையுண்டு. ஆனால் நின் கனிவாய் முத்தத்திற்கு விலையே இல்லை. முத்தம் சொரியும் கடல் அலைவாய் முதல்வனாகிய முருகா முத்தம் தருக!"** என்று பாடுகிறார். (முத்தப்பருவம் —1) திருச்செந்தூரில் வாழும் அன்னப் பறவைகள் தாழையின் மடலை எடுத்துக் குழவியென மடியில் இருத்திக் கொஞ்சுகின்றன. சங்கினில் குவளைத் தேனை முகந்து பாலூட்டுகின்றன. தாமரை இதழ்விரித்துப் படுக்க வைத்துத் தாலாட்டுகின்றன. பெட்டை அன்னத் திற்குச் சேவல் அன்னம் கூர் அலகு பிளந்து இனிதாக இரையூட்டி மகிழ்கின்றது. இப்படியொரு இனிய காட்சியை வருகைப்பருவம் ஆறாம் பாடல் காட்டுகின்றது. செந்தமிழ் மணக்கும் திருச்செந்தில் வேலனே சிறுதேர் உருட்டியருளே! எனும்போது முருகன் நம் கண்முன் நிற்கின்றான்.

## மற்றும் சிலர்

அந்தகக் கவி வீரராகவ முதலியார் முருகன் அருள் பெற்ற மற்றொரு புலவர். பிறவிக்குருடராயினும் கல்வியிற் சிறந்து விளங்கியவர். செங்கற்பட்டு மாவட்டம் பொன்விளைந்த களத்தூரில் வாழ்ந்தவர். சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடிப் புகழ் பெற்றவர். முருகப் பெருமான் உருத்திரசன்மனாய் அவதரித்து இறையனார் களவியலுக்கு உரைத்திறம் உணர்த்திய வரலாறு இப்பிள்ளைத் தமிழில் குறிப்பிடப்படுகிறது.

"
**துங்கத் திருக்கூடல் ஆடிறைவ னார்முனம்**
**துறைபெறச் சொற்ற பொருளின்**
**தொன்மையுரை ஏழேழின் நன்மையுரை ஈதெனும்**
**சோதனைக் குலகு காணச்**
**சங்கத் தமிழ்ப்பலகை ஏறுபுல மைத்தலைவ**
**சப்பாணி கொட்டி யருளே".**
***(சப்பாணி 1)***

சீட்டுக்கவி எழுதுவதில் வல்லவர் வீரராகவர். ஒரு பாடலில் குதிரையைக் குறிப்பதற்கு இவர் வழங்கியுள்ள சொற்கள் இவரது மொழித்திறனுக்குச் சான்றாக உள்ளன. பாடாத கந்தருவம், எறியாத கந்துகம், பற்றிக் கொலாத கோணம், பறவாத கொக்கு, அனல் பண்ணாத கோடை, படையில் தொடாத குந்தம், சூடா தபாடலம், பூவாதமா, தொடுத்து முடியாத சடிலம், சொன்ன சொற் சொல்லாத கிள்ளை என்ற இத்தொடர்கள் பத்தும் குதிரையைக் குறிப்பனவாம். வேறொரு தனிப்பாடலில் யானையைக் குறிக்க இவர் பயன்படுத்தியுள்ள சொற்கள் களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா என்ற ஆறாம்.

**பொய்யாமொழிப்புலவர்** முருகன் அருள் பெற்ற இன்னொருவர். முருகன் வேடனாக வந்து, தன்பெயரான முட்டை என்பதை வைத்து ஒரு பாடல் பாடச் சொன்னதும்,

**"பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே**
**என்பேதை செல்லற் கியைந்தனளே — மின்போலும்**
**மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்**
**கானவேல் முட்டைக்கும் காடு"** என்ற வெண்பாப் பாடி மகிழ்வித்தவர் இவர். (முட்டை — வேடன் பெயர், முட்டைக்கும் காடு — முள் தைக்கும் காடு)

**ஔவையாரும்** முருகன் அருள் பெற்று வாழ்ந்தவரே. முருகன் கேட்டுக் கொண்டபடி, கொடியது, இனியது, பெரியது, அரியது, என்பனவற்றை விளக்கி இவர் பாடிய பாடல்கள் உலகறிந்தவை.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை பாடிய **சிதம்பரசுவாமிகள்,** கந்தர் சஷ்டி கவசம் பாடிய **தேவராயசுவாமிகள்**, கதிர்காமப் பிள்ளைத் தமிழ்பாடிய **சிவங்கருணாலய பாண்டியப் புலவர்** ஆகியோரும் முருகன் அருள்பெற்ற புலவர்களின் வரிசையில் உள்ளவர்கள். இன்னும்பல புலவர்களும் முருகன் அருள் பெற்றுத் திகழ்ந்துள்ளனர்.

"சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்"
— கந்தர் சஷ்டி கவசம்



பழைய துணிகளைக் களைவதுபோல்
இந்த எனது உடலைவிட்டு
வெளியேறுவதை நான் விரும்பலாம்.
ஆனாலும் என் பணி ஓயாது.
உலகெங்கும் வாழும் மனிதர்களைத்
தட்டியெழுப்பிக் கொண்டே இருப்பேன்.
தான் இறைவனுடன்
ஒன்றுபட்டிருப்பதை உலகம்
உணரும்வரை என்பணி தொடர்ந்து
கொண்டேயிருக்கும்.

**—சுவாமி விவேகானந்தர்—**



KUMARANS

# குமரன்ஸ் தமிழ்க்கடை

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா தயாரிப்புகளை
மொத்த விற்பனை விலைக்கு
தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# KUMARANS

# சைவன் ஒருவனின் இலட்சணம் என்ன?

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா BSc LL.M

மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைத்தாலும் நாம் நம்மைச் சைவர் என்றே எண்ணிக் கொண்டிருக்கிறோம். அந்த நினைப் பிலேதான் நம்முடைய வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. நாம் பிறப்பினால் சைவரா? நம்பிக்கைத் தெளிவினால் சைவரா? நம்மில் பெரும் பாலோர் பிறப்பினால் சைவரே. அப்படியானால் சைவன் ஒருவனின் இலட்சணம் என்ன? இந்த இலட்சணத்தை இலகுவில் விளக்கிவிட முடியாது. ஆகவே ஆறுமுக நாவலரின் கூற்றிலிருந்து ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும்.

**சிவவழிபாட்டுக்கான தகுதி பெறுவ தற்கு எத்தனையோ பண்புகள் வேண்டி யிருந்தும், மாமிசம் புசியாதவன் மட் டுமே சைவனாக இருக்க முடியும் என்ற பிழையான கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டு விட்டது.**

## நாவலர் நவின்றதென்ன?

சைவர் யார் என்பதற்கு நாவலர் அவரது சைவ வினா விடை என்ற நூலில் விளக்கம் தருகிறார். **சிவ தீட்சை பெற்றுச் சிவபெருமானை முழு முதற் கடவுளாக ஏற்று அவரை வழிபடுபவர் சைவர் என்று நாவலர் சொல்கிறார்.** அப்படி என்றால் சிவதீட்சை பெறாத எவரையும் சைவர் என்று கூறுமுடியாது. ஏனென்றால் சிவதீட்சை பெறாத எவரும் சிவபெருமானைச் சிவ ஆகமப்படி வழிபடுவதற்கு யோக்கியதை அற்றவர்கள். ஆனால் சிவதீட்சை பெற்றுவிட்டால் மட்டும் போதாது.

சிவதீட்சை பெற்ற பின்னர் சைவர்களால் கட்டாயமாக அனுட்டிக்கப்பட வேண்டிய கருமங்கள் சில உள்ளன. அக்கருமங்களுள் மிக முக்கியமானவை இயமமும் நியமமும் ஆகும்.

கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, ஆண்டகமை, உடைமை, இரக்க சிந்தனை வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனங் கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை (அக, புறத்தூய்மை) என்ற பத்தும் இயமம் எனப்படும்.

தவம், மனமுவந்து இருத்தல், கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை, தானம் செய்தல், மூத்தோரை வழிபடுதல், நல்ல நூல்களை ஓதக் கேட்டல், செல்வச் செருக்கும் குலச் செருக்கும் அற்றிருத்தல், பகுத்தறியும் உணர்வு, செபம் செய்தல் விரதம் இருத்தல் என்ற பத்தும் நியமம் எனப்படும்.

ஆறுமுகநாவலரின் கருத்துப்படி பார்க்கப் போனால், சைவர் என்று கூறிக் கொள்கின்றவர்களில் ஒருவர்தானும், சைவர் என்று கருதப்படக் கூடிய யோக்கியதை கொண்டவராகக் கொள்ள முடியாது.

நடைமுறையிலே, சிவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்ளுகின்ற எவரையும் சைவன் என்று கொள்ளும் கருத்து ஒன்று நிலவி வருகின்றது. சிவனைக் கடவுளாக ஏற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அவ்வாறு சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள் வதோடு மாமிசம் உண்ணாதவனாகவும் இருந்தால் தான் அவ னைச் சைவன் என்ற கூறிக் கொள்ள முடியும் என்ற கருத்தும் நிலவி வருகின்றது.

ஆறுமுகநாவலரின் கருத்துப்படி, மாமிசம் புசியாமல் இருப்பதால் மட்டும் ஒருவன், சிவனை வழிபடும் யோக்கிய தையைப் பெற்றுவிட முடியாது. ஏனென் றால், சைவன் என்ற யோக்கியதைக்கு ஒருவனை உரியவனாக்கும் பத்துப் பண்புகளில் ஒன்று தான் புலாலுண்ணாமை. ஆகவே, பொய் பேசுபவன், களவெடுப்பவன், மற்றப் பெண்களைக் காமிப்பவன், ஆண்டகமை இல்லாதன், இரக்கசிந்தை இல்லா தவன், பொறுமைக் குணம் இல்லாதவன், திடமான உள்ளம் இல்லாதவன், ஆகியோரும் சிவவழிபாடு செய்ய யோக்கியதை அற்றவர்கள் என்பதை மனங் கொள்ளல் வேண்டும்.

**சிவவழிபாட்டுக்கான தகுதி பெறுவதற்கு எத்தனையோ பண்புகள் வேண்டியிருந்தும், மாமிசம் புசியாதவன் மட்டுமே சைவனாக இருக்க முடியும் என்ற பிழையான கருத்து மக்கள் மத்தியில் ஏற்பட்டு விட்டது.**

மேற்படி கருத்துப் பொருத்தமானதாகப் படவில்லை. **நீலகிரியில் வாழ்கின்ற பழந்தமிழ்க் குடியினர் தொடங்கி, விந்தனையில் வாழுகின்ற பழந் தமிழ் வேடர்கள் தொடங்கி, அந்தணர் என்கின்ற அறவோர் வரையிலுள்ள எந்த மக்களானாலும், அவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக வழிபட்டால் அவர்களைச் சைவர் என்று அழைத்தல் பொருத்தமானதாகவே படுகின்றது.** அதாவது சிவனை வணங்குகின்ற எவரும் அவர் அமரிக்கராக இருந்தாலுஞ்சரி, ஆங்கிலராக இருந்தாலும் சரி அவுத்திரேலியராக இருந்தாலும் சரி ஊன் உண்பவராக இருந்தாலும் சரி சைவரே.

## பழந்தமிழ் இலக்கியம் பறைவது என்ன?

ஊன் உண்பதைச் சைவம் ஒப்புக் கொள்கிறதா? ஊன் உண்பது பற்றித் தமிழ் இலக்கியங்கள் பேசுகின் றனவா?

பழந் தமிழ் இலக்கியங்களில் ஊன் உண்ணாமை பற்றிய குறிப்புகள் எங்கும் காணப்படவில்லை. இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த தமிழர் நன்றாக ஊன் உண்டு, ஆசை தீரக் கள்ளும் மதுவும் குடித்தார்கள் என்ற குறிப்பே பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. "மட்டு வாய் திறப்பவும் மை விடை வீழ்ப்பவும் அட்டான்றானாக் கொழுஞ்சுவை ஊன்சோறு" என்ற புறநானூற்று அடிகள், பழந்தமிழர் ஆட்டிறைச்சி உண்டு, கள்ளுண்டு, புரியாணி சாப்பிட்டு வாழ்ந்தார்கள் என்ற செய்தியைக் கூறுகின்றன. சிறுபாணாற்றுப் படை, பெரும் பாணாற்றுப் படை ஆகிய ஆற்றுப்படை இலக்கியங்களும் சிவவழிபாட்டினராகிய தமிழர்கள், மீனும் இறைச்சியும் கருவாடும் உண்டுகளித்ததோடு புற்றீசல் கலந்த மோர்க் குழம்பும் உண்டு மகிழ்ந்தார்கள் என்ற செய்திகளையே கூறுகின்றன.

**சைவனாக இருப்பதற்குப் புலால் உண்ணாமை அவசியம் என்று தோன்றவில்லை. புலால் உண்ணாமை நல்ல பழக்கம், அவசியமானது; ஆன்மாவின் வளர்ச்சிக்கு உதவக் கூடியது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஊன் உண்பவன் சைவனாக இருக்க முடியாது. அவனைச் சைவன் என்று கூறக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.**

## வள்ளுவர் வழுத்தியது என்ன?

புலால் உண்ணக் கூடாது என்று முதன் முதலாக மொழிந்த தமிழி லக்கியம் திருக்குறள்தான். வேதகாலப் பிராம ணியத்தை எதிர்த்துப் புரட்சி செய்தவர்களில் முதன்மையானவர் புத்தர். புத்தர் வேள்வி என்ற பெயரில் செய்யப்பட்ட உயிர்ப்பலியை எதிர்த்தார். இவ்வாறே சமண சமயத்துக்கு வித்திட்ட தீர்த்தங்கர்களும் வேதகாலப் பிராமணப் பழக்கமான வேள்விகளை எதிர்த்தார்கள். அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியதன் பின்னர்தான், வேள்விகள் அவசியம்தானா என்ற கேள்விகள் எழுந்தன. திருக்குறள் சமயச் சார்பற்ற தமிழிலக்கியம் என்று பலர் கூறிக் கொண்டாலும், அதனுள் பவுத்தக் கருத்துக்களும் சமணக் கருத்துக்களும் இருப்பதாகக் கூறுகின்ற அறிஞர்களும் உளர். அவர்கள் கூற்றில் உண்மை இல்லாமலும் இல்லை.

**"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று"**

என்பது ஒரு குறள். **"கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும்"** என்பது மற்றொரு குறள். **"தினற் பொருட்டால் கொள்ளாது உலகெனில் யாரும் விலைப் பொருட்டால் ஊன்தருவார் இல்"** என்பது இன்னொன்று. சொல்லுக் குறுதியான நூலாகச் சொல்லப்படும் நாலடியாரும் புலால் உண்ணக் கூடாது என்று வற்புறுத்துகின்றது. ஆனால் நாலடியாரும் சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நூல்.

வரலாற்றைப் பார்க்கும்போது சிவனை முழுமுதற் கடவுளாக நம்புகின்றவர்கள் புலால் உண்ணக் கூடாது என்ற கருத்துப் பிற்றைக் காலத்தில் ஏற்பட்ட ஒரு புதுக்கருத்தாகவே தோன்றுகின்றது.

## இராவணேசன் சைவனல்லவோ?

இலங்கையை ஆண்ட இராவணனை இரக்கமற்ற அரக்கன் என்று இதிகாசங்கள் பேசும். அவனை மிகச் சிறந்த சிவபக்தனாகவும் அவை கூறும். தனது தாய் தனது வீட்டில் வைத்துச் சிவனை வழிபட வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அரனிருந்த மலையெடுத்துத் தோள்கள் நெரியுண்ட இராவணன் சாம கானம் பாடிச் சிவனுடைய மன்னிப்பைப் பெற்றான் என்று படிக்கின்றோம். இதிகாசங்களிலும் தேவாரங்களிலும் சங்கரனை வழிப்பட்டு அவனது பரிசாக வாள் பெற்றான் என்ற செய்தியைத் "தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை போனான்" என்று கம்பநாடன் கூறுவான். சிவனை நேரே கண்டு. முக்கோடி வாழ் நாளும் முயன்று பெருந்தவமும் கொண்டிருந்த இராவணன் புலால் உண்ணாதவனாக இருந்தான் என்பதற்கு ஆதாரம் இல்லை. இராவணன் இராக்கதனாதலின் அவன் இறைச்சி அயின்று மதுவும் பருகினன் என்று கோடலே பொருந்தும். சீதை என்ற பெண்ணைக் கள்ளி, இராமனின் மனையை நயந்து, வஞ்சனைச் சூழ்ச்சி செய்து, பொறுமை இழந்து, ஆனை போலுண்டு, ஆண்டகமை அழிந்து, ஆயிரக் கணக் கான மானுட உயிர்களைப் போரில் கொன்றழித்த இராவணன் ஆறுமுகநாவலரின் கருத்துப்படி சைவனாக முடியாது. ஆனால் இலக்கியங்கள் இராவணனைச் சைவன் என்றே பறைகின்றன. இவ்வாறாக, "சைவன்" என்ற சொல்லுக்கு ஆறுமுகநாவலர் கூறும் பொருள் பொருந்துமா என்பதைத் தமிழர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

## தேவாரம் சொல்வதென்ன?

பவுத்தமும் சமணமும் சிவவழிபாட்டை அழிக்கப் புகுத்த களப்பிரர் காலத்தில் சிவமதத்துக்கு வாழ்வு அளிக்கத் தோன்றிய அருளாளர்கள் அளித்த இறைமாலைகள் தான் தேவ ஆரம் ஆகிய தேவாரப் பாடல்கள். அந்தத் தேவாரப் பாடல்கள் என்ன சொல்லுகின்றன?

**"ஆவுரித்துத் தின்றுலையும் புலையரேனும்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"**

என்று தானே தேவாரம் சொல்கிறது.

ஆவுரித்துத் தின்கின்றவர்களாக இருந்தாலும், அவர்கள் சிவனை வணங்கலாம் என்பதைத் தானே மேற்படி தேவாரம் முழங்கிக் கூறுகின்றது. புலையராக இருப்பது சிவவழிபாட்டுக்குத் தடையாக இருக்காது என்பதைத் தானே மேற்படி தேவாரம் காட்டுகின்றது?

## திருமந்திரம் தெளிப்பது என்ன?

வேத மதத்துக்கு எதிராகக் கிளம்பிய பவுத்தத்தையும்

சமணத்தையும் இந்துமதம் வீழ்த்திய வரலாறு ஒரு வெற்றி வரலாறு. பவுத்த மதமும் சணமதமும் கடிந்த கொலையைத் தானும் கடிவதாகக் கூறுவதன் மூலமும் வேறுசில விரும்பத்தக்க மாற்றங்களைச் செய்வதன் மூலமும், இந்துமதம் புதிய மதங்கள் தேவையற்றவை என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டது. இதனாலே தான் பவுத்தமும் சமணமும் பிறந்த நாட்டிலேயே இறந்தன.

பவுத்தமும் சமணமும் புற்றீசல் எனக் கிளம்பிய போது, சைவத்தை நிலைநாட்ட எழுந்த நூல்களில் திருமந்திரமும் ஒன்று. திருமந்திரம் தோன்றிய காலமும் திருக்குறள் தோன்றிய காலமும் ஏறத்தாழ ஒன்றே. திருமந்திரம் முந்தியது, திருக்குறள் தான் முந்தியது என்ற வாதப் பிரதிவாதங்கள் இன்னமும் ஒய்ந்தபாடில்லை. திருக்குறள் மதச்சார்பு மிகக் குறைந்த நூலாக இருக்கத் திருமந்திரம் சைவ சமயம் பற்றிய செறிவான நூலாக உள்ளது. ஆகமக் கருத்துக்களை உள்ளடக்கிய திருமந்திரத்திலும், கொல்லாமை புலால் உண்ணாமை பற்றிய இரண்டு பாடல்களாயினும் இருப்பதற்குக் காரணம் சமண பவுத்த சமயங்களின் தாக்கமே என்பதை மனங் கொளல் வேண்டும். வள்ளுவரோ இருபது குறள்களில் கொல்லாமை, புலால் மறுத்தல் பற்றிப் பறைகிறார். திருமூலர் இரண்டே இரண்டு பாடல்களில் முடித்து விடுகிறார். முழுக்க முழுக்கச் சிவவழிபாடு பற்றிய நூலான திருமந்திரம், சமயச் சார்பற்றதாகச் சொல்லப்படும் திருக்குறள் போலப் புலாலுண்ணாமையைக் கடியாமைக்கான காரணம் சிந்தனைக்குரிய செய்தி.

## பெரிய புராணம் போதிப்பது என்ன?

சைவப் பண்பாட்டின் களஞ்சியம் என்று வர்ணிக்கப்படுவது பெரியபுராணம். இது சேக்கிழாரால் எழுதப்பட்டது. பெரிய புராணம் பல திறப்பட்ட அடியார்கள் பற்றிய வரலாற்றைக் கூறும் நூல். அது கூறும் அடியார் சிலர் பற்றி ஆராய்வது பயனுள்ள முயற்சி.

### (அ) திருநாளைப் போவார் என்ற நந்தனார்

நந்தனார் ஆவுரித்துத் தின்றுலையும் புலையர் குலத்தில் பிறந்தவர். ஆனால் அவர் சிவபக்தி மிகுந்தவராய் வாழ்ந்தார். சிவாலயங்களில் உள்ள பேரிகை, முழவு, யாழ் முதலிய இசைக் கருவிகளக்கு வேண்டிய மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் முத லியவற்றை வழங்குவதைப் பெரும் பேறாக எண்ணி வாழ்ந்து வந்தார். திரும்புன்கூர் என்ற ஊரில் உள்ள சிவாலயத்தைத் தரிசிக்க விரும்பிய அவருக்கு அங்கிருந்த நந்தி தடையாக இருந்தது. அவரை ஆட்கொள்ள விரும்பிய சிவபெருமான், அந்த நந்தியை விலக்கி விட்டு அவருக்குக் காட்சி கொடுத்தருளினார் என்பது வரலாறு. மாட்டைக் கொன்று தோலுரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த புலையரான நந்தனைச் சிவபெருமான் நிராக ரிக்கவில்லை என்ற நிகழ்ச்சியை இங்கே காண்கின்றோம்.

### ஆ—மூர்க்க நாயனார்

வள்ளுவர் வெறுத்தொதுக்கிய சூதாட்டத்தை நேசித்தவர் மூர்க்கநாயனார். சூதாட்டில் கிடைத்த பொருளைச் சிவனுக்குக் கொடுத்து மகிழ்ந்தவர் இவர். வள்ளுவன் கடுமையாகக் கடிந்த சினத்தைப் பண்பாகக் கொண்டவர் இவர். சூதாடும் இடத்தில் அவரோடு வாதாடும் சூதாடிகளை வாளால் வெட்டிக் கொல்வதைப் பழக்கமாகக் கொண்ட இவருக்குக் கூடச் சிவபதம் கிடைத்ததாகப் பெரிய புராணம் பேசும். கோபத்துக்கு இலட்சியமாக வாழ்ந்ததால் இவரை மூர்க்க நாயனார் என்றனராம்.

### (இ) அதிபத்த நாயனார்

இவர் சிவபெருமானில் அதிபக்தி கொண்டவர். இவர் ஒரு செம்படவர், அதாவது மீன் பிடித்தொழிலர். இவர் நாள்தோறும் வலையில் அகப்படுகின்ற முதலாவது மீனைச் சிவபெருமானுக்கு என்று விட்டு விடுவது வழக்கம்; சில நாட்களில் ஒரு மீனே அகப்பட்டு வந்தது. அதையும் இறைவனுக்கு அர்ப்பணித்து வந்தார். இதனால் பசியும் வறுமையும் அவரை வாட்டின. ஒருநாள் அவர் விரித்த வலையில் பொன்மீன் ஒன்று அகப்பட்டது. அதிபத்தர் அதனையும் சிவபெருமானுக்குப் படைத்து விட்டார். இந்தச் சிவபக்தியை மெச்சிய இறைவன், அவருக்கு நேரே தோன்றிக் காட்சி அளித்து, ஈற்றில் தம்மோடு சேர்த்துக் கொண்டார். நாளும் மீன் கொலை செய்த அதிபத்தன் கூடச் சிவனடி சேர்ந்தான் என்ற செய்தியை இங்கே அறிகின்றோம்.

### (ஈ) சாக்கிய நாயனார்.

இவர் புத்த சமயத்தில் பிறந்தவர். ஆனாலும் சிவன் மீது கொண்ட அன்பினால் சிவவழிபாடு செய்தார். புத்த சமயப் பண்பாட்டில் வளர்ந்தவராயினும் சிவ வழிபாட்டின் மூலம் சிவனடி சேர்ந்தார் என்ற செய்தியை இங்கே பார்க்கின்றோம்.

### (உ) கண்ணப்ப நாயனார்

கண்ணப்பர் ஒரு வேடர். வேட்டை ஆடுவதையே தொழிலாகக் கொண்டவர். உடல் தூய்மை பற்றிச் சிந்திக்காத வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவர். கொலைத் தொழிலையே தலைத் தொழிலாகக் கொண்டிருந்தவர். ஆனால் சிவபக்தி மிக்கவராக இருந்தவர். கொல்லாமை நோன்பு இன்னது என்று அறியாத கண்ணப்பருக்கும் சிவனடி நீழல் கிடைத்தது என்று பெரியபுராணம் பகருகின்றது.

மேலேகண்ட பெரிய புராண வரலாறுகளைப் பார்க்கின்ற போது **சைவனாக இருப்பதற்குப் புலால் உண்ணாமை அவசியம் என்று தோன்றவில்லை. புலால் உண்ணாமை நல்ல பழக்கம், அவசியமானது; ஆன்மாவின் வளர்ச்சிக்கு உதவக் கூடியது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் ஊன் உண்பவன் சைவனாக இருக்க முடியாது. அவனைச் சைவன் என்று கூறக்கூடாது என்பதை ஏற்றுக் கொள்ள**

முடியவில்லை.

## ஏனைய மதத்தார்க்கு ஈடேற்றம் இல்லையா?

புலால் உண்பவர்கள் இறையடி சேரமுடியாது என்ற கொள்கை உண்மையானால், சிவ சமயமல்லாத சமயங்களைப் பின்பற்றுவோர் இறையடி எய்த முடியாது என்று ஆகிவிடும். அப்படியானால், பவுத்தர், கிறீத்தவர், இஸ்லாமியர் ஆகியோரின் வழிபாடுகள் எல்லாம், விழலுக்கிறைத்த நீரா? வீணான முயற்சியா? சீவ காருண்யத்தைப் போதித்த புத்தனைப் பின்பற்றுவதாக் கூறிக் கொண்ட போதிலும் ஊனின்றி உணவுட் கொள மாட்டாத சிங்களவரின் வழிபாடு இழிபாட்டுக்குரியதா? அமெரிக்காவில் இருந்த காலத்தில் மீன்கறி உணவை நன்றே இரசித்து உண்ட விவேகானந்தருக்குக் கூட வீடு பேறு கிடைத்திருக்க முடியாதா?

## அன்பு என்றும் அருள் என்றும் வள்ளுவன் விள்ளியதேன்?

அன்பும் சிவமும் ஒன்றென்பர் அறிவுளோர் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடு. அன்பு, அருள் என்ற இரண்டு சொற்கள் திருவள்ளுவரின் கருத்தில் முக்கியமான சொற்கள். இவை இரண்டும் இருவேறு தனிக்கருத்துக்கள் கொண்ட சொற்கள் என்பதை வள்ளுவரே விளக்கியிருக்கின்றார். அருள் பற்றிய விளக்கத்தை வள்ளுவன் "பொருள்" பற்றிய "பொருள் செயல்வகை" என்ற அதிகாரத்தில் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. அருள் என்றால் என்ன என்பதைக் கூறவந்தவர் அன்பென்ற தாயின் பிள்ளை தான் அருள் என்கின்றார். இந்த அருள் என்ற குழவி நன்றே வளர வேண்டுமானால் பொருளென்ற செவிலித்தாய் அந்த அருட்பிள்ளையோடு இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார். (அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு" என்பது 757 ஆவது குறள்). இந்தச் செல்வச் செவிலி என்ற பொருள் கூட அருளோடும் அன்போடும் ஈட்டப்பட்டதாக இருக்க வேண்டும் என்கிறார்.

**அருளொடும் அன்பொடும் வாராயப் பொருளாக்கம் புல்லார் புரளவிடல்"** என்ற 755 ஆவது குறளில்.

இல்லறவியலின் முதலாவது அதிகாரமான "இல்வாழ்க்கை"யில் இல்வாழ்வின் இலக்கணத்தைக் கூற வந்தவன் இல்வாழ்வானுக்கு அன்பும் அறமும் அடிப்படையான இன்றியமையாக் கூறுகள் என்கின்றான். ("அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்கிறது 45 ஆவது குறள்)

அன்புடைமையை இல்லறத்தானுக்கு இன்றிய மையாத பண்பாகக் கூறியவன், அருளுடைமையை துறவ றத்தானுக்கு இன்றியமையாத பண்புக் கூறாகக் கூறுகின்றான். இல்லறத்தானுக்கு ஒருவிதமான இரக்கப் பண்பையும், துறவறத்தானுக்கு வேறொரு விதமான இரக்கப் பண்பையும், ஏன் வற்புறுத்தினான் வள்ளுவன் என்பது சிந்தனைக்குரிய விடயம்.

அன்பு என்பது என்ன? தனக்குரியார் தனக்கு வேண்டியோர் மாட்டு மட்டும் இரக்கமும் தயவும் காட்டுவது அன்பு. தனக்குரியார் அல்லாதார் மாட்டும் காட்டுவது அருள். நான் எனது என்ற அழுக்குகள் இருக்கின்ற கட்டத்தில் நாம் காட்டுவது அன்பு; இந்த நான் எனது என்ற செருக்கறுந்த நிலையில் உலகில் உள்ள எல்லா உயிர்கள் மாட்டும் காட்டப்படும் இரக்கம், அருள் எனப்படுவது. இல்லறத்தில் வாழ்வான் ஆரம்ப நிலையில்நான், எனது என்ற செருக்கைச் செருக்கி எறிவது கடினமாதலின் அவனுக்கு அன்பை மட்டும் வற்புறுத்தினார் வள்ளுவர். அன்பு என்ற உயிரின் அடிப்படை உணர்வைத் தூய்மை செய்வதன் விளைவாகக் காலப்போக்கில் புடம் போடப் படுகின்ற அன்புக்கு, அருள் என்பது பெயர். இதனாலே தான் வள்ளுவன் அருளினை அன்பீன் குழவி என்றனன். அன்பு என்பது உயிரின் அறப் பண்புகளுக்குத் துணையாக இருப்பது போல அறமல்லாத பண்புகளுக்கும் துணையாக இருக்கிறது என்பது வள்ளுவன் கருத்து. அதனாலேதான் "அறத்திற்கே அன்பு சார்பென்ப மறத்திற்கும் அதுவே துணை" என்றனன். மானைப் புலி கொல்வது அறமன்று. ஆனால், புலி தன்மீதும் தனது பிள்ளைகள் மீதும் வைத்திருக்கின்ற அன்பினாலேயே அத்தகைய கொலையைச் செய்கின்றது. ஆகவே புலியின் செயல் பிழையுமன்று. இங்கே புலியினுடைய அன்பு மறத்துக்கும் துணையாக இருக்கக் காண்கின்றோம். இல்லறத்தானின் வாழ்விலும் அவனுடைய அன்புப் பண்பு அறச் செயல்களுக்கு மட்டுமல்லாமல், அறமல்லாச் செயல்களுக்கும் காரணமாகத் துணையாக இருக்கின்றது என்பதை வள்ளுவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை மனங் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பார்க்கின்ற போது வெறுமனே அன்பு நிலையில் இருக்கின்ற இல்லறத்தானுக்கு வள்ளுவன் புலால் உண்ணாமையை வற்புறுத்தவில்லை என் பதும், துறவறத்துள் நுழைய விரும்புகின்றவர்களுக்கு அருளாட்சி இன்றியமையாதது ஆதலால் அவர்க ளுக்கே புலால் உண்ணாமையை வற்புறுத்தினான் என்றும் தோன்றுகின்றது.

## உண்மைநிலை என்ன?

தொகுத்துப் பார்க்கின்ற போது சைவனாக வாழ்வதற்கு அல்லது சைவ வழிபாட்டைச் செய்வதற்குப் புலாலுண்ணாமை அவசியம் என்று கூறுகின்ற கருத்துப் போலியானது என்றும் தெரிகின்றது. சைவனுக்கு உரிய வரைவிலக்கணம் என்ன என்பதை ஆழமாக அகலமாகச் சிந்திப்பதற்கு இந்தக் கட்டுரை வழிவகுக்கும் என்றும் அறிவும் பண்பும் செறிந்த பெரியோர் சிறியேன் இக்கட்டுரையில் இழைத்திருக்கக் கூடிய பிழைகளைப் பொறுத்து எனக்கு அறிவுச் சுடர் கொளுத்தி ஆதரிப்பார்கள் என்றும் நம்புகின்றேன்.

# புலம் பெயர்ந்து வந்த எங்கள்

அளவையூர் இ.யோகி



டென்மார்க் பெரு நகரின் பிரண்டா எனும் நகரில் குடிகொண்டிருக்கும் அபிராமி அம்மனின் பக்தர் எழுதிய கட்டுரை இது. இவ் ஆலயத்துக்கு நானும் சென்றிருந்தேன். அங்கு நடைபெற்ற விந்தைகளால் கவரப் பட்டவர்களில் நானும் ஒருத்தன். அம்மனின் அருளை யார்தான் அளவிட முடியும்.– ஆசிரியர்

# நலம் காக்கும் அன்னையவள்

அண்டங்கள் அனைத்தையும் ஆளுகின்ற அன்னை மாசக்தி உலகிலே பலகோடி நாமங்களினால் தோத்தரித்து அடியார்களினால் வழிபாடு செய்யப்ப டுகின்றாள். அப்படியாகிய அன்னையவள் அன்னை அபிராமி என்னும் திரு நாமத்தோடு டென்மார்க் நாட்டிலே பிரண்டா என்னும் கிராமத்தில் வயல் வெளிக்கரையோரத்திலே மரச் சோலைகளின் நடுவே தான் தோன்றி அம்மனாக அமர்ந்து அங்கு வருகின்ற அடியவர்களின் பிணிகள் அகற்றி அருள் பாலித்து பல அற்புதங்களைச் செய்து வருகின்றாள். அன்னை அபிராமி தனது தெய்வ வாக்குகளையும் அற்பு தங்களையும் சிறு வயதினிலே தன் அருட் கடாட்ஷத்தினால் ஆட்கொள்ளப்பட்ட மாதாஜி ஸ்ரீ அபிராமி உபாசகி அவர்கள் மூலமாக அடியவர் களின் துன்பங்களை அகற்றி அருள் பாலித்து வருகின்றார்.

சுமார் ஒன்பது வருடங்களுக்கு முன்பு மாதாஜி அவர்கள் தமிழீழத்தில் இருந்து புலம் பெயர்ந்து வந்து இந்தப் பிரண்டா என்னும் கிராமத்தில் வாழ்க்கையை ஆரம்பித்தபோது இல்லத்தின் கீழ் மாடியில் ஒரு பஜனை வழிபாட்டினைத் தொடங்கி அங்கு வருகின்ற சில அடியவர்களோடு பிரார்த்தனை வழிபாடுகளை வாரம் தோறும் நடாத்தி வருங் காலங்களில் அன்னை அபிராமி அம்பாளுடைய அருட்பிரவாகம் மாதாஜியிடம் அதிகரிக்கத் தொடங்கியது. அம்பாளுடைய திருவாக்கினைக் கூறி அன்னையின் நீறெறிந்து அவர்களின் பிணிகளையும் களைந்து வரும் காலங்களில் அடியவர்களின் தொகை வர வர அதிகரிக்கத் தொடங்கியது.

ஒரு நாள் மாதாஜி அவர்கள் அருள் நிலையில் இருந்தபோது ஓர் அடியவர் அன்னை அபிராமி அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் பணிக்கென அவர்களிடம் அருள் வாக்குக் கேட்டபோது தலம் அமையும் காலம் வரும் போது நானே உங்களுக்குக் கூறுவேன் என்றார். அம்பாளின் திருவாக்கு கிடைக்கப் பெற்ற சில மாதங்களின் பின்னர் ஒரு நாள் மாதாஜி மூலமாக ஆலயம் அமைய இருக்கும் இடத்தினை அன்னையவள் அடியவர்களுக்குக் கூறியருளினாள். அம்பாளின் திருவாக்கிற்கமைய அடியவர்கள் அந்த இடத்தினைச் சென்று பார்த்தபோது மிகுந்த ஆச்சரியம் அடைந்தார்கள். காரணம் வயல் வெளிக்கரையோரத்தில் மரச் சோலைகளின் நடுவே தமிழீழத்தின் இயற்கை அமைப்பையொத்த இடத்திலே ஆலயம் அமைப்பதற்கு ஏற்ற ஒரு கட்டிடத்தினை விற்பனைக்காக விட்டிருந்தார்கள். மாதாஜி அவர்கள் அக்கட்டிடத்தினை வாங்கி ஆலய வடிவிலே புனர் நிர்மாணம் செய்து பங்குனி மாத உக்கிர நன்நாளிலே அபிராமி அம்பாளைப் புனருத்தாரணம் செய்து விநாயகப் பெருமானுக்கும் வள்ளி தேவ சேனா சமேத ஆறுமுகப் பெருமானுக்கும் ஆலயம் அமைத்துப் பூஜை வழிபாடுகளை நடாத்தி வருகின்றார்கள்.


மாதாஜியுடைய சமயத் தொண்டினையும் அம்பாள் கடாட்ஷத்தினையும் அறிந்த ஹவாய் குருகுல ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி அவர்கள் ஆலயத்திற்கு விஜயம் செய்ததோடு இந்தியாவில் இருந்து மூல விக்கிரகமான அபிராமி அம்பாள் சிலையை தருவித்துக் கொடுத்து மாதாஜியுடைய இந்து சமயப் பணிக்குப் பேருதவி புரிந்தார். பங்குனி உத்திரத்தில் கோயில் கொண்ட அன்னையவள் தன்னை நாடி வரும் அடியவர்கள் பிணியகற்றிப் பல அற்புதங்களைச் செய்து வருகின்றாள்.

வைத்தியர்களால் கைவிடப்பட்ட சிறு குழந்தைகளை அம்பாளுடைய அருள் கடாட்ஷத்தினால் பூரண சுகமடையச் செய்த நிகழ்வுகள் டென்மார்க் நோர்வே நாடுகளில் நடை பெற்றிருக்கின்றன. தினசரி மூன்று வேளை பூசைகளும், திங்கள், வெள்ளி சனிக்கிழமைகளில் விசேட பூஜைகளும் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு மாதமும் கடைசிச் சனியன்று மாதாஜி அவர்கள் தமிழீழத்தில் வாழுகின்ற மக்களுக்காக விசேட யாகம் வளர்த்து அம்பாளுக்கு அபிசேக ஆராதனைகள் செய்து, வரும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின் றார்கள்.

கடந்த மூன்று வருடங்களாக ஆனிமாதக் கடைசி ஆடிமாத தொடக்கத்திலே வரும் திதியினிலே அம்பாளுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. இவ்வருட அலங்கார உற்சவம் பத்தாம் நாள் தேர்த் திருவிழாவிலே தமிழீழ வவுனியாவில் செய்யப்பட்டு டென்மார்க் நாட்டில் பூட்டப்பட்ட அழகிய சித்திரத் தேர் அம்பாள் அடியவர்களால் இழுத்துவரப்பட்டது. ஐரோப்பாவிலே உயர்ந்த முதலாவது சித்திரத் தேர் என்னும் சிறப்புப் பெயரும் இத்தேருக்கு உரியதாகும். இவ்வருட உற்சவ தீர்த்தத்

திருவிழா அம்பாளுடைய அருள் வாக்கிற்கமைய ஆலயத்தில் இருந்து சுமார் 45 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள (வைலே) vejle கடற் கரையிலே பெருந்தொகையான அடியார்கள் புடை சூழ மிகவும் சிறப்பாக நடை பெற்றது. தனது ஆலயச் செயற்பாடுகளை அன்னையவள் மாதாஜி மூலமாக அருள் வாக்குக் கொடுத்துப் பரிபாலித்து வருகின்றாள். அடியவர்களின் கிரக தோஷ நிவர்த்திக்காக நவக்கிரக வழிபாட்டிற்கு நவக்கிரக நாயகர்களை ஆலயத்திலே பிரதிஷ்டை செய்து வைத்திருப்பதோடு புத்திர பாக்கியம் இல்லாத தம்பதிகள் அம்பாளிடம் நேர்த்தி வைத்துப் பிள்ளைத் தொட்டில் கட்டி வழிபாடு செய்வதற்காக ஆலய வெளி வீதியிலே பெரிய விருட்ஷத்தின் கீழ் வைரவர் கோயிலையும் மிகவும் அழகுற அமைத்திருக்கிறார்கள். சென்ற வருடம் பங்குனி மாதம் பங்குனி உத்திர நன்நாளிலே ஹவாய் ஆதினம் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமி அவர்களால் மாதாஜி அவர்களுக்கு "ஸ்ரீ அபிராமி உபாசகி" என்னும் ஆன்மீக நாமம் சூட்டப்பட்டது. டென்மார்க் நோர்வே ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் அடியவர்கள் தமது நேர்த்திகளைச் செய்வதற்காக அம்பாளின் ஆலயத்திற்கு வருகின்ற நிகழ்வு அம்பாளுடைய அருட் சக்தியினை எமக்கு எடுத்தியம்புகின்றது. அம்பாளுடைய தேர்த் திருப்பணி நிதிக்காக ஆலய நிர்வாகத்தினர் பிரபல தென்னிந்தியத் திரைப்படப் பாடகர்களை ஒன்றிணைத்த ஆலய வரலாறு பற்றி முத்தான பத்துப் பாடல்கள் அடங்கிய CD இசைத் தட்டொன்றினை வெளியிட்டிருக்கிறார்கள். புலம் பெயர்ந்து வாழும் எங்கள் நலம் காக்கும் அன்னையின் அற்புதங்களை எழுதிக் கொண்டே செல்லலாம். எல்லைகள் கிடையாது.

ஓம் சக்தி.




# EDGWARE PHYSIOTHERAPY CLINIC

Specialist in Sports injuries
Run by an Experienced
Chartered
Physiotherapist

KANESH NATHAN
Ph.d. M.C.S.P S.R.P
10 The Drive
Edgware
Middlesex
HA8 8PT

TEL: 0181 958 9820
FAX: 0181 958 1244

# PRASAD SWEETS

புதிதாகத் தயாரிக்கப்பட்ட லட்டு, மைசூர் பாகு, முறுக்கு, ஜிலேபி, மற்றும் சகலவிதமான சைவ இனிப்புவகைகள் எம்மிடம் கிடைக்கும்

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை நீங்கள் அணுகலாம்

Always
Fresh & Best

222 Ealing RoadWembly, Middlesex
Tel: 0181 902 1704

168 Upper Tooting Road , London SW17
Tel: 0181 682 3363

# KSP Super Foods



இலங்கையிலும், இந்தியாவிலும்
இருந்து தருவிக்கப்பட்ட
அத்தியாவசியப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பத்திரிகைகள் , சஞ்சிகைகள்,
அனைத்தும் மலிவு விலையில்
மனநிறைவோடு பெற்றுக்
கொள்ள நீங்கள் நாடவேண்டிய
தரமான
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

*318, HIGH STREET NORTH*
*MANOR PARK , LONDON E12 6SA*
*TEL: 0181 471 7806*

# வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய வரலாறு

இலங்கை மாதாவின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணக் குடாநாடு. அதன் இரு கண்கள் போலத் துலங்குவன துன்னாலை, பொன்னாலை என்னுமிடங்களிலுள்ள விஷ்ணு தலங்களாகும் என்று தட்சண கைலாய மான்மியம் கூறுகிறது. அலைகடலின் தென்றல், அழகிய வெண்மணற் பரப்பு, அதைச் சுற்றி விரிந்த குடைபோல் படர்ந்து நிழல் தரும் பல்வேறு விருட்சங்கள், இவற்றின் மத்தியிலே பார்ப்பவர் மனத்திலே பக்திப் பரவசம் தோன்றச் செய்து ஓங்கி உயர்ந்து, இன்று புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சிதருகிறது வல்லிபுர ஆழ்வார் சுவாமிகள் கோவில். வரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலயம் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்தி பெற்ற புராதன திருத்தலமாகும்.

## அற்புதமான வரலாறு

இவ்வாலயம் அமைந்த வரலாறே அதி அற்புத மானது. முன்னொரு போது அலை பொங்கியெழும் வங்கக் கடலிலே, இன்று தீர்த்த உற்சவம் நடைபெறும் பகுதியிலே அதிசய மச்சமொன்று துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்து மக்களைத் திகைக்க வைத்தது. கற்கோவளப் பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் பலரும் செய்த முயற்சிகள் எவையுமே பலிக்கவில்லை. வலைகளைக் கிழித்துக் கொண்டு மிக்க உயரத்தில் பாய்ந்து குதித்தும், கட்டு மரங்களை எட்டியுதைத்தும் வேடிக்கையாக விளையாடிக் கொண்டிருந்தது. இரண்டொரு தினங்களாக நடைபெற்ற இச்செய்தி கேட்டு மக்கள் கூட்டம் திரண்டது. வராத்துப் பளையைச் சேர்ந்த வல்லி என்னும் வல்லிநாச்சி நாகசாபம் தீர்ப்பதற்காக மிக்க பயபக்தியுடன் நெடுங்காலம் தவமிருந்து வந்தார். அன்றிரவு பகவான் அவருக்குக் கனவில் தோன்றி, சில சம்பவங்களையும் சொல்லிக் குறித்த இடத்திற்கு மறுநாள் வருமாறும் பணித்தார். மறுநாட்காலை லவல்லி அவ்விடம் வந்தார். கரையில் உட்கார்ந்து கைகளை நீட்டிய வண்ணம் பகவானின் திருநாமங்களைத் தியானித்து இருந்தார். அம்மீன் அம்மையாரின் மடியிற் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. கண்ணன் உதித்தான் என்று அடியார்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். லவல்லியின் ஆலோசனைப்படி அப்புனிதக் குழந்தையை ஒரு பல்லக்கில் வைத்து அன்பர்களும் அடியார்களும் அவ்வூர், அயலூர்ப் பிரமுகர்களும் புடைசூழச் செடிகளுக்கும் மண்மேடுகளுக்கும் ஊடாகத் தூக்கி வந்தனர்.

அன்று குழந்தைக் கண்ணனைத் தூக்கிவந்த கற்கோவள மக்களுக்குக் கோவிலில் திருவிழாக் காலங்களில் சுவாமி தூக்குதல், சமுத்திர தீர்த்தத்தில் பங்குபற்றி நடத்துதல், கண்ணனை நம்பிக் கடற்றொழில் செய்தல், இன்னும் பெண்மணிகள் கோவிலின் விசேட தினங்களில் பக்தியுடன் கும்மி பாடுதல் போன்றவை இன்றும் வழிவழி வந்த செயல்களாக இருக்கின்றன. நெடுந்தூரம் தூக்கி வந்தமையாற் களைப்புற்ற மக்கள் மரநிழலிற் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டுத் தாகசாந்தி செய்தபின் மீண்டும் தூக்க முயன்றபோது அசைக்கவும் முடியவில்லை. குழந்தையும் மறைந்து விட்டது. அச்சமயம் அந்தணர் ஒருவர் தோன்றி அங்குள்ள பக்தர் ஒருவரிடம் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்துப் பூசிக்கும் படி கூறிச் சென்றார். அவ்வழக்கப்படியே மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்தே இன்றும் பூசிக்கப்படுகிறது. சக்கரத்தைக் கையேற்ற முழுமண்டலம் அதாவது தொண்ணூறு நாள் பூசைகள் அபிஷேகங்கள் செய்து வந்தார்.

அதன்பின் அப்பக்தர் அக்காணிச் சொந்தக்கா ரர்களும் அண்மையில் வசித்தவர்களும் அப்பிரதிட் டையைப் பயபக்தியாய் நடத்தியவர்களும் விஷ்ணு பக்தர்களுமான அவ்வூர், அயலூர் மக்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அவர்கள் பூசாகாரி யங்களை நடத்தியும் பரிபாலித்தும் வந்தனர். வைஷ்ணவ ஆலயங்களிலும் அக்காலத்தில் விநாயக ருக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. எனவே, அவர்கள் ஆலும் குளமும் அதனருகே நெல் வயலும் சூழ எழுந்தருளி இருக்கும் குருக்கட்டுச் சித்தி விநாயகருக்குப் பூசையை முடித்துக்கொண்டு தான் வல்லிபுர சுவாமிக்குப் பூசை செய்வது வழக்க மாயிற்று. அவர்களால் ஆக்கப்பட்ட அன்றைய பாரம்பரியங்களிற் சில இன்றும் திருவிழாக் காலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி விநாயகராலயத்தின் மேற்குத் திசையில் இரு திருக்குளங்கள் உண்டு. அவற்றில் ஒன்றிலிருந்துதான் திருநாமம் எடுக்கப்பட்டு வந்தது. சமுத்திர தீர்த் தத்துக்கு அடுத்தநாள் நடைபெறும் கேணித் தீர்த்தத்தை மற்றைய குளத்தில் நடத்தி வந்தார்கள்.

## கோவில் பரிபாலனம்


பூசகர்களுக்கிடையே பாகப் பிரிவினை காரணமாக ஏற்பட்ட பிணக்கினால், தற்காலம் புலோலி தெற்கில் (அக்காலம் புலோலி கிழக்கு), 'மணியம் வீடு' என வழங்கப்படும் வீட்டில் வசித்தவரும், காலஞ் சென்ற பிரசித்த நொத்தாரிஸ் வி.சேனாதிராசசேகரத்தின் பீட்டனுமான வினாசித்தம்பி என்பவரிடம் அக் காலத்துப் பஞ்சாயத்துச் சபையார் பரிபாலனத்தை ஒப்படைத்து உரிமையாளரின் பிரதிநிதி ஒருவரையும் கௌரவ ஆலோசகராக நியமித்தனர். பரிபா லனத்தில் மாற்றம் ஏற்பட்டமையினால் இக்காலப் பகுதியில் பிள்ளையார், நாகதம்பிரான், நாச்சிமார் தெய்வங்கள் புதியனவாக உட்பிரகாரத்தில் அமைக் கப்பட்டன. அவர்களே கோவிலைப் பயபக்தியாய்ப் பரிபாலித்து வந்தனர்.

சில காலஞ் சென்றபின் புலோலி தெற்கைச் சேர்ந்த புலோலித்தம்பி என்பவரின் கைக்குப் பரிபாலனம் மாறியது. தருமசீலராகிய அவரும், கோவில்

முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உழைத்தார். இன்றைய கேணி களமாக அமைக்கப் பட்டுக் கேணித் தீர்த்தமும் நடைபெற்றது.

அதன்பின் துன்னாலை தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் உடையார் முகாமையாளரானார். அவரின் சிரேஷ்ட புதல்வன் ம.தாமோதரம்பிள்ளை அவர்களின் காலத்தில் திருப்பணி வேலைகள் யாவும் நடைபெற்றன. கேணி திருப்பணியாகக் கட்டப் பட்டது. வெளி மண்டபம் அமைக்கப்பட்டது. அவரின் சகோதரன் ம.செல்லத்துரை அவர்களும் கோவில் முன்னேற்றத்துக்கு முன்னின்று உழைத்தார். இவர்களிடமிருந்து கி.பி. 1932இல் முன்னர் கூறிய புலோலித் தம்பியின் மரபிலுதித்தவரும் பிரசித்தி பெற்றவருமான திரு.நா.இராசா அவர்கள் நிர்வா கத்தைக் கைப்பற்றி நடத்தி வந்தார். மேற்படி கோவிலில் இன்று நடைபெற்றுவரும் ஆறு நேரப் பூசையை ஆக்கியவர் அவரே. **கோவில் வீதிகளை ஒப்பமாக்குவித்த போது தான் சிங்கள மன்னனான வசபன் காலச் சாசனங்கள் சில அகப்பட்டன. வசபன் காலத்திலேயே விஷ்ணு தேவாலயம் இங்கு இருந்தது என்பதை இச்சாசனம் உறுதிப்படுத்துவதாக உள்ளது.** மேலும் பல தர்மகர்த்தாக்கள் மாறி மாறி ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனர்.

அதன்பின் இவ்வாலயத்தேரை அமைத்தற்கண். இரவும் பகலும் அயராது மிக்க சிரமத்தோடு முன்னின்று உழைத்து நிறைவேற்றியவரும் இர தோற்சவத்தைச் சிறப்புற நடத்தியவரும் ஆகிய அமரர் ப.நாகலிங்கம் அவர்களின் மாபெரும் முயற்சியாலும் அமரர் ம.செல்லத்துரை அவர்களின் ஒத்துழைப் பாலும் முறையான தர்மகர்த்தா சபை அமைக்கப்பட்டது. அது 2—8—76 இல் இருந்து செயலாற்றி வருகிறது.



# சிந்தனைச் செல்வங்கள்

1. கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டம் எதுவும் தேவை இல்லை. அதனால் ஆகப்போவதும் ஒன்றும் இல்லை.
2. இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்து நிறைந்து நிற்கும் இறைவனிடம் வேண்டிக் கொள். அவன் தனது கருணையை உன்மீது பொழிவான்.
3. ஒரு மனிதன் வீறுகொண்டு எழுந்து வேலை செய்ய வைப்பது எது? பலம். பலமே புண்ணியம். பலவீனமே பாவம். வெடிகுண்டின் ஆற்றலுடன் உடநிடதங்க ளிலிருந்து வெளிவருகின்ற ஒருவார்த்தை இருக்கு மானால் அது அச்சம் இன்மை என்பதே.
4. இது ஓர் பேருண்மை. பலமே வாழ்வு. பலவீனமே மரணம், பலமே நிகழ்ச்சி, அழிவற்ற வாழ்வு, மரணமிலாப் பெருநிலை. பலவீனமே முடிபற்ற வேதனையும் துன்பமும்
5. இறைவனிடம் பக்தி இன்றிச் செய்யப்படும் செயல் நிலைக்காது. அது மணலிற் கட்டப்பட்ட அத்திபாரம் போன்றது. முதலில் பக்தியை வளர்த்துக் கொள்.
6. இறைவனை மனம், வாக்கு, காயம், என்பவற்றால் வழிபடுவதே பக்தி, அவரையும், அவரது பெருமைக ளையும் மனதாற் சிந்திப்பது மனத்தால் செய்யும் பக்தி. அவரது திருப்புகழை வாயாற் பாடுவது, வாக்கினாற் செய்யும் பக்தி. திருக்கோயிலை வலம் வருதல் மலர் கொய்தல், மாலைகள் தொடுத்தல், தீபம் ஏற்றுதல் முதலிய தொண்டுகள் செய்தல் உடலாற் செய்யும் பக்தி.
7. இறைவனே, உலகனைத்திற்கும் வழிகாட்டி. அவனே உலகனைத்திற்கும் குரு.
8. இறைவனுக்கு நீ கொடுக்கின்ற ஒவ்வொன்றும் பன்மடங்காக உன்னிடமே திரும்பி வரும். எனவே மோசமான தீய்து எதையும் இறைவனிடம் சமர்ப்பிக்காதே.
9. அன்பும், நம்பிக்கையும் உடைய பக்தனின் இதயத்தில் இறைவன் விரைந்து குடி கொள்கிறான்.
10. பெரியதும் சிறியதும் எல்லாமே கடவுள் தான். வேறுபாடெல்லாம் ஆற்றலின் வெளிப்பாடுதான்.
11. நீ யாருக்காக வேலை செய்கிறாயோ அவர் உனது தேவைகளை எல்லாம் கவனித்துக் கொள்வார். உன்னை இந்த உலகத்திற்கு அனுப்பு முன்னர் நீ வாழ்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் இறைவன் செய்தே வைத்திருக்கிறார்.
12. தாமரை இலை போல் மனிதன் இந்த உலகில் வாழ வேண்டும். அது நீரில் இருந்தாலும் நனைக்கப் படுவதில்லை. அவ்வாறே இவ்வுலகில் பற்று எதுவும் இல்லாமல் உடல் உலகிலும், உள்ளம் இறைவனிலும் வாழ வேண்டும்.
13. சிந்தித்துப் பேசு, மனமும் வாக்கும் ஒன்றிணைந்து செய்யப்படும் பிரார்த்தனைகள் பதிலளிக்கப் படுகின்றன.
14. நோயும், உடலும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளட்டும். மனமே! நீ எப்போதும் ஆனந்தமாயிரு.
15. இறைவனை நெருங்க, நெருங்க, ஒருவன் அவரைப் பற்றி மேலும், மேலும் அறிந்து கொள்கிறான். முடிவில் அவரிலேயே ஒன்று கலந்து விடுகிறான்.

**தொகுப்பு — திருமதி. க. கந்தசாமி**

# GNANAM
T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள் மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**

**விரைவான சேவை!**

**தெளிவான சேவை!**

இவற்றுக்காக நீங்கள் எங்கும் போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம் தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

**180 High Street North**
**East Ham London**
**Tel: (+0044) 0181 47 08 84 4**
**Fax: (+0044) 0181 47 08 77 7**

| | |
|---|---|
| **Australia** | **5p** |
| **Canada** | **5p** |
| **France** | **5p** |
| **Germany** | **5p** |
| **India** | **25p** |
| **Italy** | **7p** |
| **Malaysia** | **14p** |
| **Pakistan** | **29p** |
| **Singapore** | **15p** |
| **Sri Lanka** | **27p** |
| **U.K** | **3p** |
| **U.K mobile** | **11p** |

# வாழ்க்கையின் இலட்சியம்

இறைவன் அருளைப் பெற்று இறை இன்பத்தை அனுபவிப்பதே மனிதனின் இலட்சியம். இறைவனை அறிய முடியாமல் உலக விவகாரங்கள் மனிதனைத் தடுத்துக் கொண்டு இருக்கின்றன. இவற்றிலிருந்து மனிதன் விடுபட வேண்டும். இதற்கு இறைவன் அருள் வேண்டும். அருளை எப்படிப் பெறுவது? இறைவனிடம் நம்மைப் பரிபூரணமாக அர்ப்ப ணித்துக் கொண்டால் இறைவனின் அருளைப் பெறலாம். நம்மை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்வது தான் பக்தி. இறைவனை அறிந்து கொள்வது எப்படி? இறைவன் யார்? இறைவன் ஜோதி மயமானவன் என்று வேதம் சொல்கிறது. ஞானம் என்பது இறைவன் தன்மையைப் பற்றிய அறிவு. விஞ்ஞானம் என்பது உலகப் பொருட்களின் அறிவு. உலகப் பொருட்களின் தன்மையை அறிந்து கொள்ள இறைவனின் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உலகில் கோடிக் கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் வாழ்க்கை வெறும் புலன் இன்பத்தைத் துய்ப்பதிலேயே, அழிந்து போய்க் கொண்டிருக்கிறது. அதற்காகத் தங்கள் முழு ஆற்றலைச் செலவு செய்கிறார்கள். கோடிக் கணக்கான மக்கள் வாழும் இந்த உலகில் விரல் விட்டு எண்ணக்கூடிய மக்கள் தான் இறைவனின் அருளைப் பெற முயலுகிறார்கள் என்று கீதை சொல்கின்றது.

மேலும் கீதை சொல்கின்றது. இறைவனின் இயற்கை மண் , நீர், தீ, காற்று, வான், மனம், மதி, அகங்காரம் என எட்டு வகையாகப் பிரிந்து தோன்றுகின்றது. இதைவிட இறைவனின் மேல் இயற்கை ஒன்று உண்டு. அதுவே உயிர். எல்லா உயிர்களுக்கும் அதுவே காரணம். நூலில் மணிகளைப் போல் இவ்வையகம் முழுவதும் இறைவனில் கோக்கப் பட்டுள்ளது. இறைவன் நீரில், சுவை, ஞாயிறிலும், திங்களிலும் ஒளி, வேதங்களில் பிரணவம், வானில் ஒலி ஆண்மக்களிடத்து ஆண்மை, மண்ணில் நறுமணமும், தீயில் சுடரும், உயிர்களில் உயிரும், புத்தியுடையோரில் புத்தியும் ஒளியுடையோரில் ஒளியுமாக இருக்கின்றார்.

மனிதப் பிறவியே, இறைவனின் தன்மைகளைப் புரிந்து அவன் அருளைப் பெறுவதற்காகத்தான் அமைந்தது. அதுவே மனிதனின் நோக்கமாக இருக்கவேண்டும். இந்த முயற்சியில் ஈடுபட்டு இறைவனின் அருளைப் பெற்றுப் பெருவாழ்வு அடைய எல்லா மனிதர்களாலும் முடியும். இதற்குத் துறவி வாழ்க்கை தேவையில்லை.

இந்திரிய ஒழுக்கம் கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் முதலியவற்றை , இடையறாது கடைப்பிடிப்பதன் மூலம் இறைவனை அறிந்து கொள்ள முடியும். இறைவனிடம் பக்தி செய்ய வேண்டும். தனக்கு ஏராளமான செல்வங்கள் வேண்டும் இடர்கள் தீரவேண்டும், நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் அருளைப் பெற வேண்டுமெனப் பக்தி செய்வதே மேலானது. இந்த மனநிலை சாதாரணமாக எல்லோருக்கும் வராது. இறைவனை வழிபடுதல் என்றால் மனசிற்குள் இறைவனை யாசிப்பது மாத்திரமன்று. முதலில் தெய்வங்கள் மேல் பக்தி செலுத்தி மன அமைதி பெறவேண்டும். தெய்வ வழிபாட்டிற்கு ஆலய வழிபாடே சிறந்தது. ஆலயத்திற்கு எப்பொழுதும் செல்வதற்கு வசதி கிடையாது. ஆகையால் தத்தம் வீடுகளில் சுவாமி அறையொன்றை ஏற்படுத்தித் தினமும் வழிபடலாம். எந்த எந்த பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகின்றானோ அந்த நம்பிக்கைக்குத் தகுந்த வடிவத்தைத் தான் மேற் கொள்ளுகிறேன் எனப் பகவான் சொல்லுகின்றார்.

திருக்கோயில்களுக்குச் சென்று இறைவனின் தன்மையை அனுபவிக்க முடியாமல் மோகம் நம்மை மயக்கிக் கொண்டு இருக்கின்றது. உலகத்துப் போலி மயக்கங்கள், மாயையில் சிக்கித் தவிக்கின்றோம். உலகப் பொருள்களின் உண்மையான தன்மையை உணர விடாமல் மயக்கம் செய்யும் ஜாலம் மாயைதான். இறைவனின் தொடர்பு ஏற்பட ஏற்பட, அவன் அருளால் மாயையின் மயக்கத்திலிருந்து விடுபட முடியும். இறைவனுடன் தொடர்பு கொள்ளச் சித்த சுத்தம் அவசியம்.

மாயை பற்றி அருமையான உவமைகள் மூலம் விளக்குகிறார் இராமகிருஷ்ண பரமஹம்சர் ‘தொங்கும் விளக்கின் முப்பட்டைக் கண்ணாடிகளை இரவும் பகலும் ஒரு சாது நோக்கிப் புன்முறுவல் பூப்பது வழக்கம். காரணம் என்னவெனில், அந்த ஸ்படிக மூலமாகச் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பல வர்ணங்களை அவர் காண்பார். இவ்வித வர்ணங்கள் உண்மையானவையல்ல என்பதை அவர் தெரிந்து கொண்டதும் உலகமும் அம்மாதிரியே உண்மையல்ல வென்று அறிந்தார்.

“ஒன்று என்னும் இலக்கத்தோடு பூச்சியங்களை (0சுழிகளை) சேர்த்தால் அவைகளுக்கு மதிப்புண்டு. ஒன்றைவிட்டுப் பிரித்தால் அவைகள் வெறும் பூச்சியங்களே. கடவுள் ஒன்று என்னும் இலக்க மாவார். உலகப் பொருள்களெல்லாம் அவரோடு சேர்க்கப்பட்ட பூச்சியங்களே. தம்மளவில் அவைக ளுக்கு மதிப்பில்லை”

மனித ரூபமாக விளையாடுபவன் ஈசுவரனே, அவன் ஒரு செப்படி வித்தைக்காரன் போன்றவனாவான். ஜீவன், ஜகத் என்ற மாயைத் தோற்றமெல்லாம்

அவனுடைய பெரிய வித்தைகள். செப்படி வித்தைக் காரன் மட்டுமே உண்மை. வித்தைகள் எல்லாம் மாயை.

## இம்மயக்கத்தினின்று தெளிதல் எப்படி?

இந்த மாயை முக்குணங்களால் (தாமஸ் ரஜஸ், சாத்வீகம்) உருவாக்கப்பட்டது. இம் மாயையை இறைவனை சரண் அடைந்தவர்களால் மட்டுமே தாண்ட முடியும்.

துன்பத்தைத் தவிர்க்க எந்த உயிராலும் முடியாது. தேகம் எடுத்தவனை அது ஏதோ ஒருவிதமாக வந்து தாக்குகிறது. நோய்க்கு மருந்தை நாடுவது போல் துன்பத்தைத் துடைப்பதற்குத் தெய்வத்தின் துணை தேவை.

சிற்றுயிர்களுக்கு வேண்டத்தக்கதை அறிபவன் ஈஸ்வரனே. அவர்கள் வணங்கும் தேவதைகள் வாயிலாக, வேண்டியவற்றை அவர்களுக்கு இறைவன் வழங்குகிறான்.

சூரியப் பிரகாசத்தால் உண்டாகும் மேகம் சூரியனை மறைப்பது போல் ஈசனுடைய முக்கணத்தாலாகிய யோக மாயை இறைவனுடைய அகண்ட சச்சிதானந்த சொரூபத்தை மறைத்துக் கொண்டி ருக்கிறது. மேகத்தை விலக்க வல்லது சூரியனே. அதுபோல இறைவனால் உண்டாக்கப்பட்ட மாயையை இறைவனாலேதான் விலக்க முடியும்.

ஜலம் கலந்த பாலிலிருந்து ஜலம் வேறு பால் வேறாகப் பிரிக்கக் கூடிய அன்னப் பறவை. பாலை மட்டும் குடித்து தண்ணீரைத் தள்ளி விடுகின்றது. மற்றப் பறவைகளால் இது முடியாது. ஈஸ்வரன் மாயையோடு இரண்டறக் கலந்து இருக்கிறான். இறைவனை மாயையிலிருந்து தனித்துக் காண எல்லா மனிதராலும் ஆகாது. அன்னப் பறவைபோல, இறைவனின் அருள் பெற்ற மனிதரால் மட்டுமே மாயையை அகற்றிவிட்டு இறைவனைக் காண முடியும்.

ஈ நல்லதிலும் கெட்டதிலும் உட்காரும். ஆனால் தேனீயோ தேன் உள்ள பூக்களில் மட்டுமே இருக்கும். சாதாரணமாக மனிதர் சிற்றின்பக் பொருள்களையே நாடுவர். ஆனால் இறை பக்தியுள்ளவர்கள், பேரின்பமான இறைவனை நாடுவர்.

தெருப் பாடகன் ஒரு கையால் சுருதி சேர்த்துக் கொண்டும் மற்றொரு கையால் ஒருவகை மேளத்தைத் தட்டிக் கொண்டும் அதே சமயத்தில் பாடிக் கொண்டுமிருக்கிறான். அதைப்போல மனிதன் தனக்கேற்பட்ட காரியங்களைக் கைகளால் செய்து கொண்டு பகவான் நாமத்தை முழுமனதோடு சொல்லி, அவனது இறை சிந்தனையை மறக்கக்கூடாது.

ஜீவனானது இவ்வுலகத்தை விட்டுப் போகும்போது கடைசியில் எதைப் பற்றி நினைத்துக் கொண்டு இருக்குமோ அதற்குரிய உடல் மறுபடியும் வந்து பிறக்கின்றது. இடையறாது உலகப் பொருள்களைப் பற்றிய எண்ணம் இருந்தால் அவன் மனத்தில் இறக்கும் தறுவாயில் அவைதான் உண்டாகும். ஆதலால் இடையறாது இறைவனை அனுஷ்டா னத்தினால், ஈசுவரனின் சிந்தனை ஆத்மாவினிடம் குடி கொள்ளுமானால் இறக்கும் தறுவாயிலும் அச்சிந்தனை நீங்காது. அவனுக்கு மறு பிறவியில்லை. கடவுள் எல்லாரிடத்தும் இருக்கிறார். ஆனால் எல்லாரும் கடவுள் இடத்திலில்லை. கப்பல் எத்திசையில் போய்க் கொண்டிருந்தாலும் அதில் உள்ள திசை காட்டி முள் வட துருவத்தையே நோக்கி நிற்கிறது. அங்ஙனம் மனிதன் எதைச் செய்து கொண்டிருந்தாலும் அவனது மனது யாண்டும் சர்வேசுவரனிடத்தே நிலைத்திருக்கட்டும் என்று இராமகிருஷ்ணர் சொல்லுகிறார்.

# ஜெர்மன் நகரில்........

ஜேர்மன் பேர்லின் மயூரபதி முருகப்பெருமான் ஆலயத்தில் திரு வெம்பாவை பூசையும் ஆங்கில புத்தாண்டு தினமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஜனவரி முதலாந்திகதி முருகப் பெருமானுக்கு விஷேஷ கலச அபிஷேகமும் பக்தர்களால் அளிக்கப்பட்ட காணிக்கைப்பொருட்களைக் கொண்டு செய்யப்பட்ட தங்கவேல் சாத்தப்பட்டது.

ஜனவரி 2ம் திகதி திருவெம்பாவை பூர்த்திப் பூசையில் நடேசப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நடைபெற்றது. இவற்றில் திரு சோமநாத குருக்கள் அவர்கள் மேற்படி பூசைகளில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

திருவெம்பாவை பூசையில் 10 நாட்கள் பண்ணுறப் பாடிய திரு சிவஞானசுந்தரம் அவர்களை ஆலய நிர்வாகத்தினர் பொன்னாடை போர்த்தியும் சிவ அருட்செல்வர் என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கி கௌரவித்தனர். இப்பூசையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# நீதிக்காய்ப் போரிட்ட தெய்வமே

செ.நாகேந்திரன்

திருமகளும் கலைமகளும் உறவாடும் சீமையில்
விருப்புடனே வந்து வள்ளி தெய்வயானையுடன்
பெருவளத்து நியூஹாமில் பதிகொண்டு தேரில்
அருள் சுரக்க அமர்ந்துவரும் பெருமானே!

ஆதிசிவன் நுதலில் உருவெடுத்துத் தேவர்
பீதிய கற்றப் போருமிட்டு வென்று சைவ
நீதியுணர்த்தப் பதிகொண்டு லண்டன் மாநகர
வீதியில் ஊர்ந்து வரும் நாயகனே!


வாலைப் பருவத்து வீரத்தழகோடு
மனோப்பாக்கில்
வேலைத் தாங்கிய வெற்றிப் பெருமகனாய்
மாலை வனப்போடும் மங்கள ஒலியோடும்
காலைப் பொழுதில் வலம் வரும் வேலவனே

செல்வக் களஞ்சியமாய்ச் சீர்மேவு மிந்நாட்டில்
சொல்லற்கரியதோர் அற்புதப் பேரூற்றாய்
அல்லல் அறுத்து அனைவரையும் காத்து
நல்லருள் பாலிக்க உலாவரும் தனையனே

விந்தைக்கு விளையாட்டாய் ஒளவைக்குப்
பழமீந்து
சுந்தரத் தமிழாற் சிறந்த நூல் இயற்ற வைத்து
சிந்தைக்கு விருந்தளிக்கும் கணனியுகக்
கருநாட்டில்
தந்தைக்கு முன் வந்து விழாப் பெற்ற குமரனே


தேரிழுத்து உனைப் புகழ்ந்த தமிழீழ
மண்ணெங்கும்
நேரிட்ட இன்னலை நீற்றுத் தகர்த் தெறிந்து
பாரிலோர் தமிழராட்சி மலரவைப்பாய்
நீதிக்காய்ப்
போரிட்ட தெய்வமே லண்டன் ஸ்ரீ முருகா நீயே





உறங்கும் ஆன்மாவை எழுப்புங்கள். அது எவ்வாறு விழித்தெழுகின்றது என்பதைப்பாருங்கள். உறங்குகின்ற ஆன்மா மட்டும் விழித்தெழுந்து தன்னுணர்வுடன் செயலில் ஈடுபடுமானால் சக்தி வரும். பெருமை வரும். எவையெல்லாம் மேலானதோ அவை அத்தனையும் வரும்.

**– சுவாமி விவேகானந்தர்–**



# முயல் விட்டுக் காக்கைப்பின் போனவாறே

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அப்பரடிகள் இறைவன் கருணையை நினைந்து, நெஞ்சு நெகிழப் பாடுபவர். உயிர்அருவப் பொருள், அதற்கு ஓர் உருவத்தைத் தந்து உலகிடை அனுப்பித் துய்ப்பன துய்த்து, மகிழ்வன மகிழ்ந்து — குறை நீங்கி நிறைநலம் பெறச் செய்யும், அவன் கருணையே கருணை, இதனை,

**“என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய் திட்டு என்னையோ ருருவமாக்கி”**

என்று பாடுகிறார். உருவமாக்கிய இந்தப் பணிக்கு ஈடாக எதனைக் கூறமுடியும்? இந்த உருவத்தினை முதலாகக் கொண்டுதானே மனிதன் வளர்கிறான்; வரலாறு படைக்கிறான்; உலகில் வேறு எந்த அறிவியல் படைப்பையும் விட இந்த மானுட யாக்கையின் படைப்பு அதிநுட்பமானது; அறிவியல் தன்மையுடையது. இந்த உடல் உயிர்க்கூட்டின் பயன், உயிரை இன்புறுத்தலேயாம். இறைவன் திருவுள்ளம் இன்புறுத்தலேயாம். ஆயினும் உயிர், பெற்றுள்ள சிற்றறிவு அடங்கவா செய்கிறது? அது தன்னிச்சையிலேயே ஆட்டம் போடுகிறது? அறிவுப் பொருளைத் திருத்திச் சீராக்குதல் எளிய காரியமன்று. அறிவற்ற சடப்பொருள் எளிதில் பக்குவப்படும், அறிவு நாடகமாடும்; நடிக்கும்; உணர்ந்தது போல் காட்டிப் பின் தன்னெறியே மேற்கொள்ளும்; இன்பத்தைத் துன்பமாகக் கருதும்; துன்பத்தை இன்பமாகக் கருதும்; அடக்கினாலும் சிலநாள் அடங்கும். வாய்ப்பு வந்துழிமிஞ்சும். இதனை இக்கட்டான நிலையில் உயிருக்கு அறிவு கொளுத்தியே — அதனை அறியச் செய்தே பக்குவப் படுத்த வேண்டியதிருக்கிறது; அடிமைப்படுத்தவும் முடியாது. இன்பத்திற்கு எதிர் துன்பம். துன்பத்திற்குக் காரணம் அறியாமை. அறியாமையினால் செய்த செயல்களின் விளைவுகள் வினை! நோய் நீங்குகிறவரை உணவு சுவைக்காது என்பதைப்போல, வினை நீக்கம் பெறும்வரை நிறைநல இன்பத்தையும் துய்க்க முடியாது. ஆதலால்,

**“முன்பிருந்த வினை தீர்த்திட்டு”**

என்கிறார்! தீமை நீங்கினால் போதாது; நன்மை விளங்கிட வேண்டும். இதனை வள்ளுவமும்,

**“சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு”**

என்று கூறுகிறது.

அருணகிரியாரும்,

**“பொய்யை நிந்திக்கிலேன் உண்மை சாதிக்கிலேன்”**, என்று கூறுகிறார். தீமைக்குக் காரணமாகிய அறியாமை நீங்கியவுடன் அறிவு ஆங்கு விளங்க வேண்டும். இறைவன் உயிரிடத்து விளங்கிய முன்னை வினை வாசனை நீங்கிய பிறகு, அந்த உயிரின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு குடியிருந் தருளுகின்றான்”.

அறியாமையில் உயிர் கிடக்கும்பொழுது உடலினுள் இருக்கும் உயிரும், மாற்றாரும் அறிய முடியா வண்ணம் நின்றருள் செய்யும் இறைவன், வினை நீக்கத்துக்குப் பிறகு பலரும் காணும் திருக் கோயிலென்ன, உயிரிடத்து விளக்கமுற வீற்றிருக் கிறான். இறைவன், உள்ளத்து இடங்கொண்டமை யின் காரணமாக அன்பு ஊற்றுக்கண் திறக்கிறது; உயிரிடத்து ஆற்றல் மிக்க அன்பைத் தூண்டுகிறது; இந்த நிலையில் ‘அன்பும் சிவமும்’ ஒன்றென்ற குரல் எழும்புகிறது. அன்பினாலாவது இன்பமே. அன்பினாலல்லது வன்பினால் ஆவது எப்பொழுதும் இன்பமன்று. அஃது ஒரு சேறு. அன்பு இன்புறுத் துகிறது. அன்பு பெருகி இன்பத்தில் திளைக்கும் பொழுது மேலேது? கீழேது? உயிர், இன்புறுத்தும் பொருளிடத்தில் அடிமையாகிறது. இஃது அறிவியல் அடிமை; உயர்வின் பாற்பட்ட அடிமை. **இத்தகைய இறைவன் திருவருளை நினைந்து வாழ முடியாமல் பிற தெய்வங்களை வணங்குவதும், பிற நெறிகளைச் சார்வதும் வேடிக் கையாக இருக்கிறது!** அப்பரடிகளே தன் வரலாற்றினை நினைந்து வியந்து பாடுகிறார். முயல், நாட்டில் திரிவது, அதனால் அதைப் பிடிப்பது சுலபம். எளிதில் பிடிக்கக்கூடிய முயலைப் பிடிக்காமல் விட்டுவிட்டு எளிதிற் பிடித்தற்கியலாத காக்கையைப் பிடிக்கக் காக்கையின் பின்னே ஓடித்திரியும் செயலை நினைவுபடுத்துகிறார். காக்கையோ வானில் பறக்கிறது. மனிதனுக்கோ பறக்கும் சக்தியில்லை. எங்ஙனம் பிடிக்க முடியும்? கையிலிருக்கும் முயலை விட்டுவிட்டுக் காக்கையைப் பிடிக்கப் போவதாகவும் பொருள் கொள்ளலாம். முயல் சிவநெறி; நாம் பிறநெறி; எளிதில் அமைந்த நெறி; இன்றமிழ் நெறி; ஆரத்துய்த்து மகிழத் துணை செய்யும் தூய நெறி; இனிய நெறி, எளிய நெறி. **இந்நெறிதனில் பிறந்திருந்தும் இந்நெறி நின்று வாழாது பிற நெறிகளைத் தேடியலைவதும் தாயிற்சிறந்த தயவுடைய நம் சிவன் தாளினைத் தொழாது வேறு தெய்வங்களைத் தேடியலைவதும் காக்கையின் பின் ஓடுவதை யொக்கும்.**

இனிய பாடல்! பாடிப் பயிலுக!

“என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னையோ ருருவ மாக்கி
இன்பிருத்தி முன்பிருந்த வினை தீர்த்திட்
டென்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி யடியேனைக் கூழாட்கொண்டு
அருள்செய்த ஆருரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கை பின் போனவாறே

**(அப்பர் தேவாரம்—நாலாந் திருமுறை)**

# சைவ சித்தாந்தத்தைப் புரிந்து கொள்வோம் -வினாவும் விடையும்

-திரு சி. அருணைவடிவேல் முதலியார் -

### சித்தாந்தம் என்பதன் பொருள் என்ன?

'சித்தாந்தம்' என்பதற்கு 'முடிந்த முடிபு' என்பது பொருள். ஒரு பொருளைப் பற்றி முதற்கண் ஒரு முடிவு கொள்ளப்படும்; பின்பு நன்றாக ஆராய்ந்து பார்த்து முடிவாக ஒரு முடிபு கொள்ளப்படும். அதுவே முடிவான முடிபாகும். முதல் முடிபே முடிந்த முடிபாகவும் வரலாம்; ஆயினும், அது ஆராயாமல் கொள்ளப்பட்ட நிலைபோல இல்லாமல், நிலைத்து நிற்கும் முடிபாகி விளங்குமாகையால், அதுவே 'முடிந்த முடிபு' எனப்படும்.

### ஒவ்வொரு சமயமும் தான்தான் கொண்ட முடிபை 'முடிந்த முடிபு' என்றுதான் கூறுகின்றது; அதனால், ஒவ்வொரு சமயத்தின் முடிபும் சித்தாந்தம் என்பதுதான் முடிவாகின்றது; ஆகவே, 'சித்தாந்தம்' என்பது எது?

ஆம், உண்மைதான்; நீ கூறியபடி, பௌத்த சித்தாந்தம், சமண சித்தாந்தம் வைணவ சித்தாந்தம், சைவ சித்தாந்தம்' எனப் பல்வகைச் சித்தாந்தங்கள் உள்ளனவாம்; ஆயினும் சைவ சமயத்தின் முடிவுகள் உண்மைச் சிந்தாந்தமாய் உள்ள சிறப்புப் பற்றி, 'சித்தாந்தம்' என்பது, சைவ சித்தாந்தத்திற்கே பெயராயிற்று. இது 'மலர்' என்பது தாமரை மலரையே குறிப்பது போன்றதாகும். சைவ சித்தாந்தமே உண்மைச் சித்தாந்தம் என்பதனை, "சித்தாந்தமே சித்தாந்தம்; அதற்கு வேறானவை பூருவ பட்சங்கள் (சித்தாந்த ஏவ சித்தாந்த: பூர்வபட்சாஸ்தத:பரே") என விளக்குகின்றது, 'இரத்தினத்திரயம்' என்னும் வடநூல்.

### சைவ சித்தாந்தப் பொருளைத் தொகுத்தருளிச் செய்தல் வேண்டும்?

சமய வாதங்கள் நம் நாட்டில் தோன்றிய காலத்தில், சமயப் பொருள்களைச் சில பகுதிகளாக வைத்து ஆராயும் முறை தோன்றிற்று; அப்பகுதிகள், (1) இறைவன் இவன், (2) அவனாற் சொல்லப்பட்ட முதல் நூல் இது, (3) உள எனக் கொள்ளப்படும் பொருள் இவை, (4) அப்பொருள்களின் இயல்புகள் இன்ன, (5) மாணாக்கர் செய்ய வேண்டிய முயற்சி இது, (6) அம் முயற்சியினால் அடையும் பயன்கள் இவை' என்பன.

### சித்தாந்தத்தில் சொல்லப்படும் இறைவன் யாவன்?

சித்தாந்தத்திற் சொல்லப்படும் இறைவன் சிவபிரான்.

"சொல்லும் பொருள்களும் சொல்லா தனவும்அங்கு
அல்லனாய் ஆனான் என் றுந்திபற
அம்பிகை பாகனென் றுந்தீபற"

"ஆனாதி சிவனுடைமை யால் எவையும் ஆங்கே
அனாதியெனப் பெற்ற அணுவை— அனாதியே
ஆர்த்த துயர் அகல அம்பிகையோடு எவ்விடத்தும்
காத்தல் அவன்கடனே காண்"

"அந்தம் ஆதி", "சங்காரமே முதல்"

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்;மற்றத்தெய்வங்கள்
வேதனைப் படும் பிறக்கும் இறக்கும்மேல் வினையும் செய்யும்"

"கந்தமலர் அயன்படைக்கும் உலக மெல்லாம்
கண்ணன் அளித்திடும் அவை எம் கடவுள் தானே
அந்தமுற அழித்திடுவன் ஆதலாலே
அயன் அரியும் அவனதுயர் அதிகாரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன்"

என்றற் றொடக்கத்துச் சித்தாந்த நூற் பகுதிகளைக் காண்க.

### சித்தாந்தத்தின் முதல் நூல்கள் யாவை?

சித்தாந்தத்தின் முதல் நூல்கள், 'வேதம், சிவாகமம்' என்னும் இரண்டுமாம்.

"வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதி நூல் அனாதி அமலன் தருநூல் இரண்டும்"

என்றது காண்க. 'அனாதி அமலனாய இறைவன், முதல் நூலைத் தான் நேரே அருளிச் செய்தலேயன்றித் தன்னைத் தலைப்பட்டுத் தானேயாய் நின்ற பெரியார் வாயிலாகவும் அருளிச் செய்வன்' என்பது சித் தாந்தம்.

"சிவனும் இவன் செய்தியெலாம் என் செய்தி யென்றும்
...... உடனாகி நின்று கொள்வன்" எனவும்,

"துரியம் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் — துரியத்தைச்
சாக்கிரத்தே செய்தருளித் தான்செய்யுந் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க் கவன்"

எனவும் சித்தாந்த நூல்கள் கூறுதல் காண்க.

### "சிவனைத் தலைப்பட்டுச் சிவனேயாய் நின்றவர் இவர்" என்பதனை அறிவது எவ்வாறு?

அவர் வாயிலாக இறைவன் இயற்றியருளும் அதியற்புதச் செயல்களாலே அதனை நாம் அறிந்து கொள்ளுதல் கூடும். இதுபற்றியே, "ஓடம் சிவிகை" என்பது முதலிய நான்கு வெண்பாக்களால் நால்வர் ஆசிரியர் வாயிலாக நிகழ்ந்த அதியற்புதச் செயல்களை இனிது எடுத்தோதிற்று, 'திருக்களிற்றுப் படியார்' என்னும் சித்தாந்த உயர்நூல். இவற்றாலும் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மொழிந்த

மெய்வைத்த சொல்" என்றதாலும், தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளும், திருக்குறளும் சித்தாந்த முதல் நூல்களாதல் விளங்கும்.

**இறைவன் ஏதேனும் ஒரு நூலை முதல் நூலாகச் செய்யாமல், முதற்கண்ணே, 'வேதம், சிவாகமம்' என இரண்டு நூல்களையும், பின்னும் அவ்வாறே 'திருக்குறள், திருமுறை' என இருவேறு வகைப்பட்ட நூல்களையும் ஏன் முதல் நூலாகச் செய்தல் வேண்டும்?**

நல்ல வினாவே வினாவினாய்! நூலைக் கற்று அதன் வழிநின்று பயன்பெறுவார் ஒரு திறத்தினராய் இல்லாது இரு திறத்தினராய் இருத்தலே, நூலை ஒன்றாகச் செய்யாது இரண்டாகச் செய்தமைக்குக் காரணம். அறத்தின் பெருமையை உணர்ந்து அதன் வழி ஒழுகி, இம்மை மறுமை இன்பங்களை அடைவார் ஒரு திறத்தினர்: இறைவனது அருளின் பெருமையை உணர்ந்து அதன்வழி ஒழுகி வீட்டின் பத்தினை அடைவார் மற்றொரு திறத்தினர். இவ்விரு திறத்தினரும் முறையே, 'உலகர்' எனவும் 'சந்திநிபாதர்' எனவும் சொல்லப்படுவர். உலகர் பொருட்டுச் செய்யப்பட்ட நூல், 'அறநூல்' எனப்படும்; அது பொது நூல். சத்திநிபாதர் பொருட்டுச் செய்யப்பட்ட நூல், 'அருள் நூல்' எனப்படும்; அது சிறப்பு நூல். "ஆரண நூல் பொது; சைவம் அருஞ்சிறப்பு நூலாம் — நீதியினால் உலகர்க்கும் சந்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது" என்னும் சிவஞான சித்தியினையும், (சூ.8—15) "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல் ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன" என்ற திருமந்திரத்தினையும் (2397) "உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும், நிலவுமெய்ந்நெறி சிவநெறிய தென்பதும்" என்றருளிய சேக்கிழார் விளக்கத் தினையும் (திருஞா.பு820) நோக்குக. இவ்வாறாக, திருக்குறள் பொதுநூல்: 'திருமுறைகள் சிறப்புநூல்' என்பதும் தெளிவாகும்.

**சித்தாந்தத்தின் முதல் நூல்கள் இவை என்பதனைத் தெரிவித்தருளினீர்கள்; இனி சித்தாந்தத்திற் கொள்ளப்படும் பொருள்கள் இவை என்பதனை அருளிச் செய்தல் வேண்டும்?**

சித்தாந்தத்திற்குக் கொள்ளப்படும் பொருள் மூன்று; அவை. 'பதி, பசு, பாசம்' என்பன. பதி, கடவுள்; பசு,உயிர்; பாசம், உயிரைப் பிணித்துள்ள கட்டு; இவை முறையே 'இறை, உயிர், தளை' என்றும் சொல்லப்படும்.

**பதி,பசு,பாசம் இவைபற்றித் தனித்தனிக் கூறு வீர்களா?**

பதிப்பொருள் ஒன்றே; இரண்டாவது இல்லை. பசுக்கள் எண்ணில, பாசம் மூன்று; அவை, ஆணவம், கன்மம், மாயை என்பன. இவை உயிரைக் கட்டுப்படுத்தல் பற்றிப் 'பாசம்' எனப்படுதல்போல, உயிர்களின் தூய்மையைக் கெடுத்து நிற்றலாலும், பின்னர், அகற்றப்படுதலாலும் 'மலம்' எனவும் படும். மலம் — அழுக்கு.

**'பதி, பசு, பாசம்' என்னும் முப்பொருள்களுள் பதி ஒன்றுதானே என்றும் உள்ளது? மற்றைய பசுவும் பாசமும் அந்தப் பதியிலே தோன்றிப் பதியிலே ஒடுங்குபவை தாமே? அவைகளை ஏன் வேறு தனிப் பொருளாக எண்ணி, 'மூன்று பொருள்கள்' எனக் கூறவேண்டும்.**

அவ்வாறல்ல, 'பதி, பசு, பாசம்' என்னும் முப் பொருள்களில் எந்தப் பொருளும் மற்றொன்றிலிருந்து தோன்றவில்லை; மூன்றும் மூன்று தனிப் பொருள்களே. பதி என்றும் இருத்தல் போல, மற்றைய இரு பொருள்களும் என்றும் உள்ள பொருள்களே. முப்பொருள்களுள் எந்த ஒன்றும் ஒரு காலத்தும் ஒன்றிலிருந்து தோன்றாமையால், அவை என்றும் அழிவனவும் அல்ல. இம் முப்பொருள்கள் என்றும் உள்ள அனாதியான நித்தியப் பொருள்கள். "பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில் — பதியினைப் போற்பசு பாசம் அனாதி" என்பது திருமந்திரம்.

**ஒரு பொருளை 'தோன்றல் அழிதல் இன்றி என்றும் உள்ள பொருள்' என்றும், மற் றைய பொருள்களை 'அதனில் தோன்றி ஒடுங்கும் பொருள்' என்றும் கொள்ள வேண்டுவது என்னை?**

'இல்லது தோன்றாது' என்பதும், 'உள்ளது அழியாது' என்பதும், சித்தாந்த அடிநிலை உண்மைகளுள் சிறந்த உண்மைகளாகும். அஃதாவது, இல்லது எக்காலத்தும் இல்லதே; அஃது என்றும் உள்ளதே; அஃது இல்லாததால் இல்லை என்பதாம். ஆகவே, 'தோன்றுதல்' என்பதும், 'அழிதல்' என்பதும் அவற்றையுடைய பொருளின் நிலைமாற்றங்க ளேயன்றி வேறல்ல என்பது தெளிவாகும். தோன்றி அழியும் நிலை காரிய நிலையும், தோற்றத்திற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் உள்ள நிலை காரண நிலையும் ஆகும். அதனால், தோன்றுதலாவது காரண நிலையிலிருந்து காரிய நிலையை அடைவதே என்றும், அழிதலாவது காரிய நிலையிலிருந்து மீண்டும் காரண நிலையை அடைவதே என்றும் உணரலாம். எடுத்துக்காட்டாக, 'குடம் தோன்றிற்று' என்றால் அது மண் என்னும் நிலையிலிருந்து 'குடம்' என்னும் நிலைக்குப்போய் முன்போல 'மண்' என்னும் நிலையை அடைந்தது என்பதுவே பொருளாகும். இவ்வாறு நிலை வேறுபடினும், இருநிலையிலும் பொருட்டன்மை ஒன்றாயே இருக்கும். அதனை மட்குடம் மண்ணின் தன்மையும், பொற்குடம் பொன்னின் தன்மையும் உடையவாய் இருத்தல் கொண்டு உணரலாம். இதனால், பயன்வேறுபாடு, பற்றி, காரணப் பொருளையும்,

பொருளையும் 'மண்' என்றும் 'குடம்' என்றும் 'பொன்' என்றும் 'பணி' என்றும் வேறு வேறு பொருள்போல கூறினோம், பொருட்டன்மையால் அவை ஒன்றேயாம்.

ஆதலின், 'பதி, பசு, பாசம், என்ற மூன்று பொருள்களுள், ஒன்றே உள்ளது; ஏனையவை அதனில் தோன்றி ஒடுங்குவன' எனின், ஒன்று காரணப் பொருளும்; ஏனைய அதன் காரியப் பொருளும் ஆகும்; 'அவ்வாறே ஆகுக' எனின், மேற்கூறியவாறு காரணப் பொருளின் தன்மையே காரியப் பொருளின் தன்மையுமாக வேண்டு மாதலின், மூன்று பொருள்களும் ஒரு தன்மையே உடையனவாதல் வேண்டும். அவ்வாறின்றி மூன்று பொருள்களும் மாறுபட்ட வேறு வேறு தன்மைகளை உடையனவாதல் பின்னர் இனிது விளக்கப் படுமாதலால், முப்பொருள்களுள் ஒன்றை மற்றொன்றின் காரியம் என்னாது, மூன்றும் மூன்று தனிப் பொருள்களே எனக் கொள்ளுதலே பொருத்தமாதல் அறிக.

இனி, இல்லது தோன்றாது ஆகலானும், உள்ளது அழியாது ஆகலானும் வேறுபட்ட மூன்று தன்மைகளால் வேறு வேறாய் அறியப்படும் மூன்று பொருள்களுள் யாதொன்றனையும், 'ஒரு காலத்துத் தோன்றிற்று' என்றோ ஒரு காலத்தது அழியும்' என்றோ கூறுதல் கூடாமையால், 'முப்பொருளும் அனாதி நித்தியப் பொருள்கள்' என்றே கொள்ள வேண்டுதலும் அறிக.

இன்னும் 'மாறுபட்ட பல தன்மை ஒரு பொருட்கண் இருத்தல் இயலாது' என்பதும் ஒரு சித்தாந்த உண்மை; அஃதாவது, தட்பமும் வெப்பமும் மாறுபட்ட தன்மைகள். அதனால், அவை இரண்டும் ஒரு பொருளிடத்தே இருத்தல் இயலாது; உண்மையும் இன்மையும் மாறுபட்ட தன்மைகள்; அதனால், அவை இரண்டும் ஒரு பொருளிடத்தே இருத்தல் இயலாது; பிறவும் இவ்வாறே காண்க.

'இல்லது தோன்றாது'; 'உள்ளது அழியாது' எனவும் 'மாறுபட்ட பல தன்மைகள் ஒரு பொருட்கண் இருத்தல் இயலாது' எனவும் உள்ள இரு நல்ல முடிபுகளின் வழியே நோக்கினால், 'பதி, பசு, பாசம் எனப் பொருள்கள் மூன்று உள்ளன' என்பதும், 'அவை மூன்றும் அனாதி நித்தியப் பொருள்கள்' என்பதும், நிலை பெற்ற உண்மை முடிபுகளாகும் என்பதும் இனிது விளங்குதல் காண்க.

முப்பொருள்களும் அனாதி நித்தியம் எனின்,

**'இறைவன் உலகத்தைப் படைக்கின்றான் என்று கூறுவது என்னை?**

'உலகம்' என்பது, 'காரணப் பிரபஞ்சம், காரியப் பிரபஞ்சம்' என இருவகைப்படும். 'காரணப் பிரபஞ்சம்' என்பது மண்போல்வது; 'காரியப் பிரபஞ்சம்' என்பது குடம் போல்வது. குயவன் குடத்தை மண்ணிலிருந்து தோற்றுவித்தலன்றி, மண்ணைத் தோற்றுவித்தல் இல்லை; அதுபோல, இறைவன் காரியப் பிரபஞ்சத்தைக் காரணப் பிரபஞ்சத்திலிருந்து தோற்றுவித்துப் பின் அதிலே ஒடுக்குவதன்றிக் காரணப் பிரபஞ்சத்தைத் தோற்று வித்தல் இல்லை. ஆகவே, 'இறைவன் படைக்கின்றான்,அழிக்கின்றான்' என்பது காரியப் பிரபஞ்சத்தை எனவும், 'அனாதி நித்தியம்' என்பது காரணப் பிரபஞ்சத்தை எனவும் பகுத்துணர்ந்து கொள்க.

காரியப் பிரபஞ்சம் தோற்ற ஒடுக்கங்களை உடையதாயினும், காரணப் பிரபஞ்சத்திற்கு அவை இல்லாமையால் அஃது அனாதி நித்தியமேயாம் என்க.

**முப்பொருள்களின் உண்மையையும், நித்தியத் தன்மையையும் இனிது விளக்கினீர்கள்; ஆயினும், அதுபற்றி அடியேற்கு ஓர் ஐயம் எழுகின்றது. பதியாகிய கடவுளைப் போலவே ஏனைய பசுக்களும் பாசங்களும் தோற்றமும் முடிவும் இன்றி என்றும் உள்ளன எனின், மூன்று பொருள்களும் சமம் ஆகையால், இறைவனை, 'எப் பொருட்கும் தலைவன்' என்றும், 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்றும், மற்றும் இவ்வாறெல்லாம் உயர்த்திக் கூறுதல் எவ்வாறு இயலும்?**

இஃது ஒரு வினா அன்று; ஏனெனில், 'உள்ளன' என்று கூறிய அளவில் எல்லாப் பொருளும் சமமாய் விடுதல் எவ்வாறு? 'உள்ளன' என்றால், 'எல்லாப் பொருள்களும் ஒரு தன்மையனவாய் உள்ளன' என்பதுதான் பொருளோ? 'ஒரு நாட்டில் அரசன் என்று உள்ளானோ அன்றே குடிகளும் உள்ளனர்' எனின் 'அரசனும் குடிகளும் சமம்' என்பது பொருளாகுமோ? 'உலகில் மக்கள் என்று உள்ளனரோ அன்றே விலங்கு முதலியனவும் உள்ளன' என்றால், மக்களும் விலங்கு முதலியனவும் சமம் என்று கொள்ளலாகுமோ? இவ்வாறெல்லாம் ஆகாமை போல, 'பதி என்று உண்டு, அன்றே பசு பாசங்களும் உள்ளன' என்பதனால், முப்பொருளும் சமம் என்று இல்லை. ஆகவே, முப்பொருளும் அனாதி நித்தியம்' என்பதனால் இறைவனை 'முதற் பொருள்' என்றற்குத் தடை ஒன்றும் இல்லை என்று உணர்க.

**'பதி, பசு, பாசம் எனப் பொருள்கள் மூன்று உள்ளன என்பதற்குப் பிரமாணம் கூறினீர்கள். இனி, அப்பொருள்களின் இலக்கணங்களை அருளிச் செய்க.**

'இலக்கணம்' என்றாலும், 'இயல்பு' என்றாலும் ஒன்றே. ஒவ்வொரு பொருட்கும், பொதுவியல்பு, சிறப்பியல்பு' என இரண்டு இயல்புகள் உள. இந்தப் பொது — சிறப்பு இயல்புகள், மேல் அளவை இயல்பிற்கூறிய பொது சிறப்பு இயல்புகள் அல்ல.

அளவியலில் 'பல பொருள்கட்குப் பொதுவாய் உள்ள இயல்பு பொதுவியல்பு, என்றும் 'ஒரு பொருட்கு

மட்டும் சிறப்பாய் உள்ள இயல்பு சிறப்பியல்பு' என்றும் முன்னர், சொல்லப்பட்டன. இனி சித்தாந்தத்துள் 'ஒரு பொருட்கு அதன் தன்மையிலே இயல்பாய் என்று உள்ள இயல்பு சிறப்பியல்பு, என்றும், முன்னர், சொல்லப்பட்டது. இனி சித்தாந்தத்துள் ஒரு பொருட்கு அதன் தன்மையிலே இயல்பாய் என்றும் உள்ள இயல்பு சிறப்பியல்பு, என்றும், 'மற்றொரு பொருளின் சார்பு காரணமாக ஒரு பொருட்கண் உண்டாகி அச்சார்பு நீங்கிய வழி உடன் நீங்கும் இயல்பு பொதுவியல்பு' என்றும் சொல்லப்படும். இவ்விரண்டு இயல்புகளும் முறையே, 'சொரூப இலக்கணம்' என்றும், 'தடத்த இலக்கணம்' என்றும் சொல்லப்படும். ஆகவே, சொரூப இலக்கணம்' என்னும் பொருளில், சித்தாந்தத்துள் சொல்லப்படும் சிறப்பியல்பு, பொதுவியல்பு, என்பன வேறு; அளவை முறையிற் சொல்லப்படும் 'பொதுவியல்பு சிறப்பியல்பு' என்பன வேறு; சொல் ஒற்றுமையால் இவைகளை ஒன்றாக நினைத்து மயங்குதல் கூடாது.

**முப்பொருள்களின் சொரூப இலக்கணம் தடத்த இலக்கணங்களை உணர்த்தியருளுதல் வேண்டும்.**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களுள் பதி, ஏனைய எல்லாற்றிலும் பேராற்றல் வாய்ந்தது; அதனால், அது, 'தன்வயம்' (சுதந்திரம்) என்பதை, 'அளவை முறையில் சொல்லப்படும் சிறப்பியல்பாக உடையது. எனவே, பசுவும், பாசமும் சுதந்திரம் என்னும் தன்மை இன்றிப் பதியின் விருப்பப்படியே செயற்பட்டுச் செல்வனவாம். மேலும் பசுவும் பாசமும் மற்றொன்றின் சார்பினால் தம் தன்மை மாறுபடும். பதி, அவ்வாறின்றி எந்தப் பொருளின் சார்பினாலும் மாறு படாது, என்றும் ஒரு பெற்றியதாய் இருக்கும். இது பற்றியேபதி, வடமொழியில், 'சத்' என்றும், தமிழ் மொழியில் மெய்ப்பொருள், செம்பொருள் என்றும் சொல்லப்படுகின்றது, சத்தென்பது, 'உள்ளது' என்பதே பொருளாகும். ஆகவே, பிறிதொரு பொருளின் சார்பினால் தன் தன்மை மாறுபடாததாகிய பதிக்கு, பிறிதொன்றை நோக்காது தன்னையே தான் நோக்கி நிற்கும் உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகள் தடத்த இலக்கணமும் ஆகும் என்க. உயிர்களும், உலகம் என்பதனுள் சேர்ந்தனவே.


**பதிக்கும், பசுவுக்கும்போலப் பாசத்திற்கும் தன்னியல்பு பொதுவியல்புகள் உளவோ?**

ஆம்: உள. அவை அத்துணை விரிவுடையன அல்ல.

**ஆணவமலத்தின் தன்னியல்பு யாது?**

உயிர்களின் அறிவை அடியோடு மறைத்து அறியாமை வடிவாகச் செய்வதே ஆணவ மலத்தின் தன்னியல்பு எனப்படும் சொரூப இலக்கணம்.



CAR, MINI-BUS, VAN RENTAL




COMPETITIVE PRICES-NO HIDDEN EXTRAS
UNLIMITED MILEAGE 3 DAYS & OVER
SPECIAL WEEKEND RATES
AUTOMATICS, ESTATES & EXECUTIVES
ALSO AVAILABLE

EUROPEAN HIRE ENQUIRIES WELCOME

SUNDRIVE LTD T/A DIMPLE SELF DRIVE




TEL: 0181 205 1200

16 VARLEY PARADE EDGWARE ROAD COLINDALE LONDON NW9 6RR FAX: 0181 200 7426

TEL: 0171 243 4400

Car Park, Poplar Place, Bayswater, London W2 4AS Fax: 0171 243 4408

**ஆணவ மலத்தின் பொதுவியல்பு யாது?**

மாயை கன்மங்களின் சார்பு உண்டாயபொழுது. அவை உயிரின் அறிவை விளக்குமிடத்துப் பொருள்களை உள்ளவாறு உணர ஒட்டாது, உயர்ந்த பொருளை இழிந்த பொருளாகவும், இழிந்த பொருளை உயர்ந்த பொருளாகவும் மயங்கி உணரச் செய்வது ஆணவ மலத்தின் பொதுவியல்பாகும். ஒன்றையும் அறிய வொட்டாது மறைக்கும் ஆற்றல், ஆவாரக சத்தி என்றும், பொருள்களை உள்ளவாறு உணரவொட்டாது மாறி உணரச் செய்யும் ஆற்றல், அதோநியாமிகா சத்தி என்றும் சொல்லப்படும். மயக்க உணர்வு, மேல் எழாது கீழ் இழிதற்கு ஏதுவாதலின், அதனைச் செய்யும் ஆற்றல், அதோ நியாமிகா சக்தி எனப் பெயர் பெற்றது. திருவள்ளுவ நாயனார் ஆவாரக சத்தியையே, இருள்சேர் இருவினை, இருள்நீங்கி இன்பம் பயக்கும் என்னும் இடங்களில் இருள் என்றும் அதே நியாமிகா சத்தியையே, பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும்–மருள் என்புழி மருள் என்றும் குறித்தருளினார்.

இவ்வாணவ மலம், உயிர்கட்கு இடையே வந்தது அன்று: செம்பிற் களிம்பு போல, அனாதியே– உயிர் என்று உண்டோ அன்றே– அதனைப்பற்றியுள்ளது, அதனால் சகசமலம் எனப்படும். சகசம்–உடன் தோன்றுதல். இச்சகசமலம் காரணமாகவே ஏனைய மாயை கன்மங்கள் உயிருக்கு உளவாயின ஆதலின், இதற்கு, மூலமலம் என்னும் பெயரும் உண்டு.

**மாயை கன்மங்களின் இயல்புகள் யாவை?**

மாயையும், கன்மமும் மலங்களே எனினும், அவை ஆணவ மலத்திற்குப் பகைப் பொருளாய் அதனை நீக்குதற்கு இறைவனால் உயிர்களுக்குச் சேர்க்கப் பட்டன. அதனால் இவை ஆகந்துக மலம் எனப்படும். ஆகந்துகம்– இடையில் வந்தது.

மாயை கன்மமாகிய செயற்கை மலங்களால் இயற்கையாய் ஆணவம் நீங்குதல், உவர்மண், சாணம் முதலிய செயற்கை அழுக்குக்களால், ஆடையில் உள்ள இயற்கை அழுக்கு நீங்குதல் போல்வதாகும்.

ஆணவம் உயிரின் அறிவை மறைப்பது: அறிவை விளக்கி அவ்வறிவு, எல்லாப் பொருட்கும் மேலாய்ப் பரந்து நிற்கும் பரம்பொருளை உணருமாறு விரிவ டையச் செய்வதே மாயை கன்மங்களின் தன்னியல்பு எனப்படும் சொரூப இலக்கணம்.

அங்ஙனமாயினும் ஆணவமலத்தின் சார்பு உள்ளது ணையும் அதனது அதோநியாமிகா சத்தியினால் தமக்கு மேலுள்ள பொருளைக் காட்டாது தம்மையே பொருளாகக் காட்டி உயிரினது அறிவை மயக்கிநிற்றல் மாயை கன்மங்களின் பொதுவியல்பாகிய தடத்த இலக்கணமாகும்.

மாயை கன்மம் என்னும் இரண்டினுள் மாயையே உலகமாய்ப் பரிணமிப்பது: கன்மம் அங்ஙனம் மாயை பரிணமிக்கு மாற்றிற்கு ஏதுவாய் நிற்பது.

தனு, கரணம், புவனம், போகம், என்னும் நான்குமே, உலகம் எனப்படும். தனு–பருவுடம்பு. கரணம்–நுண்ணுடம்பாகிய மனம் முதலிய கருவிகள்: இவை அந்தக் கரணம் எனப்படும். புவனம்–உடம்போடு கூடிய உயிர்கள் போக்குவரவு புரியும் இடம் போகம்–அவ்வுயிர்கள் இன்ப துன்பங்களை நுகரும் நுகர்ச்சிப்பொருள்கள். தனு முதலிய நான்கும் இன்ன இன்ன வகையில் அமைதல் வேண்டும் என்னும் அமைப்பு முறைகட்கு ஏதுவாய் நிற்பது கன்மமே.

கன்மம், புண்ணியம், பாவம் அல்லது நல்வினை, தீவினை என இரண்டாகி முறையே இன்பத்தையும் துன்பத்தையும் தரும். அவை இரண்டும் செய்யப்படும் காலத்து, ஆகாமியம் என்றும், செய்த பின்னர் பயன் தரும் அளவும் தோன்றாது நுண்ணிய நிலையில் இருக்குங்காலத்து, சஞ்சிதம் என்றும் காலம் வந்த பொழுது வந்து பயன் தரும் நிலையில் பிராரத்தம் என்றும் சொல்லப்படும். கன்ம மலங் காரணமாகவே, உயிர்கள் பலவகைப் பிறப்புக்களை எடுத்துப் பலவகை உலகங்களில் சென்று, பலவகையான இன்ப துன்பங்களை நுகரும்,

இவ்வாறு முப்பொருள்களின் தன்னியல்பு பொதுவியல்புகளை ஒருவாறு உணர்ந்து கொள்க.

**முப்பொருள்களின் இலக்கணத்தைக் கூறினீர்கள். சகச மலமும், ஆகந்துக மலமுமாகிய மும்மலங்களுட்பட்ட உயிர் அவைகளினின்றும் நீங்கித் தூய்மை பெறுதல் எவ்வாறு? அதற்குரிய சாதனத்தைக் கூறியருள்க.**

மும்மலங்களுட் பட்ட உயிர் அம்மலங்களின் சார்பால் பல வகைப் பிறப்புக்களில் பிறந்து நுகர்ச்சிப் பொருள்களை அடைந்து இன்ப துன்பங்களை நுகர்ந்து, மேலும் அந்நுகர்ச்சிக்கு ஏதுவான செயல்களைச் செய்து வருங்கால், துன்பங்கள் மிகுதியாயும், இன்பம் சிறிதாயும் இருத்தலைப் பல காலும் உணரும். அவ்வாறு உணரும் உணர்ச்சி காரணமாக, இத்துன்பம் நீங்குமாறும், துன்பம் இல்லாத பெரிய இன்பத்தை அடையுமாறும் இல்லையோ என அவாவிநிற்கும். அங்ஙனம் அவாவுதலை உயிர்க் குயிராய் நின்று அறியும் இறைவன் உணர்ந்து, அவ்வுயிர்களின் உணர்வு நிலைகட்கு ஏற்பச் சிற்சில நெறிகளை, இதுவே நன்னெறி இதுவே நன்னெறி என உணருமாறு உள்நின்று உணர்த்துவான்: இங்ஙனம்

சிலர்க்கு உணர்த்தி அவர் வாயிலாக அவரோடு ஒத்த பலர்க்கு உணர்த்தச் செய்வான். அங்ஙனம் உணர்த்தப்பெற்று அவ்வுணர்வின் வழி நின்று ஒழுகினோர்க்குப் பின்னர் உண்மை நன்நெறியை உண்ணின்றும், முன்னின்றும் உணர்த்துவான். அன்றியும் அவர் வாயிலாகவே அவரோடு ஒத்தார்க்கு உணர்த்துதலும் உண்டு. இவ்வகையில் தோன்றி நிலவி வருவனவே முதலும் வழியுமாய மரபுநிலை திரியா மாட்சியினையுடைய மெய்ந் நூல்கள். அம்மெய்ந்நூல்கள் வேதசிவாகமங்கள்: அவற்றுள் வேதம் பொது நூல் ஆதலின் அது நன்னெறியைப் பொது வகையாக உணர்த்தி, மெய்ந்நெறியிற் கொண்டு உய்க்கத் தக்க உலகியலில் நிற்பிக்கும். சிவாகமம் சிறப்பு நூல் ஆதலின், அது நன்னெறியைச் சிறப்பு வகையால் உணர்த்தி, மெய்ந்நெறியிலே செலுத்தி நிற்கும். சிவாகமத்தாற் பெறப்படுவதாகிய சிறப்பு நெறி, சைவம் எனப்படும். அந்நெறியில் சிவாகமத்தின் வழி அமைந்த நெறி நான்கு. அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பன. சரியை முதலிய மூன்றும் ஞானத்தை அடைவிக்கும். ஞானம் மும்மலங்களையும் அகற்றி உயிரைத் தூய்மைப்படுத்தி, இயல்பாகவே தூயனும், இன்பவடிவினனும் ஆகிய இறைவனை அடைவித்து, துன்பம் அற்ற– எல்லையில்லாத– அவனது பேரின்பத்தில் திளைத்திருக்கச் செய்யும். ஆகவே, படிமுறையாகச் சென்று சைவத்தை அடைந்து, அதன்கண் உள்ள சரியை கிரியா யோகங்களில் நிற்றலே உயிர் மும்மலங்களினின்றும் நீங்கி இன்புறுதற்கு வழியாகும்.

**உயிர் மும்மலங்களின் நீங்கி இன்புறுதற்கு மேற்கொள்ள வேண்டிய சாதனங்கள் சரியை, கிரியை யோகம், ஞானம் என்று அருளினீர்கள்: அச் சரியை முதலாகக் கூறப் படுவன யாவை என்பதை அறிவித்தருளல் வேண்டும்.**

### சரியை

சரியை முதலாகச் சொல்லப்படும் நான்கும் சிவபிரானுக்குச் செய்யும் வழிபாட்டு வகைகளேயாகும். உருவம் அற்றவனாகிய இறைவன், தன்னை உயிர்கள் கண்டு வழிபடுதற் பொருட்டு உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான். அவற்றுள், உருவத்திருமேனி எனப்ப டுவன, முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் யாவும் தோன்ற, ஆடை அணிகள் படைக்கலம் முதலியவற்றோடும் இனிது விளங்கும் திருமேனிகள். அவை, கூத்தபிரான் (நடராசர்), மனைமகப்பிரான் (சோமாஸ்கந்தர்), பிறைசூடும் பிரான் (சந்திரசேகரர்), பிச்சைப் பிரான் (பிட்சாடனர்), முதலியபெயர்களால் குறிக்கப்படும் திருவுருவங்கள். இன்னும், சிவநெறியை அறிவிக்கும் உரிமை உடைய ஆசிரியர்களும். சிவன–டியார்களும் சிவபிரானது உருவத் திருமேனிகளே. இவ்வுருவத்திருமேனிகளால் இறைவனை நினைந்து வாழ்த்தலும், வணங்கலும், வேண்டும் பணிகளைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளே சரியை எனப்படும். ஆகவே, திருக்கோயிலுக்குச் சென்று திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடு பாடிப் போற்றுதல், திருமுறைகளை நாள்தோறும் கட்டளையாக ஓதுதல், சிவநெறி ஆசிரியர்களுக்கு வேண்டுவன செய்தல், சிவனடியார்களை அன்போடு வணங்கி உணவு முதலியன அளித்து வழிபடுதல் இவை போல்வன வெல்லாம் சரியை என்பது விளங்கும்.

### கிரியை

இறைவன் கொள்ளும் மூவகைத் திருமேனிகளில் இலிங்கத் திருமேனி, அருவுருவத் திருமேனியாகும். அது, முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் இன்மையால் அருவமும், பிழம்பு உண்மையால் உருவமும் ஆகிய இருநிலையும் உடையதாய் அருவுருவத் திருமேனி எனப்படுகின்றது. இவ்விலிங்கத் திருமேனியைச் சிவநெறி ஆசிரியர்கள் எழுந்தருளுவித்துக் கொடுக்கப்பெற்று அதில் சிவபெருமானை நினைந்து வழிபடும் முறையை அவர்கள்பால் உணர்ந்து வழிபாட்டிற்கு வேண்டிய திருமஞ்சனப் பொருள்கள், பூக்கள், பச்சிலைகள், நறும்புகைப் பொருள்கள், திருவிளக்கு படையல்கள் முதலியவற்றைத் திரட்டிக் கொண்டு, நீராடி, நாட்கடன் முடித்து, தக்கதோர் இடத்தில் அமைதியாய் அமர்ந்து, பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்து சுத்திகளைச் செய்து, சிவபிரானை அருவுருவத் திருமேனியில் ஆவாகனம் தாவனம் முதலியவற்றால் அகத்திலும் புறத்திலும் வழிபடுதல் கிரியை எனப்படும் எனவே, அக வழிபாடும் புறவழிபாடும் ஒருங்கு அமைவது கிரியை என்பது விளங்கும். வேள்வித்தீயில் இறைவனை வழிபடுவதும் கிரியையே யாகும்.

### யோகம்

புறக் காட்சிக்குப் புலனாகாது அகக் காட்சியில் தோன்றும் ஒளிவடிவமும் இறைவனுக்கு உண்டு. அதுவே அருவத் திருமேனி எனப்படும். அவ்வருவத் திருமேனியைக் காணும் முறையில் சென்று கண்டு,

அதில் அழுந்தி ஒன்று படுதலே, யோகம் எனப்படுவது. இதன்கண் எட்டுப் படிநிலைகள் உண்டு. அவை, இயமம், நியமம், ஆசனம், பிராணாயம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. பாவம் செய்யாமையும் துறவொழுக்கத்திற்கு மாறானவற்றைச் சிறிதும் பற்றாது விடுதலும் இயமம். துறவொழுக்கத்தை மேற்கொண்டு அதில் தப்பாது நிற்றல் நியமம். பதுமம், கூர்மம், மச்சம் முதலாகப் பெயர் பெற்ற ஆசனங்களில் இருக்கப் பழகுதல் ஆசனம். மூச்சுக் காற்றினை வெளிவிடுதல் (இரேசகம்), உள் வாங்குதல்(பூரகம்) இவைகளை முறையறிந்து அவைகளை ஓர் ஒழுங்குக்கு உட்படச் செய்து, மூச்சினை வெளிச் செல்லாது உள்ளே நிறுத்துதல் (கும்பகம்) செய்தலைச் சிறிது சிறிதாக்ப் பழகி, அதனை வலநாடி இடைநாடிகளிற் செல்லாமல் தடுத்து நடுநாடியாகிய சுழுமுனா நாடியிற் செலுத்துதல் பிராணாயாமம். இப் பிராணாயாம முறையால் மனத்தைப் பொறிகளின் வழி ஓடாது, அடக்குதல் பிரத்தியாகாரம். அம்மனத்தைக் குறித்த பொருளில் நிறுத்தும் வன்மை தாரணை. அவ்வாற்றால் இறைவனது ஒளிவடிவாகிய அருவத்திருமேனியிலே மனத்தை இருத்துதல் தியானம். அந்தத் தியானத்திலே தன்னை மறந்து அழுந்தியிருத்தல் சமாதி. எனவே, அகவழிபாடு ஒன்றினாலே இறைவனது அருவத்திருமேனி பற்றிச் செய்யப்படும் வழிபாடே யோகம் என்பது விளங்கும்.

**ஞானம்**

சரியை கிரியை யோகங்களில் பழகப் பழகப் புறக்காட்சியாகிய உலகப் பயிற்சியில் பற்று நீங்கி, அகக் காட்சியாகிய இறைவன் திருமேனி வழிபாட்டில் பற்று வளரும். அது வளர வளர உடம்பையே தான் என மயங்கியிருக்கும் நிலை நீங்கித் தன்னை உடம்பின் வேறாக உணரும் உணர்ச்சியும், தன் உணர்ச்சிக் கெல்லாம் அடிநிலையாக உயிர்க்கு உயிராய் உள்ள இறைவனது திருவருள் உணர்ச்சியும் வளரும். அது வளர்ந்து நிறையும் பொழுது இறைவன் குருவாய்த் தோன்றி நீ ஐம்பொறி முதலிய தத்துவக் கூட்டங்கள் அல்லை: அவற்றின் தன்மை வேறு: உன் தன்மை வேறு என்று உணர்த்தியருளுவான். அவ்வுண்மை யுரையைக் கேட்டபொழுது அதனை அங்ஙனம் ஐயந்திரிபின்றி உணரும் உணர்வு உண்டாகும். அவ்வாறு உணர்தலே ஞானம் எனப்படும்.

ஆசான் மூர்த்தி அருளிச் செய்வதைக் கேட்டல் கேள்வி ஞானம். பின்னர், அதனை நூல்களாலும் பொருந்து மாற்றாலும் ஆராய்ந்து உணர்வது சிந்தனை ஞானம். ஆராய்ந்த பின் அதனைத் தெளிந்து கொள்வது தெளிவு ஞானம். தெளிந்த பின்னர் ஐம்பொறிகளில் செல்லாது உயிர்க்குயிராகிய இறைவனிடத்திலே அழுத்தி நிற்றல் நிட்டைஞானம். ஞானம் இங்ஙனம் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என நான்கு வகைப்படும். ஆசான் மூர்த்தியின் அருளுரையினைச் சிந்திக்கும் பொழுது தான் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்பு சாத்திரங்களைக் கொண்டு உணரப்படும். அவ்வாறு சிந்தனை ஞானத்தை அடைய விரும்புபவர்களுக்காகவே ஞான நூல்கள் உள்ளன. அந்த ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்பித்தல், கேட்டல், சிந்தித்தல், ஆகியவைகள் ஞானபூசை எனப்படும். எனவே, உருவம், அருவுருவம் அருவம் என்னும் மூன்றையும் கடந்து அறிவே வடிவாய்விளங்கும் இறைவனது உண்மை இயல்பை அறிந்து அன்பு செய்யும் அறிவு வழிபாடே ஞானம் என்பது விளங்கும்.

சரியை முதலிய நான்கும் முறையே தாசமார்க்கம் (தொண்டு நெறி), சற்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி), சக மார்க்கம் (தோழமை நெறி), சன்மார்க்கம் (நன்னெறி) எனப்படும்.

இவ்வாறு சரியை முதலியவற்றின் இயல்பை ஒருவாறு அறிந்து கொள்க.



# பட்டினத்தார் பலரா?

செந்தமிழ் நாடு தெய்வத் திருநாடு. ஆழ்வார்களும் நாயன்மார்களும் சித்தர்களும் நலம் திகழும் முனிவர்களும் ஞானிகளும் செழித்திருந்த புனிதப் பெருநாடு. பாடும்பணியே பணியாகக் கொண்டு பரம்பொருளை எப்படி எல்லாமோ அனுபவித்துப் பாடிப் பரவிய அருளாளர்கள் மலிந்த உயர்நாடு. அத்தகைய அருளாளர்கள் அருளிய பாசுரங்கள் ஆயிரம் ஆயிரம் இன்றும் நின்று நிலவி வருகின்றன.

இவ்வகைப் பாடல்களில் பட்டினத்தார் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. பல்வேறு காரணங்களால் பட்டினத்தார் பாடல்கள் பல்லோர் உள்ளத்தை ஈர்த்தனவாக விளங்குகின்றன. கற்றார் கல்லாதார் யாவரும் விரும்பிப் பயின்ற ஒருசிலவற்றில் பட்டினத்தார் பாடல்களுக்குத் தனி இடமுண்டு.

இவை கவிதை நயமும் தத்துவச் செறிவும், சமய உண்மைகளும் நிரம்பியவை. கருத்து வளமும் அனுபவ முதிர்ச்சியும் நிரம்பிய எளிமையும் இனிமையும் உடையவை. எனவே கற்பவர் உள்ளத்தை நேரே சென்று தொட்டு உணர்வைத் தட்டி எழுப்புவனவாய் மிளிர்கின்றன. ஆகவே தான் வேறெந்தப் பாடல்களையும் விடப் பட்டினத்தார் பாடல்கள் சாதாரண மக்களையும் கவர்ந்துள்ளன.

பட்டினத்தார் பற்றிய உண்மை வரலாற்றை அறியத் தக்க சான்றுகள் இல்லை. பதினோராம் திருமுறையைத் தொகுத்த அதிராவடிகள் பாடல்கட்கு அடுத்துப் பட்டினத்துப்பிள்ளையார் அருளியவை என்று ஐந்து பிரபந்தங்களைத் தந்துள்ளார். அவையே

1.கோயில் நான்மணிமாலை.
2.திருக்கழுமலை மும்மணிக்கோவை.
3.திருவிடை மருதூர் மும்மணிக்கோவை.
4.திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5.திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

என்பன.

இவையன்றி வேறுபல சிற்றிலக்கியங்களும் தனிப் பாடல்களும் பட்டினத்தார் அருளியனவாக நிலவி வருகின்றன. அவையும் இலக்கிய வளமும் இலக்கண அமைதியும் பக்திச் சுவையும் அனுபவச் செறிவும் நிரம்பியவையே. அப்பாடல்கள் யாவும் பட்டினத்தார் பாடல் திரட்டு என்ற பெயரில் பலரால் உரையோடும் அச்சிடப்பெற்றுள்ளன.

இவற்றையெல்லாம் ஆய்ந்து பார்த்தால் பட்டினத்தார் என்ற பெயருடன் மூவர் இருந்தமை தெள்ளிதிற் புலனாகும். 11 ஆம் திருமுறையில் கண்ட பாடல்களை அருளியவர் ஒருவர். இவர் அருளிய பாடலகள் 22. இவர் காலம் 10ஆம் நூற்றாண்டாகலாம். அடுத்தவர் இடைக்காலப் பட்டினத்தார் இவர் அருளிய பாடல்கள் 203. இவர் காலம் 14ஆம் நூற்றாண்டாகாலாம். அடுத்தவர் பிற்காலப் பட்டினத்தார் இவர் அருளிய பாடல்கள் 246 . இவை பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற 19ஆம் நூற்றாண்டுத் திரட்டு நூலில் சிவ–வாக்கியர் பாடலை அடுத்து விளங்கக் காணலாம்.

மூன்றாவது பட்டினத்தார் பாடல்கள் இந்த நூலில் இடம்பெறவில்லை. முதல் இரண்டு பட்டினத்தார்களின் பாடல்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பத்தாம் நூற்றாண்டினராகிய பட்டினத்தார் பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வாழ்ந்தவர். தமிழ், வடமொழி, இரண்டிலும் மிக்கத் தேர்ச்சியுள்ளவர். கடல் வாணிகம் மூலமாகப் பெரும் பொருள் திரட்டி மன்னரும் மதிக்கத்தக்க பெரும் செல்வராக விளங்கினார். கற்ற கல்வியின் பயனாலும் அறவோர் உறவாலும் அனைத்தையும் துறந்து என்றும் சிவநெறி பற்றி ஒழுகிக் கைப்பிச்சை ஏற்று முற்றும் சிவனாருக்கு உரியராய் விளங்கி அவனருளாலே வீடுபேறுற்றார்.

பட்டினத்தார் பட்டணத்தார் பட்டினத்தடிகள் பட்டினத்துப் பிள்ளையார், பட்டணசாமி வெண்காடர் திருவெண்காடர் என்றெல்லாம் இவர் குறிப்பிடப் பெறுகின்றார். திருவிடை மருதூர் மும்மணிக்கோவையின் கடைசிப் பாடலில் தம் பெயரை வெண்காடன் எனக் குறித்ததால் வெண்காடர் என்பதே இவர் தம் இயற்பெயர் எனக் கருதலாம்.

இவர் நாட்டுக்கோட்டை நகரத்தார் குலத்தினர். நூலுள் காணப்படும் சில சொற்கள் இவர் நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பினர் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. நகரத்தார் காலத்தில் இளையாத் தங்குடிக் கோவிலில் அரும்பார்க்கிளையார் என்ற பிரி வினர் பட்டினத்தார் வழி வந்தவர்கள். ஆனதால் பட்டினத்தார் காலத்துக்குப் பின்னர் தங்களுக்கு

அரும்பார்க்கிளையரான பட்டணச்சாமியார் என்று கோத்திரப்பிரிவு சூடிக்கொள்வராயினர்.

பட்டினத்தாரைப் பற்றி வழங்கும் கதையைச் சுருக்கமாகக் காண்போம்.


பட்டினத்தார் சோழமண்டலத்தில் காவிரிப் பூம்பட்டினத்தில் பெருங்குடி வணிகர் மரபில் தோன்றினார். நல் வாணிகம் செய்து செல்வத்தைக் குவித்தார். மணம் ஆகிப் பல காலம் சென்றும் பிள்ளையில்லாக் குறையால் வருந்தினார். திருவிடை மருதூர் இறைவனான மருதவாணர் ஒரு குழந்தை வடிவில் ஒரு வில்வ மரத்தடியில் கிடக்க அதைக் கண்டெடுத்த ஏழைப் பிராமணர் ஒருவர் சில நாள் தம் வீட்டில் வளர்த்தார். பின்னர் பட்டினத்தாரிடம் நிரம்பிய பொருள் பெற்றுக்கொண்டு குழந்தையைக் கொடுத்துவிட்டார். அக்குழந்தைக்கு மருதவாணன் என்று பெயரிட்டுப் பட்டினத்தார் மிகச் சிறப்பாக வளர்த்து வந்தார். மருதவாணன் பதினாறு வயது வந்ததும் ஒருநாள்

**காதற்ற ஊசியும் வாராது**
**காணும் கடைவழிக்கே**

என்ற சொற்றொடர் எழுதிய ஓர் ஓலை நறுக்கை ஒரு பெட்டியில் வைத்துத் தந்தையிடம் சேர்ப்பிக்கும்படி தாயாரிடம் கொடுத்துவிட்டு எங்கோ சென்றுவிட்டார்.


பட்டினத்தார் வந்ததும் அதை வாங்கிப் பார்த்தார். அதுவே அவருக்கு மெய்யறிவு உணர்த்துவதாக அமைந்தது. உடனே இவர் இதுகாறும் தம்மிடம் வளர்ந்தவர் திருவிடை மருதூர்ப் பெருமானான மருதப்பரே என்று தெளிந்தார். அந்த விநாடியே பரஞானம் உற்றுத் தம்பால் கணக்கராக இருந்த நாங்கூர்ச் சேந்தனாரை அழைத்துத் தம் பொருள் முழுவதையும் ஏழை எளியவர்கட்கு வாரி வழங்கும்படி கூறிவிட்டுக் கோவணத்தோடு வீட்டை விட்டு வெளியேறித் துறவறம் மேற்கொண்டு பிச்சை ஏற்று சித்தமலமற்றுச் சிவனடிக்கே ஆளாகி வீடு பேற்றை எதிர் நோக்கியிருந்தார். தம் தாய் காலமான பொழுது வாழை மட்டையில் உடலைக் கிடத்தி ஞானா க்கினியால் பஸ்மம் ஆகச் செய்தார். துளுவநாட்டு மன்னன் இவர்களுக்குச் சிஷ்யனாகிப் பத்திரகிரி என்ற பெயர் பூண்டு இவர் அருள் பெற்றுத் திருவிடை மருதூரில் வீடு பேறடைந்தான். இவர் அதன் பிறகு பல்வேறு தலங்கட்கும் சென்று இறுதியில் திருவொற்றியூர் சேர்ந்து அங்குக் குழந்தைகளுடன் கூடி ஆடித்திரிந்து வீடுபேற்றிற் குரிய நாள் வரவே அன்று சிவாசாயுஜ்ய பதவியை அடைந்தார். இவருடைய பள்ளிப்படை கோயில் திருவொற்றியூரில் இன்றும் சிறந்து விளங்கக் காணலாம்.

இவர் தாயாரின் பெயர் ஞானக்கலை என்றும் தந்தையார் பெயர் சிவநேசர் என்றும் மனைவியார் பெயர் சிவகலை என்றும் சொல்லப்பெறுகின்றன.



நான் உங்கள் அனைவரையும் நேசிக்கிறேன். ஏனென்றால நீங்கள் இறைவனின் குழந்தைகள். பெருமைமிக்க முன்னோர்களின் வாரிசுகள்.

--சுவாமி விவேகானந்தர்



# கலசம் சஞ்சிகையூடு கருத்துப் பரிமாறல்

## கலசம் தந்த சிந்தனை

நான் போனால் நான் வருவேன் என்றெடுத்துக்
கலசத்தால் அமுது வார்த்தீர்
தேன்போலும் தெள்ளுதமிழ்த் தேவாரப்
பக்தி மொழி பகர்ந்தீர்.
நான்போகத் தானேஇவ் வுலகில்
நமைப் படைத்த நான்முகனும்
ஊன் படைத்தே அதற்குள்ளே உயிரும்ஊட்டி
உலவ விட்டான்.

வானாளும் வள்ளுவனும் இவ்வுலகில்
வாசுகியை மணந்துகாட்டித்
தேனாரும் திருக்குறளால் திசையளந்தான்
இறுதியிலே தெய்வமானான்.
வானாடர் காணாத இன்பவாழ்வை
வாழ்வாங்கு வாழ்ந்துநீர் பெறுக என்றான்
ஆனாலும் என்னபயன்? ஆர்கேட்டார்?
அவருரையை, அந்தோ! அந்தோ!

கலசத்தால் வார்க்கின்றீர் அமுதபானம்
காசினியோர் கேட்கின்றார் காமகானம்
விலகித்தான் போகின்றார் மனிதவெள்ளம்
வியப்பதற்கோ ஏதுமில்லை விதியின் கோலம்
உலகத்தீர், உமக்கொன்று சொல்லக் கேண்மின்!
ஒன்றேதான் பரம்பொருள், ஒன்றேதான் மனிதகுலம்.
கலகத்தார் மானிடர்கள் காதால் கேட்பர்
கருத்தினிலே கொளமாட்டார் கடிதினிலேஎலாம் மறப்பர்

குறிஞ்சி நிலம் இந்தநிலம், குடிப்பதற்கும்
கூடியாடி ஊடுதற்கும் ஏற்றநிலம்
அறிந்ததினால் ஆன்றோர் அன்றுகூடலும்
கூடல் நிமித்தமுமே குறிஞ்சி யென்றார்
செறிந்திங்கு வாழுகின்ற செந்தமிழர்தாமும்
சேர்ந்ததன் வண்ணமதாய்த் திரிந்து வாழ்தல்
அறிந்திட்டேன், என் செய்வேன், ஆச்சரியத்தால்
வாய் பிளந்திட்டேன், இல்லை, இல்லை.

**—ஆர். வி. லக்ஸ்மி பி.ஏ**

கலசம் ஆசிரியர் அவர்களுக்கு!

## பெண்கள் பஞ்சபுராணம் பாடலாமா?

1. சக்தி இல்லையேல் சிவம் இல்லை. சிவம் இல்லையேல் சக்தி இல்லை என்கிறது சைவசமயம். அதுமட்டுமல்ல சிவபெருமானே தனது உடம்பில் சரிபாதியை உமாதேவியாருக்குக் கொடுத்து அர்த்தநாரீஸ்வரர் என்ற பெயருடன் விளங்குகின்றார்.

2. திருநாவுக்கரசு நாயனார்க்குச் சமயதீட்சை அளித்ததுவும்
விதவையாகிய திலகவதியார் என்னும் பெண்தான்.

3. பாண்டிய நாட்டிலே சமணசமயம் வளர்ந்து வந்த நேரத்தில் சைவசமயத்தை வளர்ப்பதற்காகச் சம்பந்தரை வரவழைத்து பாண்டிய மன்னனையும் மற்றும் மக்களையும் மீண்டும் வரவழைத்ததுவும் மங்கையர்க்கரசி என்னும் பெண்தான்.

4. சிவனடியார்களுக்கு முதலில் அமுது படைத்த பின் தான், தாங்கள் உணவு உட்கொள்ளுவதை வழக்கமாகக் கொண்டு வந்த சிறுத்தொண்ட நாயனாருக்கும் பெருமையை தேடிக் கொடுத்ததும் பெண்தான். எப்படி என்றால் வந்த சிவனடியார் கேட்டதற்கிணங்க பிள்ளைக்கறிசமைத்து, இன் முகத்துடன் சிவனடியாருக்கு உணவு பரிமாறியதன் மூலம்.

5. அப்பூதி அடிகளின் மனைவியும் தன் ஒரே ஒரு மகன் இறந்து கிடக்கவும், மகனைப் பாயால் சுற்றிக் கொல்லைப்புறத்தில் வைத்து விட்டு, திருநாவுக்கரசு நாயனாரை வரவேற்று இன்முகத்துடன் உணவு பரிமாறினார். இப்படிக் கணவன் கொண்ட சமயப்பற்றின் காரணமாக அவர்வழி நின்று கணவருக்குப் பெருமை சேர்த்தது மட்டுமன்றிச் சைவசமயத்திற்கும் பெரும் தொண்டாற்றினார்.

6. அறுபத்து மூன்று நாயன்மார்களில் காரைக்கால் அம்மையாரும் ஒருவர். காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்து இருக்க மற்றைய நாயன்மார்கள் அனைவரும் நிற்பதாகத்தான் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. தாய் இருப்பதாகவும் பிள்ளைகள் நிற்பது போலவும்.

7. சூரியபகவானையே உதிக்காமல் நிற்பாட்டி

வைத்ததுவும், நளாயினி என்னும் பெண்தான்.

8. காலதேவனுடன் போராடிக் கணவனின் உயிரை மீட்டுக் கொண்டு வந்ததுவும் சாவித்திரி என்னும் பெண்தான்.

9. மன்னன் அநீதிவிளைவித்து விட்டான் என்பதற்காக, மன்னனோடு வாதிட்டு நீதியை நிலை நிறுத்தியது மல்லாமல், அக்கினி தேவனைக் கூப்பிட்டு, மதுரையை எரிப்பித்ததுவும் கண்ணகி என்னும் பெண்தான்.

10. இன்று எம் மக்கள் மட்டுமல்லாமல், பிறமதத்தவர்கூட உதாரணங்கள் கூறும்போது திருக்குறளையே கூறுகின்றார்கள். இந்தத் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் குறளைச் சங்கத்தமிழ் அவையில் சமர்ப்பித்த பொழுது சபையினர் அனைவரும் புறக்கணித்தனர், பின்பு சங்கத் தமிழ் அவையில் வாதிட்டுப் பொற்றாமரைக் குளத்தில் திருக்குறள் இட்டு எம்பெருமானைக் கொண்டு மிதக்க வைத்து இப்பெரிய அரிய நூலை எங்கள் முன் கொண்டு வந்ததும் ஔவையார் என்னும் பெண்தான்.

11. மகா கும்பாபிஷேகம் நடைபெறுமுன் எண்ணை காப்பு சாத்தும் வழக்கம் இருக்கின்றது. அனைத்து விக்கிரகங்களையும் தொட்டு மூலஸ்தான விக்கிரகத் தையும் பெண்களும் தொட்டு எண்ணைக் காப்புச் சாத்தலாம்.

12. கோவில் திருவிழாக் காலங்களில் சுவாமி எழுந்தருளி வீதி வலம் வரும் பொழுது, அந்தணர் சுவாமிக்கு முதலில் காட்டும் தூப தீபத்தை ஒரு பெண்ணிடம் கொடுத்து, அந்தப் பெண் தூப தீபத்தை முன்னே கொண்டு செல்ல சுவாமியே அந்த ஒளியில் பின்னே வருகிறார்.

13. இன்றும் கோவில்களில் சைவசமயத்தைப் பற்றிய விரிவுரைகளைப் பெண்களும் சொல்லி வருகின்றனர். அதுமட்டுமல்ல பாடசாலைகளில் பெண் ஆசிரியர்களும் பாடத்தைப் போதித்து வருகின்றனர்.

14. இன்னும் நம்நாட்டில் இத்தனை போர்ச்சூழல் மத்தியிலும் சைவசமயத்தையும், தமிழையும், கலாசாரத்கையும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வசந்தா வைத்தியநாதன் போன்ற பெண்களும் முன்னின்று கட்டிக்காத்து வருகின்றார்கள். அதுமட்டுமல்ல தமிழ் மக்கள் எங்கெங்கு மேலை நாடுகளில் வாழ்கின்றார்களோ அங்கு எல்லாம், எம் இளையதலை முறையினருக்கும் சைவசமயத்தில் உள்ள ஐயப்பாடுகளை விளக்கி விரிவுரை செய்து வருகின்றனர்.

15. இன்று சைவசமய உலகில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளை ஒரு சமய குரவர் போன்று போற்றுகின்றார்கள்.

அவர் எம்கண்முன்னே வாழ்ந்தவர். அதுமட்டுமல்ல எந்த ஒரு சமய விரிவுரையாளரும் உதாரணம் கூறும் பொழுது வாரியார் சுவாமிகள் அப்படிக் கூறினார் என்றுதான் கூறுகின்றார்கள்.

வாரியார் சுவாமிகள் பெண்கள் பஞ்சபுராணம் பாடலாம் என்று கூறியிருக்கும் போது, இப்படி ஒரு கேள்வி கலசத்தில் தேவைதானா? பெண்களும் பஞ்சபுராணம் பாடலாம் என்பதில் ஐயம் வேண் டாம்.

**– இராசநாயகம் சுந்தரதாசன்.**



# கலசம் தடுமாறுகிறதா?

கலசம் இதழ் மணி 5 ஒலி 23 இல் (ஆடி, ஆவணி, புரட்டாசி) ஆசிரியர் தலையங்கத்தில் தமிழிற் பற்று இருக்கவேண்டும் வெறி இருக்கக் கூடாது என்று அச்சிடப்பட்டுள்ளதானது கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று விரும்பிக் கூறிவருவோரை இடித்துரைத்து எழுதப்பட்டுள்ளது போல் தோன்றுகிறது. இதே கருத்தை எந்த மொழி மீதும் பற்று இருக்கலாம் ஆனால் வெறி இருக்கக் கூடாது என்று வெளிப்படுத்தியிருக்கலாம். பூசை செய்யும் மொழி விவாதத்துக்குரியதாக்கப்படுகின்றது என்று அதே ஆசிரியர் தலையங்கத்தில் பிறிதோர் இடத்தில் குறிப்படப்பட்டுள்ளது. மொழி, மாந்தரின் எண்ண வெளிப்பாட்டைப் பிறர்க்கு உணர்த்தப் பணன்படுத்தப்படும் கருவியே அன்றி வேறன்று. இறைவனுக்கு எல்லா மொழிகளும் தெரியும். இறைவன் நம் தந்தை— அம்மையப்பன் என்றால் பிள்ளைகளாகிய நாம் எப்படி அழைத்தாலும் செவி மடுப்பார். இதனாலேயே தாயுமானவ அடிகளார் கண்ணில் காண்பதுதான் காட்சி, கையால் தொழில் பண்ணல் பூசை, பகர்தல் மந்திரம்.. . . . என்று நாம் மொழிவதெல்லாமே இறைவனைப் பூசித்துத் துதிபாடிப் போற்றுவதான மந்திரம் எனப்பகன்றார். இறைவனை எந்த மொழியிலும் பூசிப்பவர் விருப்பத்திற்கிணங்கப் போற்றி அர்ச்சனைசெய்யலாம். ஆனால் அப்படிப் பூசிக்கும் மொழி அவரவர் தாய்மொழியாக இருந்தால் சொல்லும் மந்திரத்தின் பொருளுணர்ந்து மனம், மொழி, மெய்யால் இறைவனோடு ஒன்றி வழிபடலாம்.

இன்று கோயிலுள்ள ஊரில் குடியிருப்பது ஆபத்து என்று நினைக்குமளவுக்கு. . . . .என்று எழுதியிருப்பதும் முறையானதாகத் தோன்றவில்லை. முன்பெல்லாம் கோயில்கள் ஓர் ஊரில் வாழும் குடிமக்கள் ஒன்று கூடும் இடமாகவும், வழிபடும் தலமாகவும், ஏழை எளியோர்க்கு உணவு புரக்கும் அறச் சாலையாகவும், கவின் கலைகளைப் பயிற்றுவித்து வளர்க்கும் நிலையமாகவும், இளையோர்க்குக் கல்வி புகட்டும் பள்ளியாகவும் நோய் தீர்க்கும் மருத்துவசாலையாகவும் இயங்கிவந்தன என்று தமிழ்நாட்டிலுள்ள திருவொற்றியூர்க் கோயில் கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆனால், இன்றோ பெரும்பான்மையான கோயில்களில் பணவசதி படைத்தோரும், செல்வாக்குடையோருமே மதிக்கப்படுகிறார்கள்.

(காசேதான் கடவுளடா, அது அந்தக் கடவுளுக்கும் தெரியுமடா! –திரைப்படப் பாடல்) என்றாலும், மக்கள் கோயிலுக்குப் போவதால் அவர்களுக்கு ஆபத்து எதுவும் ஏற்படப்போவதில்லை.

கோயில் வழிபாடு பற்றியெல்லாம் இளந்தலைமுறையினர், வருங்காலத் தலைமுறையினரை மனதிற்கொண்டு நன்கு எண்ணிப் பார்க்கவேண்டும். அவசியமானால் சில திருத்தங்களைச் செய்வது அறிவுடமையாகும். கோயில்களில் இறைவனை மனமொன்றி வழிபடுவதினும் சடங்குகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாகப் பலர் கருதுகிறாரர்கள். எடுத்துக்காட்டாக நவக்கிரகப்பூசை! நவக்கிரகங்களில் ஒன்றான சந்திரனில் 1969இல் நீல் ஆம்ஸ்ட்ராங் என்ற அமெரிக்கர் காலடிபதித்துவிட்டார்: ஆனால் நாம் இன்னமும் சந்திரனுக்கு ஓர் உருவச்சிலையைக் கோயிலில் வைத்து பூசை செய்கிறோம். நம் பிள்ளைகள் சந்திரனில்தான் ஆம்ஸ்ராங் இறங்கி அதன் புனிதத்தன்மையைக் குலைத்துவிட்டானே! அதை ஏன் நாம் வழிபடவேண்டும் என்று வினவினால், நாம் என்ன மறுமொழி சொல்லப் போகிறோம்? மந்திரங்கள் பற்றிய சில முக்கிய குறிப்புகள் என்ற கட்டுரையில் திரு சிவசம்பு ஸ்ரீஸ்கந்தன் எல்லா மொழிகளுக்கும் சமஸ்கிருதம்தான் ஆதிமூல ஆதார மொழி (பக்கம் 37) என்றும் சமஸ்கிருதம்தான் எல்லா மொழிகளுக்கும் வாழ்வளித்த மூலமொழி— ஆதிமூலமொழி (பக்கம்38) என்றும் குறிப்பட்டுள்ளார். சமஸ்கிருதம் ஜனங்களுக்கு இடையே பேசப்படாததற்குக் காரணம் அதன் தூய்மையைக் காக்கவே என்று அறிவோம். இப்போது பேச்சுவழக்கில் இருக்கும் மொழிகள் யாவற்றிலும் (தமிழ் மொழி உட்பட) பாவம் புகுந்தது சகலரும் ஒத்துக்கொள்ளப்பட வேண்டிய உண்மை. சமஸ்கிருதத்திலும் பாவம் புகுந்துவிடாமல் இருப்பதற்கேதான் அப்பாஷை பேச்சுவழக்கில் இருந்து அருகியது என்று எழுதியுள்ளது உண்மையல்ல. தமிழ் போன்ற திராவிடமொழிகளுக்கும் (தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவை கணிசமான அளவில் வடமொழிச் சொற்களை ஏற்றிருப்பினும், இலக்கண அடிப்படையில் தமிழைப் போலவே உள்ளன. தமிழ், வடமொழி போன்ற பிறமொழிகளின் துணை இன்றித் தனித்தியங்கும் தன்மையை மறைமலை அடிகளார் ஐயம் திரிபர நிறுவியுள்ளார்). இலத்தீன், கிரேக்கம், அராபிய மொழி, ஆபிரிக்க மொழியான சுவாஹிலி, சீனம், ஜப்பானிய மொழிகளுக்கெல்லாம் சமஸ்கிருதம் மூலமொழி அல்லவே அல்ல. மக்களின் பேச்சு வழக்கில் இல்லாதமொழி செத்தமொழி என்பர் அறிஞர். மொழிகள் எப்படிப் பாவம் செய்ய இயலும்? தவிரவும்,

திரு சிவம்பு ஸ்ரீஸ்கந்தன் சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலிருந்து அருகியது என்று ஒத்துக்கொள்கிறார். அதன்படிப் பார்த்தால் சமஸ்கிருதம் கொஞ்சம் பாவம் செய்த மொழி என்றாகிறது!

யாழ்ப்பாணம் நல்லூர் ஞானப்பிரகாச அடிகளாரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பேராசிரியர் தேவநேயப் பாவாணரும் தமிழே உலக முதன்மொழி உலக மொழிகளுக்கெல்லாம் தமிழே மூலத் தாய்மொழி என்று தக்க சான்று, எடுத்துக்காட்டுக்களுடன் நூற்கள் எழுதி வெளியிட்டுள்ளனர். பேராசிரியர் வி. கோ, சூரியநாராயண சாஸ்திரி என்ற பார்ப்பன அறிஞர், வடமொழி (சமஸ்கிருதம்) முகம், வாய் போன்ற சொற்களைத் தமிழிலிருந்தே பெற்றது என்று தக்க ஆய்வுகளுக்குப் பின் தம் நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார் (வடமொழிக்கு வாய் இல்லை– கவிஞர் கண்ணதாசன் கூற்று). இந்திய மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தின் அதிகாரத்துவ ஆட்சிமொழி சமஸ்கிருதம் என்று தெரிகிறது. ஆகவே அங்கு மக்கள் சமஸ்கிருதத்திலேயே பேசியாக வேண்டும். மக்களால் பேசப்படும் எம்மொழியும் பாவ வயப்பட்டது என்ற திரு சிவசம்பு ஸ்ரீஸ்கந்தன் கூற்றுப்படிப் பார்த்தால் சமஸ்கிருதம் (தமிழைப் போலவே) பாவமான மொழி என்றாகிறது!

எந்த மொழியும் பாவம் செய்த மொழி அல்ல என்பதை முன்பே கூறினோம். மக்கள் தாம் விரும்பிய எந்த மொழியிலும் மந்திரம் சொல்லி இறைவனை வழிபடலாம். சிவனார் தம் கையிலேந்திய உடுக்கைத் தட்ட, அவ்வுடுக்கின் ஒரு புறத்தில் எழுந்த ஓசையைச் செவிமடுத்து அகத்தியர் தமிழ் மொழியையும், மறுபுறத்திலிருந்து எழுந்த ஒலியைக் கேட்டுப் பாணினி சமஸ்கிருதத்தையும் உருவாக்கினர் என்பது பழங்கதை (இவர்கள் இருவரும் முறையே தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் புதுக்கினர் என்பதே உண்மை). மக்களாலேயே மொழி உருவாக்கப் பெற்றுப் பயன்படுத்தப் படுகிறது என்பது மொழியறிஞர் கூற்றாகும்

அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன என்று கட்டுரைத்த திரு. க. உமாமகேஸ்வரனுக்கு அவர் விரும்பியவண்ணம் கனவு காணும் உரிமையுண்டு. ஆனால், ஆறுமுக நாவலர், திருஞானசம்பந்தர், அப்பரடிகள், சேக்கிழார் பெயர்களில் அவர்களுக்கு இணக்கமில்லாத கருத்துகளைக் கனவு என்ற பெயரில் புனைந்துவைத்திருப்பது சால்புடைய செயலன்று. ஆறுமுக நாவலர் தமிழில் மீது பிறமொழி ஆதிக்கம் எந்த வகையில் திணிக்கப்பட்டாலும் அதை எதிர்த்துப் போராடியவர். ஆங்கிலேயர், சைவர்களின் பல தெய்வ வழிபாட்டினைப் பழித்து, அவர்களைக் கிறித்தவர்களாக ஆக்க முயன்றதை எதிர்த்து அவர்களை முறியடித்தார். கோயில் தோறும் ஓதுவார்களை நியமித்துத் திருமுறைகளை ஓதச் செய்தவர். அவர் தமிழில் அரச்சனை செய்யவேண்டுமென்று கோரவில்லை என்று சுட்டினால் அவர் வடமொழி அரச்சனையை வலியுறுத்தினார் என்றாகிவிடுமா? அரச்சனை வடமொழியில் மட்டுமே நிகழவேண்டும் என்று எங்காவது எழுதியிருக்கிறாரா?

திருஞானசம்பந்தர், உமையாளின் திருமூலைப் பாலை அருந்தும் அரிய பேறு வாய்க்கப்பெற்றவர். அவரது தந்தை பால்தந்தது யார்? என்று வினவியபோது (தேவமொழி எனப்படும்) வடமொழியில் பாடாது தோடுடைய செவியன் என்று தமிழில் பாடினார். அவர் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கச் சமணர்களோடு சொற்போர் நிகழ்த்தியபோதும் மந்திரமாவது நீறு என்று தமிழில்தான் பாடி இறையருள் பெற்றுப் பாண்டியனின் வெப்புநோய் தீர்த்து வாகைசூடினார்.

திருமறைக் காட்டில் (வேதாரணியம்) சமணர் சமஸ்கிருத மொழி மந்திரம் சொல்லி அடைத்த கோயில் கதவைத் திருநாவுக்கரசர் (வடமொழி நன்கறிந்தவர்) தமிழிற் பாடித் திறந்தார். அவர் பயன்படுத்திய ஆரியன் என்னும் சொல் சிலருக்கு மயக்கம் தந்ததைப் போல் தோன்றுகிறது. எளிய அகராதி ஆரியன் என்ற சொல்லுக்கு (1)மதித்தற்குரியவன், தலைவன் (2)ஆசிரியன், புலவன் (3)ஐயனார் (4)ஆரிய நாட்டான் (5)கழைக்கூத்தன் என்று பலபொருள் தருகிறது. எனவே, ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் என்ற தொடர் இறைவன் ஆசிரியன், தலைவனாகவும் இருக்கிறான், தமிழனாகவும் இருக்கிறான் என்றே பொருள் தரும். அந்தணன் என்ற சொல்லும் (1)சிவபெருமான், (2)முனிவன் (3)பிரமன் (4)சனி (5)வியாழன் (6)இரக்க(அருள்) உணர்வுமிக்க அழகியவன் (7)பாரப்பனன் எனப் பலபொருள் தரும். இதையே திருவள்ளுவர் விளக்கமாக

**அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான் (குறள் 30)**

என்று கூறினார். பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்ததால் மட்டும் எவரும் அந்தணர் ஆகிவிடமுடியாது. ஆறுமுக நாவலரும், இராயப்பேட்டை முனிவர் என்று மக்களால் மதித்துப் போற்றப் பெற்ற திரு. வி. கலியாணசுந்தரனாரும் அந்தணர்களே. தாழ்த்தப்பெற்ற குடும்பத்தில் பிறந்தும் பக்தியில் எவருக்கும் சளைக்காத சுந்தரனாரும் ஒரு அந்தணரே!

முப்புரிநூலென்னும் பூனூலைப் பூணும் உரிமை பார்ப்பனர்களுக்கே மட்டுமே உரியதென்று எண்ணுதல் சரியன்று. பொற்கொல்லர். கொல்லர், தச்சர், பானை வனையும் குயவர் போன்றோரும் முப்புரி நூலெனும் பூணூலை அணிகின்றனர். அவர்கள், தாங்கள் மேலுலக இந்திரலோகத் தச்சர்– பொறியாளரான விசுவ கர்மாவின் வழித்தோன்றல்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். கோமுட்டிச் செட்டியார்களெனும் வணிகர்களும் பூணூல் அணிகின்றனர். ஒன்பதாம் நூற றாண்டில் வைணவ சமயத்துக்குப் புத்துயிர் ஊட்டிய இராமானுஜர் பல தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பூணூல் அணிவித்துப் பாரப்பன வைணவராக்கினார். அவர் களின் வழித்தோன்றல்கள் இன்றளவும் தமிழ்நாட்டு வைணவக்தோயில்களில் குருக்களாகப் பணியாற் றுகின்றனர். **பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே** என்றும், **போராசைக் காரனடா பார்ப்பான்!** என்றும் பாடிய மகாகவி பாரதியார் தம் புரட்சிப் பங்களிப்பாகத் தன் சீடரான ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு முறையாக வேள்விசெய்து பூணூல் அணிவித்துப் பிராமணர் ஆக்கியதாகத் தமிழ்நாட்டு இதழில் படம், விளக் கங்களோடு கட்டுரை வெளிவந்தது.

அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் என்று சிவபெருமான் தம் அன்பரான சுந்தரரிடம் பணித்த செய்தியைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் எழுதியுள்ளதைத் திரு உமாம கேஸ்வரனே (பக்கம்53இல்) சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், அது சுந்தரரின் பாடல் சிறப்பைப் புலப்படுத்திய கூற்று என்று வீண்வாதம் செய்கிறார்.


திருமுறைகளை அரச்சனைக்குப் பயன் படுத்த வேண்டும் என்றால் முதலிலே திருமுறைகளிலே நிரம்பிய புலமை வேண்டும் அது இருக்கிறதா இவர்களுக்கு? என்று ஞானசம்பந்தர் கூறுவதாகத் திரு உமாமகேஸ்வரன் (பக்கம் 51இல்) எழுதியுள்ளார். சமஸ்கிருதத்திலே அர்ச்சனை செய்கிறோமே, அந்த சுலோகங்களுக்கு என்ன பொருள் என்று நமக்குப் புரிகிறதா? கோயில்களில் அர்ச்சனை செய்யும் சில குருக்களுக்கே அவற்றின் முழுப்பொருளும் தெரியா தென்று சொல்லப்படுகிறதே! எடுத்துக்காட்டாக, இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபோது அதன் மூத்த அதிகாரிகளில் ஒருவர் யாழ்ப்பாணம் கோயில் ஒன்றுக்குச் சென்று அரச்சனை செய்யச் சொன்னாராம். வடமொழியில் புலமையுள்ள அவருக்குக் குருக்கள் செய்த அர்ச்சனையின் சில சொற்கள் விளங்கவில்லை. அவற்றுக்கு என்ன பொருள் என்று அவ்வதிகாரி குருக்களை வினவ குருக்கள் சரியான பொருள் தமக்குத் தெரியாதென்றும் மந்திரங்களைத் தம் தந்தையாரிடமிருந்து கற்றதாகவும் கூறினாராம். பின்னர் அந்த அதிகாரி, குருக்களிடம் மந்திரங்களின் சரியான உச்சரிப்பையும் அவற்றின் பொருளையும் விளக்கி கூறினாராம். இஃது உண்மையாக நடந்த நிகழ்ச்சி தானென்றாலும் எல்லாக் குருக்களுக்கும் சமஸ்கிருத மந்திரங்களுக்கு உண்மையான பொருள் தெரியாதென்று எண்ணிவிடக் கூடாது.

சைவத் திருமுறைகளிலே நிரம்பிய புலமையுடைய திரு உமாமகேஸ்வரன் இங்குள்ள கோயில்கள், தமிழ்ப் பள்ளிகளின் வழியே இளந்தலைமுறையினருக்குப் மற்றோர்களுக்கும் திருமுறைகளை முறைப்படி கற்றுத்தரவேண்டும். ஆனால், அவரோ சிவனார் அருளிய தமிழில் அர்ச்சனை செய்வதானால் சிவனையும், திருமுறைகளையும் வீசிவிடவேண்டி யதுதான். வேறு வழி? என்கிறார். (இதை எப்படிக் கலசம் ஆசிரியர் பிரசுரித்தார் என்பது என் கேள்வி!)

நம் தந்தை– தாயாகிய இறைவனை நாம் விரும்பும் மொழியில் எவரது வழிகாட்டலுமின்றிக் கருவறைவரை சென்று பூசை செய்யவேண்டும் என்ற எண்ணம் பரவலாகப் பலருக்கு முகிழ்ந்துள்ளது.

**–அரங்க முருகையன், இலண்டன்–**

33



# தமிழர் சமய சீர்திருத்தங்கள்

சமய ஆராய்ச்சிசெய்து சமயநெறி ஒழுக விரும்பும் தமிழர் தமிழ்ச் சமயப்பகுதிகளாகிய சைவ வைணவ நெறிக ளுக்கு அடிப்படையாய கொள்கைகளைத்

**திரு கா சுப்பிரம்ணிய பிள்ளை அவர்களால் 1940ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது .**

கொள்ளவேண்டும்.

தேவார திருவாசகங்களுள்ளும் திருவாய் மொழியின் கண்ணும் அவையே பலவகையாகப் பேசப்பட்டிருத்தல் காணப்பெறும். அவற்றை மனதில் வைத்துக் கொண்டால் அவற்றிற்கு மாறாய கருத்துக்களைக் கூறும் நூல்களையும் புராணங்க ளையும் பிரமாணமாக நாம் கொள்ளமாட்டோம்.

மெய்ந்நூற் கருத்துக்களை விளக்கும் வழிபாட்டு முறைகளை நாம் தழுவிக் கொள்ளவேண்டும். இப்பொழுது உள்ள கோயில்களிற் கையாளப்பட்டுவரும் வழிபாட்டுமுறைகளை வழிபடுவோர்கள் யாவருக்கும் விளக்கத்தக்க நூல்கள் வெளியிடப்படவேண்டும், சொற்பொழிவாளர்களும் நியமிக்கப்படவேண்டும்.

கோயில்களின் மூலத்தானங்களையும் பிற இடங்களையும் எப்பொழுதும் புனிதமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். **கிறிஸ்த்துவக் கோயில்களும் முகம்மதியப் பள்ளிகளும் மனங்கவர் புனிதத்தோடு விளங்குதல்போல் நம்முடைய ஆலயங்கள் தூய்மையோடு திகழ்வதில்லை.** எண்ணெய்ச் சிக்கினால் மாசடைந்து அழுக்கு மிகுதற்கு இடமாயுள்ள பகுதிகளை நாள்தோறும் சுத்தம் செய்யவேண்டும். **மூலத்தானங்களில் திருவடிவங்களைக் குருக்கள்மார் தூய்மையாக வைப்பதில்லை. ஆறு காலத்திலும் எண்ணெயையும் தண்ணீரையும் கொட்டி வழுக்கும் அழுக்கும் சேருமாறு செய்துவிடுகிறார்கள், இதை அறநிலையத் தலைவர்கள் ஒருசிறிதும் கவனிப்பதில்லை.** ஆறுகாலத் திருமுழுக்கைப்பார்க்கிலும் இருகால ஒருகால நீராட்டே போதுமானது. எண்ணெய் அழுக்கினைச் சீயக்காய், நெல்லிப்பருப்பு, மாக்காப்பு, மஞ்சட்காப்பு முதலியவற்றால் போக்கித் திருவொற்றாடையினால் திருவடிவங்களையும் இடங்களையுந் துடைத்துத் துப்புரவு செய்யவேண்டும். விளக்குகளை நாள்தோறும் துடைத்து அவற்றில் தூய்மையான திரியிடல் வேண்டும்.

நித்திய வழிபாட்டில் அறிவுக்குப் பொருத்தமான நெறிச் செயல்களைக் கோயில் வரும்படிக்குத் தக்கபடி செய்வித்தலே நலம். ஒருகாலத் திருமுழுக்கு நிவேதனம் முதலியன செய்வதற்கு மாத்திரம் பணம் இருக்கும் கோயில்களில் ஆறுகாலப் பூசை நிகழ்த்த வேண்டியதில்லை. நித்திய பூசைக்கு மாத்திரம் வரும்படி உள்ள கோயில்களில் திருவிழாக்களுக்காகப் பணம் செலவிடக்கூடாது. ஒரு திருவிழாவே நடத்தக்கூடிய வருவாய் உள்ள கோயில்களில் பல திருவிழாக்கள் நடாத்துவித்தல் மிகையாகும்.

அர்ச்சனை செய்வதென்பது சிறப்பான காலங்களில் ஒழுங்காக நடைபெற வழியில்லை. ஆதலின் கால எல்லைக்குள் செவ்வையாக நடத்தக்கூடிய அர்ச்சனைகளை மாத்திரம் செய்ய இடம்கொடுத்தல் வேண்டும். பத்துத் திருப்பெயர்கள் சொல்லக்கூடியநேரத்தில் ஆயிரம் பெயர் சொல்லி மலர் தூவுவதாகப் பாசாங்கு செய்வதற்கு இடம் இருத்தல் கூடாது. வழிபடுபவர்கள் இதனை நன்றாகச் சிந்தித்துத் தங்கள் பணத்தைக் குறைவாகச் செலவிடவேண்டும். **அர்ச்சனைகளைத் தமிழர்கள் கோயில்களில் தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். பொருள் விளங்காத மொழியில் இறைவனை வாழ்த்துவதிலும் தமிழில் நாமம் சொல்லி மலர் தூவிப் போற்றுதலே வழிபடுவார்களுக்கு அன்பு பயக்கும்.**

பூசை முறைகளைத் தமிழிலே எழுதுவித்துப் பூசைகளைத் தமிழில் நடத்த அர்ச்சகர்களைப் பழக்குதல் வேண்டும். கிரியைகளின் கருத்தை விளக்கும் ஆற்றல் அர்ச்சகருக்கு இருத்தல் வேண்டும். அர்ச்சகர் பயிற்சிக்காக ஒரு கலாசாலை அமைத்தல் வேண்டும்.

தமிழிலே மொழி பெயர்க்கக் கூடாத பூசனை விதிகள் யாதுமில்லை. மந்திரங்கள், அர்ச்சனை மந்திரம், வித்தெழுத்து (பீசமந்திரம்), அடையாளமந்திரம் என மூவகைப்படும். அவற்றுள் அர்ச்சனை மந்திரங்களை எளிதாகத் தமிழில் மொழிபெயர்த்துக் கொள்ளலாம். **ஓம் கணபதையே நம என்பது கணபதிக்கு வணக்கம்** என்று பொருள்படும். கணபதியின் திருவடிவத்தை முன் வைத்துக்கொண்டு படர்க்கையிற் கணபதிக்கு வணக்கம் என்று சொல்வதைப் பார்க்கிலும் (ஓம்) கணபதியே போற்றி என்று முன்னிலையாகத் தமிழிற் சொல்வதே சிறந்ததாகும். **சைவ வைணவ சமயப் பெருந்தலைவர்கள் தமிழிலேயே இறைவனைத் துதித்திருக்கின்றார்கள், ஆதலால் தமிழிலே அர்ச்சனை**

**செய்தல் கூடாது என்றல் பெருந்தவறாகும்.** ஹாம் ஹீம் முதலிய சில ஒலி மந்திரங்கள் ஒலி நயமுள்ளவை, அவை பீசமந்திரம் எனப்படும். அவற்றிற்குச் சொற்பொருளில்லை. அவை எம்மொழிகளுக்கும் பொதுவான ஒலிகளே. ஓம் எனப்படுவது தமிழ்ச்சொல்லே. பிறவற்றைத் திருமந்திரம் முதலிய நூற்பாடல்களிற் காண்க. **அவற்றை முதல்முதல் பயன்படுத்தின மக்களினத்தார் தமிழரே என்பது தந்திர ஆராய்ச்சியாற் புலனாகும். வேதத்துள் பீசமந்திரங்கள் காண்டல் அரிது. தந்திரங்களில் அவை காணப்படுகின்றன. தந்திரங்கள் திராவிடக் கருத்தைத் தழுவி எழுதப்பட்ட வடநூல்கள். தமிழ்ச் சித்தர் நூல்களில் அவை வித்தெழுத் தெனப்படும். அவை ஏராளமாக அவற்றுள் காணப்படுவனவாதலின் அவை தமிழர்க்கே உரியன என்பது தெளிக.**

அடையாள மந்திரங்களுக்கு உதாரணம் திருவைந்தெழுத்தாகும். அதனுள் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு கருத்தைக் குறித்து நிற்கின்றது. அங்ஙனம் எழுத்துக்குப் பொருள் கொள்வது தமிழர் மரபே. **நமசிவய என்னும் தமிழ் மந்திரத்தில் நகரம் மறைப்புச் சத்தியையும் மகரம் பாசத்தையும் சிகரம் சிவத்தையும் வகரம் அருட்சத்தியையும் யகரம் உயிரையும் குறிக்கும்.** நமசிவாய என்னும் வடமொழி மந்திரம் சிவனுக்கு வணக்கம் என்று பொருள்படும். நமசிவய என்பதே நமசிவாய என விரிவுற்றுத் தேவார திருவாசகங்களிற் பயில்கின்றது. அடையாள மந்திரங்கள் தமிழ் மந்திரங்களே. மேற்கூறிய மூவகை மந்திரங்களும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய தமிழ் நூற்களிற் காணப்படுதலின் அவற்றைப் பூசனைக்குப் பயன்படுத்துதல் தமிழர்க்கு ஒத்ததே. **வடமொழியில்தான் மந்திரங்கள் உள்ளன, அவை மொழிபெயர்க்கத் தகாதது** என்பது தவறான கொள்கையாகும்.

தேள்கடி, பாம்புக்கடி முதலியவற்றைக் குணப்படுத்த மந்திரங்களைத் தமிழிற் பயிலுதல் காண்க. இன்னும் **வடமொழியில் கருத்தைக் கூறுஞ் சொற்களை மந்திரம் என்று உபசாரமாக எண்ணுதலும் உண்டு. அர்க்கியம் சமர்ப்பயாமி என்பது தெளிபுனல் கொடுக்கின்றேன் என்று பொருள்படும். அஃது ஒரு மந்திரமன்று, அதைத் தமிழிற் கூறுவதற்கு எவ்வகையான தடையும் இல்லை. கோயிற் பூசனைக்குரிய எல்லா விதிகளும் முறைகளும் தமிழிலே எழுதப்பட வேண்டும். அவை கல்லூரியிற் போதிக்கப்பட வேண்டும்.**

பிறப்பைப்பற்றிய உயர்வு தாழ்வு தமிழர் வழிபாட்டிற்கு இல்லை என்பதைக் காசியில் யாவரும் வருண வேறுபாடின்றிச் சிவபெருமானைப் பூசிக்கும் வழக்கத்தில் வைத்து அறிந்துகொள்க. காசியில் நடக்கும் முறை வழிபாட்டினர்க்கு வசதி தராதாதலின் நல்லொழுக்கமும் கள் ஊன் விலக்கும் உடைய அறிஞர் எக்குலத்தவராயினும் பூசனைமுறை அறிந்து அன்பாய்ப் பூசனை செய்யக் கூடுமானால் அவரை ஆலயத்தில் அர்ச்சகராக நியமித்துக்கொள்ளுதல் நலம். இப்போது ஆலயங்களிற் குருக்களாய் உள்ள ஆதி சைவமரபினர் தமிழ்ப் பார்ப்பனரே ஆவார். அவர்கள் சிவன் முகத்து அருள் பெற்ற அந்தணரெனவும் சுமார்த்தப் பிராமணர் அயன் முகத்துதித்த பிராமணர் எனவும் கருதப்படுவதுடன், பின்னையோர் கோயிற் பூசனைக்கு உரியரல்லர் என்று ஆகமம் விதிக்கிறது. ஆதிசைவர் தமிழ் நாட்டிலே தோன்றிப் பொதியை மலைக்குத் தெற்கிலுள்ள பெருஞ் செல்வமென்னும் மகேந்திர மலையில் தவமியற்றித் திருவருள் பெற்ற ஐந்து தமிழ் முனிவர்களின் சந்ததியாராவர். அவர்கள் தற்காலத்தில் தம்மை இன்னார் என்று அறியாது சுமார்த்த மதநெறியைத் தழுவி நடக்க முயலுகின்றார்கள்.

சைவம் விரிந்த கொள்கையுடைமையால் சைவ ஆசாரியர்கள் சமயம் புகுவித்தலாகிய தீக்கை செய்யுங்கால் மாணவன் கொடுக்கும் உணவைத் தாம் வாங்கியுண்பதும் தாம் கொடுக்கும் உணவை மாணவனை உண்பித்தலுஞ் செய்து சிவத்தில் இருவரும் ஒற்றுமைப் படுதலாகிய நெறிச்செயல் (சடங்கு) செய்தல் விதிக்கப்பட்டுள்ளது. அந்தணர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் சைவ ஆசாரியர்களும் அந்தணரல்லார்க்குத் தீக்கை செய்தல் விலக்கப் பட்டிருத்தலின் அவ்விருவகையார்க்கும் ஒற்றுமை விளைதற்கும் பிறப்பு வேறுபாடு பாராட்டாமைக்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது. பிறப்பு வேற்றுமை ஒழிந்த விடத்து மூவகைத் தீக்கைகளும் ஆசாரிய அபிடேகமும் பெற்ற ஒருவர் எவராயினும் இறைவனுக்குப் பூசனை செய்ய உரிமையுடையவரேயாவர். பண்டைக்காலத்தில் பார்ப்பார் என்ற சொல் தவத்தினால் தெய்வக் காட்சி பெற்றுப் பொது நன்மைக்காக இறைவனை வழிபடும் தமிழ்ப் பெரியோர்களுக்கே உரியதாயிருந்தது. பிள்ளையார், முருகன், சிவபிரான், அம்மை, திருமால், ஞாயிறு என்னும் ஆறு தெய்வங்களைப் பூசிப்போர் அறுவகைப் பார்ப்பனராய் விளங்கினர். ஆதலால்

ஆசிரியர் தொல்காப்பியர் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என்றார். பிற்காலத்தில் தமிழர் சமயத்தில் உண்மைப்பற்று வையாது வயிற்றுப் பிழைப்பின் பொருட்டுப் பார்ப்பனர் என்று பேர் வைத்துக்கொண்ட

பிறர் செய்யும் பூசனை பயன் தராது தீது விளைக்கும் என்ற கருத்துடன்,

**பேர்கொண்ட பார்ப்பான் பிரான் றன்னை அர்ச்சக்கில்**
**போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்**
**பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமாம் என்றே**
**சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.**

என்றார் திருமூலர். தற்காலத்தில் சமயத் தகுதியுடைய எவரும் இறைவனைப் பூசிப்பதால் இழுக்குஇல்லை என்றே கொள்க.

இறைவனுக்குப் பூசனை புரிபவருள் பூசை முறைக் காரர், அவருக்குத் துணைவர் என்ற இரு பிரிவினர் இருத்தல் வேண்டும். முன்னவர்கள் இறைவனைப் பூசித்தல் ஒன்றே செயற்பாலர். வழிபடுவார்க்காக அர்ச்சனை செய்தல், தேங்காய் பழம் நிவேதித்தல், திருநீறு முதலியன அளித்தல் செய்வதற்குத் துணைவர்கள் பயன்படவேண்டும். வெவ்வேறு தெய்வங்களை வழக்கமாய்ப் பூசனை புரிவோர் அவ்வத் தெய்வ வழிபாட்டில் தலைசிறந்தவர்களாய் இருத்தல் வேண்டும். கல்லூரி வாயிலாக நடத்தும் பரிசோதனைகளில் தேறியவர்களைக்கொண்டு பூசனை செய்வித்தல் நலம். அவர்களுக்கு நியமமான தக்க ஊதியம் அளிக்கப்படல் வேண்டும். மன்னிக்கமுடியாத தவறுகள் ஏற்பட்டாலொழிய அவர்களை நீக்கவேண்டியதில்லை. துணைவராய் இருப்போரும் நூற்கல்வியுடையோராய் வழிபடுவோரிடத்திற் சாந்தமாய் நடப்பவராயும் கோயிலுள்ளே பயனற்ற மொழிகள் பேசாதவராயும் இருத்தல் வேண்டும்.

கோயில் அதிகாரிகள் கோயிலின் மெய்க்கொள்கைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ற முறையில் வழிபாடுகளை நடத்தும் ஊக்கமும் உழைப்பும் உடையவர்களாய் இருத்தல்வேண்டும்.

கோயிலில் திருத்தொண்டு புரிபவர்கள் சமயம் புகுதற்குரிய தீக்கை பெற்றவர்களாய் முக்கிய சமயக்கொள்கை தெரிந்தவர்களாய் நல்லொழுக்கமும் புனித வழக்கமும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும். **உடலைப்பற்றிய சாதியினும் உயிரைப்பற்றிய சமயமே பெரியதென்பது சமயநூற் கொள்கை.** ஆறுமுகநாவலர் தமது பெரியபுராண வசனத்துள் அதனை எடுத்து மொழிந்தனர். **தமிழ்ச் சைவத்தைச் சார்ந்த திருக்கோயில்களில் சிவதீக்கை பெறாத பிறமதத்தினரைப் பரிசாரகம் முதலிய தொண்டுகள் செய்வதற்கு நியமித்தல் சமயத்துக்கு முரணாகும்.** தமிழர்களுள் ஊன் உணவு ஒழித்துத் தகுதி வாய்ந்த சமய ஒழுக்கம் உடையவர்களையே அத்தொண்டு செய்ய நியமித்தல் வேண்டும்.

கூட்டம் மிகுந்த விழாக்காலங்களில் வசதியாகச் செய்யமுடியாத அர்ச்சனைகள் முதலியவற்றை நிறுத்தி வைத்தல் நலம். ஒருகோயிலில் எத்தனைபேர் வசதியாக நிற்றல் கூடுமோ அதற்கு அதிகமாக மக்களைப் புகவிடுதல் தவறு, ஒருமுறை சென்றவர்கள் நெடுநேரம் நிற்றல் கூடாதபடி அவர்களை வெளியே செலுத்தல் வேண்டும். சாதாரண காலங்களில் மலர் தூவிப் போற்றுதலாகிய தொண்டினை வசதியான தூரத்தில் நின்று விரும்புபவர்கள் தாமே செய்துகொள்வதற்கு இடங்கொடுத்தல் வேண்டும். திருவிழாக் காலங்களில் அன்பு விளைவதற்கு இடையூறு பயக்கும் ஆடம்பரச் செலவுகளை ஒழித்தல்வேண்டும்.

தமிழர் கோயில்களில் தமிழ்ப் பாடல்களுக்கு முதல் இடம் கொடுத்தல் வேண்டும். பிறமொழிப் பாடல்கள் பாடுதல் அத்துணை அவசியமில்லை. தேவாரம் திருவாசகம் திருவாய்மொழிகள் பாடுவோர்கள் தக்க இயல் இசைப் பயிற்சி உடையவர்களாய் இருத்தல் வேண்டும். மனம் உருகும்படி பாடுந்திறமையுடையவர்களுக்குப் பரிசளித்தல் வேண்டும். அவர்கள் பாடுங்காலத்தில் வழிபடுவோர் கூக்குரலை அடக்கவேண்டும். அவை பாடிய பின்னரே திருநீறு முதலிய பிரசாதங்கள் அளித்தல் வேண்டும். வருவாய் மிகுந்த ஒவ்வொரு பெரிய கோயில்களிலும் தமிழில் வேதம் சமய சித்தாந்தம், சமயச் சடங்குமுறை என்பனவற்றைப் போதிக்குங் கலாசாலைகளும் நூல் நிலையமும் சொற்பொழிவு மேடையும், கவின்கலை, இசை, கூத்து முதலியவற்றிற்குப் பெரிய பயிற்சிக்கூடங்களும் இருத்தல் வேண்டும் என்று ஆகமங்கள் விதிக்கின்றன. சிறிய கோயில்கள் இன்றியமையாத வழிபாட்டுச் செலவுகளை மாத்திரம் வரும்படியிலிருந்து செய்துகொண்டு எஞ்சிய வருவாயை அர்ச்சகர்களுக்கும் வழிபாட்டினர்க்கும் சமயக்கல்வி பயிற்றப் பயன்படுத்தல்வேண்டும்.

கோயில்களிலே சோம்பேறிகள் படுத்து உறங்குவதற்கு இடங்கொடுத்தல் கூடாது. பிச்சைக்காரர்களும் நோயாளிகளும் தங்கிப்பொழுது கழிக்கவும் இடங் கொடுத்தல் கூடாது. பிச்சைக்காரர்களுக்குத் தருமம் செய்ய விரும்பும் மக்கள் நன் கொடைகளை ஒருங்கு சேர்த்து ஏழைகளுக்குத் தொழிலும் உணவும் உதவும் நிலையங்களைக் கோயில் அதிகாரிகள் நிறுவி நடாத்த வேண்டும்.

இத்தகைய சீர்திருத்தங்கள் பலவும் நிறைவேறுமாயின் தமிழர் கோயில்கள் சிறந்த அன்பும் நிறைந்த கல்வியும் ஓங்கி வளரும் ஒளிமாடங்களாக நிலைபெற்று விளங்கும்

# நனவாகின்ற கனவு



சாதிவெறி போனதெடி
சமத்துவமும் ஆனதெடி
நீதிநிறைவானதெடி
நிம்மதியும் சேர்ந்ததடி
அடிமை மனம் அகன்றதடி
ஆளுமையும் வந்ததெடி
துடிக்கும்நிலை தொலைந்ததெடி
துவக்கு வாழ்க்கை ஒழிந்ததடி!
போனதெடி பொய் வாழ்க்கை
பிறந்ததெடி புதுவாழ்வு
ஆனதெடி விடுதலையும்
அமைந்ததெடி சுதந்திரமும்
அகதிநிலை ஒழிந்த தெடி
அழுநிலையும் அகன்றதெடி
தகுதி நம்மை அணைத்த தெடி
தன்மானம் மீண்டதெடி
தனிநிலமும் கிடைத்ததெடி
தன்னாட்சி வந்ததெடி
இனிநமக்கிங் கேதுதுன்பம்
இன்பமின்பம் என்றுமின்பம்.

—மா. செ. திருமுருகன்—

# பேய் உண்டா?

பேய் என்றால் என்ன? பேய் என்றால் ஒன்றுமில்லை. இல்லாத ஒன்றுக்குப் பேய் என்று பேர். ஆனாலும் இல்லாத இந்தப் பேய்க்கு எல்லோரும் பயப்படுகின்றார்கள், இதுதான் பெரிய புதிர், விளங்க முடியாத சிக்கல். கானல் நீர் என்பது இல்லாத ஒரு நீர், நீர்போன்ற ஒரு தோற்றப் போலி, இதனை ஆங்கிலத்தில் Mirage என்பர். கானல் நீருக்குப் பேய்த்தேர் என்பது மற்றொரு பெயர். **பேய்த் தேர்ப்பின் குடங்கொண்டு நீருக்குச் செல்வார்** என்பது தேவார அடி. ஆகவே பேய் என்றால் இல்லாத ஒன்று என்பதுதான் கருத்து என்பது உறுதி.

ஆனாலும், பழங்காலத்திலிருந்தே இல்லாத இந்தப் பேய் இருக்கின்றது என்று தமிழர் நம்பி வந்திருக்கின்றார்கள். திருவள்ளுவர் காலத்திலும் பேய் பற்றிய நம்பிக்கை தமிழ்மக்களிடையே நிலவிவந்திருக்கின்றது.

திருவள்ளுவர் இரண்டு குறள்களில் பேய்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். ஓரிடத்தில் பேஎய் என்றும், இன்னோரிடத்தில் அலகை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

**உலகத்தார் உண்டென்பதில்லென்பான் வையத்து**
**அலகையா வைக்கப்படும் (850)**

உலகத்திலே அறிவுடையவர்கள் உண்டு என்கின்ற ஒரு பொருளை ஒருவன் இல்லை என்று கூறுவானானால் அவன் பசாசாகக் கருதப்படுவான், என்கின்றது மேற்படி குறள், இந்தக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர்–கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் முதலாக அவர் உள என்பன பலவேனும், சாதிபற்றி உண்டு என்பது என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும், வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை என்றும் கூறினார் என்று கூறுவார்.

பேய் பற்றிய குறிப்புக் கொண்ட மற்றக்குறள் வறுமாறு:–

**அருஞ்செவ்வி இன்னாமுகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய் கண்டன்ன துடைத்து**

மேற்படி குறளுக்கு உரை எழுதிய பரிதியார் என்ற உரையாசிரியர், கிருபை இல்லாதவன் குளிர்ந்த முகம் இல்லாதவன் ஆகியவனாகிய அரசனின் செல்வம் நல்லோர்க்குப் பயன்தரமாட்டாதாதலால், அவனது செல்வம், பேயானது செல்வம் பெற்றதற்கு ஒக்கும் என்று கூறினார். மேலே காட்டிய இரண்டு குறள்களும், வள்ளுவர் காலத்திலும் பேய் என்ற ஒன்று உண்டென்று மக்கள் நம்பினார்கள் என்பதைக்காட்டுகின்றன.

# சமயமும் சமயக்குரவர்களும்

அ. வேணுகோபாலன்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்பே முன்தோன்றி மூத்த தமிழ்க் குலமானது இன்றைய புலம்பெயர்ந்த சூழலிலும் தங்களை இந்துசமயத்தவர்கள் எனக்கூறிக் கொள்வதில் பெருமைப்படுகின்றனர் என் பதை அறியும்போது அவர்களுடைய இந்து கலாச்சாரப் பண்பாட்டைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆதி யும் அந்தமுமில்லாப் பரம்பொருளாகிய சிவபெருமானின் திருவிளையாடல்களையும் துஷ்டநிக்கிரக நிஷ்ட பரி பாலனத்தையும் நன்கு உணர்ந்து நம் இந்துமக்கள் தாமும் பின்பற்றி எதிர்கால இளஞ் சமுதாயத்தையும் இந்து சமயக் கோட்பாடுகளுக்குட்படுத்தி வளர்த்து வருவதை யிட்டும் நாம் பெருமைப்படவேண்டு மல்லவா?

எமது இந்துமதமானது சிந்து வெளி நாகரிகத்தின் பரிணாம வளர்ச்சியிலிருந்து அதன் பின்னர் அடைந் துள்ள பெரும் மாற்றங்களை ஆராய்கின்ற போது பல உண்மைகளை நாம் காணமுடிகின்றது. உலோகங் களாலும் கற்களாலும் மரக்குற்றிகளாலும் பட்டை களாலும் வரையப்பட்டிருந்த வரலாறுகளையும் தாண்டி சமூகவியலுக்குள்ளே சைவமதத்தின் பெருமைகளையும் தத்துவங்களையும் நேரடியாக உணர்த்தி நிற்கின்ற இக்காலகட்டம் மாபெரும் மாற்றத்தை உண்டாக்கி யிருக்கின்றது என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

கி.பி. முன் சில நூற்றாண்டுகள் மக்கள் வாழ்ந்த காலப்பகுதிகளை நோக்குமிடத்து சமயக்குரவர்களின் வரலாறுகள் நிலவியிருப்பதாக அறிகின்றோம். அவர்க ளின் சமயப்பணியும் தெய்வபக்தியும் சமூகவாழ் வியலுக்குள்ளே ஒப்புவிக்கப்பட்டுள்ளன என்பதற்கு எத்தனையோ சான்றுகளும் ஆதாரங்களும் ஒவ்வொரு அத்தியாயங்களாக பரந்து விரிந்து கிடப்பதைக் காணமுடியும் என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். சைவசமய வளர்ச்சிக்காக ஆதாரமாயி ருந்தவர்கள் இச்சமயக் குரவர்களே. இவர்கள் தான் தேவார முதலிகள் என்பதையும் சமய வழிபாட்டிலே பலமாற்றங்களைச் செய்தவர்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம். அன்று வாழ்ந்த தமிழ்மக்களின் வரலாறுகளோடு இவர்களின் தத்துவங்களும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றைய சமுதாயத்தின் லௌகீக வாழ்க்கையிலே அவை ஒப்புவிக்கப் பட்டிருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

வளர்ச்சியடையாமல் இருந்த இன்றைய மக்களையும் அவர்களுடைய வாழ்க்கை விருத்தியையும் நெறிப்படுத்தக்கூடிய தத்துவங்களையும் ஒழுக்கமான வாழ்க்கையையும் கடைப்பிடிக்க வழிகாட்டி நின்றவர்கள் இச்சமயக் குரவர்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசர் ஆகிய நால்வரும். இவர்கள் வரலாற்று ஞானிகள் என இன்றும் போற்றப்படுகின்றனர்.

திருஞான சம்பந்தரின் வரலாற்றிலே அவரின் சமயப்பணிகளையும் ஆன்மீகத்தொண்டினையும் ஆராய் கின்றபோது சிவபாதவிருதையருக்கு மகனாகப் பிறந்து மூன்று வயதுக் குழந்தையாக இருக்கின்றபோது உலகமாதாவாகிய உமாதேவியாரின் ஞானப்பாலை அருந்தி ஞானம் பெற்றுள்ளதனால் அவர் இயல்பாகவே எல்லாம் அறியும் ஆற்றல் மிகுந்தவராகக் கணக்கிடப்பட்டார். இவருடைய மனதிலே படிந்த சிவனும் பார்வதியும் பாலூட்டிய காட்சியை ஞானதிருஷ்டியில் வரவழைத்துத் தோடுடைய செவியன் விடையேறியோர் என்று பாடிய பக்குவத்தினை நம்முன் தத்துவரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார். இத்தனை திறமையையும் வரலாற்று ரீதியான விளக்கங்களையும் உள்ளடக்கிய இப் பாடலைச் சிறுவயதிலேயே சொல்லக்கூடிய விளக்கத்தினை ஞானமாக இங்கு காண்கின்றோம். இத் தத்துவம் மானிட வாழ்வின் ஆன்மீகத்தை நெறிப்படுத்தக் கூடிய வழமையைக் கொண்டுள்ளது. இத்தகைய செயற்பாடுகளால் தத்துவ ஞானத்தைத் தமிழ்ப் பாடல்களாக மக்களின் மனங்களிலே பதியக் கூடிய பக்குவத்தை உள்ளடக்கியுள்ளதனாலும் அவர் வாழ்ந்த தூய சைவ வாழ்க்கையையும் சமூக வாழ்விய லுக்குள்ளே பிரதிபலித்துக் கொண்டதனால் இவரினது வாழ்வு அச்சமூகத்திலே ஒருமுன்மாதிரியாக அமைந் திருந்தது. சமய வாழ்க்கையிலே தெய்வ அனுக்கிர கத்தினால் ஏற்பட்ட பக்தியுணர்வுகளினால் எத்துணை துன்பம் வரினும் நமசிவாய எனும் திருவைந்தெழுத்தை உச்சரிக்கின்றபோதே எல்லாத்துன்பமும் வலியிழந்து போகும் என்பதை தத்துவார்த்தமாகப் பாடியுள்ளார்.

சைவம் தழைத்தோங்கிய காலங்களில் சமணசமயமும் வேரூன்றிப் பல வாதாட்டங்களையும் கெடுபிடிகளையும் புரிந்துவந்த காலமாக இருந்த போதிலும் தனது சிறுபிராயத்தை

வைத்து மற்றவர்கள் (சமணர்கள்) கேலி செய்வார்களே என்ற சிறுமைத் தனத்தைக் கண்ட பாண்டியமன்னனின்

தேவியைப்பார்த்து

**மானின்னேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெரும் தேவிகேள்**
**பானல்வாயொடு பாலனீங்கிவன் னென்றுநீ பரிவெய்திடேல்**
**ஆனமாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்**
**ஈனர்கட்கெளியேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே**

என்று வைராக்கியம் நிறைந்த மனத்திடத்தை உணர்த்தி நிற்கின்றார். அப்படியே அக்கணமே பாண்டியனின் உடற்குறையை விபூதி கொடுத்து குணப்படுத்துகின்றார். சமணர்கள் வாதுக்கழைக்கவே எதிர்வாதம் புரிந்து சைவத்தைத் தழைக்கச் செய்வதற்கு அனல்வாதம் புனல்வாதம் புரியப் புறப்படு கின்றார். சமணர்கள் தம் சமயம் உண்மையானது என்று எழுதிய ஏட்டையும் சம்பந்தர் எழுதிய ஏட்டையும் ஓடும் ஆற்றில் போட்டனர். சமணர்களின் ஏடு ஆற்றோடு அடித்துச் செல்ல சம்பந்தரிட்ட ஏடு நீரை எதிர்த்துக் கரையேறுகின்றது. மீண்டும் இரு ஏடுகளையும் நெருப்பிலிட்டனர். சமணர்கள் ஏடு எரிந்து சாம்பரானது. சம்பந்தரிட்ட ஏடு எரியாமல் மீண்டது. இது இறைவனின் திருவருள் என்பதை உலதிற்குணர்த்தப் **புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே** எனும் பதிகத்தைப் பாடுகின்றார். இத்தகைய நிகழ்வுகளினால் இந்து சமயத்தின் தொன்மையையும் புனிதத்தையும் உலகிற்குணர்த் துவதில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார். சமண வரலாறுகளை உணர்த்துகின்ற சமூகப்பணியை வளர்த்துக் கொடுப்பதில் கண்ணுங்கருத்துமாயிருந்தார். தெய்வத்தின் கட்டளையை நிறைவேற்றவந்த திரு அவதாரமாகக் கருதப்பட்டார். இவருடைய சமயப் பக்குவமும் இறை பக்தியும் தேவாரப்பாடல்களும் எமக்குப் பெரும் ஆதாரங்களாய் அமைந்துள்ளதல்லவா. அது மட்டுமன்றி பல அற்புதங்களையும் அருட் பாடல்களையும் பாடி ஞான மார்க்கத்தின் தத்துவ ஞானியாக விளங்கியிருக்கின்ற சந்தர்ப்பங்களைக் கொண்டிருந்தமையினால் இவருடைய செய்கைகள் மக்களின் மனங்களில் அகலாத சிந்தனைகளை வளர்த்திருக்க வேண்டும் இந்நிலமையில் சம்பந்தரின் சமகாலத்திலே சரியைத் தொண்டின் தத்துவஞானியாகிய திருநாவுக்கரசரும் இணைந்து கொள்கின்றார். இவர் ஓர் அனுபவ ஞானி என்பது குறிப்பிடத்தக்கது. சைவ சமயியாய்ப் பிறந்து தான் தோன்றித்தனமான எண்ணங்களுக்கடிமையாகி சமணசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர். உண்மையான சமணனைவிட ஒழுக் கமும் பக்தியும் நிறைந்த சமணனாக வாழ்கின்றபோது இவருடைய கன்மவினைப்பயனாக இவரின் வாழ்வு இறைவனின் சோதனைக்குட் படுத்தப்படுகின்றது. திலகவதியாரின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து கருணைகூர்ந்த சிவபெருமான் இவரை ஒரு சுத்தமான சைவனாக மாற்றியருளியபோது அவர்பட்ட துன்பங்களை உருக்கமான பாடல்களினால் உணர்த்துகின்ற திறமையை நாம் காண்கின்றோம். இவை எமது வாழ்வுக்காக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சைவசமய பந்தமாகின்றது. அவ்வப்போது அவர்களின் வாழ்வில் ஏற்பட்டிருந்த தாக்கங்களை மலபந்தங்களை நீக்க எவ்வகையான மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்று வழிகாட்டிநின்ற பெரியோர்கள் இவர்கள். பொறுமை, அடக்கம், பணிவு, அன்பு, கருணை என்ற இலக்கணத்துக்கு மூலமாக துன்பங்களையும் துயரங்களையும் எவ்வாறு அனுசரித்து வெற்றி கொள்ள வேண்டும் என்ற வழிகளை உணர்த்திநின்ற தருமத்தின் உறைவிடங்கள் என்பதையும் நாம் காணமுடிகின்றது. ஓடும் செம்பும் ஒக்க நோக்கும் மனோபாவமுடைய அவதாரங்கள். சரியைத் திறனை சைவ உலகிற்கு உணர்த்தி நின்ற சத்தியவான்கள். எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் சென்று சைவ சித்தாந்த தத்துவங்களையும் சித்தாந்தக் கருத்துக்களையும் பரப்பி தெய்வக் கருணையின் மேன்மையையும் மானிட வாழ்வியலின் மலபரிபாலன மகத்துவத்தையும் ஊர்கள் தோறும் உணர்த்தி நின்ற உத்தமர்கள். சமூகவியலுக்குள்ளே சைவசித்தாந்தத்தின் பெருமைகளைத் தெளிவுபடுத்தியவர்கள். காலம் நேரம் தேவை சூழல் அறிந்து கருணைநிறைந்த இறைவ னின் மகத்துவத்தைப் புரியவைத்தவர்கள் அவர்களுடைய திருப்பணிகள் ஆன்மீக வாழ்க்கையின் உண்மையை உலகிற்கு உணர்த்தி நின்ற பக்குவம் இன்று எமது வாழ்வியலுக்குள்ளேயும் பின்னிப் பிணைந்து கொண்டது என்றால் சைவவாழ்வின் ஒழுக்கவியலில் பல உண்மைகள் தெளிவாக்கப் பட்டிருக்கிருக்கின்றன என்பதே பொருளாகும்.

பதி பசு பாசம் எனும் முப்பொருளும் ஒன்றுக்குள் ஒன்று பிணைக்கப்பட்டிருக்கின்றது. பசுவாகிய ஆன்மா பாசம் எனப்படும் மும்மல பீடிகையினால் பிணைக்கப்பட்டுப் பதி எனும் இறைவனை அறியாது அழிந்து போகின்றது. இதனைத் தீர்க்கும் பொருட்டு பிறவிப்பயனால் ஏற்பட்டிருந்த மலபரிபந்தத்தை ஆணவம் கன்மம் மாயை என்ற மும் மலங்களாலும் கட்டுண்டு பாவத்துக்குள் அழுந்திக்கிடக்கும் ஆன்மாவை திருவருளை அடையும் மார்க்கத்தை உணர்த்தி நிற்தின்றது நல்வழிகளை உபதேசிக்கும் மார்க்க போகிகளாக இவர்களை நாம் வணங்கிநிற்க வேண்டும். இவர்களின் ஆன்மீகப் போதனைகள்

எமக்கு திருவருளின் தெளிவையும் கருணையையும் புலப்படுத்துகின்றவனல்லவா? இவ்வாறே சுந்தரமூர்த்தி நாயனாரை சமூகவியலுக்குள்ளே காணுகின்ற பொழுது இவர் ஒரு யோகியாகவே காணப்படுகின்றார். இவர் பிராமணத்துவத்தைக் கடைப்பிடித்தாராயினும் திருப்ப ணிகளினால் தன் உணர்வுகலந்த தமிழ்ப் பாடல்களால் இறைவனையும் தமிழால் வாழ்த்தி நின்ற பெருமையைப் பெற்றவர். இறைவனை ஒரு நண்பனாக்கி தன் வாழ்வில் வெற்றிகண்டவர். இருந்த போதும் இறைவனின் திருவருளால் சுகபோக வாழ்வில் களித்திருந்த இவரையும் இறைவன் சோதனைக் குட்படுத்தியபோது பிறப்பியலின் தத்துவத்தைப் புரிந்துகொண்டு வேதனைப்படுகின்றார். இருப்பினும் தன்னுடைய அகந்தையினால் இறைவனையே அறிந்து கொள்ள முடியாமல் மலபந்தத்தினால் பீடிக்கப்பட்டு வாதாட முற்படுகின்றார். இந்நிலையில் தான் திருவருளின் தத்துவம் தெளிவுபடுத்தப்படுகின்றது. இறைவனையே கடிந்து பேசும் நிலையை ஆணவ மலத்தாலான மாயை அவருக்கு உண்டாக்கி விடுகின்றது. இதனால் மனம் வாக்குக் காயத்திற் குட்பட்டிருந்த திருவருளின் நிலை மாயையாகி விடுகின்றது. இறைவனால் தடுத்தாட் கொள்ளப் படுகின்ற சந்தர்ப்பத்தின்போது உண்மைநிலை உணரப்படுகின்றது. அவ்வேளையிலே திருவருளின் ஆளுமையினால் ஆன்மா சுத்தநிலையை அடைய இறைவனின் திருக்காட்சி மனக்கண்ணில் நிறைவா கின்றது. இதன்பின்பே இறைவனைப் புகழ்ந்து பாடும் சுந்தரர் தன் உண்மைநிலையை அடைகின்றார். இந்நிகழ்வுகளின் மூலம் இறைவனின் திருக்கருணை தமிழோடு சங்கமமாகின்றது. இவர்களுடைய தமிழ் ஞானம் அப்படியே தமிழ்ச் சமுதாய வாழ்வியலுக்குள்ளே புகுத்தப்படுகின்றது. இதனால் இவர்களின் திருப் பணிகளும் அற்புதங்களும் அழுத்தம் திருத்தமாகப் பதிவாகிவிடுகின்றன. இவற்றைக் கடைப் பிடிக்கின்ற மானிடர்கள் இச்சைவப் பெருமைகளை பின்பற்றி தம் வாழ்க்கையை தூய்மைப்படுத்திக் கொள்கின்றனர்.

இவ்வாறே மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனின் சோதனைக்குட்படுத்தப்பட்டு இறைவனைப் பாடும் பணியே திருப்பணியாகக் கொண்டு வாழ்ந்திருந்த தத்துவ ஞானியாவார். எவராலும் பாடமுடியாத சிந்தையுருகும் திருப்பாக்களை உள்ளடக்கிய திருவாசகத்தைப் பாடினார். இவை மிகவும் இனிமை நிறைந்துள்ளதைப் பாடுவோர் கூறி மகிழ்ந்தனர். ஒவ்வொரு நாயன்மாரும் பாடிய தேவாரப் பதிகங்கள் இராஜராஜசோழனின் ஆட்சியிலே நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கப்பட்டுத் திருமுறைகள் எனப் பெயர் பெற்றுள்ளன.

ஆன்ம ஈடேற்றத்திற்காகவும் திருவருளைப் பெற்றுக் கொள்ளவும் இவை எமக்கு ஆதாரமாக அமைந் துள்ளன. நீதியும் தத்துவமும் நிறைந்த இப்பாடல்கள் எமது வாழ்விலே சைவ சித்தாந்த தத்துவங்களையும் மனப்பக்குவத்தையும் தெளிவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி ஒரு தூய்மையான வாழ்க்கை நெறியைப் போதித்துநிற்கின்றன. இவர்களுடைய ஆன்மீகத் தொண்டு சரியை கிரியை யோகம் ஞானம் என்கின்ற நாற்பாதங்களின் தத்துவங்களைச் சமூகத்திற்கு உணர்த்தி நின்று சாலோப சாரூப சாமீப சாயுச்சிய முத்தி நிலையையும் அடைய வழிகாட்டி நிற்கின்றது. நல்ல ஞானிகளுடைய தொடர்புகளும் பழக்கவழக்கங்களும் பஞ்சமாபாதகங்களையும் பேராசைகளையும் துறந்து வாழ்கின்ற நல்ல வழிகளைக் காட்டிவிடுகின்றன இதனால் மனம் வாக்கு காயம் சித்தம் புத்தி என்பன தூய்மை பெற்றுவிடுகின்றது. மும்மலத்தையும் நீங்கிய சுத்த சத்துவசித்தத்தைப் பெற்றுவிடுவதனால் மனம் அமைதியும் சாந்தியும் பெற்றுவிடுகின்றது.

ஒவ்வொரு நாயன்மாரும் தத்தமது இறை பக்தியின் புனிதத்தைக் கொண்டு இறைவனின் திருவருளோடு சமூகசமுதாயப் பணிகளை தத்துவ விதிமுறைகளோடு வரையறுத்துக் கூறிய வழிகளைப் பின்பற்றியி ருந்தவர்களின் பெருமையால்தான் சமயம் இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்துள்ளது என எண்ணத்தோன்றுகின்றது. இவர்களில் இருந்த பரந்த நோக்கு பல பாகங்களிலும் சமயம் வளரக் காரணமா யமைந்துள்ளது. இலங்கையிலும் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற திருத்தலங்களும் இந் நாயன்மார்களால் போற்றிப் பாடப்பட்டிருப்பதை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன. சைவசமயத்தின் தோற்றுவாயிலிருந்து இன்றைய காலம்வரை அரிய பல பாடல்களைப் பாடியும் திருப்பணிகளைச் செய்தும் சைவசித்தாந்த தத்துவங்களையும் வேதாந்தங்களை யுமுணர்த்தியும் தமிழுலகத்திற்குப் பெரும் தொண்டாற்றிப் பெருமை தேடித்தந்த இச் சமயக்குரவர்களை இந்த நூற்றாண்டிலும் போற்றுகின்றோம் என எண்ணும்போது பெருமை பிடிபடவில்லை.

# தங்கமாய் ஒளிர்ந்து வாழ்க வாழ்கவே!

துன்னையூர்
ராம்–தேவலோகேஸ்வர குருக்கள்.

ஓங்கு புகழ் தனைக் கொண்டு உலகெங்கும்
ஒளிர் வதன இதழாய் மலரும் கலசமிது
பாங்குடனே இருபத்தைந்தாம் ஒலியாய்
பரி மளித்திருப்பது கண்டு மகிழ்வோம் யாவரும்
ஆங்கிரச ஆண்டின் தைமாதப் பிறப் பன்று
அழகு லண்டன் ஸ்ரீமுருகனாலயத்தில் பூத்து
தாங்கு புகழ் சிறப்பு பல பெற்றுவிட்ட கலசமே–
என்றும்
தங்கமாய் ஒளிர்ந்து வாழ்க வாழ்கவே.

வேண்டிய சமய சான்றுடை கட்டுரைகளும்
வெகு சிறப்பான அழகு தமிழ் நடையில்
ஈண்டியே தந்திடும் கனிவுடை இதழிலே
இனிய இதிகாச தொடர் சரிதங்களும்
பூண்டு வரும் புதிய சுவை அம்சங்களும்
பூரணமான இதழ் என சான்று பதிக்குமே
தாண்டு வியப்பு புகழ் பெற்றுவிட்ட கலசமே–என்றும்
தங்கமாய் ஒலிர்ந்து வாழ்க! வாழ்கவே!

இங்கிலாந்து நாட்டின் இனிய தமிழ் இதழாய்
இணையற்ற சைவ முன்னேற்ற சங்கமதின் திறனாய்
மங்கிடா மலராய் மாபெரும் வெற்றி பெற்றே
மனங்களில் பொங்கிநிற்கும் மாசற்ற இதழே
வங்க கடல் தாண்டி நீ செய்யு சாதனையை
வையகமுள்ள வரை மறவார் நற் தமிழர்
திங்களணிந்த மாதொருபாகன் அருளொடு கலசமே–என்றும்
தங்கமாய் ஒலிர்ந்து வாழ்க வாழ்கவே!

# தியாகம் எனும் தீயூட்டித் தீந்தமிழீர் பொங்கிடுவீர்




சாதிஎன்ற உமிநீக்கிச்
சண்டை என்றகல் அகற்றி
வீரம் என்னும் அரிசியுடன்
ஒற்றுமையாம் சருக்கரையும்
நீதி என்ற பாலுடனே
நியாயம் என்னும் பருப்புமிட்டு
நாதியற்ற தமிழனுக்கு
நற்காலம் வருக என்று
தியாகம் எனும் தீமூட்டிப்
புலம் பெயர்ந்த நற்றமிழீர்
ஆதியற்ற இறையை எண்ணி
ஆண்மையுடன் பொங்கிடுவீர்

**–கவிஞர் சிறீகாந்தன்–**



# மதம் மனிதனுக்கு அபின்



## தோற்றுவாய்

மதம் உலகில் எப்போது தோன்றியது? மதத்தைப் பற்றி ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள், மனிதத் தோற்றத்தோடு மதமும் தோன்றிவிட்டது என்னும் முடிவுக்கு வந்துள்ளனர்.

எனவே மதமும் அதன் மையத் தத்துவமாகிய கடவுட் கோட்பாடும் மிகப்பழமையானவை என்பதே இன்றைய முடிவாகும். மனித மேம்பாட்டுக்காகப் பலவித கோட்பாடுகள் தோன்றியுள்ளன. மனித இன மேம்பாட்டுக்கான பொருளாதார, விஞ்ஞான, கலை, இலக்கியக் கோட்பாடுகள் பல தோன்றி வளர்ந்துள்ளன. இவை எல்லாவற்றுள்ளும் பழமைவாய்ந்தது மதக் கோட்பாடாகும்.

முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழம் பொருளாகிய இறைவனைப்போல அவனை மையமாகக் கொண்டியங்கும் மதமும் முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழமை வாய்ந்ததாகும்.

உயிர்கள் தன்முனைப்போடு இயங்கும் இயல்புடையன. பேரறிவுடையவன். இறைவன். உயிர்கள் சிற்றறிவுடையன.

ஓரறிவு முதல் ஐயறிவுபடைத்த உயிர்கள் எல்லாம் அவை எவ்வகையைச் சார்ந்தவையாயினும் தன் முனைப்போடு இயங்கி வருவதைக் காணலாம். இதனால் வருவன நன்மையாயினும் தீமையாயினும் அவற்றை ஏற்று வாழ்ந்து இயற்கைதரும் முடிவை ஏற்று வாழ்வை நிறைவு செய்கின்றன. அந்த இயற்கையையுணர்ந்து நன்மையைப் பெருக்கவோ தீமையைக் குறைக்கவோ அன்றி இயற்கையை மாற்றவோ அவை அறியா.

உதாரணமாக 2000 ஆண்டுகளுக்கு முன் மிருக இனத்தின் சந்ததியில் தோன்றிய ஒரு மிருகம், இன்றும் அதேநிலையிலேயே வாழ்ந்துவருகின்றது. அதன்புறத் தோற்றத்திலோ அகத்தோற்றத்திலோ எவ்விதமாற்றமும் ஏற்படவில்லை.

ஆனால் மனித முயற்சியினால் சில கலப்பினங்கள் உண்டாக்கப்பட்டுவிட்டன என்பதே உண்மையாகும்.

ஆனால் 2000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மனித இனத்தின் சந்ததியில் தோன்றி வாழ்ந்துவரும் இன்றைய மனித இனத்தில் எத்தனையோ பரிணாம மாற்றம் நடந்துவிட்டது, நடந்துகொண்டேயிருக்கின்றது.

இதற்குக் காரணம் என்ன? மனிதனிடமுள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவின் செயற்பாடு கூர்ப்படைந்ததினால் அவன் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனாலேயே மனிதப்பிறவி மேம்பாடுடையதாகக் கருதப்படுகிறது.

மனிதனைப் போலவே, புறக்கரணங்கள், அந்தக் கரணங்கள் அமைந்திருந்தபோதிலும், அவை தொழிற்படுவதற்கான ஆறாவது அறிவு இயங்காத காரணத்தால் மிருகங்கள் என்றும் ஒரே தன்மையுடையனவாய் வாழ்ந்துவருகின்றன. மனிதப் பிறப்பின் சிறப்பை உணர்ந்த ஞானிகள். வாய்த்தது நமக்கு இ∴தோர்பிறவி என்றும், அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றும் போற்றினர். ஐயறிவுடைய உயிரினங்கள் இயற்கை முடிவை ஏற்று வாழும் அதேநிலையில் பகுத்தறிவுள்ள மனித இனம் இயற்கை நிகழ்வுகளை அப்படியே ஏற்காமல், ஏன்? எதற்கு என்னும் வினாக்களை

திருமதி. ஆர். வி. லக்ஷ்மி.

எழுப்பி ஆராய்ந்து ஆராய்ந்து வாழத்தலைப்பட்டது.

## பரிணாமவளர்ச்சியும் கடவுட் கோட்பாடும்

இதனால் 2000 ஆண்டுகளுக்கு முன் மரத்தடியில், குகைகளில் மரத்தோலை உடுத்தி, மான்தோலைச் சுற்றி வாழ்ந்த மனிதஇனம் மாடமாளிகைகளில் பஞ்சணை மெத்தையில் பட்டுடுத்திப் புரள்கின்றது.

இயற்கையாகிய மழை, புயல், இடி, மின்னல் முதலிய வற்றுக்கு அஞ்சி அவையே தம்மை ஆட்டிப் படைக்கும் சக்திகளென அவற்றை வழிபட்டு, அவற்றைப் பிரீதிப்படுத்தினால் தமக்கு ஆபத்தில்லை எனக் கருதி, அவற்றுக்கு வேள்வி முதலியன எடுத்து வாழந்த மனித இனம், அந்த இயற்கையையும் ஆட்டிப்படைக்கும் ஒரு சக்தியுண்டு என்னும் கோட்பாட்டை உணரத்தலைப்பட்டது.

அச்சத்தினாலும் அச்சம்தரும் சத்திகளைப் பிரீதிப்படுத்தி ஆறுதலடையலாம் என்னும் ஆசை யினாலும் கடவுளை வணங்குவதை இன்றைய விஞ்ஞான வளர்ச்சியுள்ள இக்கால மக்களிடமும் காணலாம். **அஞ்சியாயினும் ஆசைப்பட்டாயினும் நெஞ்சினால் நினைந்துய்மின்** எனத் திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

ஆரம்பத்தில் பெற்றோரின் ஆசிரியர்களின் அச்சத்திற்கும் உத்தியோகம் முதலிய ஆசைக்கும் உட்பட்டுக் கல்விகற்றவர்கள், நாளடைவில் அந்தக் கல்வியினால் ஞானம் பெற்று உயர்வது போல. அஞ்சியாயினும் ஆசைப்பட்டாயினும் மனித இனம் உயர்வடைய வேண்டுமென ஞானிகள் கருதினர். மனிதரில் மிக உயர்ந்தோர் தவிர, ஏனையோர் உயர்வடைய அச்சமே பெரிதும் பயன்படுமெனவும் சிறிய அளவில் ஆசையும் உதவக்கூடுமெனவும் கருதிய வள்ளுவர்,

**அச்சமே கீழ்களது ஆசாரம்**

என்றார். மேலும்

**எச்சம் அவாவுண்டேல் உண்டாம் சிறிது**

என்றார்.

**அச்சமும் ஆசையும் மதத்துக்கும் அதன் மையமாகிய கடவுட்கோட்பாட்டுக்கும்** காரண மென்பதை விஞ்ஞானிகளும் வற்புறுத்தியுள்ளனர்.

கடவுளை வணங்காவிட்டால் அவர் தண்டிப்பார் என்னும் அச்சமும், வணங்கினால் அவர் அருளுவார் என்னும் ஆசையும் மதகுருமாரால் நன்கு வளர்க்கப் பட்டன.

## நிறுவனப்படுத்தப்பட்ட மதமும்

இவற்றின் அடிப்படையிலேயே சுவர்க்க நரகக் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. வணங்கினவர்க்குச் சுவர்க்கமும், வணங்காதவர்க்கு நரகமும் கிடைக்கும் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் வளர்ச்சி பெற்ற மதம் அதன் தத்துவக் கோட்பாட்டை விட, மதத்தின் கிரிகைகளாகிய சமயச் சடங்குகளுக்கு முக்கியமளித்து அந்தக் கிரியைகளை விரிவுபடுத்திப் பெரிய, பெரிய யாகங்களை நிறைவேற்றக் கூடிய நிறுவனங்களாக உருவெடுத்தது.

இந்த நிறுவனங்கள் மதகுருமாரின் மேலாதிக்கத் துக்குட்பட்டு மன்னரையும் கைவசப்படுத்தியதோடு மக்கள் மீதும் மேலாதிக்கம் செலுத்தின.

அச்சத்துக்கும் ஆசைக்கும் உட்பட்ட மன்னர்களையும் மக்களையும் ஆட்டிப்படைக்கும் நிலையில் நிறுவனப் படுத்தப்பட்ட மதமும் அதன்குருமாரும் விளங்கினர்.

பகுத்தறிவோடு ஒருகால வரையறைவரை சிந்தித்துச் செயற்பட்ட மனிதஇனம், நிறுவனப்படுத்தப்பட்ட மதத்தினாலும் மதபோதகர்களினாலும் பகுத்தறிவைப் படிப்படியாக இழந்தது.

வேதத்தின் மேலாதிக்கத்தை மீறாத இந்துமதமும் திரிபிடகத்தை மீறாத பௌத்தமும் பைபிளுக்கும் குரானுக்கும் தம்மை அடிமைப்படுத்திய கிறிஸ்தவமும் இஸ்லாமும் இதற்குச் சான்றுகளாகும்

மத ஆதிக்கமும் மதப்போட்டிகளும் மலிந்தன. உலக– வரலாற்றின் கறைபடிந்த பகுதியாக மதப்போராட்டம் குறிக்கப்பட்டுள்ளது. **தேம்ஸ் நதியில் நீர் பாயவில்லை இரத்த வெள்ளம் பாய்ந்தது** என்கின்றான் ஒரு வரலாற்று ஆசிரியன். அங்ஙனமே மத்திய கிழக்கு நாடுகளிலும் இந்தியாவிலும் சீனாவிலும் ஆற்றுநீர் செந்நீரால் நிரப்பப்பட்டது

மக்கள் திசை திருப்பப்பட்டனர். கடவுள் எல்லாம் வல்லவர் என்னும் நம்பிக்கை மனிதமுயற்சி தேவையில்லை, அதனால் பயனில்லை என்னும் மூடநம்பிக்கை, நன்மை, தீமை, பாவ, புண்ணியம், சுவர்க்க, நரகம், மறுபிறப்புக் கோட்பாடு முதலியன தெளிவற்ற முறையில் கடைப்பிடிக்கப்பட்டன.

உலக நாடுகளின் நாடுபிடிக்கும் போட்டிகளும் மதச் சண்டைகளும் பெருகின. பொருளாதார வளர்ச்சி குன்றியது. அதிகாரமுடைய ஆளும் வர்க்கத்தினரும் மதத்தினால் மேலாண்மை செலுத்திய குருமாரும் செல்வம் குவித்தனர். உழைப்பாளி வர்க்கம் வறுமையால் வாடி, நோயால் வருந்திச் செத்துக் கொண்டிருந்தது. **பசியால் உண்ணப் பாண் கேட்ட மக்களுக்குப் பாண் இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள் என்று இறுமாப்போடு கேலி செய்தாள் லூயி மனைவி. மதகுருமாரோ கஷ்டப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராச்சியம் உங்களுடையது என்றனர்.**

## மேலை நாடுகளின் விழிப்புணர்ச்சி

இந்த நிலை உலக நாடுகளிலெல்லாம் 17ஆம் 18ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. இதன் பின்பே கைத்தொழிற்புரட்சி, கமத்தொழிற் புரட்சி என்பன ஐரோப்பிய நாடுகளில் தோன்றின.

ரஸ்சியாவில் சார் மன்னனது கொடுங்கோன்மையும் பிரான்சில் லூயி மன்னனது கொடுங்கோன்மையும் வரலாற்றில் பொறிக்கப்பட்டன.

அந்த மன்னர்களின் கொடுங்கோன்மைக்குப் பின்னணி யில் ரஸ்டீன் போன்ற மதகுருமாரின் கறைபட்ட கரங்கள் நீண்டுகிடந்தன.

மக்களால் தெரிவுசெய்யப்படாத, பரம்பரை, பரம்பரையா-கத் தாமே முடிசூடிக்கொண்ட மன்னராட்சி நிலவிய அக்காலத்தில் மன்னர்களின் மந்திரிகளாக மதகுருமாரே விளங்கினர். நிறுவனப்படுத்தப்பட்ட மதத்தின் குருமார் இட்டதே சட்டமாயிற்று. சிலகாலங்களில் அரசனுக்குப் பதிலாக மதகுருமாரே ஆட்சிபீடமேறினர். வாரிசு இல்லாத நிலையில் மதகுருமாரே வாரிசுகளைத் தம் மனப்போக்கில் அமைத்தனர். நாட்டின் குறைபாடுக ளுக்கெல்லாம் ஆட்சியில் உள்ளகுறைகளைக் காணாமல் மறைத்து, கடவுளை மறந்தமையே காரணம், தெய்வத்தின் சாபமே காரணமென்றனர் குருமார். குருநிந்தை மகாபாதகமாகக் கருதப்பட்டது. இவற்றை நீக்கினால் நாடு சுபீட்சமடையும் என்றனர். அதற்காகப் பல்லாயிரம் கோயில்கள் எழுப்பப்பட்டன. மக்களின் பணத்தில் கட்டப்பட்ட கோயில்களின் மேலாதிக்கக் காரர்களாக, சொந்தக்காரர்களாகக் குருமாரே ஆதிக்கம் செலுத்தினர். மாமன்னர்கூட மதகுருமாரின் அனும தியின்றி ஆலயங்களுக்குள் நுழையமுடியாத நிலை ஏற்பட்டது.

காலத்தால் முற்பட்ட இந்துமதம் நிறுவனப்படுத்தப்ப டாதிருந்தபோதிலும் அதனை எதிர்க்கத்தோன்றிய சமண, பௌத்தம் முதலியன கட்டுக் கோப்புடன் கூடிய நிறு வனப்படுத்தப்பட்ட மதங்களாகக் கட்டி எழுப்பப்பட்டன. இதனால் இவற்றை எதிர்க்கும் சக்தி சிதறுண்டு கிடந்த இந்துமதத்துக்கு இல்லாதிருந்தது. இதனை உணர்ந்த ஆதிசங்கரர் முக்கிய இந்து மதப் பிரிவுகளை இணைத்துச் சண்மதமெனப் பெயரிட்டு இந்தியாவின்

பல பாகங்களிலும் ஆறு மடங்களை நிறுவி இந்துமதத்தையும் நிறுவனப்படுத்தப்பட்ட மதமாக ஸ்திரப்படுத்தினார்.

பகுத்தறிவோடு புகுந்த சைன, பௌத்த மதங்களும் நிறுவனப்படுத்தப்பட்ட போதும் நிலை தளர்ந்ததினால் அவற்றை எதிர்த்துச் சண்மதம் கண்ட சங்கரரைப்போல சமயகுரவர்களாகிய நால்வரும் சைன, பௌத்தங்களை எதிர்த்துச் சைவமத புனருத்தாரணத்தைத் தெற்கே புகுத்தினர்.

இவர்களுள் ஞான சம்பந்தர், காலத்தால், சங்கரருக்கு முந்தியவராவார்.

இவற்றால் பலசைவமடங்கள் தோன்றின. இவற்றின் ஆதிக்கத்தில் பல திருக்கோவில்கள் உட்படுத்தப்பட்டன. மதகுருமாரின் செல்வாக்கும் உயர்ந்தது.

மடங்களும் திருக்கோவில்களும், குருமாரும், மடாதிபதிகளும் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தினர்.

விஞ்ஞானரீதியான அரசியற் கோட்பாடுகள் இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் பல பாகங்களிலும் புறக்கணிக் கப்பட்டன. இந்நிலையில் கைத்தொழில், கமத்தொழிற் புரட்சியோடு ரூசோ, வால்விட்மன் போன்ற சிந்தனையா-ளர்களும் தோன்றினர். உலகெங்கும் மதமானது மக்களை வர்க்கப்படுத்தி மேல்வர்க்கத்தினரெனப்படும் குருமாராகிய புத்தி ஜீவிகள் ஆட்சியாளர்களையும் கைக்குட் போட்டுக்கொண்டு நிறுவனப்படுத்தப்பட்ட மத சக்திகளினால் மக்களைக் கொடுமைப்படுத்துவதை கால்மாக்ஸ் தெளிவாக உணர்ந்தார்.

## கால்மாக்ஸ் என்னும் ஒரு சித்தபுருஷன்

மனித இயலையும் உலகவரலாற்றையும் விஞ்ஞானக் கண்கொண்டு ஆராய்ந்த மாபெரும் சித்த புருஷராகிய கால்மாக்ஸ் தமது சிந்தனைகளை 30 ஆண்டுகளாக லண்டன் நூல்நிலையத்திலிருந்து எழுதி முடித்த **மூலதனம்( Das Capital)** என்னும் நூலின் மூலம் உலகுக்கு அளித்தார்.

தமிழ்நாட்டில் தோன்றிய பதினெண் சித்தர்களைப்போன்ற எதிர்நீச்சல்காரரான மாக்ஸின் தனிப்பட்ட வாழ்வு துன்பகரமானது.

பப் **(Pub)** எனப்படும் மதுபானச்சாலையையே தமது கடிதப் போக்கு விலாசமாகக் கொண்டு வாழ்ந்த மாக்ஸ், தனது நண்பர் ஏங்கல்ஸ், ஜேர்மனியில் இருந்து அனுப்பிய சிறுதொகையை வைத்துக்கொண்டு வாழ்வு நடத்திய இந்த முனிவன், தனது குழந்தைபிறந்த போது அதைக் கிடத்தத் தொட்டில் இல்லை. அது அகால மரணமடைந்த போது அதை மூடச்சவப்பெட்டி இல்லை என்று எழுதியுள்ளார்.

அத்தகைய வறுமைக்கடலில் சுழன்றபோதும் சிற்றின்பத்திற்குப் பேர்போன இந்த லண்டன் மாநகரில் வாழ்ந்தபடி, தொழிலாளர் வர்க்கத்தின் கண்ணீருக்காகக் கண்ணீர்விட்டார். மாற்ற வழிதேடினார். கண்டு பிடித்தார். அதுவே மூலதனமாயிற்று.

நிறுவனப்படுத்தப்பட்ட மதமும் மதகுருமாரும்

சமுதாயச் சீரழிவுக்குக் காரணமென உணர்ந்தார். இவற்றின் பிடியில் ஆட்சியாளர் சிக்குண்டு நாடு சீரழிவதை உணர்ந்தார்.

இந்த மேல்வர்க்கத்தின் சொகுசுவாழ்க்கைக்கு உழைத்து உழைத்து ஓடாய்ப்போன உழைப்பாளி வர்க்கத்தின் துயரங்களை நீக்கமுடிவெடுத்தார்.

அவர்களின் விழிப்புணர்ச்சியிலேயே அவர்களைப் போராட்ட சக்திகளாகக் கொண்டே உலகை வாழ வைக்க முடிவுசெய்தார்.

இந்த உழைப்பாளி வர்க்கம் ரஸ்சியாவில் நடத்திய போராட்டத்தையே **ஆகா என்றெழுந்தது பார்யுகப் புரட்சி** என்று பாரதி பாடினான். இதனால் சமய முளபடிக்கெல்லாம் அறங்கொன்ற ஜார், சட. சட, வென்று சரிந்திட்டார்.

சார் மன்னரும் ரஸ்புடீன் என்ற மதகுருவும் மண்ணாகினர். நிறுவனப்படுத்தப்பட்ட மத ஆதிக்கம் ரஸ்சியாவில் மட்டுமல்ல உலகமெங்கும் ஆட்டம் கண்டது.

மாமுனிவன் மாக்ஸ் கடவுள் விரோதியல்ல, மதவாதிகள் அவனை நிரீச்சுரவாதியாக்கினர். மாக்ஸ் மதவிரோதியல்ல. மதவாதிகளும் முதலாளிவர்க்கமும் மதவிரோதி என அவரைச் சித்தரித்தனர்.

**மதவாதிகளும் முதலாளிவர்க்கமும் அவர்மீது அள்ளிப்பூசிய சேற்றின் ஒருதுளியே இன்றைய சிந்தனைப் பொருளாகிய மதம் மனிதனுக்கு அபின் என்பதாகும்.** சாதாரண மக்களிற்கு மதம் அளிக்கும் ஆறுதலையும் அது அளிக்கும் புகலிடத்தையும் புகழ்ந்துரைத்த அந்தஞானியின் கூற்றைப் பரப்புவார் இல்லை.

## மதம் என்னும் அபின்

அவர் கூற்றைத் திரித்து, மறைத்து மதம் மனிதனுக்கு அபின் என்று பரப்பப் பலகோடி முயற்சிகள்! பலகோடி பவுண்கள்! மாக்ஸ், மதம் மனிதனுக்கு அபின் என்றுகூறவில்லை. அவன் கூறியது Organised Religion Is The Opium Of The Mass என்பதாகும். இந்த வசனத்திலுள்ள Organised என்னும் சொல்லைத் தம்வசதிக் கேற்ப நீக்கிவிட்டனர் மதவாதிகள்.

நிறுவனப்படுத்தப்பட்டமதமே மனிதனுக்கு அபின் என்பது மாக்ஸின் கருத்தாகும்.

அபின் என்னும் போதைப் பொருள், ஏனைய போதைப் பொருள் போல உண்பவனைக் கண்டபடி புலம்பும் நிலைக்குத் தள்ளுவதில்லை. ஒருவித மயக்கநிலைக்கு உட்படுத்திப் பேசாநிலையில் நடைப்பிணமாக்குவது அபினின் இயல்பாகும்.


**இதனைப் போலவே நிறுவனப்படுத்தப்பட்ட மதநிறுவனமாகிய அபினும் மக்களைச் சிந்திக்கும் நிலை தவிர்த்துச் செயலற்ற நடைப்பிண நிலைக்குத் தள்ளிவிட்டது.**

இதனையே மதமானது பேய்பிடியாதிருக்கவேண்டுமெனத் தாயுமானவர் பாடினார். கால்மாக்ஸ் மதம் அபின் என்றார். தாயுமானவர் மதம் பேய் என்றார். அவ்வளவே. இதற்கு மேலும் விளக்கம் தேவையில்லை. நிறுவனப்படுத்தப்பட்ட கத்தோலிக்கத்தைப் பாருங்கள்! ரோமாபுரியில் வத்திக்கானில் ஒரு சாம்ரர்சசியமே நடக்கிறது. இஸ்லாமைப் பாருங்கள் மதவெறியின் உச்சக் கட்டத்தையடைந்து சிறுதவற்றிற்கும் கல்லால் எறிந்து கொல்கின்றது. பௌத்தத்தைப் பாருங்கள்! இலங்கையில் அந்த மதம் பேரினவாதமாக உருவெடுத்து ஆட்சியாளர்களையும் அடக்கி இனப்படுகொலை புரிந்துவருகின்றது.

மதமாற்றமோ, மனிதப்படுகொலையோ போதிமாதவனுக்கோ யேசு பெருமானுக்கோ, நபிக்கோ உடன்பாடானவையா? அவர்கள் போதனைகளை வைத்து நிறுவனப்படுத்தப்பட்ட மதபீடங்களைக் காட்டித் தம்மைப் போப் பாண்டவர்களாகவும் அயுத்துல்லாக்களாகவும் மகா நாயக்கதேரர்களாகவும் பட்டங்கட்டி அதிகாரங் கொண்டவர்கள் இன்று உலகை ஆட்டிப்படைக்கின்றனர்.

இதைப் பின்னணியில் வைத்து மாக்ஸின் கூற்றை நாம் ஆராய வேண்டும் இப்போது சொல்லுங்கள்! Organised Religion is the opium of the Mass என்னும் கூற்று சரியா? தப்பா?

> கலசம் கட்டுரைப்போட்டியில் 21 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பிரிவில் **முதற் பரிசு** பெறும் கட்டுரை.



# SIWAN & CO

## SOLICITORS

### ADMINISTRATORS OF OATHS

* Specialist in Criminal, Civil & Matrimonial Litigation
* Immigration
* Conveyancing
* Liquor Licensing
* Police Station Advice & Assitance
* Landlord & Tenant
* Debt Collection
* Wills & Probate
* Legal Aid Welcome

**10 A The Broadway**
**Southall , Middx**
**Tel: 0181 813 9548, 0181 574 5451**
**Fax: 0181 574 0330**

# கோயில் வழிபாடு

திருமதி தவம் சித்திரா

இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியதாகக் கூறப்படுகின்ற இந்து மதம் முதலில் சிந்து நதிக்கரை யிலேதான் தோற்றம் பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன. அது நாகரிக பரிமாணங்களால் வளர்ச்சியடைந்து உலகம் முழுவதும் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது என்றால் அதன் பெருமையை நாம் நமது எழுதுகோல்களுக்குள்ளே அடக்கிவிட முடியாது. சிந்து வெளியில் வாழந்த மக்கள் ஆரம்ப காலங்களிலே பெரிய பெரிய மரங்களையும் மலைகளையும், குன்றுகளையும், குகைகளையும், தங்கள் இறைவன் உறையும் இடங்களாகக் கருதி தமது அனுட்டான விதி முறைகளுக்கு ஏற்றபடி வணங்கி துதித்து வந்துள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். ஆனால் மனித நாகரீக மறுமலர்ச்சி அடைந்து விளங்குகின்றது ஆலய வழிபாடு.



இறைவனால் அருளப்பட்ட வேதமானது இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இது வேதம் ஆகமம் எனப் பெயர் பெற்றது. மீண்டும் வேதமானது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், என நான்கு வகைகளாகவும் ஆகமமானது இருபத்தெட்டாகவும் பிரிக்கப்பட்டன. இவ்வாகமங்கள் மேலும் 108க்கு மேற்பட்ட உப நிடதங்களாகப் பிரிகையுற்றுள்ளதாக கருதப்படுகின்றது. இவ்வேதங்கள் நான்கும் நான்மறை எனும் சிறப்புப் பெயரோடு இறை வழிபாட்டுக்குரிய போகங்களைத் தெளிவு படுத்தி சரியை, கிரியை, யோகம், ஞானமார்க்கங்களையும் அவற்றின் பலன்களையும் ஆன்மாக்களின் அகவிருளைப் போக்கி திருவருளை வழங்குவதையும் ஆகமங்கள் சிவாகமங்கள் எனும் சிறப்புப் பெயரோடு ஆலய அமைப்புக்களையும் வழிபாடியிற்றுதல்களையும் சாஸ்திர தத்துவ முறைகளையும் ஆசார அனுடடானங்களையும் உணர்த்தி நிற்கின்றன.

ஆலயம் என்றால் என்ன? என்று ஆராய்கின்ற போது ஆ–என்பது ஆன்மாக்களையும் லயம்–என்பது ஒடுங்குதல் என்பதையும் குறிப்பதால் உயிர்களாகிய ஆன்மாக்கள் ஒன்றாகச் சேர்ந்து இறைவனைத் தரிசிக்க சங்கமமாகின்ற புனித இடம் என சைவசித்தாந்த தத்துவங்கள் கூறுகின்றன. அது மட்டுமன்றி தம் எண்ணங்களை நேரடியாக இறைவனிடம் ஒப்புவித்து இஷ்ட சித்திகளைப் பெறும் தன்மை வாய்ந்த பகுதியாக போற்றப்படுகின்றது.

கோயில்களின் கட்டிட அமைப்பு முறைகள் பலதரப்பட்ட வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்ததேயாயினும் சைவசித்தாந்த அமைப்பு முறைகளையுடைய கோயில்களே இன்று சிறப்பானதாக கருதப்படுகின்றன. இவை சாஸ்த்திர முறைப்படி அமைந்த கோயில்களாகும். தலையழகும் சிற்ப அலங்காரங்களும் வரலாறுகளை உணர்த்துகின்ற திறமையும் சோழர் காலக் கோயில்களிலேயே வடிவமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவ்வமைப்பு முறையே இன்னும் பழக்கத்தில் இருந்து வருகின்றது. இந்தியாவிலே கஞ்சைப் பெருங் கோயிலைக் கட்டுவித்த இராஜராஜ சோழனின் பெருமையையும் அவனது இந்து சமய பற்றினையும் சைவ சமய வரலாறுகள்தெளிவாக உணர்த்தி நிற்பதை நாம் மறந்துவிட முடியாது. கோயில் என்றால் இன்னுமோர் விளக்கத்தினை சைவ சித்தாந்தம் கூறுகின்றது. கோ– என்பது அரசன் என்றும் இல்–

என்பது இல்லத்தையும் குறிப்பதால் கோ இல் ஸ்ரீகோயில் என வழங்கப்பட்டது. அதாவது உலகத்திற்கெல்லாம் தலைவனாக விளங்கும் அரசன் வாழ்கின்ற மாளிகை என்பது பொருளாகும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் ஔவையாரின் கூற்றினை திருநாவுக்கரசு நாயனார் தனது தேவாரப்பதிகத்திலே **திருக்கோயிலில்லாத திருவிலூரும் திருவெண்ணீறணியாத திருவிலூரும், பருக்கோடிப் பத்திமையால் பாடாவூரும், பாங்கினொடு பலதளிகளில்லாவூரும், விருப்போடு வெண்சங்க மூதாவூரும், விதானமும் வெண்கொடியுமில்லாவூரும், அருப்போடு மலர்ப்பறித்திட்டுண்ணாவூரும், அவை—யெல்லாம் ஊரல்ல அடவிகாடே**

என்று பாடியுள்ளார். மனிதனுடைய வாழ்வியலிலே கோயில் எவ்வளவு முக்கியமானது என்பகை இப்பாடல்கள் வலியுறுத்தி நிற்கின்றதைக் காண் கின்றோம். கோயிலின் கும்பாபிஷேகத் திருவிழாவினை தரிசிப்பவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் கோயிலுக்குச் சென்று வழிபட்ட பலாபலன்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் ஓர் ஆலயத்தின் மகோற்சவத்தைச் சென்று தரிசித்தவர்கள் ஒருவருட காலம் தினந் தோறும் சென்று வழிபட்ட பலாபலனைப் பெற்றுகொள்வார்கள் என்றும் சிவாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதாக அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே ஆலயம் தொழுவது சாலவும் நன்றே என்பதை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

கோயில்கள், மூர்த்தி தலம் தீர்த்தம் எனப்படுகின்ற சிறப்பும் சங்கங்களைக் கொண்டிருத்தல் முக்கியமான தொன்றாக கருதப்படுகின்றது. இவை புண்ணி யஸ்த்தலங்கள் என கூறப்படுகின்றன. இவ்வால யங்களிலே இறைவனின் அனுக்கிரகம் நிறைந்திருக்கும். இதனால் தான் பல இடங்களில் சிறப்பு வணக்கத் துக்குரிய புண்ணியஸ்தலங்கள் பல வரலாற்று மகிமையுடன் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதும் உலகம் அறிந்த உண்மையாகும்.

கோயில்களால் எமக்கு உண்டாகக் கூடிய பலா பலன்கள் என்ன என்பதை ஆராய்வோமாகில் பல அடியார்கள், ஞானிகள் முனிவர்கள், நாயன்மார்கள் காட்டிச் சென்ற நல்வழிகளே எமக்கு ஆதாரங்களாகவும் அற வழிகளாகவும் வழிகாட்டி நிற்கின்றன. மனம் வாக்கு காயங்களால் தீயவழிகளைத் தீண்டாமல் சிவசிந்தனையோடு இறைவனை நேரடியாகத் தரிசிக்கக் கூடிய புனித தலங்களின் யாத்திரைகளும் வழிபாடுக ளுமே கோயில் வழிபாட்டிற்குரிய சிறப்பம்சங்களாகும். ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களாலும் பீடிக்கப்பட்டு திருவருளை திருவருளின் உண்மையை அறியமுடியாமல் இருண்ட வாழ்வில் தவிக்கின்ற நிலையைத் தகர்த்து நன்னெ றியைக் காட்டி நிற்பது ஆலய வழிபாட்டின் சிறப்பாகும். திருவிழாக்கள் விசேட திருநாட்கள் சிவராத்திரி, நவராத்திரி, சோமவாரம், கந்தசஷ்டி போன்ற பல விரத நாட்களில் இறைவனின் பால் எம் மனங்களைச் செலுத்தி விரதமிருந்து வழிபாட்டியற்றவும் அவற்றின் கட்டாய கிரியை முறைகளைக் கடைப்பிடிக்கவும் கோயில் வழிபாடு எமக்கு பெரும் ஆதாரமாக அமைந்து விடுகின்றது. ஒவ்வொரு விரத அனுட்டானங்களுக்கும் ஒவ்வொரு விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவற்றை நாம் தத்துவ முறைப்படி அனுஷ்டிக்கின்ற போது தான் அவ்விரதங்களின் பரிமாணங்களையும் பலா பலன்களையும் நன்கு அறிந்து கொள்ள முடியும் அதனால் எமது மனம் வாக்கு காயத்தினை ஒரு முகப்படுத்தி காலநேர தியான துதிகளையும் தேவார பாராயணங்களில் ஓதல் விதிகளையும் இவ்வழிபாட்டின் மூலமே தெளிவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் சிவ சிந்தையுடன் ஒருமுகமாக அனுஷ்டிப்பதன்மூலம் விரதத்தின் முழுப்பலனையும் பெற்றுக் கொள்ளலாம் என்ற தத்துவ விதியின் இலக்கணங்களைப் புரிந்து நித்திய நைமித்திய கிரியைகளைக் கடைப்பிடிக்கின்ற போது நம் உள்ளமும் தெய்வ அனுக்கிரகங்களைப் பெற்றுக் கொள்கின்றது என்பது உண்மை. விரத காலங்களின் நியதிகளையும் அனுட்டான விதிகளையும் அறிந்து கொள்ளமுடியாக ஒருவரால் விரதமிருந்து அவ்விரத காலங்களை அனுஷ்டித்து அதன் பலா—பலன்களைப் பெற்றுக் கொள்வது மகாகஷ்ரமாகும். எனவே அவ்விதியின் விளக்கங்களையும் அதன் ஆசான அனுட்டானங்களையும் அறிந்து கொள்ள ஆலய வழிபாடு இன்றியமையாததொன்றாகக் கருதப்படுகின்றது. ஒரு கிராமத்திலே நடைபெறுகின்ற ஆலய அலங்கார உற்சவத் திருவிழாக் காலங்களிலே எம் சைவ சமயத்தவர் முழுமையான பக்தியுணர்வோடு அவ்வி ழாவினை நடத்த முன்படுகின்றனர். இச்சந்தர்ப் பங்களிலே அக்கிராமமே தெய்வத் திருவருளை பகிர்ந்து கொள்ளும் உணர்வு பூர்வமான காரியங்களோடு தம்மை மாற்றிக் கொண்டு தெய்வத்திருப்பணிக்குள்ளே சங்கமமாகி விடுகின்றன. இதனால் மொத்தத்தில் அவ்வூரில் வாழ்கின்ற மக்களெல்லாம் ஒருமன நினைவோடு திருவருளைப் போற்றி நிற்பர். இத்தகைய செயற்பாடுகளால் யாவருமே நல்ல எண்ணங்களையும் பக்திசிரத்தையையும் வளத்துக் கொள்கின்றனர்.

இதன்படி இந்து மதம் தூய்மையையும் தெய்வீகத்தையும் பரப்பி நிற்கின்ற கருவியாக அமைந்து விடுவதால் இறைவனின் ஆசிக்குட்பட்ட நகரமாகக் காட்சியளிக்கின்றது. இதனால் தான் எம் மதமானது ஒவ்வொரு மனிதனையும் தர்மம், அன்பு ஒற்றுமை புரிந்துணர்வு எனும் நல்ல எண்ணங்களையும் அறங்களையும் வளர்க்கக் கூடிய மாமனிதர்களை உருவாக்கித் தந்திருக்கின்றது இவை நம் எண்ணங்களைத் தீயவழிகளில் செல்லவிடாமல் நமக்குள்ளே அடக்கி ஆளுமைப்படுத்திக் கொள்வதனால் மனத் தெளிவையும் துய்மையையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

திருக்கோயில்களின் அமைப்பு முறைகளும் எமக்கு பெரும் உதவியாக அமைந்துவிடுகின்றன. திருத்தலங்களின் இராஜகோபுரங்கள் நாம் எங்கிருந்து நோக்குகின்ற போதும் தெய்வசிந்தனையைத் தரக்கூடியதாக அமைந்துவிடுகின்றன அதுமட்டுமன்றி ஆலயங்களில் கட்டப்பட்டிருக்கும் மணிக்கோபுரங்களில் இருந்து அதிகாலையில் கேட்கின்ற மணியோசை திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, கந்தசஷ்டி கவசம், சுப்பிரபாதம். தேவார பராயணங்கள் ஆகியவை ஓதப்படுகின்ற போது கேட்கின்ற இனிய ஓசைகள் எம்மையறியாமலே எமக்கு இறையுணர்வுகளையும் பக்திப் பரவசங்களையும் இதயத்தின் அடிப்பாகத் திலிருந்து உதயமாகி விடுகின்றன. இது இறையச்சம் திடசித்தமுடைய உள்ளங்களில் எழுகின்ற ஞான மார்க்கத்தின் பிரதிபலிப்பாகின்றது. இது எமது சைவ மக்களனைவரையும் தெய்வீக வாழ்க்கைக்கு அழைத்துச் சென்று விடுகின்றது. அதுமட்டுமன்றி இப்புனித வழிபாட்டோசைகள் அந்நகரத்தையே புனிதப் படுத்தி விடுகின்றன. கோயில் வழிபாட்டிலே எந்தவொரு சமயமும் கொண்டிராத புனிதம் நிறைந்த கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. எமது சைவசமயம் ஒன்றுதான் கோயிலுக்கு செல்லுகின்ற போது நீராடி தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து விபூதி உருத்திராக்கமணிந்து கோயிலுக்குச் செல்லவேண்டும் அங்கே தீர்த்தக் கேணியில் கால், வாய் அலம்பி வெளிவீதியை வலம் வரல்வேண்டும். பின்பு இராஜகோபுரத்தை வணங்கி திருக்கோயிலின் உள்ளே சிவசிந்தனையுடன் மனப்பக்குவம் நிறைந்தவராக உள்ளிடவேண்டும். அங்கே வீழ்ந்து வணங்கி உள்வீதியை வலம் வரவேண்டும். அங்கு காணப்படுகின்ற தெய்வங்களை வணங்கித் துதித்து பின் திருக்கோயில் வாசலை நோக்கி உட்செல்கின்றோம். இங்கு நந்தி பலிபீடம், கொடிமரம் என்பவற்றையும் தரிசிக்கின்றோம். இங்கே எம்தீய எண்ணங்களை பலிபீடத்தில் பலியிட்டு தூயமனத்தினராய் மூலஸ்தான திரை விலகும்வரை காத்திருக்க வேண்டும். இம்மூலஸ்தான மண்டபத்தின் வாசலில் போடப்பட்டி ருக்கும் திரையானது எம் ஆன்மாவை மறைத்திருக்கும் மாயை என கூறப்படுகின்றது. இம்மாயத் திரை விலகுகின்றபோது இறைவனை நேரடியாக தரிசிக்க முடியும் என்ற தத்துவத்தைக் காட்டுவதாகவே இத்திரை தொங்குகின்றது. இத்திரை விலக்கப்படுகின்றபோது பஞ்சாலாத்தி காட்டப்படும் அச்சோதியிலே இறைவனின் திருவுருவம் நம் கண்களுக்கு புலப்படும். அதன் பின்பு சண்டேஸ் வரரைத் துதித்து இறைவனின் இஷ்டசித்திகளைப் பெற்று வீடு திரும்புகின்றோம்.

புனிதத் தலங்களுக்கு யாத்திரை செய்கின்ற அடியவர்கள் கூட தம் எண்ணங்களின் நிவர்த்திக்காக இறைவனை நோக்கி செய்கின்ற விண்ணப்பங்கள் பூர்த்தியடையப் பெற்று திரும்புபவர்களையும் காண்கின்றோம். எம் மனத்தாக்கங்களையும் துன்பங்களையும் சுமைகளையும் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி நிற்கின்ற அடியார்களின் வேண்டுதலை அடுத்த கணத்திலே அவர்கள் துன்பங்களை நீக்கி அருள்பாலித்து நிற்கின்ற இறைவனின் கருணையை அனுபவ வாயிலாக அறிந்து துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் வழியை உணர்த்தி அர்த்தமுள்ள இந்து மதம் என்ற ஆய்வுத் தத்துவத்தை நெறிப்படுத்திய கவியரசு கண்ணதாசன் கூட நெஞ்சுக்கு நின்மதி ஆண்டவன் சந்நிதி என்று அழகாகக் கூறியிருப்பதைக் காணமுடியும்.

மாயையினால் கட்டுண்டு மனதையும் மனதுக்குரிய ஆன்மாவையும் வருத்துகின்ற செயற்பாடாகிய ஆணவத்தை அகற்ற தெய்வ சிந்தனையோடு புனிதத் தலங்களைத் தரிசிக்கின்றபோது இவை அனல்மேல் மெழுகு போல் திருவருளினால் அகற்றப்படும் என்பது தத்துவமாகும். இது தெய்வசிந்தனையோடு இறை வனைத் தரிசிக்கின்ற புனிதமான இடங்களில் இத் துயரைக் களைந்து நல்லருளை இறைவன் வழங்குகின்றான் என்பது உண்மையாகின்றது.

இதனால் நமது நாட்டிலும் பல பிரசித்திபெற்ற தலங்கள் உண்டு என அறிகின்றோம். இவ் வாலயங்களில் இறைவனின் அனுக்கிரகங்களும் ஆசிகளும் இருப்பதனால் தான் இங்கே காரிய சித்திகள் வெற்றியடைகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், நகுலேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம், வற்றாப்பளை கண்ணகியம்பாள் கோவில், நயினை

நாகபூசனி, செல்வச் சந்நிதி, கதிர்காமம் போன்ற இன்னோரன்ன ஆலயங்கள் இலங்கையில் மூர்த்தி தலம் தீர்த்தம் அமைந்த புனிதமான ஆலயங்கள் என இன்றும் வரலாறுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. ஆலய வழிபாடு தன்னையும் தன் எண்ணங்களையும் மலங்களுக்குள்ளே திரிவுபடாதவாறு காத்து நிற்கும். அதுமட்டுமன்றி அடியவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய திருவருளை ஆலய வழிபாட்டின் கடைப்பிடித்தலினாலேயே பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒரு ஆன்மாவானது ஆலயவழிபாட்டின் நிமித்தம் தன் ஆத்மாவைப் பலப்படுத்திக்கொள்கின்றது. இதனால் மனதில் ஏற்படக்கூடிய பயம் சஞ்சலங்கள் ஏமாற்றங்கள் என்பன மறைந்து தூய்மையான தெளிவான நம்பிக்கை பிறக்க வழி ஏற்படுகின்றது. இதனால் மனதுக்கு அமைதியும் தன்னம்பிக்கையும் ஏற்பட்டு விடுவதால் அந்த அடியவரின் ஆத்மா பக்குவப்பட்ட ஆத்மாவாகிவிடுகிகின்றது. அவ்வேளையிலே எந்த மலத்துக்கும் கட்டுப்படாத தெய்வாம்சம் பொருந்திய திருவருளின் துணையோடு நிற்கின்றது.

இவை மனதை திடப்படுத்தி இறைசிந்தனையோடு ஆலயவழிபாட்டில் தன்னை அர்ப்பணித்துக் கொள்ப வர்களுக்கு மாத்திரமே கிடைக்கக்கூடிய பலனாகும்.

இன்றைய சூழலில் நாம் ஆலயவழிபாட்டினை இழந்தமையினாலேயே எமது மனங்களில் பல வகையான துன்பங்கள் சூழ்ந்து கொண்டுள்ளன. இன்று எம் தாயகத்திலே யுத்தத்தின் கொடுமைகளால் எத்தனையோ பிரசித்திபெற்ற ஆலயங்கள் அழிக்கப்பட்டு சூறை யாடப்பட்டு விட்டன. இதனால் எம்மக்களும் பெரும் இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டுவிட்டனர். இதனால் இன்று ஆலய வழிபாட்டினை இழந்து தவிக்கின்ற உள்ளங்கள் வேதனையில் ஆழ்ந்திருப்பது நாமறிந்த உண்மையாகும். இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற சில சிவநேயச் செல்வங்களின் ஆக்க ஊக்கத்தினால் ஐரோப்பிய நாடுகளிலும் கோயில்களை அமைத்து கோயில் வழிபாட்டினை நெறிப்படுத்திய எம் சைவத் தமிழன்பர்களைப் பராட்ட வேண்டும். இது எதிர்கால சமுதாயம் திருக்கோயில் வழிபாட்டினை தெரிந்து கொள்ள களம் அமைத்துக் கொடுத்தது. நம் தமிழ்ச் சிறார்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்று ஔவை மூதாட்டி பாடிய அருட்பாடலை நாம் மறந்துவிடமுடியாது. திருத்தலத் தொண்டு செய்து முத்திபெற்ற நாயன்மார்களில் சரியைத் தொண்டு செய்து இறை பதம் அடைந்த திருநாவுக்கரசரின் வாழ்க்கைநெறி எமக்கெல்லாம் பெரும் வழிகாட்டியாக நிற்கின்றது.


எனவே கோயில் வழிபாடு மனிதர்களை நல்வழிப்படுத்தி தூய்மையான உண்மையான அடியார்களை உருவாக்குகின்றது. ஐந்தொழில்களால் ஐம்பூதங்க ளையும் (நிலம், நீர். காற்று, தீ, ஆகாயம்) ஆண்டு நிற்கும் இறைவனை எம் ஐம்பொறிகளையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) அடக்கி வணங்கி நல்லருளைப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது கோயில்வழிபாட்டின் சிறப்பம்சமாகும் மனம், வாக்கு, காயம், சித்தம், புத்தி இவற்றை ஒரு நிலைப் படுத்தி வாழவும் கோயில் வழிபாடு வழிஅமைக்கின்றது. அத்துடன் நல்ல எண்ணங்களையும் செயற்பா டுகளையும் பெருக்கி நம் இனத்தின் வாழ்வுக்காக நாளைய எம் எதிர்கால ஈழத்தின் இந்து சமயமறு மலர்ச்சிக்காக பாடுபடவேண்டும். அறம், தர்மம், கருணை, தெய்வீகம் என்பன கோயில் வழிபாட்டில் கிடைக்கக் கூடிய பண்புகளாகும். அதனால் ஒரு மனிதன் மனிதநேயமுடைய தத்துவ ஞானியாக விளங்க அவனை வழிப்படுத்திய தத்துவங்களும் கோயில் வழிபாட்டியலின் ஆதாரங்களே என்பது உண்மையாகும்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



இந்த விவேகானந்தன் என்ன செய்தான்
என்பதை யார் அறிந்தார்கள்?
இன்னொரு விவேகானந்தன் இருந்தால்
அறிந்திருப்பான். ஒரு விவேகானந்தன்
என்ன காலப்போக்கில் எத்தனையோ
விவேகானந்தர்கள் தோன்றத்தான்
போகிறார்கள்.

**–விவேகானந்தர்–**



# தீபாபலியா? தீபாவளியா? தீவாளியா?

## புலோலிப் புலவர் செல்லத்தம்பி

வடமொழிச்செற்கள் பல, சங்ககாலத்திலேயே தமிழ்மொழியில் நுழைந்துவிட்டன. வடமொழிச் சொற்களின் வரவு தமிழ் மொழியின் சாயலை அழித்துவிடக்கூடாது என்பதற்காக தமிழரின் பழந்தமிழிலக்கண நூலான தொல்காப்பியம் வடமொழி தொடர்பில் விதி ஒன்றை வரைந்தது. தமிழல்லாத ஒலிகளைக் கொண்ட வடசொற்கள் தமிழில் நுழைய நேர்ந்ததால் அந்தச் சொற்களைத் தமிழ் மயப்ப டுத்துவது எப்படி என்று வரையறை செய்தது. வடமொழிச் சொல் தமிழில் வரும்போது வடமொழிக்கே இயல்பான ஒலியைக்களைந்து அவற்றின் இடத்தில் தமிழ் ஒலியைப் புகுத்தி எழுத வேண்டும் என்று தொல்காப்பியர் விதிசெய்தார்.

**வடசொற்கிளவி வடஎழுத்தொரீஇ**
**எழுத்தொடுபுனர்ந்த சொல்லாகும்**

என்பதே அந்தவிதி. புஷ்பம் என்பதைப் புட்பம் என்றும், ஜனகன் என்பதைச் சனகன் என்றும், எழுதவேண்டும் என்று தொல்காப்பியர் விதிசெய்தார்.

வடமொழிச்சொற்கள் தமிழில் வரும்போது அவற்றை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை நடைமுறையில் காட்டியவன் கம்பனே. லக்ஷ்மணன், இலக்குமணன் என்றும் ஷத்துருக்கனைச் சத்துருக்கன் என்றும், கிருஷ்ணன் என்பதைக் கிட்டிணன் என்றும் துஷ்டனைத் துட்டன் என்றும் விஸ்வாமித்திரன் என்பதை விசுவாமித்திரன் என்றும் தமிழ்ப்படுத்தி எழுதிக்காட்டியவன் அவனே. வடஎழுத்துக்கள் கலந்த வட சொற்கள் தமிழ் மொழிக்குள் வரும்போது அவை தமிழுருப்பெறுமாறு சொல்லாக்குதலைத் தற்பவம் என்றும், வடமொழிஒலி கொண்டிராத வடசொற்களைத் தமிழ் எழுத்துக்களாலே எழுதும் முறையைத் தற்சமம் என்றும் இலக்கணகாரர் கூறுவர். கமலம் என்பது வடமொழிச் சொல் ஆனால் கமலம் என்ற ஒலியை எதுவித மாற்றமும் செய்யாமலே தமிழில் எழுதிவிடலாம். இங்கே மாற்றம் வேண்டாமல் எழுதப்படுதலின் கமலம் என்பது தற்சமமாகத் தமிழுள் வந்தசொல். மாற்றம் வேண்டியவிடத்து மாற்றித் தமிழ்உருவம் தந்து எழுதப்படும் சொல் தற்பவம் எனப்படும். சத்துருக்கன் என்பது ஷத்துருக்கன் என்ற வடசொல்லின் தமிழ்த்தற்பவம்.

வடமொழியான கமலம் என்ற சொல்லை ஓசைப்பிறழ்ச்சி எதுவுமின்றித் தமிழில் அதே ஓசைதரும்வண்ணம் எழுதிவிடலாம். வேறுசில வடமொழிச் சொற்களை அவ்வாறு எழுதுவதில், சில இடங்களில் சிக்கல் ஏற்படுவதுண்டு.

தமிழ்மொழியில் ழ என்ற எழுத்தைத் தமிழுக்கே சிறப்பான எழுத்தென்பர் ற, ன, என்ற தமிழ் எழுத்துக்களும், தமிழ் மொழிக்கே சிறப்பான எழுத்துக்கள் என்று கூறுவதும் உண்டு. மொழி—மாற்றம், ஒலிப்பெயர்ப்பு என்றுவரும்போது ல, ள, லி, ளி, ன, ண ஆகிய எழுத்துக்கள் சிரமம் தருவனவாக உள்ளன.

உதாரணமாக, தீபாவளி என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இது தமிழ்ச் சொல்போலத் தோன்றினாலும் இது எல்லாவகையாலும் ஒரு வடமொழிச் சொல்லாகும். சொல்லாலும் புணர்ச்சியாலும் வடசொல். வடநாட்டாரின் பண்டிகையைக் குறிக்கின்ற ஒரு கூட்டுச்சொல் இது. தீபம்—ஆவளி என்ற இரண்டு சொற்களால் ஆனது இந்தக் கூட்டுச்சொல். தீபம் என்றால் விளக்கு, ஆவளி என்றால் வரிசை, அதாவது விளக்குவரிசை, அதாவது விளக்குகளை வரிசையாகக் கொளுத்திக் கொண்டாடப்படும் நிகழ்ச்சிக்குத் தீபாவளி என்று பெயர். ஆவளி என்ற சொல் வடமொழிச்சொல். இதனைத் தமிழில் தற்சமமாக ஆவளி என்று எழுதுவதில் இடரில்லை. ஆகவே தீபாவளி என்று தமிழில் எழுதுவது தற்சமமாகத்தான். ஆனால் ஒருசிலர் தீபாவளியைத் தீபாவலி என்றும் எழுதுகின்றார்கள் இவ்வாறு எழுதுவது சரியா என்று கலசவாசகர் சிலர் கேட்டதன் விளைவுதான் இந்தக் கட்டுரை. இக்கேள்விக்கு மறுமொழி எப்படி எழுதுவது என்று எண்ணியபோது வம்சாவளி, கிருபாலினி, கிருபாளினி, விளத்து, விலத்து, நாமாவளி, நாமாவலி, தந்தாவளி, வேளை, வேலை, மதில், மதிள், செதில், செதிள், மங்கலம், மங்களம் போன்றசில சொற்கள் மனதில் நிழலாடின.

நாமாவலியை நாமாவளி என்றும் மதிலை மதிள் என்றும் செதிலைச் செதின் என்றும், மங்கலத்தை மங்களம் என்றும், வேளையை வேலை என்றும், விலத்து என்பதை விளத்து என்றும், கிருபாளினியைக் கிருபாலினி என்றும், எழுதுகின்ற, சொல்லுகின்ற வழக்கு உண்டே என்ற எண்ணம் மனதில் ஊன்றியது. ள வருகின்ற இடங்களில் ல வருவது தமிழ்மொழியில் விந்தையுமல்லப் புதுமையுமல்ல என்ற எண்ணம்

மேலோங்கியது. இலக்கணம் எப்படியிருந்தபோதும் மரபுதான் உண்மை நிலையைத் தீர்மானிக்கும் என்று பவனந்தியார் சொன்ன **எப்பொருள் எச் சொலின் எவ்வாறுயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு** என்ற மகாவாக்கியம் மனதில் பளிச்சிட்டது. வடமொழியான ஆவளியை ஆவலி என்று எழுதும் முறை தமிழில் நெடுங்காலமாகவே இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. கைக்கெட்டிய நூல்களைத் தட்டிப்பார்த்தேன். சிவஞான சுவாமிகள் அவர்களால் தொகுக்கப்பட்டதாகக் கூறப்படும் கம்பரந்தாதி என்ற நூலில் ஆவலி என்றசொல் ஆவளி என்று பொருள் தருமாறு கையாளப்பட்டிருக்கின்றது. அந்நூலின் 76ஆவது பாடலில் **மஞ்சுள ரோமாவலி** என்ற சொற்றொடர் வருகின்றது. ரோம ஆவலி என்றால் ரோம வரிசை அல்லது மயிர் வரிசை என்று பொருள்தரும். ஆக ஆவளியை, ஆவலி என்றும் கூறும் பழக்கம் புதிதல்ல என்பது புரிகிறது. எனவே தீபாவளியைத் தீபாவலி என்று எழுதினாலோ கூறினாலோ பிழையல்ல என்று நாம் ஆறுதல் கொள்வோம்.

தமிழில் இதுபோன்ற சங்கடங்கள் வேறும்பலஉள. அவற்றுள் சிலவற்றை அடுத்துவரும் கலச இதழ்களில் காண்போம்.


**CLAYHALL TUITION CENTRE**

MATHS, PHYSICS, MECHANICS
CHEMISTRY, ECONOMICS, ACCOUNTS, STATISTICS
COMPUTER STUDIES

ONE TO ONE & GROUP CLASSES

42, STONELEIGH ROAD
CLAYHALL, ILFORD,
ESSEX IG5 0JD
TEL: 0181 550 4233

# SATHY PROPERTY SERVICES

**Residential Lettings &Sales**

LANDLORDS & TENANTS WELCOME

LANDLORDS

YOUR RENT IS GUARANTEED * QUARTERLY RENT PAYABLE IN ADVANCE

TENANTS

ACCOMMODATION ARRANGED TO SUIT YOUR COMFORTS

AREAS

Wembley, Willesden, Harlesden, Harrow, Kingsbury, Ealing

220 High Street, Harlesden, London NW10 4SY
**Tel: 0181 961 9613 Three lines**
**Fax: 0181 961 9614 Mobile: 0956 483308**
**Website: HTTP/WWW .SATHY.COM**

# முலை அளவே ஆகுமாம் மூப்பு

## கலாநிதி வித்துவான் க. ந. வேலன்

தமிழன்பர் ஒருவர் தாம் எழுதிய ஒருநூலுக்கு மதிப்புரை வழங்குமாறு வேண்டி என்னிடம் வந்தபோது, அவ்வையாரின் பாடல் ஒன்றின் பொருள் புரியவில்லை என்றும் அந்தப்பாடலின் உட்பொருளை உணர்த்தும் வகையில்கட்டுரை ஒன்றை வடிக்குமாறும் கேட்டார். குழப்பம் நிறைந்த அந்தப்பாடலுக்கு உரை எழுத முயன்ற முயல்வே இந்தக்கட்டுரை.

**முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒருபொருளைத் தப்பாமல் தன்னுள் பெறான் ஆமின்— செப்பும் கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள் முலை அளவே ஆகுமாம் மூப்பு**

என்ற அவ்வையாரின் பாடல் நல்வழி என்ற பாடற்றொகுதியில் வரும் ஒருபாடல்.

இந்தப்பாடலுக்குப் பலர் பொருள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், பொருத்தமாகப் பொருள் எழுத இந்தப்பாடல் இடம் தரவில்லை. பொருள் எழுதியவர்கள் எல்லோரும் சொல்லுக்குப் பொருள் எழுதினார்களேயொழிய பாடலுக்குப் பொருள் எழுதவில்லை. அதனாலேதான் அந்த அன்பர் எனது உதவியை நாடினார்.

இந்தப் பாடலில் மூன்று அற்று என்ற சொற்றொடருக்கு காமம்—வெகுளி—மயக்கம் ஆகிய மூன்றும் அறுதல் என்றும், பசு, பதி, பாசம் என்னுகின்ற பன்மையுணர்வு நீங்கி ஒன்றாகக் காணும் காட்சி கைவரப் பெறுதல் என்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம். காமம் முதலியன அற்ற நிலையில் ஒருவற்கு உண்டாவது ஒன்றாகக் காணும் காட்சியேயாதலால் எவ்விதமாகப் பொருள் கொண்டாலும் கருத்து ஒன்றே. ஆனால் முப்பதாம் ஆண்டளவில், அதாவது முப்பது வயதில் சாதாரண ஒருவர் இதைப்பெறுவது சாத்தியமா? அதுவும் உலகியல் உணர்வு மலிந்த இந்தக் காலத்துக்கு இது பொருந்துமா என எண்ணத்தோன்றுகின்றது. ஆனால் இந்த அறிவுரை ஞானநாட்டமுடையார்க்குக் கூறிய ஒன்றாகக் கொள்ளலே பொருந்தும் போலத் தோன்றுகின்றது. காலமுண்டாகவே காதல் செய்துய்மின் என ஞான சம்பந்தர் பாடினார்.

ஒருதாயின் வயிற்றிற் பிறந்த அன்றே மூன்றற்று ஒரு பொருளை உணர்ந்த ஞானிகள் இருக்கிறார்கள். அதனால் அவர்களும் பிறவிப் பயனை அடைந்தார்கள்,உலகையும் உய்வித்தார்கள்.

இங்கே பாடலில் குறிப்பிட்ட **முப்பதாம் ஆண்டு** என்பது கண்டிப்பான ஒரு காலக்கெடு அன்று முப்பதொடு இளமை போம் ஆதலால் மிக இளமையிலேயே விை-ரவாக எனப் பொருள் கொள்ளுதலே பொருத்தமாகும் உடலும் உள்ளமும் தளர்ந்து ஓய்ந்த நிலையில் தோற்றுவது ஞானமல்ல. அது இயலாமையில் தோன்றும் போலி. இளையான் அடக்கமே அடக்கம் வலிஇல் நிலைமையால் வல்லுருவின் பெற்றம் புலியின் தோல் போர்த்த நிலை அது எனவே இளமையில் கூடிய விரைவில் இந்நிலை தோன்ற வேண்டும். அங்ஙனம் தோன்றாமல், முதுமை யடைந்தால், அதாவது மெய்யுணர்வு பெறாமல் ஒருவன் முதுமை அடைந்தால், அவனிடம் இருக்கக்கூடிய அறிவு அல்லது கலை, அவன் கற்றதை உலகுக்கும் காட்டும் ஒரு முயற்சியாகவே அமையும் அன்றி கலையின் பயனாகிய மெய்யுணர்வு அமையாத காரணத்தால் அவனது மூப்புப் பயனற்றதாகின்றது.

**கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்**

இதனை விளக்குவதற்கு ஔவைப்பிராட்டியார் ஓர் உவமை கூறுகின்றார்

**காரிகையார் தங்கள் முலையளவே ஆகுமாம் மூப்பு**

என்பது அந்த உவமை மூன்று அற்று ஒருபொருளைப் பெறாமல் இவன் அடைந்த மூப்பு, காரிகையார் தங்கள் முலையளவே ஆகும் என்று கொண்டு கூட்டிப் பொருள்காண வேண்டும்

காரிகை என்பதற்கு அழகு என்பது பொருள். இங்கு ஆகுபெயராக அழகு பொலியும் இளமைநிறைந்த பெண்— இடம்நோக்கித் திருமணமாகாத பெண் காரிகை என்பது இப்பாடலில் திருமணப்பருவம் எய்தியும் திருமணமாகாத பெண், ஆளில்லா மங்கை

என்று ஔவை வேறோரிடத்தில் குறித்த பெண் இந்தக் காரிகையே. சிற்றின்பத்தை அனுபவிப்பதற்கு வேண்டிய உறுப்பாகிய ஏந்திள வனமுலை இருந்தும் அதனை அனுபவியாது வீணே பயனற்றுக் கழிந்த முலைபோல, மெய்யுணர்வுக்கு ஏதுவாகிய கலைஞானமிருந்தும் மெய்யுணர்வு பெறாது வாழ்ந்தவன் வீழ்நாளாய்க் கழிந்ததுபோலும் அவனது கலையின் நிலை என்பது பொருள்.

காரிகையார் வன முலையிருந்தும் சிற்றின்பம் பெறாமல் முதிர்ந்ததுபோல, இவனும் கலையிருந்தும், கலையின் பயனாம் மெய்யுணர்வு பெறாமல் முதிர்ந்தான் என்பது கருத்து.

பெண்ணின் சிற்றின்பப் பெருக்கத்துக்கு அவர்தம் முலைகள் இன்றியமையாதன என்பதனை **கல்லாதான் சொற்காமுறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண்காமுற்றற்று என்ற குறள்மூலம்** வள்ளுவர் விளக்கியுள்ளார்.

சுருக்கமாகக் கூறுவதாயின் வனமுலையிரண்டிருந்தும் திருமணமின்மையால், இளமை வீணே கழிந்து முதுமை எய்தியதுபோல, கலை ஞானமிருந்தும் மெய்யுணர்வு அடையாமல் இவனும் முதுமை எய்தினான் என்பதாகும்.

ஆதலால், மகளிர் இளமையில் திருமணம் பெறவேண்டும் என்பதும், இளமையில் மெய்யுணர்வு பெறவேண்டும் என்பதும் ஔவையின் கருத்து.

# சைவமுன்னேற்றச்சங்கம் வாழியவே

**—செ. நாகேந்திரன்—**

வாழிய சைவம் வாழிய சைவம் வையகம் போற்றிடவே
வாழிய சைவ நீதியும் மக்களும் வான்புகழ் ஓங்கிடவே
வாழிய சைவ முன்னேற்றச் சங்கம் சீமையில் பல்லாண்டே
வளம் பலபெற்றும் புகழ்பல பெற்றும் வாழிய வாழியவே
சைவம் போற்றும் சந்நிதி யெல்லாம் சங்க தமிழ் காத்தே
சிவமறையோதித் திருமுறைபாடி வாழிய வாழியவே
நால்வரின் பெயரால் நற்பணிபுரியும் நால்வர் கலைக்கூடம்
நலம் புகழ் பெற்றே நானிலம் மெச்ச வாழிய வாழியவே
உலகமெங்கும் சைவ அறிவை உணர்த்தி வளர்த்துவரும்
கலச இதழும் கதிரினைப் பெருகி வாழிய வாழியவே
அலையாய் அன்பு வளர்ந்திடவே அறமும் அறிவும் ஓங்கிடவே
கலையும் பண்பும் காக்கும் அங்கம் வாழிய வாழியவே
பாரம்பரியம் பேணவைத்தே பாரில் தமிழர் பெருமை பெற்று
சேருந்நாட்டிற் சிறப்பைப் பொழியும் செந்தமிழ்ச் சங்கம் வாழியவே
மேல்நாடெங்கும் அறுகாய்ப் படரும் மூத்த அருஞ்சைவம்
ஆல்போல் வளர்ந்து மலைபோல் நிலைத்து வாழிய வாழியவே
சங்கம் புரியும் பொதுப் பணியாவும் பெருமை கீர்த்திபெற்று
சிவவழிபாடும் சத்திய வாழ்வும் சிறப்புடன் வாழியவே
எங்கும் எதிலும் சைவம் ஓங்கத் தமிழும் வாழியவே
எங்கும் எதிலும் சைவம் ஓங்கத் துலங்குக வையகமே


கிழக்கு இலண்டன் நியூகாம் பகுதியில்
பற்சிகிச்சை (Dental Surgery)சம்பந்தமான சகல பிரச்சினைகளுக்கும்
அணுகவேண்டியவர்

டாக்டர் டேவிட் V. பழனிவேல்
* Restorative Dentistry
* Prosthetics
* Orthodontics
* Endodontics &* Surgical Dentistry

**127 Greengate, London E13 0BG**
**Tel: 0181 472 9429**

# இரக்கத்துக்குரிய இந்து மதம்

**—சுந்தரன்—**

எங்களுடைய சிறுவயதிலிருந்தே பல நம்பிக்கைகளை மனதில் வளர்த்துக் கொள்கின்றோம். நாம் நம்புபவை யாவும் கட்டாயம் நிறைவேறும் என எதிர்பார்க்கின்றோம். ஆனால் நம்பியன எல்லாம் கைகூடுவதேயில்லை. வெற்றியையும் தோல்வியையும் சரிசமானமாகப் பார்க்கும் மனோநிலை எம்மிடம் இல்லாதமையால் தோல்விகளைக் கண்டு துவண்டு போய்விடுகின்றோம். ஆயினும் நம்புவதை நாம் கைவிடுவதேயில்லை. ஆனால் இந்தச் சுயநம் பிக்கையில் நாம் நாளடைவில் விரக்தி அடைந்து போகும்போது இன்னொரு நம்பிக்கை எமக்குத் தைரி யத்தையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது. இந்த நம்பிக்கைதான் கடவுள் நம்பிக்கை. அதாவது மனத்தைக் கடந்த ஒரு சக்தி நீக்கம் அற எங்கும் நிறைந்திருப்பதாக நாம் திடசங்கற்பம் கொள்கின்றோம்.

இந்த நம்பிக்கையின் அருகாமையில் மூடநம்பிக்கையும் எம்மோடு பயணம் செய்ய ஆரம்பிக்கின்றது. மூட நம்பிக்கை என்றால் என்ன? அதென்ன நம்பிக்கையில் ஒரு மூடநம்பிக்கை? கடவுளை எல்லோரும்தான் நம்புகிறார்கள்! கொலை, களவு, கற்பழிப்பு முதலான பஞ்சமாபாதகங்களைச் செய்யும் கொடியவனும் கடவுளை நம்புகின்றான். நாளும் பொழுதும் தான தர்மங்களைச் செய்யும் நல்லவனும் கடவுளை நம்புகின்றான்.

நடுத்தெருவிலே ஒரு மனிதனைக் கதறக்கதறக் கொலை செய்த ஒருவன் தன்னைத் தூக்குத் தண்டனை யிலிருந்து காப்பற்றியது தான் கடவுளுக்குச் செய்த பிரார்த்தனைதான் என்று நம்புகின்றான்.

அதற்காக ஏராளமான பணத்தைச் செலவழித்துத் தன் நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றான். அதேநேரம் கொலையுண்ட மனிதனின் மனைவி கண்ணில்லாத கடவுள் என்று கடவுளைத் திட்டுகின்றாள். கடவுள் மீது வெறுப்புக் கொள்கின்றாள்.

இன்னொரு மனிதன் தனக்குச் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவேண்டும் என்பதற்காகக் குடம் குடமாகப் பால் வார்த்து அபிஷேகம் செய்கின்றான். இங்கே நல்லவன் கடவுளை நம்புகிறான்! கொலையாளி கட வுளை நம்புகின்றான்! கடவுள் நம்பிக்கையில் அவர்கள் ஊறித்திளைத்துப் போகிறார்கள். இதில் தவறேயில்லை. நம்பட்டும். கடவுள் நம்பிக்கைதானே வாழ்வின் உயிர்நாடி. ஆனால் இவர்கள் எங்கே தவறுகின்றார்கள் என்றால், தங்களுக்கு நடக்கும் நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் கடவுள் நம்பிக்கைதான் காரணம் என்று நினைக்கிறார்களே அதுதான் தவறு.

கொலையாளி, தான் தூக்குத் தண்டனையிலிருந்து தப்பியமைக்குக் காரணம் கடவுள் என்று நினைக் கிறானே அதுதான் மூடநம்பிக்கை.

அப்பெண் தன் கணவன் கொலையுண்டு தான் வித வையானமைக்குக் காரணம் கடவுள் என்று எண்ணிக் கோபம் கொள்கிறாளே அதுதான் மூடநம்பிக்கை.

இன்னொருவன் தான் பல குடங்களில் பால் வார்த்தால் தனக்குக் கடவுள் சகல சௌபாக்கியங்களும் தருவார் என்று நினைக்கிறானே அதுதான் மூடநம்பிக்கை.

இது எல்லாம் மூடநம்பிக்கை என்றால் எது சரி என்கின்ற வினா எழுகின்றதே! இதற்கு விடை என்ன? பூர்வகர்ம வினையில் நம்பிக்கை கொண்டவர்கள் அவரவர் செய்த கர்மவினைகளின் அடிப்படையிலேயே யாவும் நடைபெறுகின்றன என்று முடித்து விடுகின்றார்கள். ஆயினும் நாம் மேலும் பல படிகள் சென்று கடவுள் நம்பிக்கையை ஆய்வு செய்தல் தான் நன்று என்று அடியேன் நினைக்கின்றேன்.

இதற்கான விடைகள் சரிவர கிடைக்காமையால்தான் இன்று மதமாற்றங்கள் வெகுவேகமாக நடக்கின்றன. பெருமைக்குரிய இந்துமதம் இரக்கத்துக்குரிய இந்துமதமாக மாறிவிட்டமைக்கும் இவைதான் காரணம் என்று நினைக்கிறேன்.

திருமந்திரம் கடவுளைச் சத்திய சொரூபமாகக் காட்டுகின்றது. கடவுளை நாம் மன இந்திரியங்களால் காண முடியாது. தியான சமாதி மூலம் தான் தரிசனம் பெறமுடியும் என்று கூறுகின்றது.

**கற்பனை அற்றுக் கனல்வழியே சென்று**

**சிற்பனை எல்லாம் சிருட்டித்த பேரொளிப்**
**பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்றுத்**
**தற்பரமாகத் தகுந்ததண் சமாதியே.**

திருமந்திரத்தில் ஓரிடத்திலாவது அவரது சத்திய தரிசனத்தை மனித உருவத்தில் வர்ணித்ததாகக் காணமுடியவில்லை. திருமூலர்கண்ட ஆண்டவன் மாடம், மண்டபம், கூடம், கோயில் எங்குமே இல்லாமல் வேட்கை யாவற்றையும் துறந்த நெஞ்சில்தான் இருக்கின்றான் என்று திருமூலர் கூறுவதை நாம் மனங்கொள்ளவேண்டும். ஆக திருமந்திரம் கடவுள் நம்பிக்கைக்கு மூலமான கடவுளை புற உலகிலிருந்து விலக்கி வேட்கை தவிர்ந்த மனம்தான் கடவுள் என்று விளக்கம் கூறுவதை நாம் அவதானிக்கலாம்.


கடவுள் பூரணமானவர். பூரணத்துவம் என்கின்ற அக்கருத்து மனதைக் கடந்த ஒரு நிலையாகும். அப்படியாயின் மனதைக் கருவியாகக் கொண்டு வாழ்பவர்கள் கடவுளர் அல்லர். மனித உடலும் உள்ளமும் பூரணத்தின் பகுதிகளாகும். பகுதிகள் என்றும் பூரணமாக முடியாது. ஆயின் பகுதிகள் கொண்ட எந்த ஓர் உடலையும் உள்ளத்தையும் உடைய எந்த ஓர் அவதாரத்தையும் கடவுள் எடுப்பதில்லை. ஆகவே எந்த ஒரு தேவைக்காகவும் கடவுள் மனித வடிவம் எடுப்பதில்லை என்ற முடிவுக்கு நாம் வருதல் வேண்டும்.

சில மனிதர்கள் அற்புதமான சித்திகள் மூலம் கவர்கிறார்கள். அட்டமாசித்திகளைப் பற்றிக் கூறும் திருமந்திரம் மாயாமனோ சக்தியினால்தான் மனிதர்கள் சிலர் அற்புதங்கள் நிகழ்த்துவதாகத் தான் திருமந்திரம் கூறுகின்றது. பரம்பொருள் மனம் வாக்குச் சத்திகளைக் கடந்தவர். அதனால்தான் அவரைக் கடவுள் என்கின்றோம்.

ஆகவே மனதைக் கடந்த கடவுள் மனிதஉருவம் எடுத்துத்தான் சித்திகளைப் புரியவேண்டும் என்று நாம் நினைப்பது கடவுள் நம்பிக்கையிலிருந்து நாம் விலகுவதாகத்தான் இருக்க முடியும்.

புறஉருவங்களைக் கடவுள் என நம்பும்படி திருமந்திரம் கூறவேயில்லை. பதிலாக மக்களிடம் மறைந்துள்ள சக்தியினை வெளிக்கொணருவதே உண்மையான கடவுள் நம்பிக்கை எனத் திருமந்திரம் அடித்துச் சொல்கிறது.

ஓம் நமசிவாய.



## உயர்வாசற்குன்று முருகன் கோவில் விடுக்கும் வேண்டுகோள்

சிவசிந்தனையும் கோவில் வழிபாடும் கடைப்பிடிக்கும் அன்பர்களுக்கும் கலசம் வாசக நேயர்களுக்கும் உயர்வாசல் குன்று முருகன் கோவில்– லண்டன்வாழ் சைவ இளைஞர்களுக்கு ஒரு தனிநாள் ஒதுக்கி, ஹோமம் அபிஷேக ஆராதனைகள் முதலியனவற்றை நடை முறையில் செய்து காட்டிப் பிள்ளைகளுக்கு அவர்களைக் கொண்டே ஆகம வழிபாட்டு முறைகளையும் நடத்தி அதற்கேற்ற விளக்கங்களையும் தகுந்த ஆசான்களை வைத்து விளக்கி பிள்ளைகளைக் கோவிலுக்கு ஈர்த்து பங்குபற்ற உதவிசெய்து அவர்களை ஆசீர்வதிக்க ஆவனசெய்ய இருக்கிறது.

இந்த வைபவம் பாடசாலைகள், கலாசாலைகளின் கோடை விடுமுறை நாட்களில் மிகச் சுருக்கமாக நடக்கவிருக்கிறது. பகல்போசனம் முடிந்தபின் பிள்ளைகளின் சமயசொற்பொழிவு, தேவார, சங்கீத நிகழ்ச்சிகளும் மாலையில் நடைபெற உள்ளது என்பதை அறியத் தருகிறோம். அன்று முழுவதும் சிறுவர்களுக்காக விழா நடக்க விருப்பதால் உங்கள் பிள்ளைகளை தயாராக்குங்கள் என்று வேண்டிக்கொள்கிறோம். நாட்கள் பற்றிய மேலதிக விபரங்களை அடுத்த இதழில் அறியத்தருகிறோம்.

ஆலய விளம்பரப் பலகையிலும் இதுபற்றி விபரமாக ஆனிமாதம் 15ஆம் நாள் திருவிழா நாளில் காணலாம்.

**கோயில் ஆட்சிக்குழு**
**உயர்வாசல் குன்று முருகன் ஆலயம்**

# LUCKVA

## Accountancy Services

Specialist in Small and Medium size
Business Accounts and Advice Services
Free to discuss your problems.
Please contact

**T.S. THARMALINGAM ,ACMA**

150, ALTIMORE AVENUE, EAST HAM,
LONDON E6 2BT
TEL: 0181 472 4759/ 0181 470 1697

# STAR JEWELLERS

அசல் 22 கரட்டிலான எல்லாவிதமான நகைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஸ்ரார் யுவெல்லேர்ஸ்

**உரிமையாளர்: திரு. தனபாலசிங்கம்**

## STAR JEWELLERS

14 KEPPEL ROAD EAST HAM LONDON E6 2BD
TEL: 0181 472 6512

# தங்ககூஊளர் தமிழா?

**(அர்ச்சனைகள் சிவவேதியர்க்கேஉரியன என்று திரு. க உமாமகேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்டு 23ஆவது கலச இதழில் வெளிவந்த கட்டுரைக்கு மறுப்பாக இதனை எழுதியுள்ளளேன். திரு உமாமகேஸ்வரன் போன்று தமிழும் சமயமும் தெரிந்த ஒருவரிடமிருந்து அத்தகைய ஒரு கட்டுரை வெளிவந்திருக்கக்கூடாது என்பது என் அறிவு பூர்வமான கருத்து. ஆதலால் அவர் குறிப்பட்ட பெரியபுராணத்திலும், திருமுறை களிலும் இருந்து என் கருத்துக்கான ஆதாரங்களைக் காட்டியுள்ளேன். சைவத்தமிழ் மக்களால் மதிக்கப்படும் திரு உமா மகேஸ்வரன் அவர்கள் என் கருத்தை ஏற்பார் என்பது எனது திடமான நம்பிக்கை. எனது கருத்தை உரையாடல் வடிவில் அமைத்திருக்கின்றேன்.**

**—தமிழரசி—**

**கதாபாத்திரங்கள் :**

**சிவன், பார்வதி, முருகன், நந்தி, நாரதர்**

(திருக்கைலாயத்தில் சிவனும், பார்வதியும், முருகனுடன் இருக்க நந்தி காவல் புரிகின்றார். அங்கு நாரதர் தளர்நடை நடந்து வருகின்றார்)

**நாரதர்:** சம்போ மகாதேவா! சம்போ மகாதேவா!


**முருகன்:** நாரதர் வருகிறார் பின்னே தாரகம் வரு கின்றது முன்னே. ஏதாவது விசே டம் இருக்க வேண்டும்.

**பார்வதி:** நாரதர் பூலோகம் சென்றிருப்பதாக வாணி கூறினாள்.

**முருகன்:** பூலோகமா? அங்கே நடக்கும் கலகம் போதாது என்று நாரதர் கலகமும் வேண்டுமா?

**சிவன்:** (சிரித்து) முருகா! அவசரப்படாதே, பூலோ கத்தில் நாரதர் எங்கு சென்றார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொள்வோம். (நாரதர் சம்போ மகாதேவா! எனக் கூறிக்கொண்டு நந்தியின் அருகே வருகிறார்)

**நந்தி:** நாரததரே வருக! தங்கள் வரவு நல்வரவா–கட்டும். ஏன் இவ்வளவு களைத்து வருகிறீர்?







**நாரதர்:** உலகம் இப்போது மாறிவிட்டது. முன் போல் பிரயாணம் செய்யமுடியவில்லை. எங்கும் ஒரே தடங்கல். பரவெளியின் தூய்மைக்கும் பங்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் உடல் சோர்வடைந்துள்ளது.

**நந்தி:** (குரலைத் தாழ்த்தி சிவனே, சிவனே என்றிருக்கும் போது நாம் என்ன செய்யமுடியும். அம்மையப்பர் தங்கள் வரவை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**நாரதர்:** அப்படியா? சந்தோஷம். நான் வந்த விடயம் மிக எளிதாகிவிடும். சம்போ மதாதேவா!

**சிவன்:** வருக நாரதரே! வருக! பூலோகம் எப்படி இருக்கிறது.

**பார்வதி:** (இடைமறித்து எங்கு சென்றீர் நாரதரே?

**நாரதர்:** தாயே! நீங்கள் அறியாததா? இலண்ட னுக்குச் சென்றேன்.

**பார்வதி:** இறையனாரே தமிழ் ஆராய்ந்த தமிழ் நாட்டையும் நாரதமுனிக்கு நயம்பட உரைத்த நாவான–ான இராவணன் வாழ்ந்த ஈழத்தையும் புறக்கணித்து இலண்டன் சென்றீரா? இது என்ன வேடிக்கை.

**நாரதர்:** பெருமாட்டியே! ஈழத்தமிழர்கள் இலண்டனில் சைவசமயமகாநாடு நடத்துவதாகவும், அதில் தமிழக அறிஞர்களும் கலந்து கொள்வதாக எனக்கு ஓர் அழைப்பிதழ் வந்தது.

**சிவன்:** ஓ! சைவசமயமகாநாடு, அதுவும் தமிழர்கள் இலண்டனில் செய்திருக்கிறார்கள். நான் தமிழை ஆராய்ந்ததை விட, அவர்கள் என்னைப்பற்றி ஆராய்ந்திருப்பார்கள். அப்படித் தானே நாரதா?

**நாரதர்:** ஆம்! ஆம்! அதற்கு என்ன குறைவு? ஆனால். . . . . .

**பார்வதி:** என்ன ஆனால். . . . . .

**நாரதர்:** வந்து. . . . . . . . அந்த மகாநாட்டில் தமிழர்கள் கிணறு வெட்ட நச்சுப்பூதம் புறப்பட்டிருகிறதாம். (நாரதர் சொல்வதை மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த முருகன் ஆச்சரியத்துடன்)

**முருகன்:** என்ன நச்சுப்பூதமா? (நாரதர் முருகனுக்கு அருகே ஓடிச்செல்கிறார்)

**நாரதர்:** முருகா! நீரும் இங்கா இருக்கிறீர். தமிழ்க்கடவுளே! உமக்கு மிக்க மகிழ்ச்சிதரும் செய்தியுடனே வந்துள்ளேன் (முருகன் கோபத்துடன்)

**முருகன்:** நாரதரே? முதலில் பூதம் என்றீர். இப்போது எனக்கு மகிழ்ச்சி தரும் செய்தி என்கிறீர். இதில் எது சரி என்ன தடுமாற்றம்.

**நாரதர்:** தடுமாற்றம் எனக்கல்ல, ஈழத்தமிழர்கள் எதை எப்படிச் செய்வது என்று தடுமாறுகிறார்கள். பழைய கலை கலாச்சாரத்தை உட்கொண்டு வாழவும் பயம், புதிய கலை கலாச்சாரத்தை உருவாக்கி வழிநடத்தவும் பயம். அதனால் வரும் கேடுகள் பல. அதனை அவர்கள் உணர்கிறார்கள் இல்லை. அவர்களுக்கு பழைய கலை, கலாச்சாரத்தின் பெருமை புரிகின்றது. ஆனால் அது உண்மையாக என்ன கூறியது என்பதை ஆராய்ந்து அறிய விரும்பாது, தமிழைப் படித்து புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவர்களாக இருக்கிறார்கள். அதனைப் படித்தவர்கள் உண் மையைக் கூறுகிறார்களில்லை. ஈழத்தமிழர்கள் மேலோட்டத்திற்கு தமிழர்களாக வாழ்ந்து கொண்டு, அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாட்டின் கலாசாரத்தில் தங்கள் குழந்தைகள் தொலைந்து போகக்கூடாது என்ற அடிப்படை எண்ணத்தில் இருதோணியில் கால்வைத்தபடி வாழ்க்கைப் பிரயாணம் செய்கிறார்கள்.

**முருகன்:** கலாச்சாரத் தடுமாற்றத்திற்கும் பூதத்திற்கும் என்ன தொடர்பு நாரதரே?

**நாரதர்:** சைவமும் தமிழும் பிரிக்க முடியாதன. தமிழர் கண்ட பெருநெறி, சைவத்திருநெறி, சைவத்தை தமிழிலிருந்து வேறாக்கிய போது பிறநெறிகள் தமிழர்வாழ்வில் புகுந்தன. அந்த நேரத்தில் சமயகுரவர் தோன்றி மீண்டும் சைவத்தை தமிழுடன் பிணைத்தனர். இப்பிணைப்பை சேக்கிழார் உறுதிப்படுத்தினார்.

**பார்வதி:** ஆமாம். ஞானசம்பந்தரை மதுர முத்தமிழ் வாசகர் என்னும் திருநாவுக்கரசரைத் தமிழ் மொழித் தலைவர் எனவும், சுந்தரரை நற்றமிழ் நாவலர் கோன் என்றும் சேக்கிழான் பாராட்டினான்.

**நாரதர்:** முற்றிலும் உண்மை தாயே! தமிழும் சைவமும் ஒன்றில் ஒன்று தங்கி அன்றைய தமிழரின் வாழ்வியலைப் பண்படுத்தியது. இன்றைய தமிழன் அவற்றைப் பிரிப்பதால் அவன் வாழ்க்கை நெறி தடுமாறுகின்றது. லண்டன் சைவ மகாநாட்டில் கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்றும், தமிழ்த் தோத்திர மொழி, ஆரியமே பூசைக்குரிய மொழி ஆதலால் ஆரியத்திலே அர்ச்சனை செய்ய வேண்டும் என்றும் குரல்கள் பிறந்தன. அனேகர் இதில் எதைச் செயற்படுத்துவது என்று தடுமாறுகிறார்கள். முருகா! ஆரியம், தமிழ் என்று அவர்களிடம் கிளம்பிய இந்த நச்சுப்பூதம் உனக்கு மகிழ்ச்சி தரும் என்றே நான் நினைத்தேன். தமிழில் அர்ச்சனை செய்வது புதுவிடயம் என்கிறார்களே?

**முருகன்:** தமிழில் அர்ச்சனை செய்வது புதுவிடயமா?

**சிவன்:** ஆகா! பழைமையே புதுமைக்கு வித்து, என்பதை தமிழர்கள் உணர்ந்துவிட்டார்கள். தொடரட்டும் அவர்கள் வாதம். பொறுத்திருந்து பார்ப்போம்.

**முருகன்:** தந்தையே! அது தவறு, எது உண்மை என்பதை அவர்கள் சமய, இலக்கிய நூல்கள் மூலம் அறியலாமே. ஆரியர் வரமுன் தமிழரிடம் தெய்வ வழிபாடு இருக்கவில்லையா? தமிழர் ஐவகை நிலத்திற்கும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) ஐந்து தெய்வங்களை (முருகன், திருமால், வேந்தன், வருணன், கொற்றவை) வணங்கவில்லையா? சைவசமயமகாநாட்டினர்க்கு தமிழ் இலக்கியம் தெரியாவிடினும் நக்கீரன் பாடிய திருமுருகாற்றுப் படையாயினும் தெரிந்திருக்க வேண்டுமே.

**நாரதர்:** திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டில் வருவதல்லவா?

**முருகன்:** ஆமாம். அது என்னை வழிப்படுத்துவதால், அதற்கு திரு எனும் அடைமொழி கொடுத்து அதனை பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாக்கி இருக்கிறார்கள். (218–280) தமிழர் 2000 வருடங்களுக்கு முன் எப்படி தெய்வவழிபாடு செய்தார்கள் என்பதை நக்கீரன் கூறியுள்ளான். தமிழன் தன் பழமையை அறிய வேண்டுமானால் சங்கத்தமிழைப் படிக்கவேண்டும்.

**நாரதன்:** ஆறாம் திருமுறையிற்றான் முதன் முதலில் தமிழன் என்ற பதம் வருகின்றதாம். அதற்கு முன் திருமுறைகளில் தமிழர் என்ற குறிப்பு வரவில்லையா?

**முருகன்:** (சிரித்து) முதலாம் திருமுறையின் 11ம் பதிகத்தின் 4வது பாடலில் ஞானசம்பந்தன் தந்தையைப்பற்றி

**பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்**
**உண்ணின்றதோர் சுவையும் உறுதான ஒலி பலவும்**
**மண்ணும் புனல் உயிரும் வரு காற்றுஞ் சுடர் மூன்றும்**
**விண்ணும் முழு தானானிடம் வீழம்மிழலையே!**

எனக்கூறியிருக்கின்றான். தமிழும், தமிழரும் இன்றி தமிழவை உருவாகுமா? தந்தையை (சிவனை) பலவோசைத் தமிழ் அவை என்றல்லவா சம்பந்தன் போற்றியுள்ளான்.

**நாரதர்:** முருகனே! சிவனாரை தமிழவை என்று கூறியதாகச் சொல்கிறீர்கள். அவர்களோ, சிவன் வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வருவதாக சம்பந்தனும், புரிவெண்ணூல் திகழப் பூண்ட அந்தணன் என அப்பரும் கூறுவதால் அந்தணர் பூசை செய்வதா எனக்கருதுவோர் அந்தணனாகவே காட்சிதரும் சிவனையும் அல்லவா ஆலயத்தில் இருந்து அகற்றிவிடவேண்டும் என்கிறார்கள்.

**முருகன்: வேதம்** எனும் தமிழ்ச் சொல் **வே** என்பதன் அடியாகப் பிறந்தது. அது **வேர்** என்பதன் மூலமாகும். **தம்** என்பது பெயர் விகுதி தமிழில் வேதம் என்பது மூலநூல் எனப்பொருள் அரும். வடமொழியில் வேதம் என்ற சொல் வித்து அறிவு என்ற அடியால் பிறந்தது அறிவுநூல் என்ற பொருள் தரும். தமிழர்களது வேதமாகிய மூலநூல்— முதனூல் அறம், பொருள், இன்பம், வீடு பற்றிப் பேசும். வடமொழி வேதம் தெய்வங்களைப் பற்றி பேசும். இதனையே பழந்தமிழ் ஆசிரியனான தொல்காப்பியன் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாகும் என்றான். வெண்ணூல் பூண்டோர் யாவரும் அந்தணர்களா? திருமூலன் நூலும் சிகையும் நுவலில் பிரமமோ என திருமந்திரம் செய்திருக்கின்றான். அதாவது பூணூலும் முடியுமே பிராமணர் என்பதைக் காட்டாதாம். அந்தணர் யார் என்பதை திருவள்ளுவன் மிக அழகாகச் சொல்லியிருக்கின்றான். **அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்!** பூணூல் அணிந்த ஆரியன் ஒருவன், இருக்கு வேதத்தின் ஒன்பதாவது மண்டலத்தில் (112:3) நான் பாடல்களைச் செய்கின்றேன், என் தந்தையோ ஒரு மருத்துவன், என் தாயோ கிரி கையில் தானியங்களை அரைக்கின்றவள். செல்வத்தைப் பெறுவதற்காகப் பல்வேறு சூழ்ச்சிகளால் நாம் வேண்டிய தொழில்களை மேற்கொள்கின்றோம் எனக் கூறியிருக்கின்றான். இதன் கருத்து என்ன? நாரதா! அத்திப்பழத்தை பிட்டால் அத்தனையும் சொத்தையாக இருப்பதைக் காணலாம். அவர்கள் உடம்பில் ஓடுவது திராவிடத் தமிழ் இரத்தமே அன்றி வேறில்லை. அவர்கள் தெய்வசந்நிதியில் படைக்கும் அமுது கூட தமிழரின் அன்ன வகைகளே.

**நாரதர்:** இறைவா! அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன என்றும், அவர்களே முப்போதும் திருமேனி தீண்டுவார் எனவும் சேக்கிழார் சொன்னாராமே! தமிழ் அர்ச்சனை பற்றி திருமுறைகளில் பேச்சில்லையாம்.

**பார்வதி:** நாரதா! பெரியபுராணத்தில் சேக்கிழான் மிக்க சொற்றமிழால் வேதமும் பாடினார்.

எழுதுமறை மல்லல் நெடுந்தமிழால் இசைத்தார்

என்ற வேதமும், மளை என்ற சொற்களை தமிழ்வேதம், தமிழ்மறை என்றே அறிதியிட்டு பாடியிருப்பதைப்பார். எனவே அவர்களை பெரியபுராணத்தை கருத்தூன்றிப் படிக்கச்சொல். (இவர்கள் உரையாடல்களை செவிமடுத்த சிவன்)

**சிவன்:** தேவி! தமிழன் தன்னைப்பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் இது, 6ம் 7ம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் உருவான பக்தி இலக்கியம் போன்ற சொல்நயமும் கவிநயமும், கருத்தாழமும் உள்ள பக்தி இலக்கியம் வேறு எந்த மொழியிலும் உருவாகவில்லை. இவற்றை பக்தி இலக்கியம் என்பதை விட தமிழர் சரித்திரக் கருவூலமெனலாம். ஞானசம்பந்தன் பிறப்பைக் கூறும் போது சேக்கிழான் என்ன சொன்னான்?

**திசையனைத்தின் பெருமையெலாம் தென் திசையே வென்றேற**
**மிசையுலகும் பறவுலகும் மேதினியே தனிவெல்ல**
**அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல**
**இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக**

**பார்வதி:** ஆகா! என்ன அருமையான பாடல். சம்பந்தன் பிறந்தால் உலகின் திசைகளை, தென்திசை வெற்றி கொண்டு நிற்க, அதனால் வானுலகையும், மற்றைய உலகங்களையும், இப்பூவுலகம் தனித்து வெற்றிகொள்ள, பிறரால் அசைக்கமுடியாக செந்தமிழ், அயல்(பக்கத்து) மொழியான ஆரியத்தை வென்றது.

**நாரதர்:** தாயே! சம்பந்தன் பிறந்த நேரம் தெலுங்கு, மலையாளம், கன்னடம், சிங்களம் போன்ற அயல்மொழிகள் தமிழ்மொழியுடன் போட்டியிடக்கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆரியமே தமிழுடன் போட்டியிட்டது எனச் சேக்கிழான் சொன்னது உண்மையே.

**முருகன்:** தமிழ் அர்ச்சனை எது என்பதை சுந்தரர் வரலாற்றில் சேக்கிழான் குறிப்பிட்டானே. (நாரதர் சிவ னிடம் ஓடிச்சென்று பெரிய குரலில்)

**நாரதர்:** பிரபோ! அந்தப்பாடலைப் பற்றி நான் கேட்டதாக சேக்கிழானிடம் அவர்கள் கேட்க, சேக்கிழானும் சுந்தரனின் பாடலின் சிறப்புக்காக என மழுப்பி விட்டான். நீங்கள் சுந்தரனிடம் என்ன கேட்டீர்கள்?

**சிவன்:** சுந்தரனை உங்களுக்குத் தெரியும், எப்பொழுதும் என்னுடன் வாதுக்கு நிற்பவன். நான், அவனை ஆட்கொண்ட போது என்னைச் செந்தமிழ்ப் பாட்டினால் அர்ச்சனை செய்யச் சொன்னேன். அதற்கு அவன்

**செந்தமிழ் திறம் வல்லீரோ —சொலும்**
**ஆரணிய விடங்கரே!**

என்றுகேட்டான். நான் சிரித்தேன்.

**பார்வதி:** (இடைபுகுந்து) உங்கள் சிரிப்பின் பொருள் உணர்ந்து பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்! நீங்கள் இருப்பதைப் பாடினான்.

**சிவன்:** அதுமட்டுமா? **பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே** எனவும் பக்தி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை **ஏழிசையின் தமிழால் இசைந்தேத்திய பக்தியும்** என்று 7வது திருமுறையின்

100ஆவது பதிகத்தில் பாடியிருக்கிறான்.

**முருகன்:** எந்தையே! நீங்கள் திருவீழிமிழலையில் அப்பருக்கும் சம்பந்தருக்கும் காசு கொடுத்ததை

நீர் தமிழோடிசை கேட்டும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர் என்றும் சுந்தரன் பாடியுள்ளானே!

**சிவன்:** முருகா! தமிழர்கள் பன்னிருதிருமுறைகளை நன்றாகப் படிக்கவில்லை. அதனால் வந்த குழப்பமே இது. சம்பந்தன் 3ம் திருமுறையின் 80வது பதிகத்தின் 4வது பாடலில் என்ன சொல்லியிருக்கிறான் சொல்பார்க்கலாம்.

**முருகன்:**

**செந்தமிழர் தெய்வமறை நாவர் செழு**
**நற்கலை தெரிந்த அவரோடு**
**அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள்**
**செய்ய அமர்கின்ற அரனூர்**

**சிவன்:** இதில் யார் அர்ச்சனை செய்கிறார்கள்? எந்த மொழியில்? இதை விடவா கூடிய ஆதாரம் வேண்டும்? செந்தமிழரின் தெய்வமறை தெரிந்த நாவையுடைய கலைவல்லவரோடு, அந்தமில் குணத்தவர் அர்ச்சனை செய்திருக்கிறார்கள். அந்தமில் குணத்தவர் யார்? குணம் எனும் குன்றேறி நின்றவர்கள். அவர்கள் பிறப்பால் பிராமணராக இருக்கத் தேவை இல்லை. எவனிடம் அந்தணாளன் ஆகும் தன்மை இருக்கிறதோ, அவன் அர்ச்சனை செய்யலாம். அந்தமில் குணமுடையவன் பிறப்பால் நந்தனாகவும் இருக்கலாம், யாராகவும் இருக்கலாம். சம்பந்தன் தமிழ் மொழி அர்ச்சனையை செந்தமிழ் தெய்வமறை என அழுத்திக் கூறியதோடு, நற்குணமுடையோரே அர்ச்சனை செய்தனர் என்பதை உறுதிப் படுத்தியுள்ளான்.

**நாரதர்:** அப்பனே! உம்முடன் சேர்த்து திருமுறை களையும் தமிழர் வீசிவிட வேண்டியதில்லை என்கிறீரா?

**சிவன்:** இன்றைய தமிழரைப்போல் அன்று நாவுக்கரசன் இருந்தான். அவன் தன் தவறு உணர்ந்த போது

**வாயிருந்தும் தமிழே படித்தாளுறா**
**ஆயிரஞ் சமணும் அழ்வாக்கினான்**

என ஐந்தாம் திருமுறையில் பாடி வருந்தினான். தமிழர்களை தமிழைப்படித்து திருமுறைகளைப் படிக்கச் சொல். அவர்களுக்கு உண்மை தானாகவே விளங்கும்.

**பார்வதி:** ஞானசம்பந்தன் உங்களைக் காதலனாகவும் தன்னைக் காதலியாகவும் பாவித்துப் பாடிய திருக்கானூர் பதிகத்தின் 8வது பாடலில் நீங்கள் தமிழின் இனிமையான தன்மையை பேசிக் கொண்டு வந்து தன்னைக் காதலித்து, தன் நிறத்தை எடுத்துக் கொண்டு தனக்கு குமிழம் பூ நிறத்தைத் தந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினானே ஞாபகம் இருக்கிறதா?

**நாரதர்:** அம்மையே! என்ன சொன்னீர்கள்? இறைவ–னார் தமிழின் இனிய தன்மையைப் பற்றி சம்பந்தரிடம் பேசினாரா? அந்தப்பாடலை பாடிக்காட்டுங்களேன்.

**பார்வதி:**

**தமிழின்நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல**
**முழவம் மொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்**
**குமிழின் மேனி தந்து கோலநீர்மையது கொண்டார்**
**கமழுஞ்சோலைக் கானூர் மேய பவளவண்ணரே**

**நாரதர்:** அபாரம்! அற்புதம்! இப்படி ஒரு பதிகம் மாணிக்கப்புதையலாக திருமறைக்குள் மறைந்து கிடக்கிறதா? மகாதேவா! தாங்கள் தமிழ்மொழியில் சம்பந்தருடன் பேசினீர் என்று சொன்ன பிறகுமா தமிழருக்கு தமிழ்மொழியில் அர்ச்சனை செய்யத் தடுமாற்றம்.

**முருகன்:** நாரதனே! சம்பந்தன் எந்தை பேசுவது தமிழ் என்று கூறினான். சுந்தரன் தந்தையின் ஊர் எது என்றும் கூறியிருக்கிறான்.

**நாரதர்:** (சிவனைப்பார்த்து) தங்களூர் எதுவோ?

**சிவன்:** நாரதா! சுந்தரன் தங்களூர் தமிழ் என்று சொன்னான். அது சரியே. லிங்க வழிபாடும், தமிழரு டையதே, ஆரியருக்குரியது உருத்திர வழிபாடு. இருக்கு வேதத்தில் சிவலிங்க வழிபாடு இகழப்பட்டுள்ளது. அதனை நீ அறிவாய்.

**நாரதர்:** சுந்தரன் தங்களூர் தமிழ் என்று பாடிய தோவாரத்தை நான் அறியலாமா?

**சிவன்:**

**திங்களூர் திருவாதிரையான் பட்டினமூர்**
**நங்களூர் நறையூர் நனிநாலிசை நாவலூர்**
**தங்களூர் தமிழானென்று பாவிக்கவல்ல**
**எங்களூர் எய்தமான் இடையாறிடை மருதே**

**நாரதர்:** தங்களூர் தமிழானென்று பாவிக்கவல்ல எங்களூர் எய்தமான்! என்றால் என்ன அர்த்தம்?

**முருகன்:** அதாவது தங்களூர் தமிழ் எனத் தியானிக்கும் (பாவிக்கும்) எங்களூர் வந்த பெருமான் என்பது பொருள். தமிழானென்று– தமிழ்–ஆன்–என்று எனப் பிரியும். இதில் ஆன் விகுதி. யாழ்ப்பாணம்–ஆன் யாழ்ப்பாணத்தான் என்பது போல் தமிழ்–ஆன் தமிழான் (தொறுப்பொருள் உணர்த்துகிறது)

**நாரதர்:** தண்ணார் தண்ணளிக்கும் தண்பாண்டி நாட்டானே! (திருவாசகம்) தங்களூர் தமிழா? அப்போ ஏன் ஆரியன் கண்டாய் என்று சொல்கிறார்கள்?

**முருகன்:** நாரதா! இது என்ன கேள்வி? ஆரியத்தில் மட்டுமல்ல பிறமொழிகளிலும், கலைகளிலும் தமிழர் வல்லவர்களாக இருக்கிறார்களே! அது தவறா? அவர்கள் ஆற்றலுக்கு வெளிநாட்டார் தலை தாழ்த்தவிலைலையா? ஜீவாத்மாக்களே பலமொழிகள் தெரிந்தவர்களாக இருக்கும் போது, பரமாத்மாவிடம் இப்படிக் கேட்கலாமா? (நந்தி அங்கு வந்து வணங்கி)

**நந்தி:** தென்னாடுடைய சிவனே போற்றி!

**நாரதர்:** எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

**பார்வதி:** நாரதா இறைவன் யாருக்குரியவன் என்று புரிந்து கொண்டாயா?

**நாரதர்:** ஆம் தாயே! **பொக்கும் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பார் அவர்தாம் நாணியே** என்பதை புரிந்து கொண்டேன் தாயே!

**—தமிழரசி—**



# இறைவன் தங்கும் இடம்

நமது சமயநெறி இனிய நெறி; எளிய நெறி; இது அது என்ற பிரிவினைச் சழக்குகளைக் கடந்த பெரு நெறி. நமது சமயநெறியில் இறைவனை எப்படியும் தொழலாம்; எந்தப் பெயராலும் அழைக்கலாம்; எங்கும் தொழலாம். இங்ஙனம் அமைந்த ஒரு சன்மார்க்க நெறியை உலகில் வேறெங்கும் காண முடியாது. இறைவன் உருவமுடையவனல்லன்; ஆயினும், உருவமுடையான். அவனை ஆலயங்களிலும் வழி படலாம்; அவரவர் அகத்திலும் வழிபடலாம். இறைவன் என்ற சொல்லுக்கே பொருள், எல்லா உயிர்களிடத்திலும் தங்கியிருப்பவன் என்பதே. இறைவன், விரும்பி எழுந்தருளும் திருக்கோவில், உயிர்களின் நெஞ்சமேயாகும். இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க என்றார் மாணிக்கவாசகர்.

**"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்**
**நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"**

என்ற அப்பரடிகள் முதற்பகத்தில் அருளிச் செய்துள்ளார். இறைனைத் தன் உயிருக்கு உயிராக எண்ணி உணர்தல் வேண்டும்.

இறைவனைத் தன் உயில் அறியும் தகுதியு டையவர்கள் உள்ளத்தில், இறைவன் தங்கி அருள் செய்வான்; அங்ஙனம் தன் உயிரில் இறைவனை அறியும் அறிவிலனாயின் அவனிடத்தில் தங்கி நிற்கம் இறைவனை அடைதற்கு இயலாதவனாகி அவலமுறுகின்றான்.

**தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்**
**தன்னிற் றன்னை யறியில் தலைப்படும்**
**தன்னிற் றன்னை யறிவில னாயிடில்**
**தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே!**

என்பது அப்பர் வாக்கு.

தன்னில், தன்னுயிரில் இறைவனைக் கண்டு தொழுதல் இனியதவம். **"விறகில் தீயினன்"** என்பர் நமது அடிகள். விறகிற்குள்தான் எரிகின்ற சக்தி மண்டிக் கிடக்கிறது. மணியினுள்தான் மணியின் ஒளி கனன்று கொண்டிருக்கிறது. பாலினுள்தான் நெய் இரக்கின்றது. அதுபோல் ஊனில், ஆவியில் இறைவன் இருக்கின்றான். ஆங்கு அவனைக் கண்டு தொழாமல் நெஞ்சத்தைக் கோயிலாக்காமல் புறத்தே தேடியலைவதில் பயனென்ன? இதனையே சித்தர் ஒருவர் **நட்ட கல்லும் பேசுமோநாதன் உள் இருக்கையில்"** என்ற கூறினார். இதயத்தில் இறைவனை எழுந்தருளச் செய்து பத்திமை செய்யும் தகுதியற்றவர்கள் திருக்கோயிலிலும் இறைவனைக் காண முடியாது. ஆதலால், மெய்ஞ்ஞான நெறியில் வளர விரும்புபவர்கள் இறைவனை உள்ளக்கிழியில் உருவெழுதி உருகி நினைக்க வேண்டும். அகப் பூசை செய்யாமல் புறப்பூசை செய்தலை அருணந்திசிவம், **"கையிலிருக்கும் தேனைப் பருகாமல் முழங்கை வழியாக வழிகின்ற தேனைக் குடிப்பதற்கு முயற்சி செய்வது போல"** என்று கூறுகின்றார். ஆதலால் நம்முடைய மனம் என்ற கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்து நாள்தோறும் அவனை வழிபட்டு உய்வோமாக!

# சைவம் இன்றும் நாளையும

சித்தாந்தரத்தினம்
க. கணேசலிங்கம்

**சைவசமயம் இன்று தன் நிலையிலிருந்து வீழ்ச்சிய டைந்துள்ளதென்பது பலரின் பொதுவான கருத்து. சைவத்தின் இன்றைய நிலையையும் அதன் வீழ்ச்சிக்கான காரணங்களையும் சிந்தித்து ஆராய்ந்து ஆவன செய்வதற்கு ஓரளவாவது துணைபுரியும் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.**

## இன்றையநிலை

சைவ சமயத்தவருக்குப் பொதுவாக இன்று தமது சமயத்தைப்பற்றிய அறிவு குறைவாக உள்ளது. சைவ சமய நெறி எது, பிற சமய நெறிகள் எவை என்று அறியாத நிலையில் சைவத்துக்கு உடன்பாடற்ற, முரண்பாடுடைய நெறிகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

சைவமக்களின் வாழ்வில் முக்கிய இடம்வகிப்பன சைவக்கோயில்கள். இவை சைவ விதிமுறைகளுக்கு அமையக் கட்டப்பட வேண்டியவை. இவற்றில் ஐயப்பன், ஆஞ்சனேயர் போன்ற உருவங்கள் வைப்பதற்கு சைவத்தில் விதியில்லை. ஆயினும் அண்மைக் காலமாக இந்த உருவங்களும் இராதா கிருஷ்ணன் போன்ற அயல்வழக்குச் சார்ந்த உருவங்களும் சில கோயில்களில் இடம் பெறுகின்றன. இக்கட்டுரை ஆசிரியர் அண்மையில் இலண்டன் சென்ற பொழுது அங்குள்ள சில சைவக் கோயில்களில் மேற்கூறிய உருவங்கள் இடம் பெற்றுள்ளதையும், இடம்பெற இருப்பதையும் காண நேரிட்டது. கோயிலைச் சார்ந்தவர்களுடன் உரையாடிய பொழுது அறிந்த இவற்றுக்கான காரணங்கள் பின்வருமாறு:

1. சைவக் கோயில்களை நிர்வகிப்பவர்களும் அங்கு வரும் அடியார்களும் கோயில் அர்ச்சகர்களையும் ஆலயம் அமைக்கும் ஸ்தபதியையும் ஆலோசகராகவும் சைவ அறிஞராகவும் கருதுகின்றார்கள். சைவத்தையோ சைவ ஆகமங்களையோ தெளிவாக அறியாத இவர்களின் ஆலோசனைகள் பல வேளைகளில் தவறான வழியினைக் காட்டுகின்றன. (சில இடங்களில் வைணவம் சார்ந்தவர்களாகவும் இவர்கள் இருக்கிறார்கள்)

2. தமிழகத்தில் தோன்றிய வேதாந்தம், சோதிடம் போன்ற துறைகள் சார்ந்த நூல்களைப் படித்து அவற்றி லுள்ளவற்றைச் சைவக் கொள்கையாக கருது கின்றார்கள்.

**3. கடவுளின் அவதாரங்கள் என்று தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் இந்திய நாட்டுச் சுவாமிகளைப் பின் பற்றி, அவர்கள் கூறும் அல்லது கடைப்பிடிக்கும் பிற சமய நெறிகளை சைவ நெறியாகக் கொள்கின்றனர்.**

4. ஐயப்பன் வழிபாடு, ஆஞ்சனேயர் வழிபாடு முதலியன தமிழக மக்களிடை வளர்வதைக்கண்டு அவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுகின்றனர்.

மேற்கு நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த சைவத் தமிழர்களுக்கு சரியான வழிகாட்டல் இல்லாமையால் இத்தகைய நிலை உருவானது ஓரளவு விளங்கக் கூடியது. ஆனால் சித்தாந்த சைவத்தைப் போற்றிப் பாதுகாத்த ஈழநாட்டிலும் இன்று இந்த அவல நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வடக்கே தொடர்ந்து நடைபெறும் போரினால் சைவக் கோயில்கள் பல அழிந்துவிட்டன. உயிரையும் உடைமைகளையும் பாதுகாக்கமுடியாத நிலையில் சைவத்தை முன்போல் பேணி வளர்க்க இவர்களால் முடியும் என எதிர்பார்க்க முடியாது. கிழக்கே போரினால் ஏற்படும் அழிவு ஒருபுறம்: இராமகி ருஷ்ணமடம் போன்றவற்றின் தாக்கத்தினால், சைவசமயக் கருத்தென்ன, வேதாந்தக் கருத்தென்ன என்று அறியாத மயக்க நிலை மறுபுறம், மலையகத்தில் பலகோடி ரூபா செலவில் ஆஞ்சனேயர் கோயில் ஒன்று அயல்நாட்டு வேதாந்தம் சார்ந்த ஒரு நிறுவனத்தால் இன்று அமைக்கப்படுகிறது. மேற்கில், குறிப்பாகத் தலை நகரில், தமிழகத்தில் உள்ள ஐயப்பன், ஆஞ்சனேயர் போன்றவற்றின் வழிபாடும், அங்கிருந்து வரும் சைவத்தில் தெளிவல்லாத அறிஞரின் பேச்சும், வழிகாட்டலும் இடம்பெறுகின்றன. இதற்கிடையில் அகதிகளாக அல்லல்படும் சைவத்தமிழரை கிறித்தவ ராக்கும் மத மாற்ற முயற்சி தீவிரமாக நடைபெறுகிறது.

தமிழகத்தின் நிலையோ, இன்று மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. **சைவத்துக்கும் தமிழுக்கும் தாயகமாக விளங்கிய தமிழகம் இன்று அவற்றின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறது. சினிமாவுக்கு கதை வசனம் கவிதை எழுதுபவர்களிடம் இருந்து**

**தமிழ் படிக்கும் அவல நிலையில் பலர் உள்ளனர்.** சினிமாப்பாணியில் கோயில் வழிபாடும், சாமியே சரணம் என்று ஓதுவதும் சமய வாழ்வாகக் கொள்ளப்படுகிறது. கோயில் என்றால் சிதம்பரம் என்று சைவர்களால் பெருமையுடன் போற்றப்படும் சிதம்பரம் கோயிலிலும் இன்று ஐயப்பன் உருவம் எழுந்து வழிபாடு நடக்கிறது.

தம்மைத் தாமே கடவுளின் வடிவங்கள் என்பவர் பலர் உளர். அவர்பின் சென்று குறுக்கு வழியில் நன்மை பெற பலர் அலை மோதுகின்றனர். பெருமன்றங்கள், பணிமன்றங்கள் என்ற பெயரில் பல நிறுவனங்கள் தனியார் கொள்கைகளையும் புகழையும் வளர்ப்பதாக இருக்கின்றன. பிற நாட்டுச் சைவத் தமிழருக்கு வழிகாட்ட வேண்டிய தமிழகத்தின் நிலை இன்று கீழே போய்க் கொண்டிருக்கிறது. எந்தச் சைவ அறிஞரோ ஆதீனமோ இந்த நிலையை மாற்றிச் சைவசமய மறுமலர்ச்சிக்கு வழிகாண விழைவதாகத் தெரியவில்லை.

இந்த நிலை தொடருமாயின் சைவம், தன் சிறப்பை இழந்து பெயரளவில் மட்டும் சைவம் என்று கருதப்படும். சைவத்தின் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தி அதன் பெருமையையும் தனித்தன்மையையும் நிலைநாட்ட விழையும் உலக சைவப் பேரவையின் கவனத்திற்கு கீழ்க்காணும் சில அணுகுமுறைகள் தரப்படுகின்றன.

## 1. சைவ சமய அறிவு

1.1. சைவத்தைப்பற்றிய அனைத்துத் துறைகளையும் விளக்கி எளிய நடையில் நூல்கள் எழுதப்படல் வேண்டும், (அண்மையில் வெளிவந்த கட்டுரை ஆசிரியரின் சைவத்தை அறியுங்கள் என்ற நூல் இந்த நோக்கத்தில் எழுதப்பட்டது.)

1.2. இளந்தலைமுறையினர் எதனையும் விஞ்ஞான நோக்கில் பார்க்க விரும்புவர். சைவம் பற்றிய நூல்கள் விஞ்ஞான நோக்கில் எழுதப்பட வேண்டும். விக்கிரகங்கள், கோயில் அமைப்பு முறை வழிபாடு முதலியவை குறித்த எளிமையான நடையில் எழுதப்பட்ட நூல்கள் வெளிவர வேண்டும். புராணக் கதைகள் அறிவியல் சார்ந்தவையாக இருந்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

1.3. கோயில்கள், சமய நிறுவனங்களில் சமயச் சொற்பொழிவு, கருத்தரங்கு, பயில் அரங்கம் போன்றவை நடத்தப்பட வேண்டும். மாணவர்களை இதில் பங்கு பெற ஊக்குவித்தல் அவசியம்.

1.4. சைவசமய வினா விடை முறையிலான போட்டிகள், பேச்சுப்போட்டிகள் முதலியவற்றை நடத்தி பரிசில்கள் வழங்கி மாணவரை ஊக்குவித்தல் வேண்டும்.

1.5. பெற்றோருக்கு சைவசமயம் குறித்த அறிவு இருந்தாலன்றி பிள்ளைகளுக்கு சைவ அறிவை ஊட்டுதல், குறிப்பாக மேலை நாடுகளில், இயலாத தொன்று. ஆகவே அவர்கள் சைவத்தில் தெளிந்த அறிவுடையவராக இருத்தல் அவசியம்.

## 2. சைவ சமய ஈடுபாடு

2.1. திருக்கோயில் வழிபாடு சைவ சமய ஈடுபாட்டுக்குப் பெரிதும் துணைபுரியும். சிறுவர்களைப் பெற்றோர் தம்முடன் கோயில்களுக்கு அழைத்துச் செல்வதும் கோயில் நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்தலும் அவசியம்.

2.2. மேற்கு நாடுகளிலுள்ள இளந்தலை முறையினருக்கு ஏற்ற வகையில் கோயில்களில் கணனி போன்ற சாதனங்கள் குறித்த வகுப்புக்களும், சைவசித்தாந்தம், திருமுறைகள் போன்ற வகுப்புக்களும் ஒழுங்கு செய்தல் நல்லது, கலைநிகழ்ச்சிகள் நடைபெறுவதும், அதில் சைவக்கலைகள் கிரியைகள் போன்றவை குறித்த விளக்கங்கள் அளிப்பதும் பயன்தரும்.

2.3. இன்று சமயம் என்றவுடன் அற்புதங்களை எதிர்பார்க்கிற நிலையில் பலர் இருக்கிறார்கள். சைவசமய நாயன்மார்களும் அருளாளரும் செய்த அற்புதங்களை விளக்கி, சைவத்தின் மேன்மையை எடுத்துரைத்தல் வேண்டும். அற்புதங்களை விட அமைதியான வாழ்வும் ஆன்ம ஈடேற்றமும் முக்கியமென்பதை சைவம் உணர்த்துவதை விளக்கவேண்டும்.

2.4. கோயில்கள், சைவ நிறுவனங்களை மையமாக வைத்து சமுதாய சேவையை ஊக்குவித்தல் அவசியம். ஏழை மாணவர்களுக்கு கல்வி புகட்டல், உணவு வழங்கல் முதலியன செய்தல் நன்று. எமது சமயம் சமுதாய சேவையை வலியுறுத்துகிறதென்ற கருத்தையும் நிலைநாட்ட வேண்டும். சைவ ஆதீனங்களும் நிறுவனங்களும் ஏழைகளுக்கு உதவும் பணியை முக்கிய பணியாகக் கொள்ளல் அவசியம்.

2.5. கோயில்களில் பெரியபுராணம் திருவிளையாடற் புராணம். கந்தபுராணம் முதலியவை படித்து விளக்கம் சொல்லல் விரும்பத்தக்கது.

## 3. வழிபடு தெய்வங்கள்

3.1. சைவம் சிவசம்பந்தமுடையது. கோயில்களில் சிவ மூர்த்தங்களை வைப்பது மரபு. வழிபடு தெய்வங்களாகச் சிறு தெய்வங்களைக் கொள்வதும் கோயில்களில் எழுந்தருளச் செய்வதும் தவறானவை.

**3.2. ஐயப்பன், ஆஞ்சனேயர், இராதாகிருஷ்ணன் போன்ற உருவங்களும் சைவ சித்தாந்தத்துக்கும் சைவ ஆகம மரபுக்கும் அன்னியமான சங்கராச்சாரியார் போன்றோரின் உருவங்களும், சைவத்துக்கு உடன்பாடற்ற பிற உருவங்களும் சைவக்கோயில்களில் இடம்பெறக் கூடாது.**

3.3. சைவக் கோயில்களில் நடைபெறும் குடமுழுக்கு போன்ற கிரியைகளில் சைவாகமம் தெரிந்த தகுதிபெற்ற சிவாச்சாரியர்கள் பங்கு பற்ற வேண்டும்.

3.4. கோயில் மூர்த்தங்கள் சைவ ஆகமம் தெரிந்த சிவாசாரியார், சைவ அறிஞரின் ஆலோசனையின்படி எழுந்தருளச் செய்ய வேண்டும். பணம் சேர்க்கும் நோக்கில் பயன்தரும் உருவங்களெனக் கூறி சைவத்துக்கு உடன்பாடற்ற உருவங்களை அமைப்பது கூடாது.

3.5. தம்மைத் தாமே கடவுளர் என்று கூறுபவரைத் தேடிச் சென்று வணங்குவதால் எப்பலனும் இல்லை என்பதை சிற்றுரைகள் மூலம் கோயில்கள், சைவ நிறுவனங்களில் விளக்கிக் கூறுதல் நல்லது.

## 4. கோயில் வழிபாடு

4.1. கோயில்களில் துய்மையைக் கடைப்பிடித்தல் அர்ச்சகர், அடியார்கள் அனைவரினதும் முக்கிய கடமையாகும்.

4.2. கோயிலில் கிரியைகள் செய்யும் அர்ச்சகர்களுக்கு சைவ சமய அறிவும் வேதாகம அறிவும் இருத்தல் அவசியம். அத்துடன் திருமுறைகள், திருக்குறள் முதலியவற்றிலும் அறிவும் ஈடுபாடும் இருத்தல் வேண்டும். (ஆறுமுகநாவலர் திருக்குறள் தெரிந்திருத்தலும் அவசியம் என்று கூறியுள்ளார்.)

4.3. கோயிலில் நடைபெறும் நாளாந்த பூசைகள், திருவிழாக்கள் முதலியவற்றில் ஒழுங்கும் கட்டுப்பாடும் கடைப்பபிடிக்க வேண்டியது அவசியம். இதற்கு நடைமுறைவிதிகள் அமைத்து அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

4.4. கோயில் வழிபாடு செய்பவர்களின் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி கோயில் நிர்வாகம் திறம்பட நடைபெறவும், சைவசமய நெறி தழைக்கவும் ஆவன செய்யலாம். இந்த அமைப்பின், மூலம் சைவ சமயத்துக்கு உடன்பாடற்றவைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

4.5. எந்த வழிபாடும் விளங்குகின்ற மொழியில் அமைதலே சிறந்தது. சித்தாந்த சைவத்தைக் கடைப்பிடிப்பவர் பலர் தமிழர்களாக இருப்பதால் தமிழில் அர்ச்சனை, வழிபாடு முதலியவை செய்தல் வேண்டும். திருமுறைகளிலிருந்து எடுத்த வார்த்தைகளைத் தொகுத்து அர்ச்சகனைக்குப் பயன் படுத்தல் அவசியம். எத்தகைய மாற்றத்தையும் விரும்பாத கத்தோலிக்க சமயத்தில் கூட தமது தாய்மொழியிலே இன்று வழிபடுகின்றனர். குடமுழுக்கு போன்ற கிரியைகள் இன்று தமிழில் செய்ய முடியாதவையாக இருக்கலாம். ஆனால் நாளாந்த பூசைகள் அர்ச்சனைகளைத் தமிழில் செய்வதில் இடர்பாடு இருக்க முடியாது. வடமொழி தேவபாஷை என்று கூறுபவர்கள் தமிழ்த் திருமுறைகளுக்கு இறைவன் செவி சாய்த்த வரலாற்றுக் கூறுகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

## 5. சைவத் திருமுறைகள்.

5.1. சைவத்திருமுறைகளை ஓதுவார்கள் அல்லது தகுந்த இசை ஆசிரியர் மூலம் பண்ணோடு பாடிப் பயிற்றுவிக்க வேண்டும். எல்லாச் சைவர்களுக்கும் குறிப்பாக இளந்தலை முறையினருக்கு, இதில் ஈடுபாடு ஏற்பட ஆவன செய்தல் அவசியம். மேலை நாடுகளில் தமிழ் அறியாதவர்களாகப் பல சிறுவர்கள் வளர்கிறார்கள். அவர்களுக்கு இயன்றவரை தமிழ் அறிவு ஊட்டுதல் வேண்டும். வார இறுதியில் பல இடங்களில் தமிழ் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதில் சேர்ந்து படிப்பதற்குத் தமது பிள்ளைகளை ஊக்குவிப்பது பெற்றோரின் கடமை.

5.2. நாயன்மார் தம் பாடல்கள் மூலம் நிகழ்த்திய அற்புதங்களை விளக்கி, அப்பாடல்களைப் படிப்பதனால் ஏற்படும் பலன்களை விளக்குதல் நல்லது.

5.3. ஆயிரக்கணக்கான திருமுறைகள் இருப்பதால் அவற்றில் எதனைப் படிப்பதென்ற பிரச்சினை பலருக்கு உண்டு. சில தேவார திருவாசகப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து சிறு நூல்களாகப் பதிப்பித்து நாள்தோறும் வழிபாட்டுக்கு ஏற்றதாக விநியோகித்தல் நல்ல பலனைத் தரும். இதனை சைவ ஆதீனங்களும் நிறுவனங்களும் செய்யலாம்.

5.4. கோயில்களிலும் வெளியில் நடைபெறும் சமய நிகழ்ச்சிகளிலும் பஞ்ச புராணம் பாடுவதை வழக்கத்தில் கொண்டு வர வேண்டும். இதற்குத் துணைபுரியும் வகையில் சிறு நூல்கள் வெளிவருவது அவசியம்.

### சைவ சித்தாந்தத் தத்துவம்

6.1. சைவ சித்தாந்த தத்துவத்தின் அடிப்படைக் கருத்துக்களை எல்லோரும் அறியும் வகையில் வகுப்புக்கள், சொற்பொழிவுகள் நடத்துவது தேவையானது. கோயில்களில் வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் இவற்றை விளக்கி சில மணித்துளி நேரம் சிற்றுரையாற்றுதல் நன்று.

6.2. சைவ சித்தாந்தத் தத்துவம் மேல்நாட்டு

அறிஞர்களாலும் போற்றப்பட்ட சிறந்த தத்துவம். அது தமிழர் தத்துவம் என்று அறிவுறுத்தி சைவ மக்கள் பெருமைப்படத்தக்கதாகச் செய்தல்வேண்டும்.

6.3. வேதாந்தம் வேறு, சித்தாந்தம் வேறு என்பதை உணர்த்தி அவற்றுக்கிடையில் உள்ள வேறுபாடுகளை விளக்க வேண்டும்.

6.4. இந்துமதம் சைவசமயம் இரண்டிற்கும் உள்ள பொருள் வேற்றுமையைச் சைவர்கள் அறியச் செய்தல் வேண்டும். இன்று இந்து மதம் என்ற பெயரில் வேதாந்தம் போற்றப்படுகிறதென்பதும், இதற்கும் சைவக்கொள்கைக்கும் தொடர்பில்லை என்பதும் தெளிவாக்கப்படல் வேண்டும்.

6.5. தமிழிலும் ஆங்கிலத்திலும் சைவசமய தத்துவத்தின் அடிப்படைகளை விளக்கிச் சிறு நூல்கள் வெளிவருவது பலருக்கு உதவும்.

## 7. சைவ நிறுவனங்கள், ஆதீனங்கள்

7.1. சைவ நிறுவனங்கள் சைவ சமய மரபைக் கடைப்பிடித்தலும், சைவ சமய வளர்ச்சிக்கு ஆவன செய்தலும் அவசியம்.

7.2. சைவ நிறுவனங்கள் அந்நிறுவனங்களின் குறிக்கோளுக்கமையச் செயற்பட வேண்டும். பல மன்றங்களில் அவற்றின் நிர்வாகத்தை நடத்துபவர் பலர் தமது தனிப்பட்ட கொள்கைகளையும் புகழையும் வளர்க்க அம்மன்றங்களைப் பயன்படுத்துவதை இன்று பல இடங்களில் பார்க்க முடிகிறது. சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்களே சைவ நிறுவனங்களில் நிர்வாக உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

7.3. சைவ ஆதீனங்களுக்கு ஒரு பாரம்பரியம் உண்டு. சைவ மரபைக் காத்து சைவத்தை அழியாமல் காப்பவை இவைகள். ஆயினும் இன்றைய அறிவியல் உலகிற்கு ஏற்ற வகையில் இவற்றின் செயற்பாடுகள் அமைதல் அவசியம், விஞ்ஞான வழியில், மரபு பிறழாமல் சைவத்தை அணுகக்கூடிய ஒரு அறிஞர் குழுவை உருவாக்குதல் ஆதீனங்கள் தம் கடமையாகக் கொள்ள வேண்டும்.

7.4. தனித்து நிற்காமல் மக்களுடன் நெருங்கி உறவாடும் நிலையில் சைவ ஆதீனங்கள் தம் நிலையை மாற்றிக் கொள்ளல் வேண்டும். சமுதாயத் தொண்டையும் சமயத் தொண்டு போல் ஒரு முக்கிய தொண்டாக கருத வேண்டும்.

7.5. கணணி (computer) போன்ற இன்றைய விஞ்ஞான சாதனங்கள்களையும் இன்டர்நெற் (internet) போன்ற தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தி சைவம் வளர்க்க ஆதீனங்கள் தம்மைத் தயார்ப்படுத்தல் அவசியம். இது காலத்தின் தேவையாகும்.

7.6. சைவத்துக்கு இன்னல் ஏற்படும்போது, அது எந்த நாட்டில் ஏற்பட்டாலும், அதனை எதிர்த்து ஓங்கிக் குரல் கொடுக்க சைவ நிறுவனங்களும் ஆதீனங்களும் முன் வர வேண்டும். ஈழத்தில் சைவக்கோயில்கள் பல இடிந்து அழிந்துவிட்டன. இதனைக் கண்டும் காணாமல் இருப்பதனால் தம் கடமையிலிருந்து இவை தவறுகின்றன.


7.7. இன்று மக்கள் ஆங்காங்கே கிறீத்தவத்துக்கு மதமாற்றம் செய்யப்படுகின்றனர். தமிழகத்தில் பல சைவர் வாழ் பகுதிகள் கிறீத்தவர் பகுதிகளாக மாறி விட்டன: மாறிவருகின்றன. ஈழத்தில் போரினால் வாடும் சைவ மக்கள் கிறீத்தவத்துக்கு மாற்றப்படுகிறார்கள். திட்மிடப்பட்ட மதமாற்ற முயற்சிகள் வவுனியா போன்ற இடங்களில் நடைபெறுகின்றன. இதற்கு ஏதும் செய்யாமல் வாழாவிருப்பது நல்லதல்ல. சைவ ஆதீனங்களும் சைவ நிறுவனங்களும் உடனடியாகச் சிந்தித்துச் செயலாற்றவேண்டும். தேவையான இடத்தில் சட்ட நடவடிக்கை கூட எடுக்க முன்வர வேண்டும்.

## 8. உலக சைவப் பேரவை.

உலகெங்கும் சிதறுண்டு வாழும் சைவர்களுக்கான ஒரேயொரு நிறுவனமாக இன்று உலக சைவப்பேரவை விளங்குகிறது. சைவத்தை எதிர்நோக்கும் பிரச்சினைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. மேற்குலகில் சைவத்தை வளர்ப்பதற்கு புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது. அங்குள்ள சைவப் பணி செய்யும் நிறுவனங்களை ஒன்றிணைத்தும், தேவைப்படின் புதிய நிறுவனங்களை உருவாக்கியும் செயலாற்றுவது பலனளிக்கும். இதற்காக உலகளாவிய சைவ மன்றங்கள் ஒன்றியம் ஒன்றை உருவாக்குதல் பற்றிச் சிந்தித்து முடிவெடுக்கலாம்.

சைவ மறுமலர்ச்சி அவசியம் தேவை. ஆனால் இறுக்கமான வழியில் பணி செய்யாமல் இயன்றவரை ஆங்காங்குள்ள சமய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயற்படுவது நல்லது. இதனைக் கொள்கைத் தெளிவுடனும் மரபு தவறாமலும் செய்ய வேண்டும்.

----------



# இலஞ்சப்புலிகள





சாலினி

சிவநேயச் செல்வரான சேக்கிழாரும், தமிழ்மூதாட்டியார் ஔவையாரும், பண்டைக்கால இலஞ்ச வழக்கத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

நாவுக்கரசர் சமணனாக இருந்து சைவனாக மாறிய குற்றத்திற்கு அவரைத் தண்டிக்க அழைத்துவரும்படி, பல்லவமன்னன் ஏவலாளர்களை அனுப்புகின்றான் அப்பொழுது அவர்களைப் பார்த்து

**தெருள் கொண்டோர் இவர் சொன்ன**
**தீயோரைச் செறுவதற்குப்**
**பொருள் கொண்டு விடாது**
**என்பால் கொண்டு வாரும்**

எனப் பல்லவமன்னன் சொல்லி அனுப்பியதாக சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

நாவுக்கரசரிடம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு அவரை விட்டுவிடாது(பொருள் கொண்டு விடாது) என்னிடம் கொண்டு வாருங்கள் என மன்னன் சொன்னானாம்.

அரசனொருவன் பதினாயிரம் பொற்காசுகள் கொண்ட பொற்கிழி ஒன்றை அத்தாணி மண்டபத்தில் தொங்கவிட்டுப் புலவர்களை நோக்கி பைந்தமிழ்ப் புலவர்களே! இந்தப் பொற்கிழி அற்று (அறுந்து) விழும்படி நீங்கள் அறம் பாடவேண்டும். யாருடைய பாடலால் இப்பொற்கிழி அற்று கீழே விழுகிறதோ அவர்களுக்கே இப்பொற்கிழி உரியது என்றான்.

அங்கு இருந்த புலவர்களில் பெரும்பாலானோர் முயன்று பார்த்தார்கள் ஒருவர் பாட்டினாலும் அப் பொற்கிழி விழுந்த பாடில்லை. ஔவையார் மெல்ல எழுந்து

**உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்க**
**தள்ளி வழக்கதனை தான் பேசி— எள்ளளவும்**
**கைக்கூலி வாங்கும் காலறுவான் தன்கிளையும்**
**எச்சம் அறு என்றால் அறு**

எனப்பாடினார். பொற்கிழி அறுந்து விழுந்தது. இலஞ்சம் வாங்கிக் கொண்டு (கைக்கூலி) பொய் வழக்குப் பேசும் வஞ்சமனமுடைய வனின் சுற்றமும் சந்ததியும் அழிவது உண்மையென்றால் பொற்கிழியே நீயும் அறு என்பது இதன் விளக்கம்

இலஞ்சப்புலிகள் இன்று நேற்றல்ல பண்டைத்தமிழர் இடையேயும் வாழ்ந்திருக்கிறார்கள். ஔவையார் இப்பாடல் மூலம் இலஞ்ச வழக்கத்தை கண்டிக்கிறார்.

# பக்தியைக் கொடு

பரம் பொருளே! உன்னிடம் நான் எதைக் கேட்பேன்? நான் உபயோகிக்கக்கூடிய பொருள் ஏதாவது உன்னிடம் இருக்கிறதா? எனக்கு உணவு தா எனக்கேட்க முடியுமா? நீ உண்பதோ நஞ்சு. எனக்கு நீ ஆபரணங்களைத் தா எனக் கேட்கமுடியுமா? நீ அணிவதோ பாம்பு. உடுக்க உடையாவது கேட்க முடியுமா? நீ உடுப்பதோ யானைத் தோல். பிரயாணம் செய்ய வாகனம் கேட்க

முடியுமா? உன்னிடம் இருப்பதோ கிழட்டு எருது. உன்னிடம் இருப்பவை யாவும் எனக்கு உதவாதவையே. ஆதலால், சம்போ மகாதேவா! உன் பாதகமலங்கள் இருக்கின்றனவே, எனக்கு அவற்றைத் தியானிக்கும் பக்தியைக் கொடு.

**அலசம் காலம் பணீ கலாப**
**வசனம் சர்மச வாகனம் மஹோச**
**மம தாஸ்யஸிகிம் கிமஸ்தி சம்போ**
**தவ பாதாம்புஜ பக்தி மேவ தேஹி!**
**—ஆதி சங்கரர்—**

## சங்கத் தமிழ்சான்றோர் காட்டும் கோவில்கள்

தமிழ்க் கலைகளின் உறைவிடமாகத் திகழ்ந்த கோயில்கள் அழிந்ததால் தமிழர் தமது கலைகளின் பண்டைய பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்ட முடியாது இருக்கிறார்கள். எனினும் சங்கத் தமிழ்ச் சான்றோர் அன்றைய கற்கோயில்களை தம் சொற்பாக்களில் இயம்பிச் சென்றுள்ளனர்.

பாண்டியன் கூடாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி என்ற மன்னனின் போர் வலிமையால் பகைநாட்டுக் கோயில் பாழ்பட்டுப் போகும் என்பதை மருதன் இளநாகனார்

**கலிகெழு கடவுள் கந்தம் கைவிட**
**பலிகண் மாறிய பாழ்படு பொதியில்**
**நரைமூதாளர் நாயிடக் குழிந்த**
**வல்லின் நல்லகம் நிறையப், பல்பொறிக்**
**கான வாரணம் ஈனும்**
**காடாகி விளியும் நாடுடையோரே**
**(புறம் 52: 12—17)**

மனித நடமாட்டத்தால், விழாக்களால் ஆரவாரமாய் இருந்த கடவுள் தூண் வழிபாடு இன்றி கைவிடப்படுவதால் பாழ்பட்டுப்போக, கோயில் பலி இடத்தில் காட்டுக் கோழிகள் (கானவாரணம்) முட்டையிடும், நரைமுதிர்ந்தோர் சூதாடிய (நாய்) நல்ல மனையிடமும் அழிந்து நாடு காடாகிப் போகும் என்கிறார்.

மருதன் இளநாகனார் குறிப்பிட்ட பாழ்பட்டும்போகும் கோயில் போன்று பல கோயில்கள் இன்று ஈழத்தில் பாழ்பட்டுக் கிடக்கின்றன. மனித வரலாற்றில் கோயில்கள் பாழ்படக் காரணமாக இருப்பவை இயற்கையின் சீற்றமும், அரசின் சீற்றமுமே. யுத்தங்களின் கோரதாண்டவத்தால் உருவாகும் பாழ்படுநிலையை யாரால் மாற்ற முடியும்?

சங்கத்தமிழ்ச் சான்றோர் இடையே ஈழத்தின் புலவனாக வலம் வந்தவர் ஈழத்துப் பூதந் தேவனார். அவர் ஒருவரே ஈழத்தமிழரும் சங்க காலத்தில் ஈழத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக நிமிரந்து நிற்பவர். அவர் அகநானூற்றில் இன்றைய ஈழத்துக் கோயில் போன்று பாழடைந்து கொண்டிருக்கும் கோயில் ஒன்றைக் காட்டுகிறார்.

அது கடவுள் இல்லாத கோயில் – வழிபடுவோர் இன்மையால் பாழ்பட்டுப் போகும் கோயில் அதன் சுவர்களோ புதர் மண்டி, புற்றுகளுடன் காணப்படுகின்றன. அந்த புற்றுகளில் உள்ள புற்றாஞ்சோற்றை (கறையான்களின்) பெருங்கையுடைய கரடிக் கூட்டம் ஆராய்கின்றன. எனினும் வலிய அடியினையுடைய தூண் அசையாது நிற்கிறது. கோயிலில் நெடுங்காலம் வாழ்ந்த பழக்கத்தால் அதனை விட்டு நீங்காது புறாக்கள் பெடைகளுடன் கூடி சத்தமிட்டு வாழ்ந்து வருகின்றனவாம்.

**பெருங்கை யெண்கினங் குரும்பி தேரும்**
**புற்றுடைச் சுவர புதலிவர் பொதியிற்**
**கடவுள் போகிய கருந்தாட் கந்தத்து**
**உடனுறை பழமையிற் றுறத்தல் செல்ல**
**திரும்புறாப் பெடையோடு பயிரும்**
**பெருங்கல் வைப்பின் மலைமுதலாறே**
**(அகம் 307 : 10—15)**

போரினால் கோயில்கள் பாழ்படுகின்றன என்பதை மிக அழகாக

**முனை கவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீரெழுந்து**
**மனை பாழ்பட்ட மரை சேர் மன்றத்துப்**
**பணைத் தாள் யானைப் பரூஉப் புறமுரிஞ்சிச்**
**செதுகாழ் சாய்ந்த முதுகாற் பொதியில்**
**(அகம் 373 : 1—4)**

போர்முனை நாட்டைக் கவர்ந்து கொள்ள, கலங்கி மக்கள் ஓடியதால் பீர்க்கம் கொடி படர்ந்து மனைகள் பாழ்பட, அங்கேயுள்ள மன்றத்துக்குக் காட்டு மரையும் வந்து சேர, பருத்த காலுடைய யானை தனது பெரிய முதுகை உராஞ்சுவதால் சோர்ந்து விட்டம் விழுந்த பழைய தூண்களை உடைய கோயில் ஒன்றை பாண்டியனாதி நெடுங்கண்ணனார் தமது சொற்பாவில் செதுக்கியுள்ளார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் மக்கள் ஊரை விட்டுச் சென்றதால் பாழ் அடைந்த கோயில் ஒன்றை அகநானூற்றில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். கோயிலுக்கு அருகே ஒரு முருங்கை மரம் அதனை உண்ண வந்த யானை கோயில் சுவரில் உரசுகின்றது. கோயில் சுவர் சரிய அதன் உத்திரம் கீழே விழ, அதனால் கோயில் மாடத்தில் குடியிருந்த புறாக்கள்

பறந்தன. தூசி மண்டிக் கிடந்த பலியிடத்தில் குட்டியீன்ற நாய் குடியிருந்தது. கறையான்களோ கூரையளவு புற்றெழுப்பி விட்டத்து மரங்களைத் தின்றன. இவ்வாறு ஊரார் இன்மையால் கோயில் அழிந்ததைக் காட்டும் கடியலூர் உத்திரங்கண்ணனார் மக்களால் வழிபாடு செய்யப்பட்டு நன்னிலையில் இருந்த கோயில்களையும் படம் பிடித்துக் காட்டத் தவற வில்லை.

**கோயிலொடு குடி நிறீஇ**
**வாயிலொடு புழை அமைத்து**
**(பட்டினப்பாலை 286-287)**

**எனத் திருமாவளவன் கோயில் அமைத்ததையும்**

**கெண்டிமகளிர் உணதுறைமூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
**மலர் அணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ**
**வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்**
**(பட்டினப்பாலை 246- 249)**

சிறைப் பிடிக்கப்பட்ட அரசமகளிர் நீராடி, மெழுகி, மலரால் அலங்கரித்து அந்தி நேரம் மாட்டிய விளக்கின் ஒளியில் பலர் கும்பிட, வழிப்போக்கர்களும் வந்து தங்கும் தூண்களையுடைய கோயில் இருந்ததையும்

**சோறு வாக்கிய கொழுங் கஞ்சி**
**யாறு போலப் பரந்து ஒழுகி**
**ஏறு பொரச் சேறாகி**
**தேர் ஓடத் துகள் கெழுமி**
**நீறு ஆடிய களிறுபோல**
**வேறு பட்ட வினை ஓவத்து**
**வெண்கோயில் மாசு ஊட்டும்**
**(பட்டினப்பாலை 44-50)**

சோறு ஆக்கும் போது உண்டான கஞ்சி ஆறு போல ஓடிச் சேறாகி, பின் காய்ந்து தேர் ஓடும் போது துகளாக எழுந்து சாம்பலில் குளித்த யானை போல் பல்வேறுபட்ட ஓவியங்கள் தீட்டப் பெற்ற கோயிலை மூடுகிறது என்றும் காட்டிப் போந்துள்ளார். செந்தில் முருகன் கோயிலைப் புறநானூற்றில்

**வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்**
**நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை**
(புறம் 55: 20-21)

எனக் குறிப்பிடும் மருதன் இளநாகனார் அகநானூற்றில் திருப்பரங்குன்று பற்றி

**சூர்மருங்கு அறுத்த சுடர் இலை நெடுவேல்**
**சீர்மிகு முருகன் தண்பரங்குன்றத்து**
**அந்துவன் பாடிய சந்துகெழுநெடுவரை**(அகம் 59: 10-12)

நல்லத்துவனார் பாடிய சந்தனமரம் நிறைந்த நெடிய மலை எனக் குறிப்பிடுகின்றார். இவரால் குறிக்கப்படும் நல்லந்துவனார் பரிபாடலின் 8ம் பாடலில் முருகனையும் திருப்பரங்குன்றையும் பாடிப் பரவியுள்ளார். அதில் முருகனைக் காண மும்மூர்த்திகளும் திருப்பரங்குன்றம் வருவதாகக் குறிப்பிடுகின்றார்.

பரிபாடல் 18ஆம் பாடலில் குன்றம் பூதனார், திருப்பரங்குன்றில் உள்ள சித்திரச்சாலை மன்மதனின் படைவீட்டை ஒத்தது என்கிறார்.

**ஒண் சுடரோடைக் களிறேய்க்கு நின்குன்றத்**
**தெழுதெழில் அம்பலம் காம வேளம்பின்**
**தொழில் வீற்றிருந்த நகர்.**
**(பரிபாடல் 18 : 27-29)**

குன்றம் பூதனார் சொல்லிய திருப்பரங்குன்றத்துச் சித்திரச்சாலைக்கு பரிபாடலின் 19ம் பாடல் மூலம் நப்பண்ணனார் எம்மை அழைத்துச் செல்லமுன் அங்கு எத்தகையோர்கள் வந்தார்கள் என்பதைக் காண்பிக்கிறார்.

**சுடரொடு சூழ்வரு தாரகை மேருப்**
**புடைவரு சூழல் புலமாண் வழுதி**
. . . . . . . . . . . . . . . . . .
**மாஅன் மருகன் மாட மருங்கு**
**(பரிபாடல் 19 : 19-57)**

பாண்டிய அரசன் தன் குடும்பத்தாரோடும் அமைச் சரோடும் மலை ஏறி வந்து திருக் கோயிலை வலம் வந்ததையும், அவர்கள் மனம் மகிழ்ச்சியில் துதிபாடியதையும், பாண்டியனுடன் வந்தவர்கள் சிலர் தலையில் துகில் அணிந்திருந்ததையும், வழியில் சிலர் யானைகளை வழியை விட்டு அகற்றி அவற்றை மரங்களில் கட்டி கரும்பு முறித்துப் போடுவதையும் சிலர் தேர்களையும், குதிரைகளையும் வழியிலிருந்து அகற்றுவதையும், இசையறிவுடையோர் பிரமவீணையை வாசிக்க, சிலர் புல்லாங்குழல் ஊத, சிலர் யாழை மீட்ட, அதற்குத் தக சிலர் முரசை ஒலிக்க, சிலர் பூசையின் சிறப்பைப் பாராட்டுவதைக் காண்பித்து திருப்பரங் குன்றத்து சித்திரச்சாலைக்குள் எம்மை அழைத்துச் செல்கிறார்.

அங்கே துருவ நட்சத்திரத்துடன் சூரியன் முதலிய கிரகங்களின் நிலையை விளக்கும் வானவியல் பற்றிய சித்திரங்களை அவர்கள் பார்ப்பதையும், இன்னோரிடத்தில் சில சித்திரங்களைக் காட்டி மனைவியர் கேட்க கணவன்மார்கள் இவள் ரதி, இவன் காமன் எனப் பதில் கூறுவதையும், வேறோரிடத்தில் இருந்த சித்திரத்தை பார்த்து இவ் உரு பூனை உரு எடுத்த இந்திரனது, இவள் அகலிகை, இவன் கௌதமன், இவன் கோபித்ததனால் தான் அகலிகை கல்லானாள் என்று விளக்குவதையும் காட்டி மகிழ்விப்பதோடு

திருப்பரங்குன்றத்து முருகன் கோயில் பல சித்திர மண்டபங்களை உடையதாய் மங்கலகரமாக விளங்கியது என்கிறார்.

இத்தகைய சிறப்புவாய்ந்த திருப்பரங்குன்றத்து முருகன் கோயிலை அடைந்து சங்கச் சான்றோராகிய கடுவனிளவெயினார் முருகனிடம் எமக்காக மூன்று பொருட்களைக் கேட்டு வாங்கி வைத்துள்ளார்.

**. . . . . . . . . . . . . . . . . . . . யாம் இரப்பவை**
**பொருளும், பொன்னும், போகமும் அல்ல நின்பால்**
**அருளும், அன்பும், அறனுமூன்றும்**
**உருளிர் கடம்பின் ஒலிதாரோயே!**
**(பரிபாடல் 5: 78–81)**

# வியாசர் கூறிய ஆறுதல் வார்த்தைகள்

**–சேனாச் சீனா–**

பாரதத்தில் அபிமன்யு அதிதீரன். அவன் அருச்சுனனின் மகன். ஆற்றல் நிறைந்த ஆண் மகன் அவனை வஞ்சனையால் கொன்றார்கள் கர்ணன் முதலியோர். அவனது இறப்பு அருச்சுனனைக் கலக்கி உலுக்கிவிட்டது. அபிமன்யுவின் இறப்பால் சோர்ந்து சோகம் அடைந்தவர்கள் பலர். பஞ்சபாண்டவர் ஐவரும் தலைமேல் கைசேர்த்துக் கண்ணீர் விட்டுக் கதறினார்கள். அவர்களின் அழுகை பொறுக்கமாட்டாத வியாசர் பாண்டவர் அழுதரற்றிக் கொண்டிருந்த இடத்துக்கு வந்து அவர்களின் நெஞ்சக் கனதியைப் போக்க நினைந்து சில உண்மைகளை அவர்களின் உளம் கொள்ளுமாறு உரைத்தார்.

தாய் என்றும் தந்தை என்றும், மனைவி என்றும், பிள்ளை என்றும் உற்றார் உடன் பிறந்தார் என்றும் நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றவர்கள் மாயையின் வெவ்வேறு தோற்றங்களேயன்றி அவர்களுக்கும் உங்களுக்கும் ஒருவித உறவும் இல்லை. அவர்களோடு நீங்கள் கொண்டிருக்கின்ற அன்பு முதலியனவும் வெறும் மயக்கமேயன்றி உண்மை உறவினர்கள் அல்லர், அவர்கள் யாரோ, நீங்கள் யாரோ! பாண்டுவின் பிள்ளைகள் என்று உங்களை நினைத்துக்கொண்டிருக்கின்ற நீங்கள், இத்தோடு எத்தனையோ பிறவியினை எடுத்துவிட்டீர்கள். நீங்கள் பிறவாத வீடுகள் இல்லை. மாறி மாறிப் பல பிறவிகளில் உங்களுக்குப் பாலூட்டிய தாயரும் கணக்கில் அடங்கார். ஆகவே இறந்தவர்களுக்காக அழுவதும் அரற்றுவதும் அறிவற்றவர்களின் செயலாகுமன்றி, உயிர்களின் உண்மை உணர்ந்த அறிஞர்களின் செயலாகாது. கடந்த பிறவியிலே யார் யார் எமது உறவினராக இருந்தார்கள் என்று எமக்குத் தெரியாது.

இனி வரப்போகின்ற பிறவியிலே எவர் எவர் எமது உறவினர்களாக வரப்போகிறார்கள் என்பதும் நமக்குத் தெரியாது. இந்தப் பிறவியிலே நமக்கு ஏற்பட்டு மறைந்துபோன உறவுகள் எத்தனை? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தீர்களானால் அபிமன்யுவுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவுகூட அப்படியான ஒரு தற்காலிக உறவுதான் என்பதை உணர்வீர்கள். ஆகவே அர்த்தமற்ற கவலைவேண்டாம். அடுத்த வேலையைக் கவனியுங்கள் என்று ஆறுதல் கூற முயன்றார் வியாசர்.

வியாசர் கூறிய அந்த ஆறுதல் வார்த்தைகளை அழகான பாடலில் வடித்து வழங்கிய வில்லிபுத்தூரரின் வரிகளை இப்போது காண்போம்.

**1. தாயரொடு தந்தையர்கள் தாரமொடு தனயோர்**
**தூய துணைவோர்களொடு சுற்றமென நின்றோர்**
**மாயை ஏனும் வல்லபம் மயக்குறும் மயக்கால்**
**ஆயவுற வல்லதவர் யார் முடிவில் நாம் யார்?**

**2. வந்து பிறவாத மனை இல்லை முலைமாறித்**
**தந்து பரியாமல் ஒழி தாயர்களும் இல்லைப்**
**புந்தி உணர்வற்றார் புலம்புறுவதல்லால்**
**இந்த வுலகத்தறிஞர் யாதினும் மயங்கார்**

**3. உம்மையினும் யாருறவு உணர்ந்திலமினிப்போம்**
**அம்மையினும் யாவருறவாவர் என அறியேம்**
**இம்மையில் நிகழ்ந்த உறவித்தனை இரங்கல்**
**மும்மையும் உணர்ந்துவரும் மூதறிவினரே!**

உண்மையை உணர்ந்தாலும் உலகத்தில் பாசத்தை வெல்ல முடிவதில்லை. அருச்சுனனும் அதற்கு விதிவிலக்கல்ல. பாரதப்போர் வென்ற பின்னரும் அவன் கவலை ஓயவில்லை.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டார் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் பிரிவுத்துயரை வென்றார் என்ற வரலாறு இதுவரை இல்லை. இனிமேலும் வாராது.

# சேக்கிழார் காட்டிய சிவநெறி காத்த பெண்கள்

-புஷ்பா செல்வநாயகம்-

உலக சமயங்கள் எதிலும் இல்லாத ஒரு தனிச் சிறப்பு நமது சமயத்துக்கு உண்டு. மக்கள் சமுதாயத்தில் செம்பாதியினர் எனப்படும் பெண்கள் நமது சமயத்தினைக் காத்துப் பணி செய்த காரணத்தால் போலும் அது வீறு குன்றாத மேன்மையுடன் விளங்குகிறது. பெரிய புராணம் என்னும் மகோன்னத காப்பிய புராண நூலானது அன்பும் சிவமும் தமிழும் ஒன்றே என்பது போல, சிவனேசச் செல்வர்களை மட்டுமல்லாது புனிதவதியார், திலகவதியார் போன்ற மாதரசிகளின் வரலாறுகளையும் சித்தரித்துக் காட்டுகிறது. நாயன்மார்கள் சமயப்பற்று மிக்கவர்கள்: உயிரை இழந்தும் சைவக் கொள்கைகளை நிலைநாட்டுபவர்கள். அவர்களைப் பின்பற்றியே அவர்தம் மனைவியரும் வாழ்ந்து வந்தனர். இதனால் இவர்களது இல்வாழ்க்கை சமய வாழ்க்கையாகவே பரிணமித்திருந்தது.

திங்களூரில் வாழ்ந்த பிராமணர் ஒருவர் திருநாவுக்கரசர் பேரில் கரைகாணாத பக்தி காரணமாகப் பிள்ளைகளுக்கும், வீட்டிலிருந்த பொருட்களுக்கும், தாம் அமைத்து நடாத்திய தண்ணீர்ப் பந்தல்கள், அறச்சாலைகள் ஆகியவற்றுக்கும் அப்பெரியாரை நேரிற் காணாமலே அவரது புகழைக் கேள்வியுற்று, திருநாவுக்கரசன் என்ற பெயரைச் சூட்டி வழங்கியவர். இவர் ஒருமுறை அப்பெரியாரை நேரிற் காணும் பேறு பெற்றபோது மிக மன மகிழ்ந்து பாதபூசை முதலியன செய்து அவருக்கு உணவு படைக்க விரும்பி ஆவன செய்தார். வாழையிலை அரிந்து வரத் தோட்டத்துக்குச் சென்ற அவரது மூத்த மகன் அரவு தீண்டியதால் இலையை அறுத்துக் கொண்டு ஓடோடி வந்து வீழ்ந்து இறக்க, மைந்தன் மரணமடைந்ததைத் தெரிந்தால் அடியவர் தமது வீட்டில் உணவு உண்ணும் பேற்றைத் தாம் இழந்து விடுவோம் என எண்ணிய பெற்றோர் இறந்த மைந்தனைப் பாயில் சுற்றிக் கொல்லையில் வைத்துவிட்டு, அடியவருக்கு உணவு படைக்கத் தொடங்கினர். அடியவர் உண்மையை உணர்ந்து இறைவன் பேரில் பதிகம் பாட இறந்த மைந்தன் எழுந்தான் என்பது வரலாறு. அந்தணர் விருப்பப்படியெல்லாம் அவரது மனைவி நடந்து கொண்டதால்தான் அப்பூதி என்ற அந்த அந்தணர் அடிகள் ஆனார். எனவே அப்பூதி அடிகள் ஆனமைக்கும் வீடு சிவமணம் கமழும் வீடாகச் சிறந்தமைக்கும், நாயன்மாரில் ஒருவராக அவரைச் சைவஉலகம் போற்றும் நிலை ஏற்பட்டமைக்கும் அப்பூதிஅடிகளின் மனைவியே முக்கிய காரணமாவாள்.

இளையான்குடி என்ற ஊரில் வாழ்ந்துவந்த மாறர் என்பவரது மனைவி கணவனது கருத்தறிந்து நடப்பவர். வறுமை காரணமாக வளம் சுருங்கி இன்னல் பல நேர்ந்தும் தாம் பட்டினி கிடந்தேனும் அடியாரை உண்பித்து வந்தனர். ஓரிரவு கடுமழை பெய்துகொண்டிருந்தபோது தமது இல்லத்திற்கு வந்த சிவனடியாரது ஈரத்தைப் போக்கிய மாறர் அவரை உண்பிக்க அமுது சமைக்க அரிசி இல்லையே என்று வேதனைப்பட்டபோது அவரது மனைவி அன்று காலையில் வயலில் விதைத்த நெல்லைப் பொறுக்கி வந்தால் சமையல் செய்யலாம் என்று தேற்றவே மழைபெய்து கொண்டிருக்கையில் இருளில் மிகவும் அரும்பாடுபட்டுத் தங்கள் வயலில் அன்று காலையில் விதைத்த நெல்மணிகளைப் பொறுக்கிச் சேர்த்து வீடு கொணர்ந்தார். அம்மையார் வீட்டுக் கூரையிலிருந்த கழிகளை எடுத்து நெருப்பை உண்டாக்கி, முளைவிட்டிருந்த நெல் மணிகளை வறுத்துக் குற்றி அரிசியாக்கி, முற்றத்தில் முளைத்திருந்த கீரையைப் பறித்து வந்து கறியாக்கினார். எங்ஙனமேனும் அடியாரை உண்பிக்க முடிந்ததே என எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர் மாறனும் அவர் மனைவியும் என்பது புராணம் கூறும் செய்தி, தம் கணவர் ஏற்ற விருந்தோம்பல் என்ற பண்பினை நிலைநாட்ட உதவிய இம்மாதரசி சைவம் போற்றி வாழ்ந்தாள் என்பதில் ஐயம் உண்டோ?

கலிக்காமர் சோழர் தானைத் தலைவர். இவருக்குத் திருமணம் நடக்கும்போது மணப்பெண் கூந்தல்

ஒப்பனையோடு மணவறைக்கு வர சிவபெருமான் ஒரு சிவனடியாராக வந்து மணப்பெண்ணின் கூந்தலைக் கேட்க, உடனே தந்தையார் மணப்பெண்ணின் கூந்தலை அரிந்து கொடுத்தார். சிவனடியாருக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்ற நம்பிக்கையில் ஊறி வளர்ந்த பெண்ணாதலால் மணமளும் தன் கூந்தலை அரிய இசைந்தாள். மண மகனும் எதிர்த்துப்பேசாது இருந்து விட்டார். இத்தகைய சைவக் குடும்பத்தில் பிறந்து சைவக் குடும்பத்தில் புகுந்த பெண் சிவநெறி வழுவாது, கணவன் கருத்தறிந்து அறம்பல புரிந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தாள். அதே காலத்தில் வாழ்ந்த சுந்தரர் தன் மனைவியான பரவையாரின் ஊடலைத் தீர்க்க இறை வனைத் தூதனுப்பியதை அறிந்து கலிக்காமர் மிக்க கோபங் கொண்டு சுந்தரரை வெறுத்தார். சிவ பெருமான் ஏவலால் சுந்தரர் கலிக்கா மரோடு நட்புப்பூண அவர் அறிந்து சுந்தரரைக் காண்பதை விட இறப்பதே நல்லது என்று எண்ணித் தம் உடை வாளால் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வீழ்ந்தார். சுந்தரர் தம் கணவரால் வெறுக்கப்பட்டவர் ஆயினும் சிறந்த சிவனடியார் என்பதை அறிந்திருந்த கலிக்காமரது மனைவி அவரை வரவேற்க விரும்பினாள். கணவர் வீழ்ந்த காரணத்தால் வேறு ஆடவரையும் பெண்களையும் அனுப்பி அவரை வரவேற்கும்படி செய்தாள். ஆயினும் கணவரது விருப்பத்திற்கு மாறாக அவள் நேரில் சுந்தரரை வரவேற்கச் செல்லவில்லை. வீட்டினுள் வந்த சுந்தரரையும் பிறரைக் கொண்டே வரவேற்றாள். பின்னர் சுந்தரர் கலிக்காமரைக் தழுவ அவரும் உடல் நலம் பெற்று இருவரும் நண்பர்களாயினர் என்பது பெரியபுராணம் கூறும் உண்மை. அவ்வம்மை அளித்த வரவேற்பே நாயன்மார் இருவரையும் நண்பராக்கியது. இத்தகைய அறிவுநலம் வாழ்வரசியர்க்கு இன்றியமையாததும், அவர்தம் சிவநெறி காத்து நிற்றற்கு இயைந்ததும் அல்லவா? இன்னும் பரசமயத்தில் ஒன்றி நின்ற தம் அருமைச் சகோதரரை மீண்டும் சைவநெறியில் சேர அரும்பாடுபட்ட திலகவதியார்,



**அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி**
**இம்பர்மனைத் தவம் புரிந்த திலகவதியாரிருந்தார்.**

**எனப் போற்றப்படுகிறார்.** இவரும்,

**மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்**

வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி என்றும் தென்னர்தலப் பழிதீர்த்த தெய்வப் பாவை என்றும் போற்றப்படும் மங்கையர்க்கரசியாரும் பெரிய புராணம் கூறும் சைவமாண்பினைப் பேணிய மகளிர்தானே. கண வனால் தெய்வமாக மதிக்கப் பட்ட காரைக்கால் அம்மையாரும் நம்மால் ஏத்தி வணங் கத்தக்க வரே. தாம் பெற்று வளர்த்தமக னைக் கொல்லுவதும், கொன்ற மகனைக் கறி சமைப்பதும் எந்தத் தாயாலும் செய்ய முடியாத செயல்களாகும். கணவன் சொற்படி நடத்தலே மனைவியின் அறம் என்ற ஒரே கொள்கையைப் பின்பற்றிச் சிறுத்தொண்ட நாயனாரது மனைவியான திருவெண்காட்டு நங்கை இந்தச் செயற்கரிய செயலைச் செய்தார். வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன் என்று பட்டினத்து அடிகள் வியந்து பாராட்டியது இச் செயற்கரிய செயலையேயாகும்.

எனவே பெரியபுராணம் எனும் கோவிலில் திகழும் ஒவ்வொரு மாதரசியும் தெய்வீகப் பண்புகளைப் பொருந்தி, சைவ சமயத்தின் பெருமையை உலகறியச் செய்து மாட்சிமை பெற்றவர்களாவார்.

# வள்ளுவர் கூறும் புத்திமதி

செ. மாணிக்கவாசகர்

கற்பிளவைப் போன்றவர்கள் இருக்கின்றார்கள், பொற்பிளவைப் போன்றவர்களும் இருக்கின்றார்கள், விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல உள்ளவர்களும் இருக்கிறார்கள், மனிதர்கள் பலவிதம் என்று ஔவையார் ஒரு பாட்டிலே கூறியிருக்கின்றார். கோபத்தினால் மற்றவரை வெறுத்து அவருடன் அதன் பின்னர் ஒன்று சேர மறுக்கின்றவர்கள் நல்லவர்கள் அல்ல, அவர்கள் கயவர்கள் அவர்களின் கோபம் கற்பிளவைப் போன்றது என்பது ஔவையின் கருத்து. வேறுசிலர் இருக்கிறார்கள் இவர்களுக்குக் கோபம் வந்தால் நட்பை உடனடியாக உதறித் தள்ளிவிடுவார்கள். ஆனால் பின்னர் இடையில் உள்ளவர்கள், பிரிந்தவர்களைச் சமாதானப்படுத்தினால், பகைமையை மறந்து பழையபடி ஒற்றுமைப் பட்டுவிடுவார்கள். அதாவது உடைந்த காப்பின் துண்டுகளை நெருப்பிற்காட்டி ஒன்றோடொன்று இசையவைத்ததும் இடைவெளியின்றி ஒன்றாகி விடுவதைப்போல, பிரிந்தவர்கள் பிரிவை மறந்து ஒன்றாகிவிடுவார்கள். இவர்கள் பொற்பிளவுக்கு ஒப்பான பண்புகொண்டவர்கள்

இன்னும் ஒருவிதமான குணம் படைத்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உத்தம குணம் படைத்த உன்னதமானவர்கள் அவர்களுக்கும் கோபம் வரும் ஆனால் அவர்களுக்கு வருகின்ற கோபம் நீடித்து நிற்காது வந்ததுதெரியாமல் நொடிப் பொழுதில் மறைந்துவிடும். அதாவது நீரின் மேற்பரப்பில் நீரைக்கிழித்துச் செல்கின்ற அம்பு, அதன்வழியில் நீரில் ஒரு பிளவை ஏற்படுத்தும். ஆனால் உடனடியாகவே அந்தப்பிளவு நீங்கிவிடும் உத்தமர்களின் கோபத்தை இந்த நீர்கிழித்த வடுவுக்கு ஒப்பாகக் கூறலாம் என்கிறாள் ஔவை.

கோபம் பாராட்டக்கூடாது. கோபம் இனத்தை அழித்துவிடும் என்கிறாள் ஔவை. அப்படியிருந்தும் சிலர், யானை போல் பகை பாராட்டுவார்கள் வேறுசிலர் ஏற்படுகின்ற பகையைக் காலப்போக்கில் மறந்து ஒன்றிவிடுவார்கள் இன்னுஞ்சிலருக்கு ஏற்படுகின்ற கோபம் மின்னல் வேகத்தில் மறைந்துவிடும் என்று ஔவை சொல்கின்றார்

எப்படிக் கோபப்பட்டாலும் எப்படி வெறுக்க நேர்ந்தாலும் அரசாட்சி நல்லபடி நடக்கவேண்டுமென்றால் சில அரசதந்திரங்களைக் கடைப்பிடித்தேயாகவேண்டும் என்று அறிவுரை சொல்லுகின்றான் வள்ளுவன்.

**பிரித்தலும், பேணிக் கொள்ளலும், பிரிந்தாரிப்பொருத்தலும் வல்லது அமைச்சு (633)** என்கிறான் முக்காலும் உணர்ந்த வள்ளுவன்.

அமைச்சு என்ற அதிகாரத்திலே வருகின்றது மேற்படி குறள். அமைச்சன் எனப்பட்டவன் எப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்டிருக்கவேண்டும் என்று மேற்படி குறள் வரைவிலக்கணம் வரைந்தபோதும் ஆட்சிப் பீடத்திலும் நிருவாகத்துறையிலும் இருக்கின்ற எல்லோருக்கும் இந்தக்குறள் பொருந்தும். பொருந்த முடியாதவாறு சினங்கொண்ட கயவரையும், ஒட்டினால் ஒட்டுப்படக்கூடிய சாதாரண கோபக்காரரையும் எப்படிச் சமாளிக்க வல்லவனாக அமைச்சன் இருக்கவேண்டும் என்று வள்ளுவன் சொல்கிறான்.

தனது மன்னனுக்கு எதிரியாயுள்ள அரசனிற்கு நண்பர்களாக உள்ளவர்களை, அந்த அரசனுக்கு எதிரிகளாக மாற்றுகின்றவகையில் அந்த நண்பர்கள் அந்த அரசன்மேல் தீராக்கோபம் என்ற கற்பிளவோடொத்த கோபம் கொள்ளுமாறு செய்தல் நல்ல அமைச்சனின் சாதுரியங்களில் ஒன்றாக இருக்க வேண்டும், அவ்வாறே தனது மன்னனுக்கு நண்பர்களாயுள்ளவர்கள் கற்பிளவோடு ஒத்த கோபக்காரராக மாறாத வண்ணம் அவர்களோடு இங்கிதமாகப் பழதி நட்பைப் பேணிவருதலும் அமைச்சனின் கடமைகளில் ஒன்றாக இருத்தல் வேண்டும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தனது மன்னனில் ஒருகால நண்பர்களாயிருந்து பின்னர் பகைத்துப் பிரிந்து போனவர்களையும் மீளவும் தனது மன்னர்களின் நண்பர்களாகும் வண்ணம் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்தல் அமைச்சனின் தலையாய பணியாக இருத்தல் வேண்டும் என்று வள்ளுவன் விள்ளுகிறான். வள்ளுவன் கூறிய இந்த அறிவுரையை அமைச்சனுக்கு மட்டும் கூறிய அறிவுரையாக எண்ணிவிடக் கூடாது. **இலண்டனில் மன்றங்கள் அமைத்துச் செயலாற்றுகின்றவர்களும், கோயில் நடத்துகின்றவர்களும், விடுதலைப் போராட்ட இயக்கம் நடத்துகின்றவர்களும் கண்ணும் கருத்துமாக அனுசரிக்க வேண்டிய ஒரு விதி. வேண்டாதவர் என்று எவரையும் விலக்கி விடாமல், சிறுதுரும்பும் பற்குத்த உதவும் என்பதை மதித்து நடத்தல் மிக அவசியம். சிக்கலான ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் வள்ளுவனின் இந்தக் குறளை மனம் கொளல் பயன் தரும்.**

# சீவனார் சிவனாயிட்டிருப்பாரே!

## -நல்லியல்பு வள்ளல்-

சீவன் என்பதும் சிவன் என்பதும் முதலெ மூத்திலேமட்டும்தான் வித்தியாசப்படு கின்றன. ஆனால் இவற்றைப் பற்றிய கருத்துக்கள் மிக ஆழமானவை. இந்தக் கலியுகத்தில் எவரும் ஆழமாக இவற்றைப்பற்றிப் புரிந்து கொள்ள முயல்வதில்லை. இதனால் கடவுளைப் பற்றிய தேடலும் ஆத்மீக வாழ்வும் லௌகீக வாழ்க்கைக்குள் முடங்கிவிடுகின்றன. வெறுமனே ஆசாபாசங்களையே தம் வாழ் வென்றும், அவை தமக்கு இறைவனால் விதிக்கப்பட்ட விதி-யென்றும் வாழாவிருந்து விடுகின்றனர். இரு கை கூப்பிக் கடவுளை வழிபட்டால் சகலதும் நடக்கும் என்கின்ற நம்பிக்கையில் தம் வாழ்நாளைக் கழிக்கின்றனர். தவறு செய்வதற்குக் கூட தயங்காத வாழ்வை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இது சரியான வாழ்வல்ல. இறைவன் யாரையும் துன்பப்படும்படி விதிவிதிப்பவரல்ல. விதியை உருவாக்கிக் கொள்பவன் மனிதனே. தண்ணீரை எடுத்துக்கொள்ளுங்கள். பல மூலக்கூறுகளின் சேர்க்கைதானே நீர். அதேநேரம் அந்த நீரே ஒரு மூலக்கூறுதானே. இங்கு நீரைத்தான் நாங்கள் கடவுள் என்கிறோம். கடவுளும் ஒரு சீவன் தான் என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை.



யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் பல தடவை இதனை வற்புறுத்துகின்றதைக் காணலாம்.

**சீவன் சிவனென்று தெரிந்துகொள்வோமே!**
**சிவமே தாமெனச் சிந்திப்போர் பெரியோர்!**
**சிவமே வேறாகச் சிந்திப்போர் சிறியோர்.**

தெளிவாகவும் உறுதியாகவும் கூறும் சுவாமிகளின் சிந்தனையை நாம் மனதில் கொள்ள வேண்டும். திருமந்திரத்திலும் இதனை மிகத் தெளிவாகத் திருமூலர் கூறியுள்ளார்.

**சீவனென்ன சிவனென்ன வேறில்லை**
**சீவனார் சிவனாரை அறிகிலர்**
**சீவனார் சிவனாரை அறிந்தபின்**
**சீவனார் சிவனாயிட்டிருப்பரே!**

என்கின்றார்.

ஆக மொத்தத்திலே பார்க்கும்போது சீவனும் சிவனும் ஒன்றுதான் என்பதை உணரக்கூடியதாக உள்ளது. ஆயின் ஏன் இரண்டு பெயர் கொண்டு அழைக்கப்பட வேண்டும் என்ற வினா எழுவதையும் நாம் மறுக்கமுடியாது. இந்த வினா எழும் போது சிவன் என்பவன் யார் என்ற வினாவும் எழுகிறது. எமது கண்ணுக்குத் தெரியாத இடத்திலே இருந்து கொண்டு எம்மை யெல்லாம் ஆண்டு கொண்டிருப் பவன்தான் சிவனா? அல்லது ஆலயங்களிலே மிகச் சிறிய அந்தக் கருவறைக்குள் ஒழிந்திருப் பவன் தான் சிவனா? இந்தக் கேள்விக ளுக்குக்கூட திருமந்திரம் மிக அழகாகப் பதில் தருகின்றது.

**மாடத்துளானவன் மண்டபத்துளானவன்**
**கூடத்துளானவன் கோயிலிலுள்ளானவன்**
**வேடத்துளானவன் வேட்கைவிட்டார் நெஞ்சில்**
**மூடத்துள்ளே நின்று முத்தி தந்தானே**

என்கின்றார் திருமூலர்.

உலகத்துக்கு வருகின்ற சீவன்கள் உலக மாயையில் சிக்குண்டு விடுகின்றன. சிவனை வழிபடுவதும் உணர்வதுமே இவர்களது தலையாய பணி. இதனை திருவள்ளுவரும் பல குறள்களிலே கூறுகின்றதை நாம் அவதானிக்கலாம்.

**கற்றதனால் ஆயபயனென்கொல் வாலறிவன்**
**நற்தாள் தொழாஅர் எனின்**

என்றும்

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடிசேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல.**

என்றும் கூறுவதை அவதானிக்கலாம். இன்னும் சிறப்பாக மட்டக்களப்பு நகரில் பிறந்த விபுலானந்த அடிகள்

**வெள்ளை நிறமல்லிகையோ வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ**
**வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

என்கிறார்.

இதிலே நாம் மனங்கொள்ள வேண்டியது என்ன வென்றால் சைவசித்தாந்தத்தை வகுத்த திருமந்திரமே

திருக்குறளோ, திருவருட்பயனோ, பகவத்கீதையோ பூவால் நாம் வழிபாடு செய்யவேண்டும் என்று என்றைக்குமே கூறியதில்லை. ஐந்தெழுத்தை, பஞ் சாட்சர மந்திரத்தை ஓதி இறைவனை நாம் வழிபடவேண்டும் என்றே கூறுகின்றன. நாம் இதனை மறந்து புறவழிபாடுகளில் மனதைச் செலுத்தி அகவழிபாட்டை மறந்தே விட்டோம். இதனாலேயே சீவனுக்கும் சிவனுக்கும் வேறுபாடு தெரியாத மூடர்களாகிப் போனோம். புறவழிபாடுகளை இடையில் உருவாக்கியவர்கள் சுயநலம் கருதியே உருவாக் கினார்கள் என்பதை நாம் உணரத் தவறிவிட்டோம். இந்தப் புறவழிபாடுகளில் இறைவனை அறியப் பல வழிகளை நமக்குத் தந்திருக்கிறார்கள். இவற்றினால் நாம் எப்பலனும் அடையமுடியாது. சீவனைச் சிவ– னென்று நாம் உணராதவரைக்கும் இவையெல்லாம் அர்த்தமற்றவைகள் என யோகர் சுவாமிகள் மிக அழகாகக் கூறுகின்றார்.

**தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தால் இறைவனைக் காண்பீரோ?**
**மலையில் ஏறி மவுனம் செய்தால் சகாதேவனைக் காண்பீரோ?**
**கலைகள் பலவும் கற்றுவிட்டால் கங்காதரனைக் காண்பீரோ?**
**விலைக்குப் புத்தகம் வாங்கிப் படித்தால் விமலனைக் காண்பீரோ?**
**பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ?**
**மூலையிலிருந்து முணுமுணுத்தால் முதல்வனைக் காண்பீரோ?**
**செத்தாரைப் போலத் திரிந்திடடா –தம்பி**
**சீவன் சிவனென்று அறிந்திடடா.**

என்கின்றார்.

ஆகவே சீவர்களாக இவ்வுலகில் வாழ்கின்ற நாம் சிவர் களாக மாறவேண்டும். இதற்கான வழி முறைகளாக ஏனைய சீவர்களுக்கு உதவிபுரிவதும் இறைநாமத்தை இடையறாது உச்சரிப்பதும் வீணருடன் கூடாமல் நல்லவற்றையே செய்வதுமாகிய தொண்டுகளில் ஈடுபட்டு சீவனும் சிவனும் ஒன்றென்ற தத்துவத்தை உணர்வோமாக!

## பிறப்பின் இரகசியம்

உன்னை நீ அறிந்து கொண்டு அமரத்தன்மையை அடைவதற்காக நீ பிறந்திருக்கிறாய்
–பாபா–

## வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் யாது பயன்?

நொடிப் பாட்டுப்போல அமைந்த ஒருபாடலில் வருகின்ற ஓர் அடியே மேலே காணும் பாடலடி.

**வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் யாது பயன்?**
**இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை–மங்காத**
**சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்**
**ஏரகத்துச் செட்டி யாரே**

என்பதுதான் அந்தப்பாடல் ஏதோ அடுக்களைக்கு வேண்டிய சமையற் பொருள்களைப் பட்டியல் போட்டுக் காட்டுவது போல அமைந்திருக்கின்றது பாடல். வெங்காயம், சுக்கு, வெந்தயம், சரக்கு, சீரகம். பெருங்காயம் என்ற சொற்கள் அடுப்படியில் பயன்படுத்தப்படும் சொற்கள் போலத் தோன்றுகின்றன. ஆனால் உண்மை அதுவன்று. மனமாசு நீங்குவதற்கான வழியைக் காட்டும்படி ஒரு பக்தன் இறைவனை வேண்டுவதாக அமைந்திருக்கின்றது பாடல். நமது உடல் எப்போதும் சூடாக இருக்கின்றது. அந்தச் சூடு குறையாமலும் கூடாமலும் இருந்தால்தான் உயிர்வாழ முடியும். தொண்ணூற்றெட்டுப் புள்ளி நாலு பாகை பரனைட்டுச் சூடு உடலில் இருக்கவேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள். ஆகவே எங்களுடைய உடல் எப்போதும் சூடான உடலாக இருக்கின்றது. சூடான உடலைத்தான் வெம்மையான காயம் அல்லது வெம்காயம் –வெங்காயம் என்கிறது இப்பாடல். இந்த வெம்மையான உடல் எரியுண்டு சுக்குநூறாகிப் போனால் அதன் விளைவாக வெந்தழிந்து போன அயம் என்ற இருதயத்தால் (இரத்தாசயத்தால்) யாருக்கு என்ன பயன்? அதாவது இந்த இருதயம் நல்ல எதையும் நினைக்க வேண்டுமானால் அல்லது செய்யவேண்டுமானால் இந்த உடம்பு அழிந்து போனால் இருதயத்தால் பயனில்லாமல் போய்விடும் இந்தச் சரக்குப் பெட்டியான பண்டியை அதாவது உடலைச் சுமக்க வேண்டும் என்று எவருக்கும் விருப்பமில்லை. நல்லறிவில்லாமையாலேயே மனிதர்கள் இந்த உடம்பை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒருபோதும் ஒளி இழக்காத நல்ல அகம் என்ற சீரான அகத்தை அதாவது சீரான மனத்தை (சீரகத்தை) ஆற்றுப்படைவீடுகளில் ஒன்றான ஏரகத்தில் செட்டிபோல நல்வாழ்வு வாழ்கின்ற முருகன் தந்தானானால், இந்தப் பெருங்காயமாகிய பெரிய உடலை போற்றிக் காப்பதில் பொழுதைப் போக்க மாட்டேன் என்று அடியான் ஒருவன் கூறுவதாக இந்தப் பாடல் அமைந்திருக்கிறது. அடுப்படிப் பேச்சின் மூலம் நமது சமயத்தின் அடிப்படைத் தத்துவத்தைப் போதிக்கின்ற ஒரு பாடல் இப்பாடல். மனத்திருத்தி மனந்திருந்த இந்தப்பாடல் பயன் உறும்.

**–செல்வ மாணிக்கன், கொழும்பு**

# The plight of Saiva temples in Srilanka

### - A View Point

Recently one of the Tamil dailies carried an advertisement calling for applications from competent students aspiring to become Sivachariar to be trained at Kama Kodi Madam of Sri Sankarachariar of Kanchipuram, Tamilnadu. This was done at the instance of Hon. Minister. Sri Sankarachariar Madam of Kanchipuram professes theVedanta system of Hinduism, Saiva Agamas and its rites are alien to Sankarachorior Madam.

The Kiriyai and Sariyai parts of the Siva Agamas are texts for the study and the training of Sivachariars and Archakars who officiate as priests in all our Saiva Temples. Saivaisam has been the religion of the Tamil speaking Hindus of Sri Lanka from the time of Ravana, the great king of Sri Lanka. He was a proto Dravidian and a votary of Lord Siva.

It is only the Saiva Aadeenams that could impart competent and comprehensive training a Sivachariar not the Sankarar Madam. Moreover, the Sankarar Madam would not admit Non-brahman students for training as Sivachariars and Archakars. Archakars are required to officiate as priests of the shirines for minor deities of the Saiva Patham.

Our Saiva Aadeenams are Dharmapuram and Thiuvavaduthurai, Tanjore district, TamilNadu. Dharmapuram has an excellent Veda Sivagama Paadasalai and the present incumbent is a great scholar leading an austere and truly saintly life and would be too willing to admit students from Sri Lanka to be trained as competent Sivachariars. In fact a batch of Sivachariars from here trained earlier at Dharmapuram Aadeenam.

Dharmapuram Aadeenam has about 29 Siva temples most of Paadalpetta Sivathalams, under it's management. Vaideeswaran temple Thirukadavur Temple, Thiruvaiaru Temple. Thirunallaru and Thayumanavar are some of them. These temples are managed strictly following the Sivagamas. They are the best-managed Temples.

Sivachariars passing as above could undergo practical training for about one year in one of the abovetTemples. The Senior Sivachariars officiating at Vaideeswarant temple are our advisers at Thiruketheeswaram temple. One of them was regularly visiting Thiruketheeswaram to act as Sarva Sathagar during the Annual Festivals and Maha Sivarathiri. Our best Maha Kumbha Abishekam was conducted in 1976 under the supervision of the Late Sri La Sri S. Swaminatha Sivachariar of Dharmapuram.

Similarly the ensuing Maha Kumbhabishekam would be performed under supervision and direction of the present Senior Sivachariar who is a Siva Agama Vidvan of the Dharmapuram Aadeenam.

Remember that Saiva Priesthood (Sivachariars) is an exalted lot worthy of worship. They are the mainstay of Saiva religion. This prompted Saint Suntarar to sing thus in his Thiruthonda Thogai.

"I am enslaved to those who are privileged to touch the sacred body of the Lord thrice a day " Our Sivachariars should learn to live up to this expectation. They should cease to be professionals. It is unbecoming on the part of an alleged Sivachorior to hob-rib with politicians and film stars as recently happened. Sivachariar should not step down from his exalted pedestal under any circumstances. If any dignitary wishes to see a Sivachariar the former should go to the Sivachariar. A Sivachariar who propitiates petty deities or village deities ceases to be a Sivachariar and is disqualified thereafter from entering the por-

tals of a Sivalingam and perform Poojas and rites.

Our present system of education is lopsided bereft of our religious and culture. Our men and women who received it attend temples and perform various rites and ceremonies and apply Viputhy without knowing their significance and the real purpose.

The rites are performed as routine exercise traditionally followed in the family. In consequence the people with call themselves Hindus do not know the difference between Hinduism and Saivam and are ignorant of the fact that Hinduism by itself is not a religion; it is the common nomenclature for a group of religions -Saivam, Vaishnavam and Saaktham, the three main religions of India in practice; and they are vulnerable and become adherents of one or other of the following heretic faiths not knowing that they are all mirages of varying dimension

1. Sri Sathya Sai Baba Cult
2. Vallalar Ramalinga Swamigal Cult
3. Hawaii Saivasm
4. Veera Saivaism
5. Anjaneyer Cult
6. Ayappa Cult
7. Saktha Cult

Most of our \priests are incompetent and are not properly ordained. They mechanically repeat the manthirams without knowing the meaning

I am only highlighting the true state of affairs in the interest of Saiva religion and it's philosophy. I consider it to be my duty.

True Saiva Achariars are venerated persons leading an exemplary life, learned in Sanskrit and Tamil, the Vedas, Saiva Agamas, Paththathis, Pathinenpuranas. Panniru Thirumurai, Saiva Siddhantha, Sitpa Shastra, Temple Architecture and Astrology.

They should have in addition to donning Poonul receive all Deekais- Samaya Deekai, Viseda Deekai and Nirvana Deekai and married before they receive Acharya Abidekam from a competent Sivachariar.

They should not pay obeisance to anyone except to the Deity he serve. They should have a tuft of hair- the Kudumi. Only a Sivachariar could officiate in the following temples.

1. Sivan Temple with a joint shirine is to the Sakthi-Ambal
2. Vinayagar temple
3. Subramaniya temple

He is enjoined not to officiate at shrines for village deities. He should not perform Thivasam; Anthietty or funeral rites and he should not run after persons in power.

I am sorry to state that our present priesthood is in complete disarray and confusion causing great concern among devotees. It has become merecy vocation or occupational without any spiritual value.

Most of the persons' ordained as Sivachariars are incompetent - they have not proper knowledge of the Shastras-Veda Sivagamams etc- they are ignorant of both Tamil and Sanskrit even those who know some Sanskrit are poor in their intonation.

The Siva Agamas prescribe five categories of Saiva Priesthood Order for officiating in Temple rites, daily and special poojas.

They are Acharyan, Archakan, Sathakan, Alangirathan and Vasagan-Achariyan should perform naimithia rites as per Siva Agamas, archakar should perform the Nithiya Poojas, alangiratham adorns the deity, sathagan presents the materials required for the two categories of Poojas to the respective priests- vasagan recites Vedic manthirams, othuvars who sing thirumarais come under the category of vasagan.

The acharya abiseka ceremonies are not properly done. The weddings and funeral rites too are improperly performed. Any vaideka part of these ceremonies should also be done by Sivachariars and not by Sumaratars who do

not receive Saiva Deekai.

To make things worse, some of the Siva Achariars are self appointed ones. Even the few Sivachariar who are properly ordained and have the competency, are flouting the Saiva Agamic tenets and the rules of the paththathis to suit their convenience; they perform consecration rites at shrines for Maariamman and other petty deities.

Most of our temple trustees including those of our leading temples are indifferent to the present state of affairs. Probably they too are ignorant of the tenets of the Saiva religion. The only way we could remedy the present situation by-

1. Reviving the Gurukulam Vedasiva Agama Paadasalai of Thiruketheeswaram Temple that was suspended owing to the present armed conflict that engulfed the North and the East parts of Sri Lanka. It had all the facilities to educate and train competent Siva Achariars and

2. To establish a high power disciplinary body consisting of Siva Achariars, trustees and laymen who are learned in Saiva shastras to function like the Christian councils to regulate the teaching and training of Sivachariars and to maintain their competency and decorum.

As an interim measure we could send Siva Brahma students to be trained as Sivachariars at the Shiva Agama Paadasalai run by the Dharmapura Aadeenam of Tamilnadu. It is an excellent training centre. The Thiruketheeswaram Temple Restoration Society could make the necessary arrangements. In addition engage Sivachariars from Tamilnadu to meet the shortage to officiate our main Temples.

**வாழ்க்கையில் எந்த நெருக்கடியிலும் வாய்மையை மட்டுமே கடைப்பிடியுங்கள். இதைவிட மேலான உறுதியான நிச்சயமான பாதுகாப்பு வேறெதுவும் கிடையாது. உண்மை உங்களை யாவற்றினின்றும் விடுதலையடையச் செய்யும்.**

**– சாள்ஸ்டிக்கன்ஸ்–**

# அறுகரிசியும் வாய்க்கரிசியும்

அறுகரிசி தூவுதல் மங்கல வாழ்த்து நிகழ்ச்சிகளில் இடம்பெறுவது. வாய்க்கரிசி போடுவது அமங்கல நிகழ்ச்சியான சாச்சடங்கில் நடைபெறுவது.

அறுகரிசியை அட்சதை என்றும் மங்கல அரிசி என்றும், பொரியரிசி என்றும் கூறுவதுண்டு. அறுகம்புல் எனப்படும் cynodon grass உடன் சேர்ந்த அரிசியே அறுகரிசி.

பிரேதத்தின் வாயில் போடும் அரிசி வாய்க்கரிசி எனப்படும். இடுகாட்டுக்குப் புறப்படும் முன்னர் உற்றார் உறவினரால் இறுதியாக பிரேத்தின் வாயில் போடப்படும் அரிசி என்பதால் இதனை வாய்க்கரிசி என்பர்.

வாய்க்கரிசி போடுவதில் ஆண் பெண் என்ற பேதம் கிடையாது, ஆண்களும் போடலாம், பெண்களும் போடலாம். மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழுகின்ற தமிழருடைய முறைப்படி, பெண்கள் மட்டுமே வாய்க்கரிசி போடுவதாகத் தெரிகிறது. வாய்க்கரிசி பிரேதத்தின் வாய்க்குள் மட்டுமே போடப்படுகின்றதெனினும் வாய்க்கரிசி போடுகின்றவர் தலைப்பாகத்தில் நின்றபடி, அதன் காலை நோக்கிப் பார்த்தபடி வாய்க்கரிசி போடுவதே முறையென்று அனுபவம் மிக்கவர்கள் கூறுகின்றார்கள். வாய்க்கரிசி போடுவது அபரக்கிரியைகளில் ஒன்று.

அறுகரிசி தூவுதல் இலண்டன் வாழ் தமிழர் நன்கறிந்த ஒன்று. அறுகரிசி தூவும் வழக்கம் தமிழர் மத்தியில் பன்னெடுங்காலமாக உள்ளதா என்று அறிவதற்காக என் கைவசம் இருந்த இலக்கிய நூல்கள் சிலவற்றைப் புரட்டினேன். பழந்தமிழ் இலக்கியத்தில் அகற்கான சான்றைதையும் காணத் தவறிவிட்டேன். ஆனால் கம்பராமாயணத்தில் சான்றொன்று சந்தித்தது. கம்பராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் காண்கின்றது சான்றான அந்தப் பாடல். கம்பன் காலமென நம்பப்படுகின்ற பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் அறுகரிசிதூவும் வழக்கம் இருந்ததென்பதற்கு கம்பன் பாட்டுச் சான்றாய் அமைக–ின்றது. போர்க்களத்துக்குச் சென்று மீண்ட மேகநாதனை அரண்மனையில் வரவேற்ற நிகழ்ச்சியைக் கம்பன் வர்ணிக்கும் போது, அறுகரிசி தூவி வரவேற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றான்:–

**ஐயிரு கோடி செம்பொன் மணிவிளக்கு அம்கையேந்தி**
**மையறு வானநாட்டு மாதரும் மற்றைநாட்டுப்**

**பையரவல் குலாரும் பலாண்டிசை பரவத் தங்கள்**
**தையலர் அறுகு தூவி வாழ்த்தினர் தழுவச் சார்ந்தான்**

ஆகவே, மணத் தம்பதியினரை வாழ்த்துவதற்கு மட்டுமல்லாமல், வரவேற்பு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட மங்களகரமான நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் அறுகரிசி தூவி வாழ்த்துகின்ற வழக்கம் நிலவி வந்ததென்பது புலனாகின்றது.

திருஆனைக்காப் புராணத்தில் **சென்னி திருத்தமுறும் அறுகரிசி இட்டு** என்று கச்சியப்ப சுவாமிகள் கூறுகின்றார். ஆதலால், தெய்வத்தையும் பெரியோரையும் வழிபடும்போதும் அறுகரிசி தூவும் வழக்கம் இருந்தது என்பது தெரிகிறது.

தமிழ் நாவல் சரிதை என்ற நூலிலே காண்கின்ற **மங்கைக்கு அறுகிட வந்துநின்றார் மணப்பந்தரிலே** என்ற அடிகளிலிருந்து திருமணநிகழ்வின் போது அறுகரிசி போடும் வழக்கம் அன்றிருந்து தொடர்கின்றது என்பது வலுப்பெறுகின்றது.

அறுகரிசி தூவும் வழக்கம் இதுகாறும் நிலவுகின்ற தென்றாலும் அறுகரிசியைத் தூவுவது எப்படி என்பது சில தமிழரைப் பொறுத்தவரையில் இன்னமும் குழப்பமாகவே இருக்கின்றது. இலண்டனில் இடம் பெறுகின்ற திருமண விழாக்களின் போது வயதான ஆண்களும் பெண்களும் அறுகரிசி தூவுவதெப்படி என்று தெரியாது மறுகுவதைப் பல தடவை கண்டிருக்கின்றேன். பாதாதிகேச முறையா, கேசாதிபாத முறையா என்று தடுமாறும் பலரை வாசகர்களும் பார்த்திருக்கலாம். பாதாதிகேசம் என்றால் அடிக்காலில் தொடங்கி தலையை நோக்கிச் செல்லுதல், கேசாதிபாதம் என்றால் தலையில் தொடங்கி அடிக்கால் வரை செல்லுதல்.

ஆக அறுகரிசி தூவுவோர், தூவ ஆரம்பிக்க வேண்டியது காலிலா? தலையிலா? காலில் ஆரம்பித்துத் தலையில் முடிப்பதுதான் முறை. அதாவது பாதாதிகேச முறையே பின்பற்றப்பட வேண்டியது. மங்களமான கருமங்கள் காலில் ஆரம்பித்துத் தலைநோக்கிச் செல்ல வேண்டும் என்பதே முன்னையோர் மொழிந்த முறையாகத் தெரிகின்றது. தலையில் ஆரம்பித்துக்கால் நோக்கிச் செல்வது மங்கல நிகழ்ச்சிக்கான முறையல்ல அமங்கல நிகழ்ச்சிக்கான முறையே அது.

அறுகரிசி தூவப் பொருத்தமானோர் திருமணமாகி நன் மக்கள் பலரை ஈன்றவராக இருத்தல் விரும்பத்தக்கது, மணங்காணாதார் மணமக்களை அறுகரிசி தூவி வாழ்த்தத் தகுதியற்றவர் என்பர் ஆன்றோர். மணமக்களின் முன்னால், தட்டத்தில் வைக்கப்பட்டிருக்கும் மஞ்சள், அறுகு என்பன கலந்த வெள்ளரிசியை இருகைகளாலும் அள்ளி, மணமக்களின், முழங்கால் மூட்டு, தோட்பகுதி, உச்சந்தலை ஆகியவற்றில் படியுமாறு மும்முறை தூவி, **ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி, நீடூழி வாழ்க** என்று இறையை வேண்டி வாழ்த்தவேண்டும்.

தமிழர் பண்பாட்டு முறைகள் புலம்பெயர்ந்த நாடுகளில் மறக்கப்பட்டு வருகின்ற நிலையில் இத்தகைய கட்டுரைகள் அவசியம். இதுபோன்ற விடயங்கள் இன்னும் பல உள்ளன. விவரம் அறிந்த தமிழன்பர்கள், இதுபோன்ற விடயங்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதுவது இன்றைய கால கட்டத்தில் இன்றியமையாத ஒரு தமிழ்ப்பணி

**—எம். எஸ். நற்கீரன்—**



**குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை அதை அடைய ஆமற்கொள்ளும் பாதைக்கும் செலுத்தவேண்டும். வெற்றிக்கும் உரிய எல்லா ரகசியங்களும் இதில் அடங்கியிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது.**

**—சுவாமி விவேகானந்தர்—**

# தேடியுந் திரிந்தும் காண வல்லரோ?

உணவுக்கு ஆறு சுவைகள். ஆனால் உணர்வுக்கோ ஒன்பது சுவைகள். ஒன்பதிலும் ஒப்பில்லாததாய் உயர்ந்து விளங்குவது நகைச்சுவை. நகைச்சுவை இல்லாதவன் நாற்கால் விலங்குதான் சந்தேகமில்லை. நகைச்சுவைமட்டும் இல்லையென்றால் நான் என்றோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன் என்று மகாத்மாகாந்தி கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நகைச்சுவை சிரிப்பூட்டுவதோடு சிந்திக்கவும் செய்யுமாயின் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாகும். மகான்களுடைய நகைச்சுவை இந்த ரகத்தைச் சேர்ந்தது. அவர்கள் தம்மையும் உலகையும் பார்த்துச் சிரிப்பார்கள். அவர்கள் நகைச்சுவை நம்மைச் சிரிப்பூட்டுவதோடு அமையாது சிந்திக்கவும் வைத்துவிடும். நாவுக்கரசு சுவாமிகளுடைய நகைச்சுவையும் இந்த வகையைச் சார்ந்ததாகும்.

அடியும் முடியும் தேடி அயனும் அரியும் அலுத்த கதை அனைவரும் அறிந்ததே. அந்தக் கதையைப் படித்த புலவர் ஒருவருக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. எத்தகைய முட்டாள்கள் இந்தப் பிரமாவும் விஷ்ணுவும். அடியையும் முடியையும் காண இத்தனை அல்லற்பட்டிருக்கத்தான் வேண்டுமா? ஒருவர் பன்றியாகிப் பூமியைக் குடைந்தாராம், மற்றவர் அன்னமாகி ஆகாயவெளி கடந்தாராம். இத்தனை சிரமம் எதற்கு? பேசாமற் பரவை வீட்டு வாசற்படியாகிக் கிடந்திருக்கலாமே. பரவை வீட்டுக்கு ஒருதரமா தூது போனார் சிவன்? இரண்டு தடவை போனார். ஒவ்வொரு முறையும் வாயிற்படியைக் கடக்கும்போது தாளினை உயர்த்தியும் தலையைத் தாழ்த்தியும் அன்றோ அவர் சென்றிருப்பார்? ஒருதரம் அடியையும் முடியையும் கண்டாலே போதுமென்று ஆலாய்ப் பறந்தவர்கள் அப்பொழுது வேண்டியமட்டும் பார்த்திருக்கலாமே! அயனினதும் அரியினதும் அசட்டுத்தனத்தை நினைக்க நினைக்க புலவருக்கு எழுந்த சிரிப்பைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. சிரித்துக்கொண்டே அவர் பாடிய பாட்டு இது,

**ஆனா ரிலையே அயனுந் திருமாலுங்**
**கானார் அடிமுடிமுன் காண்பதற்கு – மேனாள்**
**இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற**
**பரவைதிரு வாயிற் படி.**

நாவுக்கரசு சுவாமிகளுக்கு அயனினதும் அரியினதும் அசட்டுத்தனம் தெரியும். ஆனால் இந்தப் புலவரைப் போல பரவை திருவாயிற்படியாகப் போயிருந்தால் அடியையும் முடியையும் காணலாம் என்று சொல்வது அவருக்குச் சம்மதமில்லை. அயனையும் அரியையும்போல இந்தப் புலவரும் அசடர்தான் என்று முடிவுகட்டிவிடுகிறார் அவர். அயனும் அரியும் பரவை திருவாயிற்படியாய் மட்டுமல்ல கஜகர்ணம் கோகர்ணம் போட்டிருந்தாலும் கூட பரமனது அடியையும் முடியையும் கண்டிருக்க முடியாது. ஏன்? அதற்குக் காரணத்தையும் அவரே கூறுகிறார்.

**நாடி நாரணன் நான்முகன் என்றிவர்**
**தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ**
**மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்**
**தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே**

அம்பலத்தாடியின் பாதங்கள் தமது நெஞ்சப்பேழைக்குட் பத்திரமாக இருக்கும்போது நான்முகனும் நாரணனும் தேடியென்ன? ஓடியென்ன? காண்பதென்பது கனவிலும் நடக்காத காரியமாயிற்றே என்று நகைக்கிறார் நாவுக்கரசர்.

சிரிப்பூட்டுவதுடன் நின்றுவிடவில்லை திருநாவுக்கரசர், சிந்திக்கவும் வைக்கிறார் என்பது கவனிக்கத் தகுந்தது. நாரணனுக்கும் நான்முகனுக்கும் மட்டும் அவர் சொல்லவில்லை. உலகத்துக்கே சொல்லுகிறார். 'கோயிலுக்கும் குளத்துக்கும் ஓடிக் கடவுளைத் தேடி அலுக்காதீர்கள்,
உள்ளத்தில் இல்லாதவரை அவனை உலகிலே தேடிப் பயனில்லை'



# இந்துசமயம்

— க.குணரத்தினம் —

## வள்ளலார் 1823—1874

வள்ளலார், திருவருட்பிரகாசர், வடலூர் வள்ளலார், இராமலிங்க அடிகள், இராமலிங்கக் கவி என்று பலவாறு அழைக்கப்பட்டவர் இராமலிங்கம். அவர் வாழ்ந்த காலத்தில் சமூகச்சீர்திருத்தப் புரட்சியாளராகவும், பிறர் பட்டினி தீர்க்கும் வள்ளலாகவும், கவிதைமழை பொழியும் கார்மேகமாகவும், ஆன்மநேய ஒருமைப்பாடு என்ற இலட்சியத்தைப் பேண சுத்த சத்திய சன்மார்க்க சங்கத்தைத் தோற்றுவித்தவராகவும் திகழ்ந்தார்.

இராமலிங்கம் தமிழ்நாட்டில் சிதம்பரத்துக்கு வடமேற்கே இருந்த மருதூரில் 5—10—1823 ஞாயிறு அன்று பிறந்தார். தாயார் சின்னம்மாள் தகப்பனார் இராமையா. குடும்பத்தில் ஐந்தாவது, கடைசிப் பிள்ளை. எட்டு மாதங்களில் தந்தையை இழந்தார். பொன்னேரியிலுள்ள பாட்டியார் வீட்டில் சில ஆண்டுகள் எல்லோரும் தங்கியிருந்தனர். அண்ணன் சபாபதி தமிழில் புலமை பெற்றிருந்தார். தம்பி தங்கையரோடு சென்னையில் குடியேறினார். பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தும் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தியும் பெற்ற வருமானத்தில் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

ஐந்தாவது வயதில் இராமலிங்கத்தை பள்ளிக்கனுப்பினார் தமையன். பள்ளிக் கல்வியில் நாட்டமில்லை என அறிந்து தாமே கல்வி போதிக்கும் பொறுப்பை மேற்கொண்டார் சபாபதி. அவரிடமும் முறையாகக் கல்வி கற்கவில்லை. தமது ஆசிரியர் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் இராமலிங்கத்தை கல்வி பயில அனுப்பினார். அந்தமுயற்சியும் பயன்தரவில்லை. கல்வியில் நாட்டமில்லாத மூடப்பிள்ளை என்று சினங்கொண்டார். உணவு உடை அளிக்க மறுத்து வீட்டைவிட்டு தம்பியை சபாபதி வெளியேற்றினார். அன்பும் இரக்கமும் நிரம்பிய அண்ணி பாப்பாத்தி அம்மாள் கணவனுக்குத்

தெரியாமல் மறைவில் இராமலிங்கத்திற்கு உணவளித்து வந்தார். கந்தகோட்டம் என்ற முருகன் கோயிலுக்கும் திருவொற்றியூர் தியாகேசர் கோயிலுக்கும் அடிக்கடி சென்று வந்தார் இராமலிங்கம். தந்தையின் திதி நாள் என்றறியாது உணவருந்த வீட்டின் பின்புறமாக வந்த இராமலிங்கத்தின் நிலைகண்டு கவலையுடன் கதறி கண்ணீர்விட்டார் அண்ணி.

அண்ணியின் துயரும் வேதனையும் இராமலிங்கத்தின் மனதை மாற்றியது. அண்ணன் சொற்படி கல்வி கற்பதாக உறுதி கூறினார்.

வீட்டின் மேல்மாடியில் ஒருதனி அறையில் தங்கி கற்கத் தொடங்கினார்.

அறையில் திருவிளக்கை ஏற்றி, ஒரு கண்ணாடியைச் சுவரில் மாட்டி, கற்பூரம் காட்டி, கண் இமை கொட்டாது அதனையே உற்று நோக்கினார். அக் கண்ணாடியில் சிறிது நேரத்திற்கெல்லாம் திருத் தணிகைக் கந்தப்பெருமான் திருவுருவம் தெரிய லாயிற்று. இது ஒரு புதுமுறை வழிபாடு. புறத்தே கந்தப்பெருமானை வைத்து அதையே அகத்திலேயும் நிறுத்த முயல்வர் பக்தர்கள். ஆனால் இராமலிங்கமோ முதலில் அகத்தே கந்தப் பெருமானை உருவகப் படுத்தி, அந்த வடிவத்தையே புறத்திலும் காணமுயன்றார். அதில் வெற்றியும் பெற்றார். இராமலிங்கம் உள்ளம் உருகி உணர்ச்சி பொங்கி தணிகைப்பெருமான் மீது கவிதை மழை பொழிந்தார். கண்ணாடி தூய இதயத்தையும் விளக்கின் சுடரொளி தெய்வீக சோதியையும் குறிப்பன. அந்த அறை பக்திப் பிரவாகத்திலும் பாடல் இசையிலும் மூழ்கியிருந்தது. அண்ணி அவரின் பக்தையானார். தினந்தோறும் தணிகைப் பெருமானுக்கு பாமாலை சூட்டினார். ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி இருப்பார். தேவார திருவாசகப்பாடல்களை மனத்தில் பதித்து மனனம் செய்து வைத்திருந்தார். ஞானசம்பந்தப் பெருமானிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டு அவரையே தம் குருவாகவும் கருதி வந்தார். கண்ணாடியில் கந்தப் பெருமானைக் கண்டபோது இராமலிங்கத்திற்கு வயது 9. தம்பியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல் கண்டு வைசமயத்தில் பற்றுடைய சபாபதி ஓரளவு ஆறுதலடைந்தார். சோமு செட்டியார் என்பவர் வீட்டில் வாரந்தோறும் புராணச்சொற்பொழிபு

நிகழ்த்திவந்தார் சபாபதி. நடராசப்பெருமான் திருவுருவம் பிரதிட்டை செய்யும் சிறப்பு விழாவில் ஞானசம்பந்தப் பெருமானின் சரித்திரம் சொல்ல இசைந்திருந்தார். திடீரென நோய்வாய்ப்பட்டார். கடமை தவறுவதாக கவலை கொண்டார். பாப்பாத்தி அம்மாள் ஆலோசனைப்படி சில பாடல்ககளைப் பாடி தீப ஆராதனையைச் செய்து விட்டு செட்டியாரிடம் சபாபதியின் உடல்நிலை பற்றி தெரிவித்து வருமாறு இராமலிங்கம் அனுப்பப்பட்டார்.

விழாவில் இராமலிங்கம் இரவு 9 மணிக்குத் தொடங்கிய சொற்பொழிவை நள்ளிரவு 12 மணிவரை நீட்டினார். அப்போதும் ஞானசம்பந்தப் பெருமானின் புராணத்தில் இரண்டுவரிகளே முடிவுற்றன. பெரிய புராணத்தின் காப்புச் செய்யுளிலுள்ள உலகெலாம் . . . . என்னும் முதற்சொல்லுக்கு விளக்கம் கூறுவதிலேயே பெரும் பகுதி நேரத்தைச் செலவழித்தார். இராமலிங்கத்தின் வாக்கிலே வேறு எவரிடமும் காணாத தெளிவைக் கண்ட காரணத்தால் கேட்ட மக்கள் எல்லோரும் சொக்கிப் போயினர். பாடும் வகையறிந்து பாட்டின் பொருளுணர்ந்து, அதனோடு இரண்டறக் கலந்து பாடியதால் பாடல்களைக் கேட்டவர்கள் இராம லிங்கத்திடம் தம் இதயத்தைப் பறிகொடுத்தனர். புராணம் முழுவதையும் நடத்தி முடிக்க இராமலிங்கத்தை வேண்டினர்.

தம்பிக்கு ஏற்பட்ட தனிப்புகழ் கண்டு சபாபதி மகிழ்ந்தார். தம்பியின் பிரசங்கத்தின் திறமையை அறிய ஒருநாள் பிரசங்கம் செய்யும் இடத்தில் மறைவாக இருந்து கேட்டார். தம்பிதானா பிரசங்கம் செய்பவர் என்ற ஐயம் தோன்றியது. உற்று நோக்கி தம்பியார்தான் என அறிந்து கொண்டார். இராமலிங்கத்தின் பெருமை யறியாது தான் துன்பப்படுத்தியதை நினைந்து வருந்தினார். அன்றுமுதல் இராமலிங்கத்திடம் பய பக்தியுடன் நடந்துகொண்டார். இராமலிங்கம் முதற்சொற்பொழிவு நிகழ்த்தியபோது அவருக்கு வயது 11. இராமலிங்கர் எல்லோரையும் போல முறையாக இலக்கண இலக்கியம் பயிலவில்லை. ஆனால் பிற்காலத்தில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைத் தாமே ஓதவும், பிறருக்கு ஓதுவிக்கவும் ஞானம் பெற்றிருந்ததோடு வடமொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். காஞ்சிபுரம் சபாபதி முதலியார் வேண்டுகோளுக்கிசைந்து சிறுவர்கள் படிப்பதற்கு மனுமுறைகண்ட வாசகம் எனும் நூலை எழுதிக் கொடுத்தார். புலவர்கள் ஐயங்கள் கேட்டுத் தெளிவு பெற்றனர். அவரைச் சூழ்ந்திருந்தனர். அறிவுக் கலைகளெனத் திகழ்ந்த வேத ஆகமக் கலைகளை ஓதாமலே உணரும் ஞானம் பெற்றிருந்தார். தெய்வத் திருவருள் அந்தத்திறமையை அவருக்கு அளித்தி ருந்தது. ஓதாதுணர்ந்தார் என்று கூறப்படுகிறது. பிறர் தமக்கு ஓதுவிக்காமல் இறையருளால் தாமே ஓதியுணர்ந்தார் என்றே பொருள் கொள்ளவேண்டும். இராமலிங்கர் அடக்கத்தோடு கூறியவை மேல் வருமாறு

**ஓதாதுணரந்திட ஒளியளித் தெனக்கே**
**ஆதாரமாகிய அருட்பெருஞ்சோதி**

ஓதிஉணர்ந்தவர் எல்லாம் எனைக் கேட்க எனைத்தான் ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச் செய் உறவே. மேலும் தனித்தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரின்றியே என்தரத்தில் பயின்று அறிதற்கு அருமையாகிய கல்விப் பயிற்சியை எனது உள்ளகத்தே இருந்து பயிற்றுவித்தருளினீர் என்று உரை நடையில் எழுதியுள்ளார் இராமலிங்கர்.

திருத்தணிகைக்கும் திருவொற்றியூருக்கும் சிறுவயதில் சென்றபோது பாடல்கள் பாடினார். தமது அறையில் நாள் தோறும் தணிகைப் பெருமானுக்கு பாமாலை சாற்றினார். சிறு வயதிலேயே பாடல்கள் இயற்றும் ஆற்றல் அவருக்கு எங்கிருந்து வந்தது? அவர் தம் வாழ்நாளில் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள், பக்திப்பாடல்கள், தத்துவப்பாடல்கள் என பாடியுள்ளார். எல்லாமாக 5815 பாடல்கள் திருவருட்பா எனும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

**அறியாத பருவத்தே என்னை வலிந்தழைத்தே**
**ஆடல் செயும் திருவடிக்கே பாடல் செயப்பணித்தார்**
**ஏதம் ஒன்றும் அறியாப் பேதையாம் பருவத்து**
**என்னை ஆட்கொண்டெனை உவந்தே**
**ஓதும் இன்மொழியால் பாடவே பணித்த**
**ஒருவனே என்னுயிர்த் துணைவா**

என்று பிள்ளைப் பருவத்திலே தம் உள்ளத்தில் கோயில் கொண்டு கவிதை மழை பொழியவைத்த முருகனின் அருளை வழிபடுகின்றார் இராமலிங்கர். மேலும் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தேன்மொழி யொன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தேன் மொழிகளால் பல்வகைத் தோத்திரப்பாடல்களைப் பாடுவித்தருளினீர் என்று உரை நடையில் எழுதியுள்ளார்.

(தொடரும்)

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

கந்தையா தியாகமூர்த்தி

சங்க காலத்துப் பெரும்புலவர் ஔவையாருடன் தமிழர் தெய்வமான முருகன் சல்லாபஞ் செய்து சில முக்கிய கேள்விகளை எழுப்பி, அவற்றிற்கு மிகப்பொருத்தமான பதில்களையும் பெற்றுள்ளார்.

ஒரு கேள்வி: **ஔவையே உலகில் அரியது எது?**

பதில்: **அரியது கேட்கின் தனிநெடு வேலோய்**
**அரிது அரிது மானிடராகிப் பிறத்தலரிது**
**மானிடராகிப் பிறந்த காலையும் கூன் குருடு**
**செவிடு நீங்கிப் பிறத்தலரிது.**
**கூன்குருடு செவிடு நீங்கிப் பிறந்த**
**காலையும் ஞானமுங்கல்வியும்**
**நயத்தல ரிது**
**ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்**
**தானமுந் தவமும் தாம் செயலரிது**
**தானமுந் தவமும் தாம் செய்வராயின்**
**வானவர் நாடு வழி திறந்திடுமே.**

கல்வியை முறையாகக் கசடறக் கற்று நன்கு ஆராய்ந்த பின்னர் தான் கல்வி ஞானம் உதயமாகும். அந்த ஞானத்தையும் நன்கு துருவித் துருவி அதில் திளைத்தால் உலகில் நாம் அடையக் கூடிய பெரும் பேறுகள் தவமும் தானமும் என்று விளங்கும். இத் தானத்தையும் தவத்தையும் நாம் கைக் கொண்டு வாழ்ந்தால் வானவர் நாடாகிய எதையும் நாடாத வீடு பேற்றினை அடையலாம். இவற்றில் தவமென்பது ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைப்பது. தானம், உடையவற்றைப் பகிர்ந்து கொள்வது.

இன்று நாம் எல்லோரும் அடைந்துள்ள நிலைகள் யாவும் எமது பெற்றார், உற்றார், ஆசிரியர் ஏனைய சமூகத்தில் உள்ள சான்றோரின் தானத்தினாற் தான். நாமும் வளர்ந்து தொழிலியற்ற முடிந்த நாள் முதல் எமது தனிப்பட்ட தேவைகள், குடும்பத்தின் தேவைகள் அல்லது உற்றார் உறவினர் தேவைகள் என்ற குறுகிய வரையறைகளைத் தாண்டி, ஊரின், நாட்டின், சமயத்தின்,

மொழியின், உலகத்தின் தேவைகட்கு முயன்றால் மட்டுமே, நாம் பெற்ற தானத்தின், கடனைத் திருப்பி கொடுத்தவர்களாவோம்.

அன்றேல் நமது கணக்குகள் யாவும் கடனளவிலேயே நின்றுவிடும். கற்ற கல்வியின் பயனோ உலக வாழ்க்கையின் பயனோ அதுவன்று. தானத்தையுந் தவத்தையும் ஈட்டும் அருளாளர் பலராற்றான் உலகம் இயங்குகின்றது.

இவ்வாறு ஞானத்தையும் கல்வியையும் நயந்து தானமுந் தவமும் தவமேற் கொண்ட புருஷர்களில் தலை சிறந்த ஒருவர் சுவாமி விபுலானந்தர். அம் முத்தமிழ் வித்தகரைப் பற்றிச் சில விபரங்களை நினைவுபடுத்துவோம்.

சுவாமிகள், தமிழீழத்தின் கீழ் மாகாணமாகிய மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த காரைதீவில் பெரியார் சாமித்தம்பிக்கும், கண்ணம்மைக்கும் 1893–03–27ஆந் திகதி புதல்வராக அவதரித்தார். பெற்றோர் சூட்டிய பெயர் மயில்வாகனன்.

இவர் முறையாகக் கல்வி கற்ற நிலையங்கள் காரைதீவு தமிழ்ப் பாடசாலை, கல்முனை மெதடிஸ்த மிஷன் பாடசாலை, மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, கொழும்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி என்பனவாகும். சுவாமிகள் கேம்பிரிஷ் சிரேட்டத் தேர்வில் 16ஆம் வயதில் முதன்மையாகத் தேறியவர். இலண்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரித் தேர்வில் (B.Sc) தாமாகக் கற்றுத் தேறியவர். யாழ்ப்பாணத்தில் தாமே தோற்றுவித்த ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் மூலம் இலங்கையின் மூத்த தமிழ்ப் பண்டிதரானார்.

எம் முத்தமிழ் வித்தகர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரி, கல்முனை கத்தோலிக்கப் பாடசாலைகளில் ஆசிரியராக இருந்தவர். கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் (சென். பற்றிக்ஸ்) கல்லூரியிலும் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார். அன்னம் ஆவே என்ற முதற்தர மாணவ இலக்க

ணத்திற்கு அயராது கல்வியில் திளைத்தும், மாணவர்கட்கு வழிகாட்டியாகியும் விளங்கிய சுவாமிகட்கு இல்லற வாழ்க்கையில் நாட்டமேதும் உண்டாகவில்லை. மாறாக தமிழுக்கும், சைவ உலகிற்கும் வாழ்க்கையை அரப்பணிக்க வேண்டி தமது 29ஆம் பிராயத்தில் (1922ஆம் ஆண்டில்) ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயத்தைச் சேர்ந்தார்.

1924ஆம் ஆண்டு சித்திரை மாதச் சித்திரை நட்சத்திரப் பௌர்ணமியன்று சுவாமி சிவானந்தர், இவருக்கு பூர்ண துறவறம் அருளி சுவாமி விபுலானந்தர் என்ற பெயரை வழங்கினார். 1925ஆம் ஆண்டு இலங்கைக்குத் திரும்பிய போது, கிழக்கு இலங்கையிலுள்ள பாடசாலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை இராம கிருஷ்ண மடாலயத்தினர் சுவாமிகட்கு அளித்தனர். இக் காலத்தில் அவர் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலத்தையும், கல்முனையில் சாரதா வித்தியால யத்தையும் தாபித்தார். அறிவெனப்படுவது அளந்து துணிதல் என்பதற்கேற்ப தம் மேற்பார்வையிலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் ஆய்வு கூடங்களை அமைத்து விஞ்ஞானக் கல்வியை வளர்க்க வித்திட்டார். இலங்கைக் கல்வித் திணைக்க ளத்திற்காகச் சைவசமயம், சங்கீதம் ஆகிய பாடங்களில் கல்வித் திட்டங்களையும் தேர்வு அடிப்படைகளையும் ஏற்படுத்தினார்.

1927ஆம் ஆண்டு சிதம்பரத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட விசாரணைக் குழுவில் விபுலானந்த அடிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் வேண்டுதற்கிணங்க அதன் அவசியம் பற்றி சான்று பகர்ந்தனர். இதன் பயனாக ஏற்படுத்தப்பட்ட சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக சுவாமிகள் அமர்ந்தார். இப்பதவியை 1933ஆம் ஆண்டு துறந்து இலங்கை திரும்பிய பின் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் பேராசிரியராக சிறப்பித்தார்.

சுவாமிகள் மதுரைத் தமிழ்ச் சங்க மாத வெளியீடான செந்தமிழ், கரத்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி, ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி ஆகிய சஞ்சிகைகட்குப் பல கவிதைகள் கட்டுரைகள் எழுதி வந்தார். அடிகள், கணேச பஞ்ச தோத்திரப் பஞ்சகம், கதிரையம் பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டைமணி-மாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமார வேணவ மணிமாலை என்ற செய்யுள் நூல்களையும் விவேகானந்த தீபம், கரும யோகம், ஞான யோகம் நம்மவர் நாட்டு ஞானவாழ்க்கை, விவேகானந்தர் சம்பாஷணைகள் போன்ற மொழிபெயர்ப்பு நூல்களையும் தமிழில் நல்கினார்.

தமிழர் கலைகளையும் இயல் இசை நாடக முத்தமிழையும் கலைமகளாக உருவகித்து வாணி-யென்றும் அழைப்பர். அடிகளோ ஆங்கிலம், கிரேக்கம் ஆகிய மொழிகளிலுள்ள கலைகளை ஆங்கில வாணி, யவன வாணி என்றழைத்து அம் மொழிகளிலுள்ள கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் என்பவற்றைத் தமிழில் மொழி பெயர்த்தார். சுவாமிகளின் மொழிபெயர்த்த சேக்ஸ்பியரின் ஜூலிய சீசர் என்ற நாடகத்தின் மொழி பெயர்ப்பு மிகவும் பிரபல்யமானது.

**அஞ்சினர்க்குச் சதாமரணம் அஞ்சாத நெஞ்சத்து ஆடவர்க்கு ஒரு மரணம்**

என்று சுவாமி விவேகானந்தரின் அஞ்சாமை என்ற வீர மந்திரத்திற்கு மெருகு பண்ணினார்.

அடிகளார் சென்னைப் பல்கலைக் கழகத்தினருடன் இயைந்து தமிழ் அருஞ் சொல்லாக்கத்தினை முனைந்து பன்னீராயிரம் (12,000) சொற்களுக்கு மேல் தமிழில் வடித்தார்.

ஆங்கிலம், கிரேக்கம் (யவனம்), வங்காளம், அரபுமொழி, சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றும் தமிழ் மொழியில் மிக ஆழ்ந்த புலமையும் அடைந்தமையால் சுவாமிகளின் மொழி பெயர்ப்புக்கள் மிக மிகப் பொருத்தமாய் அமைந்தன. உதாரணமாக கோடுகாளால் அமைவது கோணம். இச் சொல்தான் யவ னத்திற்கு Gonos என்ற சொல் Trigonometry- திருகோணகணிதம் என்று கணிதத்தின் ஒரு பகுதியாக இருப்பதை எடுத்துக்காட்டினார். அவரது ஆழ்ந்த அறிவின் பயனாக மதங்க சூளாமணி, யாழ் நூல் என்ற அரிய நூல்கள் தோன்றி இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்ப் பிரிவுகள் வளம்பெற்றன.

சுவாமிகள் ஒரு சிறந்த பேச்சாளர். அவர் கலந்துகொண்டு சொற்பெருக்காற்றிய கூட்டங்கள், மகாநாடுகள், பட்டமளிப்பு விழாக்கள் ஏராளம். இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகட்கு வித்திட்ட யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசில் பங்கெடுத்து அதன் தலைவராகவும் கடமையாற்றினார். மிகவும் சுதந்திர வேட்கையும் வீர உணர்ச்சியும் கொண்டவர். ஒரு நிகழ்ச்சி அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் எங்கும் அன்றைய

ஆட்சிக்கொடி பறக்க, சுவாமிகள் தமது இல்லத்தில் மாத்திரம் இந்திய காங்கிரசின் கொடியைப் பறக்கவிட்டார். பல வேண்டுதல்கள் மிரட்டல்கள் இருந்தும் அதை இறக்கவில்லை.

அடிகளாரின் படைப்புகளில் மிகச் சிறந்ததாகப் பரிம ளிப்பது யாழ் நூலாகும். நெஞ்சையள்ளும் சிலப்பதி காரத்தின் அரங்கேற்றுக் காதையில் இருபத்தைந்து அடிகளை அடிப்படையாகச் கொண்ட இசை, விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவே இந்நூல். சுவாமிகள் பத்து ஆண்டுகளுக்கு மேல் அல்லும் பகலும் இயற்றிய உழைப்பின் சிகரமே இந்நூல். இதனை 1947ஆம் ஆண்டின் ஆனி மாத இருபதாம் இருபத்தோராம் திகதிகளின்(20,21-06-1947) திருக் கொள்ளம் பூதூர்த் திருக்கோயிலில் தமிழ், இசை வல்லுனர் முன்னிலையில் அரங்கேற்றினார். அரங்கேற்றிய ஒரு மாதக் காலத்தில் அடிகளார் இறைவனடி சேர்ந்தார். அத்தினம் 19-07-1947 ஆகும் அவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்ட சமாதியை அடிகளார் இயற்றிய பின்வரும் கவிதை சாந்தி யாக்குகின்றது

**வெள்ளை நிற மல்லிகையோ, வேறெந்த மாமலரோ**
**வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ?**
**வெள்ளை நிறப் பூவுமல்ல, வேறெந்த மலருமல்ல**
**உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது**

ஐம்பத்தைந்தே ஆண்டுகள் மட்டும் இந்நிலவுலகில் வாழ்ந்து ஞானமுங் கல்வியும் நயந்து தானமும் தவமுந் தாம் செய்து வானவர் நாடு வழிதிறந்திடச் சேர்ந்த அடிகளாரை நினைந்து நினைந்து அவ்வழி முயன்று உய்வோமாக,

# சைவசமயி

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

**விபூதி தரிப்பது மாத்திரமே சைவசமயிகட்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகின்றார்கள்.**

**விபூதி தரிப்பது, மற்ச மாமிசம் புசியாது விடுவது இந்த இரண்டு மாத்திரமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று அநேகர் எண்ணுகிறார்கள்.**

**விபூதி தரிப்பது, மற்ச மாமிசம் புசியாது விடுவது, மற்ச மாமிசம் புசிக்கிறவர் காணாமற் போசனஞ் செய்வது இந்த மூன்று மாத்திரமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று வேறு அநேகர் எண்ணுகின்றார்கள்.**

### சைவ சமயிகட்கு உரிய முக்கிய இலக்கணங்களாவன.

1 கொலை, களவு, கள்ளுண்ணல், மற்சமாமிசம் புசித்தல், வியபிசாரம், பொய் முதலாகிய பாவங்களை மரண பரியந்தம் விலக்கி நடப்பது.

2.உயிர்களுக்கு இரங்குதல், மெய்பேசுதல் வறிய வர்களுக்கு ஒரு பிடி அன்னமாவது கொடுத்தல், செயந்நன்றியறிதல் முதலிய இந்தத் தருமங்களை மரண பரியந்தம் பாதுகாத்து நடத்தல்.

3.பிதா, மாதா, பாட்டன், பாட்டி, தமையன், மாமன், உபாத்தியாயர், குரு, இராசா முதலிய பெரியோர்களை மரண பரியந்தம் உபசரிப்பது.

4.சிவதீட்சை பெற்றுக்கொள்வது.

5.விபூதி ருத்திராட்சம் தரிப்பது.

6.சத்தியாவந்தனம், சிவத்தியானம், பஞ்சாட்சரசெபம், சிவஸ்தோத்திரம் இவைகளை மரணபரியந்தம் நித்தமும் ஒரு பத்து நிமிஷ நேரமாவது மனத்தை ஒடுக்கி விதிப்படி அன்புடன் செய்து முடிப்பது.

7.நித்தமுமாவது, புண்ணியகாலங்களிலாவது சிவலிங்கப் பெருமானை அன்புடன் விதிப்படி வலஞ்செய்து வணங்கித் துதிப்பது.

8. சைவ வினாவிடை, சிதம்பரமான்மிய வசனம், பெரிய புராண வசனம், முதலாகிய புத்தகங்களை வாசித்தாவது கேட்டாவது அறிவது.

9.சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணிய பாவங் களையும் சிவபெருமானை வழிபடு முறைமையையும் அறிவிக்கிற சைவப் பிரசங்கங்களைக் கேட்டுச் சிந்திப்பது.


10. சிவநிந்தை, சிவசாத்திர நிந்தை, குரு நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைக் கேளாது நீங்கி விடுவது.

11.திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னுஞ் சைவ சமய குரவர் நால்வருடைய திரு நட்சத்திரங்களாலே அவரரவருடைய சரித்திரத்தைக் கேட்டுச் சிவனடியார் ஒருவருக்காவது அன்னங் கொடுத்து விரதத்துடன் இருப்பது.

12. செய்யத்தகாத பாவத்தைச் செய்தாலும் செய்யத்தக்க புண்ணியத்தைச் செய்யாது விட்டாலும் மனம் பதைத்து அஞ்சி நடுங்கிக் குருவை அடுத்து அவர் சிவாகமப் பிரகாரம் விதித்த பிராயச் சித்தத்தை விசுவாசத்துடன் செய்து கொள்வது. ○

# நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நடந்த சொற்போர்!

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



நாம் உலகத்தாருக்குப் பயன்படும் பொருட்டு எழுதி அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்திய நல்லூர்க் கந்தசுவாமிகோயில் என்னும் பத்திரிகையை வாசித்தவர்களுக்குள்ளே தக்கவைகள் தகாதவைகள் பகுத்தறியும் அறிவும் மனச்சான்றுக்கு ஒரு சிறிதும் விரோதமறப் பேசும் பேச்சும் உடைய மேன்மக்களொழிய மற்றவர்களுள்ளே பலர் உண்மை அறிந்தும் பொறாமை துரபிமான முதலிய காரணங்களினாலும், வேறு பலர் இன்னும் உண்மை அறியமாட்டாமையினாலும் அப்பத் திரிகையை வாசிக்காதவர்கள் பலர் இவர்கள் கற்பித்த பொய்வார்த்தைகளால் விளைந்த மயக்கத்தினாலும் அநியாயமாகவே நம்மை தூ ஷித்துக்கொண்டு திரிகி–றார்கள். எல்லோரும் அப்பத்திரிகையோடு இவ்வி ரண்டாம் பத்திரிகையுஞ் சித்தசமாதானத்தோடு பல முறை வாசித்து உண்மை தெளிந்து அடங்கியொழுகக் கடவர்கள்.

### நல்லூர்க்கந்தசுவாமி கோவிலார்களே!

உங்கள் கோவிற்கட்டடமும் அங்கே விக்கினேகரப் பிர–திட்டை இல்லாமையும் மூலமூர்த்தி உற்சவ மூர்த்திகள் சுப்பிரமணிய விக்கிரகங்களாகாது வேலாயுதங்களாய் இருத்தலும் வேலாயுதங்களுக்குத் தேவிமாராகப் பக்கங்களிலே தெய்வானையம்மை வள்ளியம்மை விக்கிரகங்கள் வைக்கப்படுதலும் தீட்சைஷ பெறாத பிராமணர்களே பூசை செய்தலும் பிறவுஞ் சிவாகம விரோதம் என்றும், இக்குற்றங்களைத் திருத்தல் வேண்டும் என்றும் நாம் உங்கள் கோவிலதிகாரியாய் இருந்த தம்பு என்னும் வழக்கப் பெயரை யுடைய இரகுநாதமாப்பாணருக்குப் பலமுறை அறிவித்ததும் 1847 ஆம் லருஷத்துக்குச் சமமாகிய பிலவங்க வருஷ ஆடி மாதம் விளைவேலி வேதக்குட்டிக் குருக்கள் உங்கள் கோவிற் திருவிழா நடத்த வந்திருந்தபோது அவர்களெதிரே அவ் இரகுநாதமாப்பாணருக்குப் போதித்ததும் நீங்கள் அறிந்ததில்லையா? அப்பொழுது அறிந்திலாத பிறந்திலாத உங்கள் பிள்ளைகள் உங்கள் வாய்க்கேட்ட றிந்ததில்லையா?

2. நாம் நமது போதனைக்குத் தம்பு உடன்படாமை கண்டபின் பொதுநன்மையை விரும்பி அப்பிலவ்வ வருசம் தை மாதம் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலே வெகுசன கூட்டத்திலேயே உங்கள் கோவிற் குற்றங்களை எடுத்துச் சாத்திரப் பிரமாணங் காட்டிக் கண்டித்துப் பிரசங்கித்தும் நீங்கள் அப்பிரசங்கஞ் சுப்பிரமணிய தூஷணம் என்று நம்மீது அநியாயமாகவே குற்றம் ஏற்றிக்கொண்டும் நாம் விரைந்து கெடுவோம் என்று ஆங்காங்கே சாபம் இட்டுக்கொண்டுந் திரிந்தும் உங்கள் கோயிலிலே கீலக வருஷம்(1948) ஆடி மாதம் நடந்த திருவிழாவிலே நம்முடைய பிரசங்கத்தைக் கண்டித்து ஒரு பிரசங்கஞ் செ ய்யப்படும் என்று நீங்கள விளம்பரம் விடுத்ததும் பிரசங்கஞ் செய்ய உடன்பட்ட உங்கள் கோயிற் பிராமண பண்டிதர்கள் பின் பயந்து மறுத்துவிட அவர்களுக்கும் உங்களுக்கும் சனங்களால் அவமானம் விளைந்ததும் நீங்கள் நினைத்திருக்கிறீர்களா, மறந்துவிட்டீர்களா?

3. நம்முடைய உருத்திராக்ஷப் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் சிலர் தலையிலுங் கழுத்திலும் உருத்திராக்ஷமாலை தரித்துக் கொண்டு உங்கள்

கோயிற் திருவிழாவில் வந்து நின்றபோது சில பிள்ளைகளைத் தலையிலுங் கழுத்திலும் பனங்காய்ப் பணிகாரமாலை தரித்துக் கொண்டு அவர்கள் கூட்டத்தினுள்ளே நிற்கும்படி செய்த உங்களுள்ளும் உங்கள் பிராமணர்களுள்ளுஞ் சிலர் இப்பொழுது உருத்திராக்ஷந் தரிக்கவில்லையா?

4. தீக்ஷை பெற்ற பிராமணர்களே உயர்ந்தவர்கள் என்ற நமது பிரசங்கத்தைத் தூஷித்த உங்கள் பிராமணர்களுள்ளுள் மற்றப் பிராமணர்களுள்ளும் பலர் பின்பு தீட்க்ஷை பெறவில்லையா முன்பு அவர்களோடு கூடி எம்மைத் தூஷித்துக் கொண்டு திரிந்த நீங்களே பின்பு உங்கள் பிராமணர்களுள்ளே தீக்ஷை பெறாதவர்களைத் தீக்ஷை பெறும்படி ஏவவில்லையா?

5. உங்கள் கோயிலிலே விக்கினேகரப் பிரதிட்டை இல்லாமை குற்றம் உற்சவ விக்கிரகப் பிரதிட்டை இல்லாமை குற்றம் என்ற நமது பிரசங்கத்தைச் சுப்பிரமணிய தூஷணம் என்று இகழ்ந்து நமக்குச் சாபம் இட்டுக்கொண்டு திரிந்த நீங்களே பின்பு விக்கினேகரப் பிரதிட்டையும் ஆறுமுகசுவாமியுற்சவ விக்கிரகப் பிரதிட்டையுஞ் செய்வித்துக் கொள்ளவில்லையா?

6. உங்கள் கோயில் சிவாகம விரோதம் என்பதையும் அதனைத் திருத்துதற்கு நீங்கள் உடன் படாமையையும் அறிந்து பிலவங்க வருஷம் ஆடி மாதம் முதலாக இருபத்தைந்து வருஷகாலம் அக்கோயிலுக்கு வராது விடுத்த நாம் ஆங்கீரச வருஷம்(1972) ஆனிமாதம் உங்கள் கோயிலுக்கு வரத் தொடங்கியது உங்களால் அழைக்கப்பட்டா அழைக்கப் படாதேயா? நீங்கள் நம்மை அழைத்தது நம்பொருட்டா? உங்கள் பொருட்டா?

7. உங்கள் கோயிலிலே உங்கள் கோயிற் பிராமணரல்லாத மற்றொருவரும் புராணத்துக்கு அருத்தஞ் சொல்லக் கூடாது என்னும் நியமத்தை நீங்களே நீக்கிப் பிராமண சாதியேயல்லாத நம்மை வலிந்து விரார்த்தித்து விசேஷ காலங்களில் அழைத்துக் கொண்டு போய் அருத்தஞ் சொல்லித்தந்து எதன்பொருட்டோ?

8. நாம் உங்கள் கோயிலிலே முதல் அழைக்கப்பட்டுத் தெய்வயானையம்மை திருக்கல்யாணத்திற்குப் பொருள் சொல்லி முடிந்தவுடனே அக்கோயிலில் வேலாயுதப் பிரதிட்டை ஆகமவிரோதம் என்றுஞ் சிவவிக்கிரகந் தாபித்தல் வேண்டும் என்றுஞ் செய்த பிரசங்கத்தை நீங்கள் மகிழ்ந்து கேட்டதும் நமது போதனை கேட்டு நல்லூர்ப் பொன்னம்பல பக்தர் சென்னைப் பட்டணத்தினின்றும் வருவித்த சிவவிக்கிரகங்களை நீங்கள் உங்கள் கோயிலிலே பிரதிட்டை செய்விக்க உடன்பட்டே திருவிழாக்காலத்தே உபசாரத்தோடு உலகறிய உங்கள் கோயிலிலுள்ளே சேர்த்ததும் இல்லையா?

10. அந்தச் சபையிலே எல்லாரும் அறிய கந்தையா மாப்பாணர் செய்து கொண்ட வேண்டுகோளின்படி நாம் சுப்பிரமணியக்கடவுளின் இலக்கணங்களை விரித்துப் போதித்து அதற்குபின் உங்கள் கோயில் கிரியைகள் ஆகம விரோதங்கள் என்றும் அக்கோயில் கர்ப்பக்கிரக முதலியவைகளைப் பிரித்து ஆகமப்பிரகாரம் கருங்கல்லினாலே கட்டுவித்து விக்கிரகப்பிரதிட்டை செய்வித்தல்வேண்டும் என்றும் பிரசங்கக்கிக்கவில்லையா?

11. இச்சபையார் பெயர் கேட்டவுடனே கையொப்பம் வைத்தவர்கள் நாவலர் இச்சபையில் ஒருவராக இருந்தாற்றான் நாங்கள் இக்கையொப்பப் பணம் தருவோம் என்று இரைந்து பேசவில்லையா?

12. உடனே திருப்பணிச் சபையாரில் ஒருவர் நமது சமீபத்தில் வந்து தாங்கள் இச்சபைக்கு அக்கிராசன–அதிபதியாய் இருந்தாற்றான் இத்திருப்பணி நிறைவேறும் அல்லது நிறைவேறாது என்று பலமுறை வலிந்து கேட்டதின்பின் அன்றோ நாம் உடன்பட்டோம் என்பது யாவரும் அறிவர்.

13. நாம் எங்கள் கோயிலிலே நடக்கும் குற்றங்கள் பலவற்றையும் உங்கள் எதிரிலும் உங்கள் பிராமணர்கள் எதிரிலும் கண்டிக்கவில்லையா? நீங்கள் இக் குற்றங்களுள்ளே இப்பொழுது திருத்தக் கூடியவைகளை இப்பொழுது திருத்துவோம். மற்றவைகளை புதுப்பிரதிட்டைக்குப் பின்பு திருத்துவோம் என்று உறுதிமொழி சொல்லிக்கொண்டே நம்மை உங்கள் கோயிலுக்கு அழைக்கவில்லையா?

சிலர் வயதில் இறப்பதும், முதுமையில் மறைவதும் சிலர் குருடராய் முடவராய் இருப்பது அனைத்தும் அவரவர் கர்மவினைக் கொள்கை அடிப்படையில் அமைகிறது. நரகம் என்று நிரந்தரமான ஓர் இடம் இல்லை. பழைய பாவங்கள் எத்தனைதான் இருப்பினும் எல்லா மனிதர்களும் நிலையை மீட்டுக்கொள்ள கொஞ்சங் கொஞ்சமாக ஆன்மிக சக்தி அநுபவிக்கலாம்.

**நன்றி: ஞானகோஷம்**

# மகாசிவராத்திரி

சிவபெருமானையே முழுமுதற் கடவுளாகவும், பரம்பொருளாகவும் கொண்டு வழிபடும் இந்துக்களுக்கு மிக முக்கியமான விரதம் சிவராத்திரியாகும். சிவனுடைய ஏனைய விரதங்களான சோமவாரம், திருவாதிரை, உமாமகேஸ்வர் விரதம் பிரதோஷ விரதம், கேதாரேஸ்வர விரதம் என்று கூறிக் கொண்டே போகலாம். இந்த அனைத்து சிவவிரதங்களிலும் முக்கியமாக கருதப்படுவதும், இந்துக்கள் யாவராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டிய முக்கிய விரதம் சிவராத்திரியாகும்.

லௌகீக இன்பங்களை மட்டும் இச்சித்து வழிபடுவது மட்டுமன்றி ஆன்ம இலாபத்தை நாடி, நிலையாமையை உணர்ந்து, இம்மை: மறுமை என்ற இருமைக்கும் பயன்தரும் விரதமாக இது விளங்குகின்றது.

இந்தச் சிவவிரதத்தை யாதொரு பலனையும் விரும்பாதவரும், வைஷ்ணவரும் கூட அனுஷ்டிக்க வேண்டும் என்று கருடபுராணம் கூறுகின்றது. மாசி மாத தேய்பிறைச் சதுர்த்தியிலே சிவராத்திரி விரதம் கைக்கொள்ளப்படுகின்றது. பகல் திரயோதசியிலிருந்து இரவு சதுர்த்தசியிலே வியாமித்து இருத்தல் விஷேசமானது. திரயோதசி சக்திஸ்வரூபம் சதுர்த்தசி சிவஸ்வரூபம் பாரணையின் போது சதுர்த்தசி இருக்குமாயின் நன்று.

மாசி சிவராத்திரி என்ற பெயரில் மாதந்தோறும் சிவராத்திரி விரதங்கள் வருகின்ற போதும் அவை அனுட்டிக் கப்படுவது குறைவு. நான்கு வகையான சிவராத்திரிகள் பற்றி உபதேச காண்டம் கூறுகின்றது. அமாவாசையும் சோமவாரமும் கூடிய தினத்தில் வருவது யோக சிவராத்திரி. மாதந்தோறும் தேய்பிறைச் சதுர்த்தசியில் வருவது மாதசிவராத்திரி. மாசிமாதம் வளர்பிறைப் பிரதமை முதல், தேய்பிறைத் திரயோதசி வரை பகலில் மட்டும் உணவருந்தி மறுநாள் சதுர்த்தசியில் உபவாசம் இருந்து நித்திரை விழிப்பது. நான்காவது மகா சிவராத்திரி.

முருகன், பிரம்மா, விஷ்ணு போன்ற தெய்வங்கள் கூட மகா சிவராத்திரி விரதத்தை முறையாக அனுஷ்டித்துப் பல வரங்கள் பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த விரதம் தோன்றியதற்கு ஒரு புராணக் கதையும் உண்டு.

முன்னொரு சமயம் படைப்புக் கடவுளாகிய நான்முகனும், காத்தற் கடவுளாகிய திருமாலும் தானே பெரியவன், தானே பெரியவன் என்று தமக்குள் வாதிட்டனர். இவ்வேளை அவர்கள் அருகே ஓர் அக்கினிப் பிளம்பு தோன்றியது. இவ்வக்கினியின் அடியையாவது, முடியையாவது கண்டு வருபவர்களே பெரியவன் என்று ஓர் அசரீரி முழங்கியது. உடனே பிரம்மா அன்னப் பட்சியாக மாறி வானத்திற் பறந்து முடியைத் தேடிப் புறப்பட்டார். விஷ்ணுவானவர் பன்றி வடிவெடுத்து அடியைத் தேடி நிலத்தைத் தோண்டிப் புறப்பட்டார். நீண்ட காலம் முயற்சித்தும் அடி, முடிகளை இருவராலும் காணமுடியாது தோல்வி கண்டு இருவரும் திரும்பினர்.

அப்போதுதான் ஓர் உண்மையைப் பிரம்மாவும், விஷ்ணுவும் உணர்ந்தனர். தாங்கள் வெறும் கருவிகளே தம்மை யெல்லாம் இயக்கும் மேலான பரம் பொருள் ஒன்று உண்டு. அதுவே சிவபரம் பொருள் என்று உணர்ந்து அந்த அக்கினிக் கொழுந்தின் முன் இருவரும் மண்டி யிட்டனர். அவர்கள் செருக்கை அடக்கிய சிவன் அவர்களுக்கு அருள்புரிந்து, அந்தச்

சோதிவடிவம் தோன்றிய நாளைச் சிவராத்திரி விரதநாளாக அனுஷ்டிக்கும்படி கூறினார். அதைத் தொட்டு இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மனிதர்களாகிய நாம் ஆணவத்தை அகற்றித் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்களை நீக்கி நல்லருள் பெறலாம் என்பது திண்ணம்.

காட்டிற்கு வேட்டைக்குச் சென்ற வேடனொருவன் வழிதப்பிப் போய் இருட்டி விட்ட காரணத்தால் தடுமாறிக் கொண்டு இருந்தான். அந்த இரவுப் பொழுதை பாதுகாப்பாக (மிருகங்களிடமிருந்து) கழிப்பதற்காக ஒரு மரத்தின் மீது ஏறி இருந்தான். தான் தூங்கி விட்டாற் கீழே விழுந்து விடுவேன் என்றும், அதனாற் பல துன்பங்கள் நேரிடலாம் என்றும் எண்ணி மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே போட்டான். அன்றைய தினம் சிவராத்திரி என்பதும், அவன் ஏறிய மரம் வில்வமரம் என்பதும் கீழே இருந்த ஒரு சிறிய சிவலிங்கத்தின் மேல் அவன் பறித்த இலைகள் விழுந்தன என்பதும் அந்த பாமரனுக்குத் தெரியாது. ஆனால் வேட்டைதேடி, அலைந்ததினால் பகல் முழுவதும் உணவின்றி, தூக்கமின்றி இருந்தாலும் லிங்கத்துக்கு வில்வ இலைகளால் அர்ச்சித்ததாலும் அவனுக்கு முக்தி இன்பம் கிடைத்தது.

அறியாது செய்த நற்காரியத்திற்கு இந்தப் பேறு என்றால் அறிந்து செய்யப்படும் போது கிட்டும் பேறு பேரின்பமல்லவா! இவ்வித மகிமை பொருந்திய சிவராத்திரியை நித்திய கர்ம அநுட்டானம் செய்து, ஆலயஞ் சென்று, உபவாசமிருந்து இரவு முழுவதும் தூக்கம் விழித்துச் சிவநாம பஜனை, பஞ்சாட்சரஜபம், முதலியவற்றில் ஈடுபட்டு மறுநாள் அதிகாலை நித்திய கருமம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாறணை செய்வது விதியாகும்.

அன்றைய தினம் நான்கு யாமமும் சிவபூஜை சிவலிங்க வழிபாடு அவசியம். நான்கு யாமமும் அவ்வக் காலங்களிற் செய்வது உத்தமம். இந்த நான்கு யாமங்களில் லிங்கோற்பவ காலம் முக்கியமானது. (11.30 — 12.15 வரையிலான காலம்) இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் வரை விழித்திருப்பது நன்று.

இந்த விரதம் பற்றி பேசுபவர்களுக்குப் பல யாகங்களிலனால் ஏற்படும் பலன் இவ்விரதத்தின் மூலம் கிட்டும். கங்கை போன்ற புண்ணிய கங்கையில் நீராடினால் கூடக் கிட்டாத பலன்கள் பெறுவர். இதற்கு ஒப்பாக வேறு எந்த விரதமும் இல்லை. ஒரு இரவிலேயே முழு பலனும் கிட்டும் என்பது திண்ணம். இவ்விரதத்தை ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் கைக் கொள்வது சாலச்சிறந்தது.

இப்படியான விரதத்தை அனுஷ்டித்து, அவன் தாழ் வணங்கி அவனருள் பெற்று யாவரும் அவனை சிக்கெனப் பிடித்து பல துன்பங்களில் இருந்து நீங்கி அனைவரும் இன்புற்று வாழ்வோமாக!

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு".

**பிரமஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள்**
**பிள்ளையார் கோவில்**
**விம்பிள்டன்.**

# ஓங்கார ஒலி

அ என்பது முதல் ஒலி, வாயைத் திறந்தவுடன் எழும் ஒலி. ஒலிகட்கெல்லாம் தாயாகவும் தந்தையாகவும் உள்ள அடிப்படையான ஒலி இந்த அ என்ற ஒலி.

உ என்பது அடுத்த ஒலி; இது உயிர் ஒலி எல்லா மொழிகளும் உள்ள உயிர் ஒலி அகர ஒலியும் உகர ஒலியும் சேரும் போது ஒ கார ஒலி உண்டாகின்றது. அ+உ= ஓ. ஓகாரமும் ம் ஒலியும் சேர்ந்தே ஓங்கார ஒலியாகிறது ஓங்கார ஒலி உயர்த்துவதை குறிக்கும். ஓ... எனத் தொடர்ந்து சொல்லிப்பாருங்கள். சிந்தனையில் தெளிவும் மனதில் அமைதியும் ஏற்படும்.

ஓங்காரத்தை உச்சரித்தால் உச்சரித்தவர் உயர்கதி அடைவார். ஓங்கார ஒலி குற்றங்களைக் களைந்து ஆன்மாவை இறைவன் அடியிற் சேர்க்கிறது.

ஓங்கார ஒலி இறைவனை உணர்த்தும் ஒலி. ஓம் என்ற சொல் இறைவனை உணர்த்தும் சொல்.

ஓங்காரத்தைத் தியானம் செய்தாற் பேரின்ப நிலையை எய்தலாம்.

ஓம் என்ற சொல்லில் அகர ஒலி உண்டு. உகர ஒலி உண்டு மகர ஒலி உண்டு.

ஓம் என்பது பிரணவம் வேதத்தின் மூலமே இந்த ஓம் தான்.

ஓங்கார ரூபமாக இருப்பவர் பிள்ளையார் ஓம் என்ற ஒலியின் வடிவமே விநாயகர் தான். பிள்ளையார் குற்றங்களை நீக்குபவர் துன்பங்களைக் களைபவர். இடையூறு களைப் போக்குபவர்.

பிள்ளையார் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். தன்னைவிட மேலான தலைவன் இல்லாதவர். வடமொழியில் இவரின் பெயர் விநாயகர். வி+நாயகர் தனக்கு மேலான தலைவர் இல்லாதவர் என்பது இதன் பொருள்.

துன்பங்கள் வந்த பின்பு வழிபடுவதை விடத் துன்பங்கள் வருமுன் வழிபடுவதால், வருமுன் காப்பவர். இதனால் எந்தச் செயலில் ஈடுபடுமுன்பும் பிள்ளையாரை வணங்குகிறோம். செய்யப் போகும் செயல் அறிவுத் தெளிவுடனும் சிந்தனைக் கூர்மையுடனும் சரியாக அமையப் பிள்ளையாரை வேண்டுகிறோம். தீவினை களை அகற்றியும், அவை எமை அணுகாமல் இருக்கவும் நமக்கு நல்லருள் புரிகின்றார். ஊழ் வலிவுபெற அதன் வழி எமக்குத் துன்பம் வராமல் பாதுகாத்தருள்கிறார்.

ஓங்கார வடிவம் கொண்ட விநாயகர் எமது உயிர் உய்வு பெற உதவுகிறார்.

ஓம் என்ற சொல்லை உச்சரித்துத் தியானிக்க வேண்டும். பிரணவப் பொருள் எனப் பிள்ளையாரை அன்புடன் அழைக்கின் றோம். துன்பம் தீர, துயரங்கள் நீங்க, பேரின்ப வாழ்வு அமையப் பேருதவியாய் இருப்பவர் விநாயகப் பெருமான். முயன்று தியானிப்போம். நிச்சயம் நலம் பெருகும்.

இனி விநாயகப் பெருமான் எப்படி பொருள் பொதிந்த உருவமாகத் தோன்றுகிறார் என்பதைப் பார்ப்போம்.

விலங்கு வடிவமாகத் தோன்றுகிறார். மனித வடிவமாகத் தோன்றுகிறார். பூதவடி வமாகத் தோன்றுகிறார். தேவ வடிவமாகத் தோன்றுகிறார். விலங்காய், மனிதராய், பூதமாய், தேவனாய் இந்நான்கு படைப்புத் திறன் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார்.

யானைத் தலையையும், சுளகுச் செவியையும் தும்பிக்கையையும் யானையாகிய விலங்கிடம் இருந்து பெற்றார்.

புருவ வடிவத்தையும் கண்களையும் மனிதரிடம் பெற்றார்.

பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூதத்திடம் இருந்து பெற்றார்.

நான்கு கரங்களையும் தேவர்களிடத்தில் இருந்து பெற்றார்.

**திருவடி**

பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன.

உயிர்களின் துன்பத்தை அவை போக்குகின்றன. இன்பத்தைப் பெருக்கு கின்றன.

**வயிறு**

பிள்ளையாரின் வயிறு பெருவயிறு. பேழை வயிறு. அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கமாகி விடுகிறது. அண்டங்கள்

பரவெளி உலகங்கள் உயிர்கள் என அனைத்தும் அவற்றுள் அடங்கி இருக்கின்றன.


பிள்ளையாரின் திருஉருவம் அனைத்தையும் அடக்கிய திருவுருவம். எங்கும் நிறைந்து வியாபித்து இருக்கிறார். இந்தத் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கும்.

**ஐந்து கைகள்**

பிள்ளையாருக்கு நான்கு கைகளுடன் தும்பிக்கையும் சேர்ந்து ஐந்து கைகள். இடைவிடாமல் தொடர்ந்து நடைபெறும் ஐந்து தொழில்களையே ஐந்து கைகளும் குறிக்கின்றன.

ஒரு கையில் — பாசம்
ஒரு கையில் — அங்குசம்
ஒரு கையில் — அஞ்சேல் என அபயம்
ஒரு கையில் — மோதகம்

**மற்றது தும்பிக்கை**



(1) பற்றுள்ளதைப் பிறப்பிப்பதும் பாசம் பிணித்து இருப்பதும் பாசம் படைத்தலைக் குறிப்பது பாசம் தாங்கிய கை.

(2) பிறவித்துன்பத்தில் இருந்து விடுபட வரும் உயிர்கட்கு அஞ்சேல் எனப் பாதுகாப்பு அளிப்பது அபயகரம் இது காத்தல் எனப்படும் தொழில்

(3) அங்குசம் அழித்தலை குறிக்கும். மல மாயா கன்மங்களை அழிக்க வல்லது அங்குசம். மூன்றாவதாக அங்குசம் தாங்கிய கை.

(4) அபயம் பெற்ற உயிர்களுக்கு அருளைச் செய்வது மோதகம் ஏந்திய கையாகும். இந்தக் கை கீழ் நோக்கி இருப்பதற்குக் காரணம் பிறவிக்கு அஞ்சிவரும் உயிர்கள் அடையும் இடம் திருவடியாகிய முக்திப் பேறு என்பதை காட்டுகிறது.

ஐந்து தொழில்களுக்குள் ஐந்தாவது மறைத்தல் தொழில். திரோதானமாகிய இந்தத் தொழிலைச் செய்வது தும்பிக்கை.

இனி இடது கொம்பு பதிஞானத்திற்கு உரியது. ஒடிந்த வலது கொம்பு பாச ஞானத்தை காட்டுவது. சுளகு போன்ற விரிந்த செவிகள் உயிர்களின் குறைகளைக் கேட்டு ஆதரேவாடு திருவருள் நல்குவதற்கு.

பிள்ளையாருக்கு மூன்று கண்கள் வழமையான இரு கண்களுடன் நெற்றிக் கண்ணும் சேர்ந்து முக்கண்களாக உள்ளன. பிறைச் சந்திரனைத் தனது முடியிற் பிள்ளையார் அணிந்துள்ளார்.

அறியாமை என்னும் இருள் தேய ஞானம் பெற்ற உயிர்களை உயர்ச்சி அடையச் செய்து தலைமேல் வைப்பார் பிள்ளையார் என்பதையே முடியில் உள்ள பிறை காட்டுகிறது.

பாம்பை ஆபரணமாக அணிந்துள்ளார். பாம்பு குண்டலினி சக்தியின் வடிவம் மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தி பாம்பு படம் விரித்தது போல் எழுந்து பரந்து நின்று உயர்களைச் சிவமய மாக்குகிறது.

பிள்ளையார் அடியவர்களுக்கு அருள் புரிவதற்காக எடுத்த திருமேனியின் திருவுருவத்தில் சிவ தத்துவங்கள் அடங்கி உள்ளன.

ஆகவே அடியார்களாகிய நாம் பிள்ளை யாரின் திருவுருவத்தை நினைத்து வழிபட்டுத் தியானித்து வந்தால் நல்ல மனம் நல்லகுணம், லட்சுமி கடாட்சம், நோயற்ற வாழ்வு என்பன கிட்டி உயிர் உயர்வு பெற்று ஆன்ம ஈடேற்றமும் பெறலாம் என்பதையே விநாயகர் திருவுருவம் செப்பி நிற்கிறது.

**கணபதி பாதம் கனவிலும் துணை செய்யும்.**

# தைப் பொங்கல்

தமிழர்களுடைய பண்பாட்டு விழாக்களிலே மிகவும் முக்கியமானதும், சிறப்புடையதுமாக இத் தைப்பொங்கல் விழாவானது கொண்டாடப்பட்டு வருகின்றது. தை மாத முதல் தேதியில் சூரியன் மகர ராசியில் பிரவேசிப்பதால் "மகரசங்கிராந்தி" என்று அழைப்பார்.

"எந்நன்றி கொன்றார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்கின்ற வள்ளுவரது கூற்றிற்கு இணங்க சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் பெரு விழாவாக உள்ளது இவ்விழா. பொதுவாக மார்கழி மாதம் மங்கையர்க்குரிய ஒரு சிறந்த மாதமே. அதாவது திருவெம்பாவையொட்டிய மார்கழி நீராடல், இதைவிட மார்கழி மாத மாக்கோலம், மார்கழி மாதம் முழுவதும் முற்றத்தில் மாக்கோலமிட்டு, மத்தியிலே பசுஞ்சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடும் வழக்கம் தொன்று தொட்டு நிலவி வரும் ஒரு பழக்கமாகும். பசுஞ்சாணம் கிடையாதவிடத்து (மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடிப்பது வழக்கம்) பெண்கள் அதிகாலையில் நீராடிப் பெருக்கித் தூய்மைப்படுத்தி, முற்றத்தின் மையத்தில் சாணத்தினால் தரையை மெழுகி, ஏனைய இடங்களுக்கும் சாணித்தண்ணீர் தெளித்து, அரிசிமாவினால் அழகிய கோலமிடுவார்கள். மேற்கூறிய படி இங்கு செய்ய முடியாவிடின் ஒரு மரப்பலகையில் அழகிய கோலமிட்டு மஞ்சள் மாவால் விநாயகரைப் பிடித்து முற்றத்தில் வைக்கலாம். இப்படியாக பிடித்து வைக்கும் பிள்ளையாரின் சிரசிலே ஒரு பூவும் வைத்து விடுவார்கள். தமிழ் நாட்டிலே இதற்காக பூசணிப் பூவையோ அல்லது அறுகம்புல்லையோ பயன்படுத்துவர்.

இங்கு அரிசி மாவினால் கோலமிடுவதன் நோக்கம் யாதெனில் சிற்றெறும்பு முதலிய ஜீவராசிகளுக்கு இக்கோலமா உணவாகப் பயன்படும் என்ற எண்ணமும், சிறந்த தமிழ்ப் பண்பாடாகவும் இது விளங்குகின்றது.

அத்துடன் வீட்டில் இருந்து புறப்படுவோருக்கும், வருவோருக்கும் இவ் மங்களகரமான கோலங்கள் விளங்குகின்றன. இவ்வழகிய கோலங்களைக் காண்பதன் மூலம் மனமகிழ்வும், மகிழ்ச்சியும் பெற்று விடுவதுடன் விநாயகரை முதலில் கண்டு வணங்கிச் செல்ல வாய்ப்பளிக்கின்றது.

இவ்வாறாக மார்கழி மாதம் முழுவதும் கோலமிட்டு, மார்கழிக் கடைசியில், தைப் பொங்கலுக்கு முதல் நாள் பழையன யாவும் கழித்து, வீட்டையும், அதன் சுற்றுப் புறங்களையும் தூய்மை செய்து; அடுத்த நாள் இனிமையாக இத் தைப் பொங்கல் பண்டிகையை கொண்டாடுவர்.

இப்பண்டிகை நாளில் முற்றத்தில் மெழுகி கோலமிட்டு விநாயகர் பிடித்து வைத்து; மூன்று கற்களை அடுக்கி அடுப்பாக வைத்து புதுப்பானையில் பச்சையரிசி பொங்கலிட்டு; சூரியனுக்க நன்றி தெரிவிக்கும் முகமாக பொங்கலை அமுதமாக அவனுக்கு படைத்து வணங்கி மகிழ்வர். பானைக்கு மஞ்சள், மாவிலை கட்டி, முழுக்கரும்பினை அருகில் நாட்டி, மாவிலை, தோரணங்களினால் அவ்விடத்தை அலங்கரித்து சூரியபகவானை பிராத்தித்து, இஞ்சி, கரும்பு, மஞ்சள், வெற்றிலை, பாக்கு, இளநீர் பழவகை என்பவற்றை நிவேதனம் செய்து முறைப்படி கதிரவனைப் பிராத்திப்பர்.

இது ஒருபுறமிருக்க புத்தாடை அணிந்து சிறுவர் சிறுமியர் பட்டாசு சுடுதலும், வானவிளையாட்டுகளில் ஈடுபடுதலுமாக அன்று முழுவதும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர். உயர்ந்த மரங்களில் அன்ன ஊஞ்சல் கட்டி பாடி ஆடுதல் போன்றனவும் புதிய வருடத்தை சந்தோஷமாக வரவேற்பதாக அமைகின்றது.

உத்தராயண கால ஆரம்பகால நாளான தைமாதப் பிறப்பில் அதுவரை நிலவிய மழைகால குளிரும், கஷ்டமும் நீங்கி ஒரு புத்துணர்வும், நம்பிக்கையும் ஊட்டி "தைபிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கையை ஊட்டி நிற்கும் விழாவாக இது விளங்குகின்றது.

இதனை உழவர்கள் திருநாளாகவும் கருதுவர். அதாவது உலகிற்கு உணவிடும் உழவர் பெருமக்கள் உலக ஒளிக் கடவுளாகவும், உஷ்ணம் சிறக்க உதவிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் விழாவாகவும் அமைகின்றது.

பொங்கல் பண்டிகைக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் நடைபெறுகின்றது. பட்டிப் பொங்கல் என்பது பொங்கலுக்கு மறுநாள் உழவுக்கு உதவி செய்தமைக்கும், எமக்கெல்லாம் நிறையுணவு தருகின்ற எருதுகளுக்கும், பசுக்களுக்கும் நன்றி கூறுமுகமாக மாடுகளையும், அவற்றின் இடத்தையும் சுத்தப்படுத்தி பொங்கிப் படைத்து, உணவழித்து வணங்கி சிறப்பாக கொண்டாடுவதே பட்டிப் பொங்கலாகின்றது.

இவ்வாறு இனிய விழாவாகக் கொண்டாடிவரும் எமது மூதாதையர் ஆண்டாண்டு காலமாக பின்பற்றி இன்று எமது சமுதாயத்திடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். தமிழ் மக்களாகிய நாங்கள் எமது கலைகளையும், கலாச்சாரங்களையும் அழியவிடாது பாதுகாப்பது எமது ஒவ்வொருவரின் கடமையாகும். அந்த வகையில் ஐரோப்பிய நாடுகளிலே வாழும் நாங்கள் எமது கலை, கலாச்சாரங்களை அழிய விடாது பாதுகாத்து; அடுத்த தலைமுறையிடம் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் எமது தலைமுறையிலே இப்படியான கலாச்சாரங்களை வீடுகளிலே கொண்டாடுவதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு தெரிவித்து எமது கலாச்சாரங்களை பாதுகாப்போமாக!

**உரும்பிராய் சிவஞானக் குருக்கள். இராஜசேகர சர்மா**
**விம்பிள்டன் ஸ்ரீ கணபதி ஆலயம்**

# தேவாரங்கள் கற்போம்

இரண்டாந் திருமுறை
திருஞானசம்பந்தர் தேவாரம்
உரையாசிரியர்: திரு வ. இராமசுப்பிரமணியம்

திருச்சிற்றம் பலம்

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயந் திருநீறே**

தெளிவுரை: திருநீறானது, மந்திரச் சொல் போன்ற அச்சம் நீக்கி வேண்டிய நற்பயனைத் தருவது ஆகும். வானவர்கள் திருநீற்றை அணிகின்றனர். மனிதர்களுக்கு இது, வானவர்களைவிட மேலானதாகி விளக்குவது. அழகினைத் தந்து பொலியும் திருநீறு, துதிக்கப்படும் பொருளாக உள்ளது. உமையவளைப் பாகங் கொண்ட ஆலவாய் அண்ணலாகிய ஈசனின் திருநீறு இத்தகையது ஆகும்.

**வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு**
**போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு**
**ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு**
**சீதப் புனல்வயல்சூழந்த திரு ஆலவாயான் திருநீறே.**

தெளிவுரை: வேதத்தால் சிறப்பாகப் போற்றப்படுகின்ற பெருமையுடையது திருநீறு. உலக வாழ்க்கையில் ஐம்புலன்கள் வழி ஏற்படும் பிணி முதலானவற்றால் நேரும் துன்பத்தையும், அந்தக் கரணமாகிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகியவற்றின் வழி நேரும் துயரங்களையும் தீர்ப்பது திருநீறு ஆகும். நல்லறிவு தருவதும், அறியாமை மற்றும் பழி முதலியவற்றால் நேரும் புன்மைகளை அகற்றுவதும் திருநீறு ஆகும். திருநீற்றின் செம்மை, ஓதத்தகுந்த பெருமையுடையதும், உண்மைப் பொருளாய் எக்காலத்திலும் நிலைத்திருக்கக்கூடியதும் ஆகும். இது திருவாலவாய் அண்ணலாக விளங்கும் ஈசனுக்கு உரிய திருநீறு.

**முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு**
**சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு**
**பக்தி தருவது நீறு பரவ இனியது நீற**
**சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.**

தெளிவுரை: திருநீறு, முத்தி இன்பத்தைத் தருவது;முற்றும் துறந்த முனிவர் பெருமக்கள் அணியும் பெருமையுடையது; எக் காலத்திலும் மேலானதாக விளங்கிப் பெரும்பேறும் நலமும் இன்பமும் வழங்கும் சத்தியப் பொருளாக இருப்பது. இத்தகைய திருநீற்றை, அதன் மகிமையறிந்து, நன்குணர்ந்த சிவனடியார்கள் புகழ்ந்து பாராட்டிப் போற்றுகின்றனர். திருநீறானது மன்னுயிர்களுக்குச் சிவ பக்தியைத் தருவதாகும். அதனைப் போற்றி வாழ்த்த இனிமை நல்கும். வணங்கத்தக்க இனிய பொருளாகித் தெய்வத்தன்மை கொண்டு விளங்கும் திருநீறு, எட்டு வகையான சித்திகளைத் தரவல்லது. அது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்குரிய திருநீறு ஆகும்.

சிறப்புரை: பக்தியைத் தரும் திருநீற்றின் மகிமை காண்க. எண்வகைப் பக்தியாவன: 1.தொண்டர் அடிதொழுதல்; 2.பூசைத் தொழில் மகிழ்தல்; 3.அர்ச்சனை புரிதல்; 4.நியமங்கள் கொள்ளுதல்; 5. அருங்கதை கேட்டல்; 6.ஆனந்தக் கண்ணீர் விடுதல்; 7.திருப்பணி செய்தல்; 8.உணவு கொள்ளாது இருத்தல்.

இத்தகு சிறப்பினை உடையது திருநீறு என உணர்த்தப்படுவது காண்க. சித்திகள் எட்டாவன: 1. அணிமா; 2. மகிமா; 3.கரிமா; 4.இலகிமா; 5.பிராரத்தி; 6.பிரகாமியம்; 7.ஈசத்துவம்; 8.வசித்துவம்.

**காணஇனியது நீறு கவினைத் தருவது நீறு**
**பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு**
**மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு**
**சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே**

தெளிவுரை: திருநீறு அணிந்தவர்களைக் காணும் அன்பர்கள் இனிமை கொள்வார்கள். அத்தகைய பொலிவை அளிக்க வல்ல

திருநீற்றை விரும்பிப் போற்றிப் புனிதமாகக் கொண்டு அணிகின்ற பெருமக்களுக்குப் பெருமை கொடுக்கும்; வல்லமை தரும்; இறப்பினைத் தடுக்கும். நல்லறிவையும் சிவஞானத் தெளிவையும் தரும் ஆற்றல் உடையது திருநீறு. மன்னுயிர்களுக்கு மேன்மையையும் உயர்வையும் தரும் ஆற்றல உடைய இத்திருநீறு, இது ஆலவாய் அண்ணலாகிய ஈசனுடைய திருநீறே ஆகும்.

சிறப்புரை: திருநீறு மெய்யில் விளங்கும் சிறப்பு இவண்மொழிதலை நோக்குக. இதனைத் திருமூல தேவர்.

கங்களான் பூகம் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்காவினை களும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே.

எனத் (திருமந்திரம் 1666) திருநீற்றின் பெருமை உணர்த்துவதும் காண்க.

மாணம் தகைவது — இறப்பைத் தடுப்பது. சேணம் — உயர்வு

**பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு**
**பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்**
**ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு**
**தேசம் புகழ்வது நீறு திரு ஆலவாயான் திருநீறே.**

தெளிவுரை: திருநீறு மெய்யில் பூசி அணிய, இனிமையாகித் துர்கந்தத்தைப் போக்கும் சிறப்பும், நன்மணம் வீசும் வண்ணமும், பிணி நீக்கமும் செய்யும் புண்ணியத்தின் செயல் களால் பெறும் அத்துணைச் சிறப்பினையும் அளிக்கும். திருநீற்றின் செம்மையாவர்க்கும் இனிமை தருவதால் புகழ்ந்து பேசும் தன்மையில் இனிமை காணும்; பெரிய தவத்தை மேற் கொண்டுள்ள சீலர்களுக்கு உறுதுணையாக, உலக பந்தத்தால் உண்டாகும் ஆசைகளை நீக்கி, உயர்ந்த நிலைக்குச் செல்ல வழி வகுக்கும். எல்லாவற்றுக்கும் முடிந்த முடிவாக— அந்தமாகத் திகழ்வது திருநீறு. தேசமெல்லாம் புகழ்ந்து போற்றும் சிறப்புடைய இத்திருநீறு, திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

**அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு**
**வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு**
**பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு**
**திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே**

தெளிவுரை: பொன்போன்ற பெரிய செல் வமாக விளங்குவது திருநீறு. அவலமாகும் துன்பத்தைப் போக்குவதும், மனத்தில் வருத்திக் கொண்டிருந்து துன்புறுத்தும் நெஞ்சக் கனலைத் தணித்து விளக்குவதும், சிறப்பினை அளிப்பதும், எல்லா நிலைகளிலும் பொருந்தி விளங்கிச் சிறப்புத் தருவதும் திருநீறு. புண்ணியத் தன்மை கொண்டதுடன், புண்ணியம் செய்த பெருமக்கள் விரும்பிப் பூசி, மேலும் பொலிவு கொள்வதற்கும் காரண மாவது திருநீறு. செல்வம் மிக்க மாளிகைகள் சூழ்ந்த திரு ஆலவாயில் வீற்றிருக்கும் ஈசனார்க்கு உரிய திருநீறு, இத்தகைய சிறப்பினை உடையதாகும்.

சிறப்புரை:புண்ணியம் செய்த பெருமக்கள் திருநீறு பூசி அணியும் பேறு பெறுவர் என்னும் சிறப்பு, "புண்ணியர் பூசும் வெண்ணீறு" என்று உணர்த்தப்படுவதாயிற்று. அவனருளாலே அவன்தாள் வணங்கும் பெற்றி போல, திருநீறு அணிகின்ற பேற்றின் சிறப்பும் புண்ணியப் பயன் என்று உரைப்பதாயிற்று. புண்ணியர் என்பது ஈசனைக் குறித்தலும் ஆகும். இதனைத் நாவுக்கரசர், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என அருளிச் செய்த வண்ணமும் காண்க. "போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே" எனத் திருவாதவூரடிகள் அமுத மொழியும் நோக்குக. திரு என்னும் அடைமொழி பெற்றுள்ள மாளிகை, ஆலவாய், நீறு என்னும் மூன்று சொற்களில் உள்ள புனிதத்தின் செம்மை ஓர்க. திருவை ஆளும் தன்மையனாய்— திருவாளனாய், விளங்குபவன் திருநீறு பூசும் ஈசன். அத்தகைய திருவாளன் திருநீறு, திரு ஆலவாயான் திருநீறு என்று சிறப்பாகப் போற்றி உரைக்கப்படுவதாம். திருவாளனாகிய ஈசன் உறையும் திருக்கயிலை ஒத்த, மாளிகையுடைய புனிதம் திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாய் எனக் குறிப்பால் உணர்த்தப் பெறுவது காண்க.

அருத்தம்— பொன், செல்வம், புண்ணியன் — ஈசன்.

**எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு**
**பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு**
**துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு**
**அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே.**

தெளிவுரை: முப்புரத்தை எரித்துச் சாம்பலாக்கியது திருநீறு; இம்மை, மறுமை ஆகிய இரண்டினுக்கும் உயிர்களுக்குத் துணையாக இருப்பது திருநீறு; நித்தியமாயும், உயர்ந்த பொருளாயும் பயின்று, நுகரும் பொருளாக உடையது நீறு; அது பாக்கியமாக இருந்து விளங்கும் சிறப்புடையது; மாயையின் லயப்பட்டும் சோர்வுற்றும் - தடைப்படுத்தும் உறக்க உணர்வினைத் தடுத்துப் புத்துணர்ச்சி தந்து தூய்மைப்படுத்தும் இயல்புடையது. அத்தகைய திருநீறு, கூர்மையான சூலப்படையுடைய திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.
சிறப்புரை: திருநீற்றின் பண்பினை விளக்கி உணர்த்திய ஆளுடைய பிள்ளையார், இத்திருப்பாட்டில் எயிலை முப்புரத்தை எரித்தது திருநீறு என்று உணர்த்தியமை காண்க. இது பரம்பொருளாகிய ஈசன் திருநீற்றை வண்ணத்தில் நின்று அருட் செயல் புரிதலையும் ஈசனும் திருநீறும் வேறல்ல என்ற மெய்ம்மையையும் உணர்த்தியவாறு கொள்க.
அட்டது — எரித்தது.

**இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு**
**பராவண மாவதுநீறு பாவம் அறுப்பது நீறு**
**தராவணம் ஆவது நீறு தத்துவ மாவது நீறு**
**அராவணங் கும்திரு மேனி ஆலவா யான்திருநீறே**

தெளிவுரை: இராவணன் திருநீறு அணியப் பெருமையுறச் செய்தது; எண்ணத்தால் தகுதியாக்கிப் போற்றி வழிபடுவதற்கு உரியது திருநீறு; பராபரனைப் போன்று துதிக்கப்படும் பொருளாக விளங்குவதும், பாவத்தைப் போக்குவதும் திருநீறு; தராவணமாக இருப்பது திருநீறு; அது தத்துவமாகவும் விளங்கி நிற்பது. அத்தகையது, அரவம் அணைந்து விளங்கும் திருமேனியராகிய திரு ஆலவாய் அண்ணலுக்கு உரியதாகிய திருநீறு ஆகும்.
சிறப்புரை: திருநீறு பூசிய இராவணனுடைய ஆற்றல், அருள் வண்ணத்தால் மேவி, வாளும், வாழ்நாளும் ஈட்டித் தந்த செம்மை குறிப்பால் உணர்த்தப் பெறுதல் காண்க. தரா எனப் பெறும் பொன் போன்ற உயர்ந்த உலோகத்தால் செய்யப்படும் பொருள்கள் பகுக்கப் படும்போது, யாவற்றிலும் நீக்கமறக் கலந்து நிற்றல் போலத் திருநீற்றின் செம்மையும் நீக்கமறத் திகழ்ந்து அண்ணித்து இருக்கும் செம்மையாகவும் விளங்கும் திருநீற்றின் சிறப்பு இத்திருப்பாட்டில் உணர்த்தப்படுகிறது. தத்துவங்கள் 36. அவற்றுள் ஆத்ம தத்துவம் (அசுத்ததத்துவம்) 24.அவையாவன.
1. பூதங்கள் 5.நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்; 2.ஞானேந்திரியங்கள் 5.மெய், வாய், கண், மூக்கு, செவி; 3.தன்மாத்திரைகள் 5. பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம்; 4.கன்மேந்திரியம் 5.பாதம், பாயுரு, பாணி, உபஸ்தம், வாக்கு; 5.அந்தக்கரணம் 4.மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
வித்யாதத்துவம் (மிசிரதத்துவம்) 7.அவையாவன:
1.காலம்; 2.நியதி; 3.கலை; 4.வித்தை; 5.ராகம்; 6.புருடன்; 7.மாயை
சிவதத்துவம் (சுத்ததத்துவம்) 5 அவையாவன:
1. சுத்த வித்தை; 2.ஈசுவரம் (மகேஸ்வரம்); 3. சதாசிவம்; 4.சத்தி; 5.சிவம்
பராவணம் — அருள்சக்தியுடையதும் ஆம்.
தரா— பொன்போன்ற ஒரு வகை உலோகம்.

**மாலொடு அயனறி யாத வண்ணமும் உள்ளது நீறு**
**மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு**
**ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு**
**ஆலம் துண்ட மிடற்றெம் ஆலவாயான் திருநீறே**

தெளிவுரை: திருமாலும், பிரமனும் அறிவதற்கு அரியதாகிய வண்ணத்தை உடையது திருநீறு; விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள் தமது மெய்யில் பூசி மகிழ்வது திருநீறு ஆகும்; செம்மையான இத்தேகத்தில் நேரும் இடர்களான பிணி முதலான துன்பத்தி

லிருந்து காத்து அருள் செய்து, இன்பத்தை அவ்வப் புலன் வழி உயிருக்கு அளிக்கவல்லது இத் திருநீறு; அத்தகைய சிறப்புடையது, நஞ்சினையுண்ட மிடற்றுடைய ஆலவாய் அண்ணலாகிய ஈசனுக்கு உரிய திருநீறு ஆகும்.

சிறப்புரை: முப்புரத்தை எரித்த சிறப்பினை உணர்த்திய (திருப்பாட்டு எண்7) நெறியில், திருமாலும் பிரமனும் காணரிய வண்ணம் உடையதெனத் தெளிவித்தமை காண்க. இது ஈசனாரின் திருவருளிச் செயலின் தன்மையும் திருநீற்றின் தன்மையும் ஒன்றே ஆதல் என்னும் மாண்பு கூறப்பட்டமை ஓர்க.

இந்த தேகத்தினை எடுத்ததும், ஆற்றம் செயல்களும், ஈசனார் அருள் வணத்தாலும் மன்னுயிரின் வினையாலும் நிகழ்வதும், உடம்பின் மேன்மையும் காட்டுமாறு "ஏல உடம்பு" என்னும் சொற்றொடர் உணர்த்துதல் காண்க. "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" என்னும் திருமூலர் உரைத்தவழி, உடம்பின் சிறப்பு உணர்த்தப்படுதலும் கொள்க.

**குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூடக்**
**கண்திகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு**
**எண்திசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு**
**அண்டத் தவர் பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே.**

தெளிவுரை: சமணர்களும், சாக்கியர்களும் திகைக்கும் தகைமையில் காட்சி தருவது திருநீறு; திருநீற்றை நெஞ்சில் பதித்த போதும் இனிமையைத் தரவல்ல அத்தகைய தெய்வீகம் உடையது. எண் திசையில் உள்ள விசமாகிய மெய்ப் பொருளைச் சரணடைந்த பெரு மக்களும் ஏத்தும் சிறப்புடையது திருநீறு; அத்தகையது, தேவர்கள் பணிந்து ஏத்தும் திரு ஆலவாய் அண்ணலாகிய ஈசனார்க்கு உரிய திருநீறு.

சிறப்புரை: ஆணவ மலத்தின் எட்டுக் குணங்களாகிய விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர் (சோம்பல்), மதம், நகை ஆகியவற்றினின்று நீங்கியவர்கள் ஏத்திப் போற்றத்தக்க சிறப்புடையது (இருபா இருபஃது) திருநீறு என்பதும் கொள்க.

தம் உள்ளத்தை எட்டு இதழ் பொருந்திய தாமரையாகப் பாவித்து, ஈசனை வழிபடும் ஆத்ம ஞானிகள் பூசித்துப் போற்றப்படுதலும் அமையும்.

அட்டபுட்பங்களாவன: *1.கொல்லாமை; 2.ஐம்பொறி அடக்கல்; 3.பொறுமை; 4.அருள்; 5.அறிவு; (ஞானம்); 6.வாய்மை; 7.தவம்; 8.அன்பு.*

**ஆற்றல் அடல்விடை யேறும் ஆலாவாயான் திருநீற்றைப்**
**போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்**
**தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்**
**சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.**

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வலிமைமிக்க இடப வாகனத்தில் விளங்குகின்ற ஆலவாய் அண்ணலாரின் திருநீற்றைப் போற்றித் துதித்த ஞானசம்பந்தர், மன்னவனாகிய கூன்பாண்டியனுடைய தீமையான பிணி யாவும் தீரும் வகையில் தேற்றிச் சாற்றிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் நல்லவர்களாத் திகழ்வார்கள்.

சிறப்புரை: திருமடத்தில் இட்ட தீ பாண்டியருக்கு வெப்பு நோய் ஆயினமையும், அந்தப் பிணியும் பிறவிப் பிணியுடன் தீருமாறு தேற்றி, ஞானசம்பந்தர் அருள் செய்து, நின்றசீர்நெடுமாறன் ஆகுதற்குப் புரிந்தமையும், தீப்பிணியாயின் தீரச் சாற்றிய திருப்பதிகக் குறிப்பு உணர்த்துதல் காண்க.

திருப்பெரும்புலியூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். 53 ஆவது திருத்தலம். புலிக்கால் முனிவர் பூசித்தது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

குறிப்பு: பெரும்பற்றப்புலியூர் என்பது சிதம்பரத்திற்கு வேறு பெயர். இத்தலம் வேறு ஆகும்.

திருச்சிற்றம்பலம்

# கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரங்கள்

## பிரிவு 1

தங்கப்பதக்கம் பரிசு பெறுபவர்

கட்டுரையின் தலைப்பு

எனது சமயம்

த.க. ஜினாத் (ஜெர்மனி)

ஆறுதற் பரிசு பெறுபவர்கள்

சோழன் ஆனந்தராசா, கஜேந்திரன் கந்தசாமி

குணரத்தினம் பிரசன்னா, தவம் கஜினாத், கவிலோன் விநாயகமூர்த்தி

## பிரிவு 2

தங்கப்பதக்கம் பரிசு பெறுபவர்

சிவகாந்தன் கந்தசாமி

கட்டுரையின் தலைப்பு

இந்துசமயம்

ஆறுதச்பரிசு பெறுபவர்கள்

த. திருக்குமார் ( இலங்கை), சிவகாந்தன் கந்தசாமி(லண்டன்)

குணரட்ணம் கௌசல்யா, செந்திலா செல்வராஜா(லண்டன்)

## பிரிவு 3

முதற்பரிசு

திருமதி R. V. லக்சுமி(லண்டன்)

கட்டுரை: மதம் மனிதனுக்கு அபின்

இரண்டாம் பரிசு

திருமதி தவம் சித்திரா (ஜேர்மனி)

கோயில் வழிபாடு

மூன றாம பிசு

திரு அ. வேணுவேணுகோபாலன்

கட்டுரை

சமயமும் சமயக் குரவர் களும்

# இலங்கை ஆரையம்பதி ஸ்ரீ பரமநாயினார் கோயில்

காவும் பொழிலுங் கழிமுகமும் புள்ளணிந்து ஏரியும்
மல்கி இரத்தின தீபமென நாவலர் போற்றும்
அணிசால் இலங்கையின் சீரார் குணதிசையில்—
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவை தெங்கின்
இளநீரும் தீம்பலாவின் கனிகளும் எங்கும் குறையாது
வழங்கும் நன்னாடு மட்டக்களப்பு. இதன் தென்பால்
உள்ளது ஆரையம்பதி என்னுஞ் சைவக் கிராமம்.

ஆரையம்பதியின் எல்லைகளாகத் தெற்கே தாழங்குடாவும் மேற்கே வாவியும், கிழக்கே கடலும், வடக்கே காத்தான் குடியும் அமைந்துள்ளன. முகத்துவாரத் தெரு சனத் தொகையிற் பெரியது. ஆரையம்பதியின் முகத்துவாரமாய் விளங்கியதால் அதற்குரிய காரணப் பெயர் ஏற்படலாயிற்று. அங்கொரு துறையுண்டு. படுவான் கரையிலுள்ள கொக்கட்டிச் சோலை முதலான ஊர்களிலிருந்து நெல், மரம், கல் முதலியற்றை வள்ளங்களில் ஏற்றிக் கொண்டு அங்கு போவது வழக்கம்.

ஆரையம்பதி மக்களில் விவசாயிகளும், மீனவர்களும், கட்டிடத் தொழிலாளரும், தச்சரும், அரசாங்க சேவையாளரும் அதிகமாய் உள்ளனர். அங்கு பல கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றை மேல் வரும் பாடல் நயம்பெற வர்ணிக்கின்றது.

மாலொடு மரனார் மருவியதாலே சுதானம்
பரம நாயினாரெனுந்
தேவின் வளர்தனிதிருக் கோயில் வடக்கிலுண்டு
வளர்தெற்கில்
மாலுறை கோயில் அவர்மருகர் மதகஜரூபருறை
கோயில்
வேலவர் கோயில் விளங்கு தமிழ் வேணியின் கோயில்
விரைந்தேகில்
காவல் செய் தெய்வக் கடவுளரின் காட்சிகொள்
கோயில் கீழ்பாலாய்
ஊழிக்கூத்தின் உயர்காளி உறையும் கோயிலொடு
மாரித்
தேவியும் பேச்சியும் திகழ்கோயில்
திக்கினிலெங்கும் பல
கோயிலாகி விளங்கும் அருளூராம்
ஆரையம்பதியெனு மழகூரே.

இந்தியாவினின்றும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றிலிருந்தும் கதிர்காம யாத்திரை செய்பவர்கள் ஆரையம்பதி ஊடாகச் செல்வது வழக்கம். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் கதிர்காமஞ் செல்வதென்றால் மிகச் சிரமமான காரியமாகும். பாதைகள் கடினமானவை; அவை வனவிலங்குகள் மிகுந்தவை; அடர்ந்த காடுகள் வழியாகப் போகும் யாத்திரிகள் அரசாங்க அதிபரின் அனுபதி பெற்றுக் கொண்டே போக முடியும். யாத்திரை புறப்படுவோர் எல்லோரும் கதிர்காமஞ் சென்றடைவதில்லை. பலர் கதிர் காமஞ் செல்ல முடியாமல் இடை வழியிலுள்ள கிராமங்களிலே தங்கி அவற்றைத் தங்கள் சொந்த இடங்களாக்கிக் கொள்வதுமுண்டு. கதிர்காமம் புறப்பட்டுச் சென்று சிலர் இவ்விதமாக ஆரையம்பதியிலே தங்கிவிட்டனர். ஸ்ரீ பரம நயினார் கோயிலென வழங்கும் ஐயனார் கோயில் முகத்துவாரத் தெருவில் உள்ளது. பரமநயினார் என்னும் பெயரானது எல்லாம் வல்ல இறைவன் என்னும் பொருள் கொண்டதாகும். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுக் கதிர்காமத்துக்கு யாத்திரை மேற்கொண்டே ஒருவர் இங்கே தங்கிவிட்டார் என்பதும் ஐயனார் வழி பாட்டை அவரே இங்கு அறிமுகஞ் செய்தார் என்பதும் ஐதீகம். அவரால் அமைக்கப்பட்ட ஆலயம் வழிபாட்டுத் தலமென்ற வகையிலே பிரசித்தி பெற்றது. பரமநயினார் என்னும் பெயருள்ள ஐயனார் கோயில்கள் காலப் போக்கிலே செங்கலடி, தாழங்குடா என்னும் ஊர்களிலும் உருவாக்கப்பட்டன. தாழக்குடாவில் வருடமொருமுறை பரம நயினார் சடங்கு நடைபெற்று வருகிறது. அங்கு பூசாரிகளே அர்ச்சகராகக் கடமை செய்வர் .

ஆரையம்பதியிலுள்ள ஐயனார் கோயில் பறங்கியர் காலத்தில் மறைந்து விட்டது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலே தலத்தில் மீண்டும் வழிபாடு ஆரம்பமாகியது. அந்நாட்களில் பந்தலொன்றினை அமைத்து ஆண்டுதோறும் வழிபாடு நிகழ்த்தினார்கள். பின்பு 1930ம் ஆண்டளவிலே ஆலயமொன்று கல்லாற் கட்டப் பெற்றது. அது இரு மண்டபங்களைக் கொண்ட மடாலயமாகும். மண்டபங்களில் ஒன்று கருவறையாகப் பயன்படுத்தப்பட்டது. அதிலுள்ள பீடமொன்றிலே சூலம் அமைந்திருந்தது. நாள்தோறும் பிற்பகலில் நேரகாலமென்றில்லாது ஊரவர் பரமநயினாருக்கு விளக்கு வைத்து அவல், கடலை, ரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவது வழக்கம். வெள்ளிக்கிழமை தோறும் வழிபாடுகளும் பஜனைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்த ஆலயத்தில் 1970ம் ஆண்டு வரை சடங்குகளைப் பூசாரிகளே செய்தனர். ஆனி மாதத்துப் பூர்வபக்ஷத்து நாலாம் பிறைக்கு முன் புதன், சனி ஆகிய வாரங்கள் தவிர்த்த நாட்களிற் சடங்கு நடைபெறுவது முறைமை. பூசாரி முறைப்படி நோர்ப்புக் கட்டியபின் சடங்கு நடைபெறும். மஞ்சட் சோற்றைச் சமைத்துச் சாமவேளையில் அதனை ஒரு முடிச்சிலே கட்டி ஆலயத்தின் முன்பு தொங்க விடுவதே நோர்ப்புக் கட்டுவதாகும். நோர்ப்புக் கட்டியபின் அடுத்தநாளே பரமநயினார் சடங்கு நடைபெறும். பரம நாயினாரின் கணங்களான வதனமாரின் கோலத்திலும், மாரியம்மன், பேச்சியம்மன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களின் கோலங்களிலும் உருக் கொண்டு ஆண்கள் ஆடுவார்கள். வதனமாரின் உருவில் வருவோர் வில், அம்பு, பொல்லு ஆகியவற்றைக் கையிலேந்திய வண்ணம் ஆடுவார்கள். மாடுகளைப் பிடிக்கும் பாவனையில் மழுக் கயிற்றை வீசி ஆட்களை

இழுப்பர். முன்னாட்களில் இந்த ஆட்டம் கவச்சிமிக்கதாய் அமையுமென்று முதியோர் சொல்வர் .
தெய்வங்களின் பாவனையில் வருவோரை மந்திரவாதிகள் படுகளம் போட்டு ஆடவிடாது மந்திரத்தாற் கட்டுவர் . எதிர்தரப்பிலுள்ள மந்திரவாதிகள் கட்டுக்களை மந்திரத்தால் வெட்டித் தெய்வங்களின் கோலந் தாங்கியவர்களை ஆட வைப்பர் . மந்திரவாதிகளின் போட்டிகளைப் பார்ப்பதற்காக அயற் கிராமங்களில் இருந்தும் மக்கள் பெருந்திரளாக வருவதுண்டு. மாந்திரீக முறைகளைத் துறைபோகக் கற்றவரும் அண்ணாவியாராக விளங்கியவருமான பரிகாரி பொன்னம்பலத்தின் காலத்திற் பரமநாயினார் சடங்கு அற்புதமான முறையில் நடைபெற்றது.
சடங்கிலே பரமநாயினார் காவியம், பரமநியனார் அகவல், வதனமார் காவியம், வதனமார் அகவல் முதலியன படிக்கப்படும். வதனமார் காவியத்தில் மேல்வருங் கதை அடங்கியுள்ளது. மங்கலர் , நயினார் என்னும் நாமங்களும் பரமநயினாருக்குரியவை. அவர் ஒரு சமயத்திலே செந்தாமரை மலரிற் தோன்றினார். உமாதேவியின் அம்சமாக அந்தணர் குலமொன்றில் அவதரித்த சுவாதியம்மை என்பவள் பன்னிரண்டு வருடங்களாகத் தவமிருந்ஸது மங்கலரிடம் பிள்ளை வரங் கேட்டாள். அவளின் தவப்பயனாக வதனமார் நூற்றுவர் பிள்ளையாகப் பிறந்தனர் . மங்கலனார் இவர்களின் தலைவராய் விளங்கினார் . மங்கலனாருக்கு வாகனமொன்று தேவைப்பட்டதால் அவர் வதனமார் களோடு வனத்திற்குப் போய் உன்னதமான யானையொன்றைப் பிடித்து அதனைத் தனது வாகனமாக்கினார். அதன் பின்னர் அவர்கள், அயோத்தியிலிருந்து புறப்பட்டுத் தஷிணாபதம் வழியாக இலங்கைக்கு வந்தனர் .
மங்கலரோடு வந்த வதனமார் இலங்கையிலுள்ள பல கிராமங்களுக்குஞ் சென்று அங்கே வீரதீரச் செயல்கள் பல புரிந்தனர். காலப் போக்கில் வதனமார் வெளி என வழங்கும் வாகூரவெளி அவர்கள் வதியும் பதியாகி விட்டது. அங்கே வதனமார் பலர் தேனெடுத்துக் குடிக்க முற்பட்டபோது, அதிசயமான காளை மாடொன்று வில்குளப் பகுதியில் உலாவுகிறதென்று ஒரு வதனன் வந்து சொன்னான். எல்லோருமாகப் போய் மாட்டைத் துரத்தி அதனோடு போர் செய்து இறந்தனர். மங்கலனார் போய் அவர்கள் உயிர் பெற்று எழும்புமாறு அருளினார். இறந்து பிறந்தமையால் வதனமார்கள் எச்சிற்பட்டவர்களென்று கூறி அவர்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு ஊருக்குக் காவலராய் இருக்குமாறு மங்கலர் சொன்னார். ஊழிக் காலம் முடிந்த பின்புதான் வந்து அவர்களைத் தேவலோகத்துக்குக் கூட்டிப் போவதாகவும் மங்கலர் உறுதி கூறி மறைந்தனர்.
*1955*ம் ஆண்டிலே ப.க.சுப்பிரமணியம் என்பவரின் தலைமையில் ஊரவர் கூட்டமாகக் கூடி மடாலயமாக அமைந்திருந்த கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டுப் பரமநயினாருக்கு ஆகம விதிப்படி நித்திய நைமித்திக கருமங்கள் செய்யத் தக்க கோயிலொன்றை நிர்மாணிக்கத் தீர்மானித்தனர். அதற்கமைய மடாலயமும் அருகிலிருந்த ஆலமரமும் அகற்றப்பட்டன. கட்டிட வேலைகள் முடியும் வரை வழிபாடு செய்வதற்கென ஒரு சிறிய கோயிலையுங் கட்டினார்கள். குஞ்சிதபாத ஆசாரியின் ஆலோசனைப்படி *10.11.1955* ஆம் நாளன்று இரவு அத்த நக்ஷத்திரங் கூடிய சுபவேளையிலே சங்குஸ்தாபனஞ் செய்தனர். பின்பு ஊர்மக்கள் கொடுத்த நிதியை ஆதாரமாகக் கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகர மண்டபம், தம்ப மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்ட கோயில் கட்டி முடிக்கப் பெற்றது. கர்ப்பக் கிருகம் *20* அடி உயரமானது. அது சதுரமான வடிவில் ஒற்றைத் தளமாக அமைந்த சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. அதன் கிழக்குப் புறத்திலே வள்ளி தெய்வயானை சமேதரும் மயில் வாகனருமாகிய முருகப் பெருமானின் தோற்றமும்— தெற்கிலே, யோகதக்ஷிணா மூர்த்தியின் வடிவமும் அமைந்துள்ளது. மேற்கிலே கருடாரூட மூர்த்தியான மகா விஷ்ணுவும் வடக்கிலே சிவபெருமானும் விநாயகரும் அமைந்துள்ளனர். நாகதம்பிரான், வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவர்களுக்கும் இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதரான சுப்பிரமணியர், சந்திரகேசர், கண்ணகி ஆகியோரின் பஞ்ச லோகத்திலான எழுந்தருளி விக்கிரங்களும் இங்குள்ளன.
இக்கோயிலிற் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ள மூர்த்திகளை மேல் வரும் பாடல் நயம் பெற வர்ணிக்கிறது.

நலந்தரு நாகதேவர் பின்னிருந்துகாக்க
நன்மை செறி நவக்கிரகங்கள் மேற்கேயிருப்ப
வன்மைமிகு வைரவர் எதிரிருந்து நோக்க
புன்மை நீக்கும் விநாயகன் முன்னமர
நல்லின்பமருளும் உமாதேவியும்
கைலைநாதன் லிங்கமதமாய்
இடம் வலமாய் மகாமண்டபத்திருப்ப
கன்ம வினை நீக்கும் பூரணை புட்கலை சமேதராக
ஹரிஹரன் கற்பகிருகத்தமர்ந்தாரே

*1982*ம் வருஷத்திலே சிவலிங்கமும் உமாதேவியாரின் படிவமும் முறையே மகா மண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் தாபனஞ் செய்யப்பட்டன. அத்துடன் வசந்த மண்டபமும் கட்டப் பெற்றது. பரமநயினார். பூரணை, புட்கலை, உமாதேவியார் ஆகியோரின் பஞ்சலோக விக்கிரகங்களும் இக்காலமளவிலே உருவாக்கப் பெற்றன. முன்பு அமைந்திருந்த தானத்திலே புதிதாகக் கோயில் கட்டப் பெற்றதனால் *1970*ம் ஆண்டு பங்குனி மாதத்திலே அந்த நக்ஷத்திரம் கூடிய தினத்திலே (*23.03.1970*) ஆவர்த்தன நவகுண்ட நூதனப் பிரதிஷ்டா கும்பாபி ஷேகம் சிறப்பாக நடைபெற்றது. திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலின் பிரதம குருக்களாக விளங்கிய சிவாகம சாகர பூஷணம் பூ.க.சிவசுப்பிரமணியக் குருக்கள் அதனைச் செம்மையாக நிறைவேற்றினார். அந்நாள் முதலாக நித்திய நைமித்திக பூசைகள் இங்கு

ஒழுங்காக நடைபெறுகின்றன. ஆனி உத்திரத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொள்ளும் வகையிலே பத்து நாள் அலங்கார உற்சவங்கள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன.

கோயில்களிலே பரமநயினார் கோயிலிற் பூரணை நாட்களிலே திருவிளக்குப் பூசை நடைபெறுகின்றது. புரட்டாதி சனி, கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி, கேதார கௌரி விரதம் ஆகியவற்றுக்குரிய தினங்களிலே விசேடமான பூசைகள் நடைபெறுகின்றன. இறுதிப் புரட்டாதிச் சனியன்று சனிக்கிரகத்து அபிஷேகமும் ஹோமமும் நடைபெறும். கந்த சஷ்டிக் காலத்திலே கந்தபுராணப் படிப்பும் திருவிழாவும் நடைபெறுகின்றன. இக்காலத் திருவிழா தீர்த்தோற்சவம், பொங்கல் என்பவற்றோடு நிறைவுபெறும்.

விநாயகர் சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படும் 21 நாட்களும் விநாயகப் பெருமானுக்குப் பொங்கலும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இறுதி நாளாகிய பெருங்கதை தினத்திற் பெரிய பொங்கலும் பலவிதமான விவேதனப் பொருட்களுடன் அலங்கார பூசை நடைபெறும். இவ்விரதத்தைப் பலர் அனுஷ்டிப்பர். கேதார கௌரி விரத காலத்தில் 21 நாளும் சிவலிங்கத்தின் முன் கும்பங்கள் வைத்துப் பூசைகள் நடைபெறும். கார்த்திகை மாதம் முழுவதும் சிவலிங்கத்துக்கு முன்னே கும்பங்கள் வைத்து 'காசிகண்ட பூசை' நடைபெறும்.

வைகாசியில் ஏழு நாட்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறுகின்றது. பூரணை நாளன்று திருக்குளிர்த்தி இடம் பெறும். அதிலே ஆயிரக்கணக்கில் அடியார்கள் கலந்து கொள்வர். மறுநாள் மாலை நடக்குந் திரு ஊஞ்சலோடு சடங்கு நிறைவு பெறும்.

மார்கழித் திருவெம்பாவை பத்து நாட்களும் காலைப் பூசையும் திருவிழாவுஞ் செய்யப்படுகின்றன. அத்தினங்களிலே திருவாசகம் படிக்கப்படும். திருவிழாவின் முடிவிலே திருவாதவூரடிகள் புராண பாராயணம் நிகழும். ஆருத்திரா அபிஷேகத்தன்று கடலிலே சமுத்திர தீர்த்தம் நடைபெறும். அது முடிந்து சுவாமி திரும்பி வரும்போது அடியார்களை மஞ்சள் நீரால் முழுக்காட்டுவர். சுவாமி கோயிலுக்குத் திரும்பியதும் திருபொன்னூஞ்சல் வைபவம் இடம்பெறும்.

கர்ப்பக் கிருகத்தில் அமைந்துள்ள பரம நயினாரின் வடிவம் ஆசனநிலையில் இடக்காலை உட்புறமாக மடித்து வலக்காலைத் தொங்க விட்ட கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு கரம் வரதஹஸ்தமாகவும், மற்றக்கரம் செண்டினைத் தாங்கிய நிலையிலும் அமைந்துள்ளது. பரமநயினாரின் வலப் பக்கத்திலே பூரணையும் இடப்பக்கத்திலே புட்கலையும் குவளை மலர் ஏந்திய நிலையில் அமைந்துள்ளனர். பரம நயினாரின் எழுந்தருளி வடிவத்திலே அவர் ஆசன நிலையிலும் தேவியர் ஸ்தானக நிலையிலும் இருப்பதைக் காணலாம். சந்திர சேகரர், விநாயகர், முருகன் ஆகியோரின் எழுந்தருளி வடிவங்கள் ஸ்தானக நிலையில் உள்ளன. வைகாசி மாதத் திருவிழாவில் ஒரு கரத்திலே சிலம்பினை ஏந்திய ஸ்தானக நிலையிலுள்ள கண்ணகி அம்மனின் உருவத்தை எழுந்தருளியாக உள்வீதி வழியே கொண்டு செல்வர்.

தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்திரம், சித்திரைக் கஞ்சி, சித்திர புத்திர நாயனார் பூசை, ஆடி நாகதம்பிரான் பொங்கல், ஆவணி விநாயக சதுர்த்தி, கார்த்திகை விளக்கீடு முதலிய காலங்களிலும் சிறப்புப் பூசைகளும் திருவிழாவும் அபிஷேகங்களும் செய்யப்படும்.

ஆனிப் பரணியிலே துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகும் பிரம்மோற்சவம் உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் முடிவு பெறும். மதியத்திலும் மாலையிலுந் திருவிழாக்கள் நிகழும். முதல் நான்கு திருவிழாக்களும் ஆலய பரிபாலன சபையினால் நடத்தப்படுகின்றன. அவை கோயில் திருவிழாக்களாகும். இந்நாட்களிற் சுவாமி எழுந்த ருளி உள்வீதி வலம் வருவது வழக்கம். ஐந்தாம் நாள் விழா 'குருக்கள் திருவிழா' எனப்படும். ஐந்தாம் நாள் முதலாகச் சுவாமி எழுந்தருளி உள்வீதியும் வெளி வீதியும் வலம் வருவது வழக்கம்.

வெளி வீதி வலம் வரும்போது விநாயகர் குதிரை வாகனத்திலும், சந்திரசேகர் இடப வாகனத்திலும், பரமநயினார், பூரணை புட்கலை சமேதராக, யானை வாகனத்திலும், வள்ளி தெய்வயானை சமேதரான முருகப் பெருமான் மயில் வாகனத்திலும் எழுந்தருளி வருவர். வாகனங்கள் அழகான தோரணங்களினாலும் மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்படும். பல நூற்றுக் கணக்கான மக்கள் இத்திருவிழாக்களுக்கு வந்து சாம்பவ தீட்சை பெற்றுக் கொள்வர்.

தீர்த்தோற்சவத்தன்று அதிகாலையிலே திருப்பொற் சுண்ணம் இடித்துக்கொண்டு, பல நூற்றுக் கணக்கான அடியார் சூழ்ந்துவரக் கோயிலிலிருந்து புறப்பட்டுச் சுவாமி கிழக்கு நோக்கி எழுந்தருளிச் செல்வர். கடற்கரையை அடைந்ததும் அஸ்திரதேவருக்கு அபிஷேகம் நடைபெறும். அதற்குப் பின் தீர்த்தோற்சவம் நடைபெறும். அது முடிந்தபின் சுவாமியை ஆலயத்துக்கு அழைத்து வருவர். வழி நெடுகிலுந் தோரணங்கள் தூக்கிக் கும்பம் வைத்து மக்கள் சிறப்புச் செய்வர். சுவாமி கோயிலுக்குப் போனதும் யாகசாலை பிரிக்குங் கிரியைகள் இடம் பெறும். அதற்குப் பின் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அன்றிரவு திருப்பொன்னூஞ்சலும் துவஜ அவரோகணமுஞ் சம்பவிக்கும். பிராயச்சித்த அபிஷேகமம், வைரவர் பூசை என்பவற்றோடு அடுத்தநாள் பிரம்மோற்சவம் முடிவு பெறும்.

**நன்றி: இலங்கையின் இந்துக் கோயில்கள்.**
**பதிப்பாசிரியர்: பேராசிரியர் சி.பத்மநாதன்.**

# சிறுவர் கலசம்

வணக்கம்!

பெற்றார்களே! சிறுவர்களே!

இம்முறை எமது 25ஆவது சிறப்பிதழ் வெளியீட்டை முன்னிட்டு சிறுவர் கலசம் சிந்தனைக்குரிய பல விடயங்களைத் தாங்கிக்கொண்டு 24 பக்கங்களில் வருகின்றது. நாங்கள் அறிவித்த கட்டுரைப்போட்டியில் உங்களில் பலர் பங்குகொண்டு எம்மை மகிழ்வித்தீர்கள். மிக்க நன்றி. சிறுவர்களே மேலும் மேலும் எழுதுங்கள். தமிழில்தான் எழுதவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நீங்கள் தமிழர்களாக வாழவேண்டுமென்பதுதான் எமது அவா.

–ஆசிரியர்–

பிரிவு 1 இல் முதற்பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்ற கட்டுரை இது

# எனது சமயம்

கஜிநாத் தவம் (இவரது வயது 8. ஜெர்மனி யைச் சேர்ந்த என்னப்பெற்றால் நகரத்தில் வாழ்கின்றார்)

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் இந்து சமயமாகும். இது பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானது. இதன் ஆரம்பகாலத்தை இன்னும் சரியாக கணக்கிடமுடியாது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். சிவமும் சக்தியும் ஒன்றாயிணைந்து இருப்பதே உலகம் என்று கூறப்படுகின்றது.

சிவபெருமானால் அருளப்பட்ட வேதமானது இந்துமதத்தின் ஆணிவேராகக் கருதப்படுகின்றது. இதனை வேதம், ஆகமம் என இரு பெரும் பிரிவுகளாகவும் பின்னர் வேதமானது இருக்கு, யசுர் சாமம், அதர்வணம் என நான்காகவும் ஆகமம் இருபத்தியெட்டாகவும் வேத வியாசர் எனும் முனிவரால் வகுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இவை இறை வனை வழிபடும் ஞான வழிகளையும் ஆசார அனுட்டான சிவாகம தத்துவங்களையும் உணர்த்தி நிற்கின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தலாகிய ஐந்தொழில்களையும் புரிகின்ற இறைவன் அடியவர்களின் ஆன்மாவுக்கு அருள் புரிவார் என்று வேதங்கள் விளக்குகின்றன.

இந்துசமயம் பல தத்துவங்களை உள்ளடக்கியது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களையும் பின் பற்றி ஆன்மாவைப் பிடித்திருக்கின்ற ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களையும் நீக்கியருளும் இறைவனின் திருவடிகளைத் தொழுவதை உணர்த்துகின்றது. இந்து மதம் ஒரு மனிதனை மனிதனாய் வாழ வழிகாட்டுகின்றது. இதனால் இந்துக்கள் சிறு வயதிலேயே தீட்ஷை பெற்று சிவ மந்திரங்களை உச்சரித்து, விபூதி தரித்து, ஆசான, அனுட்டான விதிகளைப் பின்பற்றி ஒழுகுவதால் ஒழுக்கம், சத்தியம், மனப்பக்குவம், தெளிவு, தெய்வீகம் போன்ற பண்புகளையும் சாந்தம் அமைதி போன்ற நற்குணங்களையுடையவர்களாய் வாழ வழிகாட்டுகின்றது. புலால் உண்ணுதல், களவு, பொய், சூது வாது, மது என்பவற்றால் ஒரு மனிதன் சமூகத்தில் கெட்டவனாகி அழிந்து விடுவான்.

ஆனால் இந்துமத தத்துவ விதிமுறைகளுக் குட்பட்டவர்கள் தன்னுயிரைப் போல் மற்ற உயிர்களையும் மதித்து அன்புள்ளவராய் பஞ்சமா பாதகங்களை வெறுத்து ஒதுக்கியவர்களாய் சத்தியம் நேர்மை அன்புக்கு கட்டுப்பட்டவர்களாய் வாழ வழிகாட்டி நிற்பது இந்து மதம். இந்த தீட்ஷை முறையானது ஆரம்பத்திலிருந்தே இந்துக்களை நல்வழிப்படுத்துகின்ற விதிமுறை என்பதால் தீட்ஷை பெற்றவர்களே மனம், வாக்கு, காயங்களை தூய்மையாக வைத்திருப்பதற்கும் இது உதவுகின்றது என இந்துமதம் கூறுகின்றது. எமது மதம் எல்லா உலகத்தையும் எல்லா உயிர் களையும் காக்கின்ற தத்துவத்தை கொண்டிருப்பதால் வள்ளுவர்

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும் என்று பாடியுள்ளார் இதனால் நாம் சமுதாயத்தில் அன்பு, பண்பு, நேர்மை,

சத்தியம் நிறைந்தவர்களாய் வாழ வழிகாட்டி நிறகின்றது. இறைவனால் தேவர்கள் முனிவர்களுக்கு உபதேசிக்கப்பட்ட சகல கலைகளும் பூமியிலே வாழும் மனிதர்களுக்கு இவர்களால் உரைக்கப்பட்டுள்ளதாக நூல்கள் கூறுகின்றன. திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரும் ஏனைய நாயன்மார்கள் தொண்டர்களும் இந்து சமயத்தின் பெருமையையும் இறைவனின் திருவிளையாடல்களையும் உலகிற்கு உணர்த்தி நிற்கின்றனர்.

இவர்களே இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு ஆதாரமானவர்கள் என அறிகின்றோம். கோயில்கள், மடாலயங்கள், சைவப்பாடசாலைகள் மூலமும் திருத்தொண்டர் நிலையங்களூடாகவும் சைவம் வளர்க்கப்படுகின்றது.

இன்று ஈழத்திலே எமது இந்து ஆலயங்களையும், பாடசாலைகளையும், குடியிருப்புக்களையும், சிங்கள இராணுவம் அழித்து வருவதால் எமது மதமும், சின்னாபின்னப்பட்டு அழிக்கப்படுகின்றது. அதனால் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நம்மவர் வெளிநாடுகளில் ஆலயங்களையமைத்து, தமிழ்ப் பாடசாலைகளையும் அமைத்து, பரதம், சங்கீதம், பஞ்சபுராணங்களைப் பாடிக்காட்டுவதாலும் நாம் இங்கும் சைவத்தை அறிந்து அதன்படி ஒழுகமுடிகின்றதல்லவா? எந்தக்காலமும் உண்மையும், சத்தியமும் நிலைத்து நிற்பதால் எமது மதமும் எம்மவர்களால் எல்லா உலகமும் நிலை நாட்டப்படும். அன்பே சிவம் என்பார் அறிவுள்ளோர் என்பதால்

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.

எமது மதம் என்றுமே நிலைத்து நிற்க நாம் ஒத்துழைக்க வேண்டும்.

# எமது சமயம்

சோழன் ஆனந்தராசா

( இவர் பிரிவு 1 இற்கான போட்டியில் பங்கு பற்றியிருந்தார். வயது 11. வெஸ்ட் குறோடைனைச் சேர்ந்தவர். எமது நடுவர்கள் இவருக்கு ஆறுதல் பரிசினை வழங்குகின்றனர்.)

ஆதியும் அந்தமும் இல்லா இந்த பரந்த உலகில் உள்ள மக்களை நல்வழிப் படுத்துகின்ற பாதையே சமயமாகும். இதன் அடிப்படையில் இன்று உலகில் பௌத்தமதம், இந்து மதம், கிறித்தவமதம், இஸ்லாமிய மதம் என்று

பல சமயங்கள் இருந்தாலும் எமது சமயம் இந்து சமயமாகும்.

பண்டைய இந்திய மக்கள் பரம்பொருள் ஒன்றுதான் என உணர்ந்தனர். இந்த பரம்பொருளை சிவன், சக்தி, விஷ்ணு, விநாயகர், முருகன், சூரியன் என்று பெயரிட்டு வணங்கி வந்தனர். இதனடிப்படையில் எழுந்ததே சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் பிரிவுகளாகும். இவை அடங்கிய பிரிவே எமது சமயமாகிய இந்து சமயமாகும்.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியாவில் வடமேற்கிலுள்ள சிந்துநதிப் பள்ளத்தாக்கில் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில், சிவவழிபாடு இருந்ததாக அகழ்ந்தெடுக்கப்பட்ட சான்றுகள் கூறுகின்றன. அந்த அளவுக்குப் பழமை வாய்ந்தது எமது சமயம். அத்துடன் அது அநாதியானதும் கூட. ஆதியும் அந்தமும் இல்லாத சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமே இந்து மதத்தின் ஒரு பிரிவாகிய சைவ சமயமாகும்.

இந்த விஞ்ஞான உலகம் கூட எமது மெய்ஞ்ஞானிகள் கண்ட உண்மைகளை ஒத்துக் கொள்கின்றன. அல்பேட் அயன்ஸ்டீன் என்னும் விஞ்ஞானி இயற்கை ஏதோ ஒரு நியதியில் நடக்கின்றது என்ற உண்மைப் பொருளை கூறினார். அந்த உண்மைப் பொருளையே நாம் தொடக்கமும் முடிவும் இல்லா பரம் பொருள் என்கிறோம்.

உடல் அழியும், உயிர் அழிவதில்லை. காரணம் உயிருக்கு மேலும் பல பிறவிகள் உண்டு என்பதை வலியுறுத்துகிறது எமது சமயம். அழியும் உடல் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும் மலங்களினால் பீடிக்கப்பட்டு தீய வினைகளை செய்ய முற்படுகின்றது. இதை விடுத்து இறை சிந்தனை கொண்டு சிவ வழிபாட்டை மேற்கொண்டால் மலங்கள் ஆன்மாவை விட்டு நீங்கிவிடும். புதிதாக அன்புநெறி தழைத்தோங்கும்.

அன்பின் அடிப்படையில் வளர்ந்த எனது சமயம் வாய்மை, தூய்மை, பொறுமை, பக்தி, தியாகம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகின்றது. தூய உள்ளமே இறைவன் எழுந்தருளும் கோயிலாகும் என்று எமது சமயம் கூறுகிறது.

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

என்று திருமூலர் தனது பத்தாம் திருமுறையில் அன்பின் நிலை பற்றி இவ்வளவு அழகாக கூறியுள்ளார். வடமொழியில் வேதங்கள், உபநிடதங்கள், சிவாகமங்கள் என்பனவும் தென் மொழியிலுள்ள பன்னிரு திரு முறைகளும் பதினான்கு சித்தாந்த சாஸ்த்திரங்களும் எமது சமய உண்மைகளைக் கூறுகின்றன.

மேற்கூறிய எமது சமயம் பற்றிய உண்மைகளையும் பெருமைகளையும் எனக்குத் தினந்தோறும் எடுத்துக் கூறியவர்கள் எனது பெற்றோரே. அதனால் தானோ அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றார் ஔவைப்பாட்டி.

# My Religion

**-Hariharan Kuganesan-**

(இவர் இலண்டனைச் சேர்ந்தவர். வயது 10. ஆறுதற் பரிசினைப் பெறுகின்றார்)

I belong to a religion, which accepts all the religions. It is called Saivaism. Lord Shiva is the first and foremost God of the Saivaism. Saivism is composite in nature. Saivaism goes back to the period of Indus valley civilisation.

Three important entities of Saiva siddhanta are Pathi (the God), Pasu (the Soul) and Pasam (the bonds). Pathi, who is named Siva, is all-pervasive. He protects the souls and hence known as Pasupathi. It means benefactor, the seed of creation and implies that there can be no other creator above him. I learn from God Shiva of my own original attributes of purity, love, knowledge, power and bliss. He is the creator of the divine Triad; Brama, Vishnu and Shankar. The second entity is pasu, which means soul. According to Saiva Siddhanta, souls are infinite in number and they are uncreated.

The third entity is known as pasa, which in turn is classified into three types namely anavam, karmam and maya. All these put together are known as mummalam. (the three impurities)

Though Siddhanta Philosophy was systematically codified by the philosopher Meykandaar and others prior to this it has been elaborately discussed by Saiva Acharyas- such as Sambandar, Appar, Sundarar and Manickavasakar. Their works, especially Thevaram and Thiruvasakam, cover all the aspects of Saiva Siddhanta in the form of devotional songs.

We believe in Karma. The aim of our life is to gain Salvation.

# எனது சமயம்

கஜேந்திரன் கந்தசாமி- இவர் இலண்டனைச் சேர்ந்தவர். வயது 10. மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலையில் தமிழ்கற்று வருகின்றார்.

இந்துசமயம் உலகம் தோன்றியபோதே தோன்றிய சமயமாகும். ஆதிகாலங்களில் வாழ்ந்த தமிழ் மக்களில் பலர் இந்து மக்களாகவே வாழ்ந்தார்கள் எனச் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இது சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் ஆகும். சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்து ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றார்.

இந்துசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. ஆதிகால மன்னர்களில் ஒருவனான அசோகச்சக்கரவர்த்தி கூட இந்து சமயத்தவன் என்று வரலாறுகள் கூறுகின்றன. அவன் புத்தபிரானின் அவதாரத்தின் பின்பு அவருடைய போதனையின் பின் புத்த சமயத்திற்கு மாறினான் என

வரலாறுகள் கூறி நாம் அறிகின்றோம். அவரின் போதனையின் பின்பே தமிழ்மக்கள் பலர் புத்த மதத்தைக் கடைப்பிடித்தார்கள். போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் கால ங்களின் பின்புதான் நமது நாட்டில் கிறிஸ்த்தவம் பரவத் தொடங்கியது.

சிவபெருமான் பல அவதார புருஷர்களைத் தோற்றுவித்தார். அவர்களில் நாயன்மார்கள் முக்கிய மானவர்கள். அவர்களால்தான் இந்தியா இலங்கை ஆகிய நாடுகளில் சைவம் வளரத் தொடங்கியது. அதனால் இந்து சமயம் மேன்மையடைந்தது. இந்துசமயமானது மக்கள் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம் பொறிகளையும் அடக்கி இறைவனை நினைத்து வணங்கும் முறையை எமக்கு தருகின்றது. எமது சமயமானது நல் ஒழுக்கங்களான **பொய் பேசாதீர்கள், களவு எடுக்காதீர்கள், புறம் கூறாதீர்கள், மாமிசம் உண்ணாதீர்கள், கோபம் கொள்ளாதீர்கள், உயிர்க் கொலைசெய்யாதிர்கள்** என்ற நற்பழக்க வழக்கங்களை எமக்குப் போதிக்கின்றது.

நாம் விபூதி அணிதல், காலை ஆறுமணிக்குக் கடவுளை வணங்குதல், தேவாரம் பாடுதல், அதைப் போல் மாலையும் ஆறுமணிக்கு கடவுளை வணங்குதல் எமது கடமை ஆகும். இந்து சமயம் ஆனது, இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு வேதங்களை உடையது. ஆன்மாக்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களால் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆணவம் எனும் மாயை நீங்கினால் நம்மில் இறைவன் இருப்பதை நாம் உணர முடியும். நம்மில் இறைவன் இருக்கின்றார் என்பதை நாயன்மார்களும் ஞானிகளும் எடுத்துக்காட்டி உள்ளனர். பல தேவார புராணங்களை ஏட்டில் எழுதித் தந்து சிவன் பாதங்களை அடைந்தனர். எமது சமயத்தின் சின்னங்கள் விபூதி உருத்திராட்ச மாலை, சந்தனம், குங்குமம் என்பன ஆகும். இந்துமதம் ஆனது பிற உயிர் துன்பப்படுவதைக் கண்டு இரக்கம் காட்டுகின்றவன் இந்து என்கின்றது கருணையுள்ள மதம் இந்துமதம்.

எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும். இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில் எனக் கொண்டு எவ்வுயிரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட மதமே இந்துமதம். அன்பே கடவுள். இந்து மதம் என்பதற்கு அன்பு மதம் என்பது பொருள்.

வேறு மதங்கள் பலவும் அவ்வம்மதங்களை உண்டாக்கினவர் பெயரைக் கொண்டுள்ளன. இந்து மதத்தின் பிரிவு மதங்கள் ஒவ்வொன்றும் கடவுளின் பெயரைக் கொண்டே விளங்குகின்றன.

இந்துசமயம் ஆனது இந்தியாவில் மேன்மையான சமயமாக வளர்ந்து வருகின்றது. பல ஆலயங்கள் அமைத்து தெய்வ வழிபாடு செய்கின்றார்கள். இலங்கையில் இராணுவ நடவடிக்கையில் பல ஆலயங்கள் உடைக்கப்பட்டுச் சூறையாடப்பட்டுள்ளன. புலம் பெயர்ந்த மக்கள் தாம் வசிக்கும் நாடுகளில் இந்து சமய முறைப்படி ஆலயங்கள் அமைத்து தெய்வ வழிபாடு செய்வது மிகவும் பெருமைப் படத்தக்கதாகும். வாழ்க தமிழ் வளர்க தமிழ் வளர்க இந்து மதம்.

# நான் விரும்பும் கடவுள்

**கஜிநாத் தவம்**

**(இவர் ஜெர்மனி நாட்டின் என்னப்பெற்றால் என்னும் நகரத்தில் வாழ்பவர். ஆறுதற் பரிசினைப் பெறுகின்றார்)**

நான் விரும்பும் கடவுள் சிவபெருமான். இவரே இவ் உலகத்தைப் படைத்த இறைவனாகும். இவர் எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர். இந்து சமயத்தின் முழுமுதற்கடவுளும் இவரே. இவரின் இடப்பாகத்தில் அமர்ந்திருப்பது உலகமாதாவாகிய பராசக்தியாகும். இதனால் சிவனின்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவமில்லை என்று கூறப்படுவதால் ஈசன் தன்னுடலில் பாதியைச் சக்திக்கு வழங்கினார். இதனால் சிவம்பாதி, சக்தி பாதியாகிய இறைவனின் திருவுருவத்தை அர்த்தநாரீஸ்வரர் வடிவமாக வழிபடுகின்றோம்.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மறைத்த லாகிய ஐந்தொழில்களையும் புரிய பிரம்மா, விஷ்ணு சிவமூர்த்தங்களைக் கொண்டு அடியார்க்கு அருள் சுரக்கும் ஐயன்.

இறைவனுக்கு நெற்றியிலும் ஒரு கண் உண்டு. அதனால் இவரை முக்கண்ணன் என்றும் அழைப்பர். ஒருமுறை உலோகத்தினால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் இருந்த அரக்கர்களான தாராக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி என்ற மூன்று அரக்கர்களையும் நெற்றிக்கண்ணைத் திறந்து எரித்தார். அவர்களுடன் கோட்டைகளும் எரிந்து சாம்பலாகின. அத்துடன் மன்மதனையும் தமிழின்மேல் பற்றுடைய முத்தமிழச் சங்கத் தலைமைப் புலவனான நக்கீரன் இறைவனுடன் வாதாடியபோது தமிழின்

பெருமையை உலகிற்குணர்த்த நக்கீரனையும் எரித்தார்.

அடியவர்களுக்கு அடியனாக எளியோர்க்கு எளியோனாக அருள் புரியும் இறைவன் உள்ளன்போடு எதைக் கேட்டாலும் வாரி வழங்கும் கருணைக் கடல் என்று அறிஞர்கள், புலவர்கள் கூறியுள்ளனர். ஞானிகளும் முனிவர்களும், ரிஷிகளும், தேவர்களும் வணங்கித் துதிக்க கைலாய மலையிலே காட்சிதந்து அடியவர்க்கு வேண்டிய அனைத்துச் செல்வங்களையும் வழங்கி நிற்கின்றார். வேதசாஸ்திர கலைகளை மகாமுனி வர்களுக்கு உபதேசித்து அவர்கள் மூலம் பூவுலகிற்கு பரப்பப் பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

இறைவன் அகத்திய மாமுனிவருக்கு ஆயுர்வேதம் எனும் மருத்துவத்தை உபதேசித்து அவர் மூலமாக இன்று உலகம் முழுவதும் பரவி உலகத்தை வாழவைத்துள்ளது. இறைவனால் அருளப்பட்ட எல்லாக் கலைகளும் மனிதன் வாழ முக்கியமான வையாக விளங்குகின்றன. நந்தி மத்தளமிசைக்க, தேவர்கள் பூமழை தூப, பூதகணங்கள் வாத்தியமிசைக்க, எம்பெருமான் தனது இடது காலைத் தூக்கி பரதமாடினார் என்று அறிகின்றோம். இன்று நாமும் ஆடிக் களிக்கின்ற புதுமையான புனிதமான பரதநாட்டியமாகக் காண்பதில் பெருமையடைகின்றோம். இவை யாவும் எம் பரமபிதாவாகிய இறைவனின் திருவிளையாடலல்லவா.

இறைவன் தன் திரு மேனியிலே திரு வெண்ணீறையும் உருத்திராக்கத்தையும் அணிந்துள்ளார். ஒரு காலில் சலங்கையையும், ஒருகாலில் சிலம்பையும், இடையிலே புலித்தோலை ஆடையாகவும், கையிலே சூலத்தையும், கழுத்திலே பாம்பையும், தலையிலே பிறைச் சந்திர னையும், சடாமுடியிலே கங்கையையும் அணிந்திருக்கும் திருக்காட்சி எம்மனதை விட்டகலாதவை.

திருஞான சம்பந்தர் அழுதபோது அப்பனம்மையாகிக் காட்சி கொடுத்தனர். சிவபெருமான் திருநஞ்சையுண்டு தேவர்களைக் காத்து, பிட்டுக்கு மண்சுமந்து, பிரம்படிபட்டு, சுந்தரரைத் தடுத்தாட் கொண்டு, அகத்திய மாமுனிக்கு அருளுபதேசம் செய்து, தமிழுக்காக வாதாடி வழக்குரைத்த எண்ணற்ற திருவிளையா டல்களைப் புரிந்த எல்லாம் வல்ல ஈஸ்வரனே நான் விரும்பும் கடவுளாகும்.

# எனது சமயம்

**குணரத்தினம் பிரசன்னா**

**வயது–11, இவர் இலங்கையிலிருந்து இதனை எழுதியுள்ளார். ஆறுதற்பரிசு பெற்றுள்ளார்**

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் இந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் போற்றிய சமயம் சிவனைப் பரம் பொருளாகக் கொண்ட சைவசமயமாகும். இதுவே எனது சமயம். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி நம் கடவுள். அதனால் எம் சமயமும் அநாதியானது. எம் சமயம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்றது. இதுவே சைவசமயம். சைவம் என்றால் சிவன் சமயம் என்பர். ஆகவே சைவசமயமென்றால் சிவனை அடையும் வழி எனப் பொருள்படும்.

இறைவன் என்றும் உள்ளவர் உயிர்களும் என்றும் உள்ளவை. என்றும் உள்ள உயிர்கள் என்றுமுள்ள இறைவனை அடைந்து பேரின்பம் அடைவதற்கான வழியும் என்றும் உள்ளது. அந்த வழியே சமயம். அது சிவசமயம். சிவத்தை அடைவிக்கும் சமயம் அதனால் எனது சைவசமயம் நித்தியமானது, ஆதியில்லாதது, அந்தமுமில்லாதது.

இந்து சமயத்தில் சைவம், சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்று ஆறு பிரிவுகள் உண்டு. இதில் சைவம் மிகப் பழமை வாய்ந்தது. மிகப் பழையகாலத்தில் பலபாகங்களிலும் பரவியிருந்தது என்று ஆராய்ச்சியாளர்களும் கூறியுள்ளார்கள்.

இச்சிவன் ஆன்மாக்களுக்காக படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்தொழிலையும் செய்கிறார். இந்த ஐந்தொழிலையும் நடராசவடிவம் குறிக்கின்றது. படைத்தல் உடுக்கேந்தியகை, காத்தல் தூக்கியகை, அழித்தல் தீ ஏந்திய கை, அருளல் தூக்கிய திருவடி, மறைத்தல் முயலகன் மேல் ஊன்றிய கால் எனப்பொருட்படும்.

சிவன் என்பதற்கு அன்பு என்பது பொருள். சைவ உண்மைகளைக் கண்டு உணர்த்திய நம் முன்னோர் உயிர்க் குல முழுவதிலும் சிவத்தைக் கண்டனர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என திருமந்திரத்தில் திருமூலர் இவ்வாறு கூறுகின்றார்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**

எனவே எனது சமயத்தில் வாய்மை, தூய்மை, பொறுமை, தியாகம், பக்தி முதலியன மலர்ச்சியடைகின்றன. எனவே அன்பே வடிவமான சிவனை வழிபடும் சைவசமயத்தை உலகெங்கும் பரப்ப முன்வருவோமாக.

## சமயம் எங்களுக்குத் தேவையா?

கௌசல்யா குணரத்தினம்
வயது-17, பிரிவு 2. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆறுதற் பரிசு பெறுகின்றார்

மனித வாழ்க்கையின் மேம்பாட்டில் பெரும் பங்கேற்பது சமயம் என்றால் மிகையாகாது. சமயமானது ஒரு நெறி. நெறி என்பது ஒருவழி. அதாவது மனிதன் வாழும் வழி. ஆகவே மனிதன் வாழ நல்வழி காட்டுவது சமயமே ஆகும். ஏனென்றால் மனிதன் எப்படியும் வாழலாம் என்று காட்டுமிராண்டித் தனத்துடன் வாழ்வதை ஒழித்து இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு குறிக்கோளுடன் வாழ வழிநடத்துவதும் இந்தச் சமயமே.

ஒரு பிள்ளை தானாகவே வளரமுடியாது. அதற்குத் துணையாக, தாய் தந்தையர் மிகவும் அவசியம் என்பது போலத்தான் மனிதன் ஒழுங்காக வாழ்வதற்கு இந்த சமயம் மிக அவசியமாகும். இப்படிப்பட்ட சமயம் மூலம் அன்பு, கருணை, பாசம், இரக்கம், ஒழுக்கம், பணிவு, நேசம், வாய்மை, போன்ற நற்பழக்கங்கள் மனிதனிடையே வளர்கின்றது. ஆகவே மக்கள் வாழ்க்கையில் சமத்துவமும் நிலவும்.

ஆதிகால மக்கள் அறிவு வளர்ச்சி இன்றி நாடோடியாக அலைந்து திரிந்து கல்லோடு கல்லுரசிக் கறி சமைத்த காலத்தில் தனக்கு மேலான ஒரு சமயம் உண்டு என்பதை பெரும்பாலும் உணரவில்லை, எனினும் காலபோக்கில் மனிதனின் சிந்தையும் வளர தனக்கு மேலான ஒரு பரம்பொருள் உண்டு என்பதை உணர்ந்தனர். சமயத்தால் தான் மனிதன் நல்வழியில் வாழலாம் என்பது தெட்டத்தெளிவு ஆகிற்று.

சமயத்தின் மூலம் தோன்றிய பெரியார்கள் பலநூல்களின் மூலம் மனித வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டினர். உதாரணமாக இந்துசமயத்தின் தர்ம சாஸ்த்திர நூல்கள் எதிர்காலத்துக்கு ஏற்ற கருத்துக்களையும் வாழ்க்கை ஒழுங்கையும் கூறுகின்றது இந்து சமயம் மட்டுமல்லாமல் எல்லா மதங்களுமே கூறுவது மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையேதான். சமயம் வேறானாலும் கடவுள் பெயர் வேறானாலும் அதில் கூறுகின்ற எல்லாக் கருத்துக்களும் முத்தி இன்பம் என்னும் ஒரே ஒரு இலக்கையே கொண்டுள்ளது. எனவே ஓர் உயிருக்குத் துணையாக இருப்பதுவும் சமயமே தான். சில மனிதர்கள் சமயம் தேவை இல்லை என்று காட்டுமிராண்டித்தனத்துடன் வாழ்கின்றார்கள். இவர்கள் சூதாடல், களவு, மாமிசம் புசித்தல், மதுபானம் அருந்துதல் போன்ற தீய செயல்கள் செய்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குச் சமயத்தின் அறிவை புகட்டவேண்டும். இதனாலும் அவர்கள் திருந்த வாய்ப்பு உண்டு. பலகிளை ஆறுகள் பல திசைகளில் ஓடினாலும் அவை கடைசியில் கடலைத்தான் சென்றடைகின்றன. அதுபோல தீயவழியில் சென்ற வர்கள் சமயத்தின் உண்மையை அறிந்து கடைசியில் பரம்பொருளைத்தான் அடைவார்கள். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் முறைப்படி வாழக்கையில் மேற்கொள்பவன் வீடுபேறு அடைவான்.

நான் எவ்வளவு கடவுளை நம்புகின்றேன் என்னைக் கடவுள் கைவிட்டுவிட்டாரே என்று கருதுவது முற்றும் பிழை. அது நாம் போன பிறப்பில் செய்த தீவினை என்று கருத வேண்டும். இல்லாவிட்டால் சமயமே பொய் என்று நினைத்து இன்னும் தீவினைகளைச் சுமக்க நேரிடலாம். இந்தத் தீவினைகளை எவ்வாறு போக்கலாம்? என்று சிலர் மனதில் தோன்றலாம். ஆம் அது சரியான கேள்வி. இதனை வெல்வதற்கு மனிதனின் நன்னடத்தையே தேவை. உதாரணமாக அறம் செய்வதே முக்கியமாகும். அறம் செய்வதால் வாழ்க்கையும் நல்லதாக அமையும்.

அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்

என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். இதன் கருத்தென்ன? இறைவனே! நான் உன்னைப் பெற்றதால் முடிவே இல்லாத இன்பத்தைப் பெறுகிறேன் ஆனால் என்னைப் பெற்றததால் உனக்கு என்ன லாபம் கிடைத்தது என்றார். ஆம் இறைவனால் அல்லது சமயத்தால் நாம் பெறும் நன்மையோ அளவற்றது. ஆனால் இந்த பெறுவதற்கரிய உடலைப் பெற்றதனால் நாம் செய்யும் தீயகுணங்களோ அதனையும் விட அளவற்றது.

ஆகவே நாம் இறைவனுக்கு எந்தத் தொண்டும் செய்யாது வீணே நாட்களை கழிக்கின்றோம் இதனால் இறைவனும் எம்மால் ஒன்றும் பயனை பெறுகிறார் இல்லை. அதனால் மெய்யான சமயமும் பொய்யாகி வருகின்றது. சமயமும் வாழ்க்கையில் கலந்து

காணப்பட்டால்தான் அந்த வாழ்க்கை ஒரு பூரணமாக அமையும் என்றே நினைக்கின்றேன்.

உலகில் தோன்றியுள்ள உயிர்வகைகளையும், ஏனையவற்றையும் , நல்லவை, தீயவையென்று இரு தரமாகத் திட்டப்படுத்தி வகுக்க முடியாது. நலம், தீமை ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டே இருக்கின்றன. நல்லது என்று சொல்லப்படும் அமிர்தத்தை முறைதவறிக் கையாண்டால் அது நஞ்சு ஆகிவிடும். விஷத்தைப் பாங்குடன் பிரயோகித்தால் அது மருந்து ஆகிவிடும். எப்பொருள் எத் தன்மை உடையதாயிருப்பினும் அதில் குணமும் குற்றமும் சேர்ந்தே இருக்கின்றன என்று சமயத்தில் கூறினாலும், மனிதர்களுக்கு அது செவிடன் காதில் ஊதிய சங்குபோல ஆகிவிடுகின்றது. ஆகவேதான் மனிதன் சமயத்தை வெறுக்கின்றான் போலும். சமயமில்லாது மனிதன் உயிர் வாழ்வது மிகவும் கடினம் என்பது தெட்டத்தெளிவு. ஆகவே தொண்ணூற்றொன்பது வீதம் சமயமும் தேவை. உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்று பாகுபாடு இன்றி சமனாக மனிதர்களை மதிக்க வேண்டும் என்பதையும் கூறுவது இந்த சமயமே.

ஒரு மனிதனுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் எவ்வாறு அவசியமோ அதே போல சமயமும் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்று இதன்மூலம் தெளிவாகின்றது. அன்பே தெய்வம் என்னும் அன்புவழிகாட்டி எம்மை நல்வழியில் நடக்க வைக்கும் சமயம் எங்களுக்குத் தேவை என்று சொல்லுவதைவிட மிகமிக அவசியமானது என்று கூறுவது மிகவும் பொருத்தமானது. ஒழுங்காக சமயம் உண்மை என்று கூறி அறநெறியில் வாழ்ந்தால் அது உண்மையான சமய வாழ்வாகும்.

# DO WE NEED TEMPLES?

**Senthil Selvarajah. Age-14**

இவர் இலண்டனைச் சேர்ந்தவர். பிரிவு 2 இல் ஆறுதற் பரிசு பெறுகின்றார்

This is an article containing information on the topic 'are temples needed?' This also contains the For and Against reasons of this issue. This subject is contraversial, which can be debated or discussed amongst a group of people.

**FOR REASONS**

A temple is a scared place filled with peace and harmony form the devotional songs are sung there is praise of God. This gives mental satisfaction. Hinduism, being one of the oldest religions of the world, has shown constant devotion and tolerance, which has helped to maintain a peaceful atmosphere throughout the world.Hindus have built many glamorous temples all over the world.

Hindus are growing stronger every day by believing in their religion. This is a strong reason why temples are needed. Hinduism was evolved centuries before Jesus Christ was born and before Christianity was developed. Chola kings of South India had built and constructed most of the beautiful temples in India, but in addition the Kings Seran and Pandian kings had also constructed some temples. King Sanglian had built some temples in Tamil Ealam, who was extremely proud and protected not only temples and Hinduism, but also Tamil language.

As you can see, the history and existence of Hindu temples is hard to destroy.

**AGAINST REASONS**

The most important reason against, the need for temples is the debate the existence of God. If there isn't such thing as a God, then why are religions needed?

This also brings up the question of the creation of the universe, was it God who created the universal.Religious people believe that God created the world.

They believe on the scientific explanation (the Big Bang). To the athiests Big Bang appears to be the most rea-

sonable reason of the creation of the Universe. This can be researched further in factual books containing more information. In this case, 'factual' being the operative word is taken as being true, as most people have made the decision that this explanation is more believable.

**MY OPINION**

I think that temples are needed in the world to maintain peace and harmony. The long-lasting religion cannot be destroyed, as that is the root or source to the oldest religion, (Hinduism).

## நான் விரும்பும் கடவுள்.

**—கவிலோன் விநாயகமூர்த்தி—**
**வயது 9. பிரிவு 1. இலண்டனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆறுதற் பரிசு பெறுகின்றார்.**

**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.**

ஐந்து கரத்தோடும் யானைமுகத்தோடும் கூடிய விநாயகப்பெருமானே நாம் மிகவும் விரும்பும் கடவுள் ஆவார். சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் மூத்தபிள்ளையே விநாயகர் ஆவார். விநாயகப்பெருமான் என்போன்ற சிறார்களுக்குக் கல்வி, செல்வம், வீரம் போன்ற செல்வங்களை அள்ளி அள்ளித் தருபவர். அடியார்களின் துன்பங்களைப் போக்குவதில் வல்லவர் விநாயகப்பெருமான். ஒரு சமயம் கைலாயத்தில் உமாதேவியோடு உலகை காக்கும் சிவபெருமான் அமர்ந்திருந்தார். அந்த நேரம் நாரதமுனிவர் சிவனை தரிசனம் செய்ய ஒரு மாங்கனியோடு வந்தார். இந்த மாங்கனியை சிவபெருமானிடம் சமர்ப்பித்தார். அந்த மாங்கனியை பெற்றுக்கொண்ட சிவபெருமான் இந்தக் கனியை நாம் சாப்பிடுவதை விட பிள்ளைகள் சாப்பிடுவதே நல்லம் என நினைத்தார். அப்போது பிள்ளைகள் இருவரையும் அழைத்துப் போட்டி ஒன்று வைத்தார். யார் இந்த உலகத்தை முதலில் சுற்றி வருகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த ஞானப்பழம் என்று கூறினார். அதைக்கேட்ட முருகப்பெருமான் தன்னுடைய வாகனமான மயில்மீது ஏறி உலகை வலம் வர புறப்பட்டுவிட்டார். ஆனால் விநாயகப்பெருமானோ நாரதரிடம் சென்று உலகம் என்றால் என்ன? அம்மையப்பன் என்றால் என்ன? என்று கேட்டார் அதற்கு நாரதரோ அம்மையப்பன்தான் உலகம் உலகம்தான் அம்மையப்பன் என்று கூறினார். விநாயகப்பெருமானும் உடனே அம்மையப்பனை வலம் வந்து பழத்தைப் பெற்றுக்கொண்டார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனச் சுட்டிக்காட்டிய விநாயகப்பெருமானே நாம் விரும்பும் கடவுள் தமிழ் மூதாட்டி ஒளவைப்பாட்டியும் பிள்ளையாரைப் பற்றிப் பாடிய விநாயகர் அகவல் சைவ மக்களால் போற்றப்படுவதாகும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னப்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

என்ற பாடலில் முதல் வணக்கம் பிள்ளையாருக்கு என விளங்குகிறது சைவ மக்கள் எந்த நற்காரியம் செய்யத் தொடங்கினாலும் முதலில் விநாயகரை வணங்கி தொடங்குவது வழக்கம். கணபதி, ஒற்றைக்கொம்பன், கசமுகன், பிரணவன், விக்னேசன் என்பன விநாயகப்பெருமானின் ஏனைய பெயர்களாகும் விநாயகரின் வாகனம் மூஷிகம்.

ஆனைமுகன் ஆறுமுகன –, அப்பம் முப்பழம் அமுது செய்து –, பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும –, பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த – போன்ற பாடல்கள் யாவரும் அறிந்த பாடல்களாகும். நாம் இவைகளை படித்தபடியாலும் பிள்ளையாரின் தோற்றத்தையும் பெருமையையும் அறிந்தபடியாலும் மாம்பழக்கதை, பொல்லாப்பிள்ளையாரின் கதை ஒளவைப்பாட்டியை கையிலைமலைக்கு தும்பிக்கையால் தூக்கியனுப்பிய கதை என் உள்ளத்தை கவர்ந்தபடியால் பிள்ளையாரே எனக்கு மிகவும் பிடித்த கடவுள்.

## இந்து சமயம்

**த.திருக்குமார்**
**இவர் கொழும்பில் வசித்து வருகின்றார்.வயது 13.பிரிவு இரண்டில் ஆறுதற் பரிசு பெறுகின்றார்.**

இந்தப் பூமியில் பல்வேறு உயிரினங்கள் பன்னெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றன. மனிதர்களும் வாழ்ந்து வருகிறார்கள். வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் பெற்றுக் கொள்ளக்

கூடியதாக உள்ளது. பூமியைப் போன்று இன்னும் பல கோள்கள் அண்டவெளியில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை தாம் செல்லும் பாதைகளிலிருந்து ஒரு நொடிப்பொழுதேனும் விலகிச் செல்வதில்லை. ஓர் ஒழுங்கில் அவை சென்று கொண்டிருக்கின்றன. இந்த ஒழுங்கு அழகைத் தருகின்றது. இவ்வாறே வாழ்க்கையிலும் ஓர் ஒழுங்கு வேண்டும். அப்பொழுது வாழ்க்கையில் அழகு மிளிரும் என்பதையும் அவை எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இக் கோள்கள் அனைத்தும் வேகம் மாறுபடாமல் திசை திரிபுபடாமல் பாதை தவறாமல் மிக்க ஒழுங்குடன் அண்ட வெளியில் வலம் வருகின்றன. இவற்றைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இல்லையா?

இப்புவியில் நேரந் தவறாமல் பொழுது புலர்கிறது. பகல், இரவு மாறி மாறி வருகின்றன. பருவ காலங்கள் உரிய முறையில் நிகழ்கின்றன. காற்று வீசுகின்றது, மழை பெய்கின்றது, பயிர்களும் செடி கொடி மரங்களும் வளர்கின்றன. இந் நிகழ்வுகள் அனைத்தும் ஒழுங்காகவும் சீராகவும் நடைபெறுகின்றன. இவையெல்லாம் யாருடைய கட்டளைக்கு ஏற்ப நடந்து கொள்கின்றன?

வேறு ஏன்? எமது உடலைப்பற்றியே சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எத்துணை அழகான, அற்புதமான, நூதனமான, நுட்பமான படைப்பு இந்த மனித உடல். இது ஓர் அபூர்வமான யந்திரத் தொகுதி. மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து பொறிகளும் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள, மனம் முதலிய அந்தக்கரணங்கள் எமக்கு தோன்றாத் துணையாக இருந்து எம்மை வழிப்படுத்த, இருதயம் முதலிய இன்றியமையாத உள்ளுறுப்புக்கள் ஓயாது ஒழுங்காக இயங்கி எமக்கு உயிர்ப்பைத் தருகின்றன. இத்தகையவாறு பல அழகுகளும், திரவியங்களும் மற்றும் படைப்புக்களும் எவ்வாறு தோன்றின? அவற்றைச் சிருஷ்டித்தவர் யார்? இவற்றையெல்லாம் இயக்குபவர், நெறிப்படுத்துபவர் யார்? இந்த அற்புதங்களுக்கெல்லாம் மூலகர்த்தா யார்? ஆம் இவற்றுக்கெல்லாம் பொறுப்பாக, மனித ஆற்றல்களையும் விஞ்சிய பேராற்றல் ஒன்று இருக்கின்றது. மனித அறிவிற்கும் அப்பாற்பட்ட பேரறிவு ஒன்று இருக்கின்றது. இன்பங்களுக்கெல்லாம் மூலமான பேரழகு ஒன்று இருக்கின்றது. பேராற்றல், பேரறிவு, பேரழகு, பேரின்பம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்றுதான் பரம்பொருள். அந்தப் பரம்பொருள் ஒன்றைத் தான் உலகிலுள்ள மக்கள் அனைவரும் இறைவன் என்கிறார்கள்.

அனைத்துக்கும் மூலகர்த்தாவான அந்தப் பரம்பொருள் ஒன்று. அந்தப் பரம்பொருளை மக்கள் உருவமாகவும் அருவமாகவும், அருவுருவமாகவும் வடிவங்கொடுத்து தங்களுக்கு அப்பாற்பட்ட அந்த சக்தியின் மீது நம்பிக்கை வைத்து இறைவனாக, தங்களுக்கு வேண்டியவற்றை வேண்டி வழிபட்டு வருகிறார்கள். அந்தப் பரம்பொருளை அடையும் வழியே சமயம். ஆனால் ஒரு பரம்பொருளை அடையும் சமயங்களோ பலவாக இருக்கின்றன. அந்த ஒவ்வொரு சமயமும் பரம்பெருளை வெவ்வேறு வடிவங்கள் கொடுத்து, வெவ்வேறு பாதைகளிலே மூலப் பரம்பொருளை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் இறுதியில் எல்லாம் சேரப்போவது அந்த ஒரேயொரு பரம்பொருளிடம் தான். பல ஆறுகள் எவ்வாறுதான் வளைந்து வளைந்து வந்தாலும் அவையெல்லாம் இறுதியில் சேரப்போவது ஒரே ஒரு கடலில் தான். அவ்வாறே தான் இந்தச் சமயங்களும் அவற்றின் வழிகளும்.

இன்றைய உலகின் மிகப் பிரதானமான சமயங்கள் நான்கு. அவை இந்து சமயம், கிறித்தவ சமயம், இஸ்லாமிய சமயம், பௌத்த சமயம். இவற்றுள் இந்து சமயம் தோன்றியது இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு. கிறித்தவம் தோன்றியது இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு. இஸ்லாம் சமயம் தோன்றியது 2500 வருடங்கள் ஆகின்றது. அதேபோல் பௌத்த மதம் தோன்றி 1250 வருடங்கள் ஆகின்றது.

சமயங்களிலே மிகப் பழைமையான எமது இந்து சமயத்தைப் பற்றி முதலில் பார்ப்போம். இந்து சமயமானது சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு பிரிவுகளைக் கொண்டது. அவை முறையே சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, முருகன், சூரியன் ஆகிய கடவுளரை முழு முதற் கடவுளாக அடிப்படையாகக் கொண்ட சமயங்கள். இச் சமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் அடக்கிய சமயமே இந்து சமயம் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு பல பெருமைகளையும் புகழையும் கொண்ட நமது இந்து சமயத்தின் பெருமைகளை, அதன் தோற்றம், அதற்கு

எவ்வாறு இந்து சமயம் என்ற பெயர் வந்தது என்பது அனைவரும் அறியாத ஒன்று.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலே, இமய மலையின் அடிவாரத்திலிருந்து அராபியக் கடலை நோக்கிப் பாய்வது சிந்து நதி. ( இப் பிரதேசம் இப்போது பாகிஸ்தானில் இடம்பெற்றுவிட்டது) இந்த சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தனி சிறந்த நாகரிகம் ஒன்று வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விளங்கியதென்பது அகழ்வாராய்ச்சிகளினால் நிறுவப்பட்டுள்ளது. இதுவே இந்து மதத்தின் தோற்றுவாயான இடம் என்று கூறப்படும் சிந்து வெளி நாகரிகம் எனப்படுவது. இங்கே (தென் பஞ்சாப்பில்) ஹரப்பா என்ற இடத்திலும், (சிந்து மாகாணத்தில்) மொஹெஞ்சதாரோ என்ற இடத்திலும் சிந்துவெளி நாகரிக காலத்தில்(கி.மு. 3000 ஆண்டளவில்) மிகச் சிறந்த, பெரிய இரு நகரங்கள் விளங்கின என்பது ஆராய்ச்சிகள் வாயிலாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த சிந்துவெளி நாகரிகத்தை, இந்துவின் தோற்றுவாயை தோற்றுவித்தோர் திராவிட இனத்தவரே என்பதை இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் அந்த மிகச் சிறந்த சிந்து வெளி நாகரிகத்தில் வாழ்ந்த மக்களும் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தனிசிறந்து விளங்கினர். உலக வாழ்வுக்கு உயிர்நாடியாக ஒரு பரம்பொருள் இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அவர்கள் போற்றிய சமயம் சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவமாகும். வடமேற்குச் கணவாய் வழியாகப் பின்னர் அங்கு வந்து குடியேறிய ஆரியர். தொடக்கத்திலே இந்திரன், வருணன், அக்கினி முதலான இயற்கைத் தெய்வங்கள் பலவற்றை வழிபட்டு வந்தனர். அவர்களும் காலப் போக்கிற் பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்துகொண்டனர். இவ்வாறு சிந்துவெளி நாகரிக மக்களால் இந்துசமய ஆறு பிரிவுகளும் உருவாகின.

சிந்து என்ற சொல்லினை, பாரசீகர் மொழிமுதற் சகரத்தை ஒலிக்க இடர்ப்பட்டமையால் அதை ஹிந்து என்று உச்சரித்தனர். பாரசீகத்திலிருந்து இச்சொல் கிரேக்க தேசத்துக்கு போக அங்கே சிந்து நதிக்கு அப்பாலுள்ள நாடு முழுவதையும் அப்பெயராலே வழங்கினர். இந்து என்ற சொல் இவ்வாறு சமய அடிப்படையிலின்றி எழுந்து பின்னர் அச் சொல்லே அவ்விடத்தில் வாழ்ந்த மக்களையும் அவர்களுடைய மதத்தையும் குறிக்கப் பயன்பட்டது. இவ்வாறு இந்து என்ற பெயர் எழுந்தது. இவையெல்லாம் அந்த சிந்துவெளி நாகரிகத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள்?

பண்டைய இந்தியாவில் இச் சமயம் சமாதான தர்மம் என்றும் வைதிக சமயம் என்றும் கூட வழங்கி வந்தது. மிகப் பழைய காலத்திலிருந்தே இந்து சமய வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது என்று ஆராய்ச்சி வல்லுனர் கூறுவர். பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மூலம் பல இந்து சமயத்துடன் சம்பந்தப்பட்ட புராதனச் சின்னங்கள், உருவங்கள், சிலைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ள.

**பிரிவு 2 இல் தங்கப்பதக்கம் பெற்ற கட்டுரை இது**

# இந்து சமயம்

**சிவகாந்தன் கந்தசாமி**

**இவர் லண்டனைப் பிறப்பிடமாகக் கொண்டவர்**

இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் தோன்றியதாக கூறப்படும் இந்து சமயமானது இன்று உலக நாடுகளிலும் பரந்து வளர்ந்து வருகின்றது என்றால் இதன் பெருமை சொலற்பாலது. சிவபெருமானை முழு முதற் கடவுளாக கொண்டிருக்கும் சமயம் இந்து சமயமாகும். இது மிகவும் பழமை வாய்ந்தது என்று பல புராண இதிகாச நூல்களிலிருந்து அறிகின்றோம். வேதத்தின் மூலப் பொருள் சிவம் என்றே கருதப்படுகின்றது. அதனால் இவ் வேதத்தை அருளியதும் இறைவன்தான் என்றே தத்துவ ஞானிகள் கூறியுள்ளனர்.

உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் ஒரு மகா புருஷரால் அந்தக் கால தேசத்திற்கேற்றவாறு தோற்றுவிக்கப்பட்டது. ஆனால் நமது இந்து மதம் மாத்திரம் எவராலும் காலத்திற்கேற்றவாறு தோற்றுவிக்கப்படாமல் உலகம் தோன்றிய காலத்திலே இறைவ-னால் தோற்றுவிக்கப்பட்டு எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களிற்கும் ஏற்ற வகையில் அனாதியாய் இருந்துகொண்டிருக்கின்றது.

வேதத்தை எழுதாமறை என்றும் கூறப்படுகின்றது. இவ் வேதத்தினை ஆன்றோர்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் தொகுத்துள்ளார்கள். இவ் வேதம் : வேதம், ஆகமம் என பிரிக்கப்பட்டது. பின்பு வேதமானது இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகவும் ஆகமம் இருபத்தி எட்டு ஆகவும் பிரிக்கப்பட்டன. இவற்றின் உட்பிரிவுகள் இருநூற்றி எட்டு ஆகும்.

இந் நான்கு வேதங்களும் நான்மறைகளென்னும் ஆகமங்கள் சிவாகமங்கள் என்னும் சிறப்புப் பெயர்களோடு வழங்கப்பெற்றன. இந்து மதம் வேதாந்தத்தையும் சித்தாந்த தத்துவத்தையும் சம தர்மங்களையும் அறத்தினையும் வலியுறுத்திக் கூறுகின்றது. அறமானது சிறப்பான வழியில் கடைப்பிடிக்கப்பட்டால் உலகில் சம நிலை பேணப்படும் என்பது இந்து மத தத்துவமாகும். சிவபெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் பிரம்மா, விஷ்ணு, உருத்திர மூர்த்தங்களில் நின்று நிகழ்த்தி வருகின்றார். இவை முறையே ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம், சத்தியேசாதம் என வழங்கப்படுகின்றன. ஈசான முகத்திலிருந்து சிவாகமங்கள் தோன்றியதாக புராணங்கள் கூறுகின்றன. இவை ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டே நடைபெறுகின்றன. இறைவனின் இடப்பாகத்தில் உமாதேவியார் அமர்ந்திருக்கிறார். இவரின் சக்தியினாலேயே பஞ்ச கிருத்தியங்கள் நடைபெறுகின்றன. இதனால் சிவமின்றி சத்தியில்லை என்றும் சத்தியின்றி சிவமில்லை என்றும் கூறப்படுகின்றது. இத் தத்துவத்தை உணர்த்தும் முகமாக இறைவன் சிவன்பாதி சத்தி பாதி என்றமைந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்தைப் பெறுகின்றார். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இந்து சமயம் ஒன்றில்தான் மனிதன் கடவுளாக ஆகும் நிலைமை பற்றிய தத்துவங்களை உள்ளடக்கி உள்ளது. இதனால் அன்பு கருணை தெய்வீகம் போன்ற நற் பண்புகளை கொண்டொழுகுகின்றது. இதனால்த்தான் ஞானிகளும் முனிவர்களும் அன்பே சிவம் என்று அறுதியிட்டு கூறியுள்ளனர்.

இந்து மதத்தின் நடைமுறை வாழ்க்கையை பின்பற்றும் ஒவ்வொருவரும் இதன் தத்துவங்களையும் ஆசார அனுட்டானங்களையும் தத்துவக் கோட்பாடுகளையும் கடைப்படிப்பது கட்டாயமானதொன்று. இந்த வகையில் இந்து மத தத்துவம் ஒவ்வொரு மனிதனையும் வரையறுக்கப்பட்ட ஒழுக்க கட்டுப்பாடுகளுக்குள் நிற்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது. சிறு வயதிலிருந்தே கடைப்பிடிக்கக் கூடிய இந்துமத தத்துவங்களில் கோயில் வழிபாடு முக்கியமான தொன்றாகும். தீட்சா உபநயம் பெறுதல், விரதங்களை முறையாக அனுஷ்டித்தல், திருக்கோவிற் பணிகளில் தம்மை அர்ப்பணித்துக்கொள்ளலுதல் பஞ்சமா பாதகங்களிலிருந்து ஒதுங்குதல், தவம், வேள்வி என்பவற்றை அற வழியில் நடத்துதல் என்பனவாகும். இந்து மதத்தில் நடத்தக் கூடிய ஒவ்வொரு காரியத்திற்கும் சடங்கிற்கும் அர்த்தம் உண்டு. மனம் வாக்கு காயம் சித்தம் புத்தி என்பவற்றை ஒரு நிலைப்படுத்தி மனதிற்கும் ஆன்மாவிற்கும் சஞ்சலம் ஏற்படாத வண்ணம் ஸ்திர நிலையில் வாழக்கூடிய நெறியை உணர்த்துவதில் இந்து மதம் வலிமை வாய்ந்தது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதன் தன்னால் ஆகக்கூடிய தரும கார்யங்களை திறம்படச் செய்து அவற்றால் கிடைக்கக் கூடிய நற் பயன்களை அனுபவித்து தனக்கும் தன் சமூகத்திற்கும் நல்வழிடையக் காட்டுகின்ற மார்க்கத்தை உணர்த்துவது சிறப்பானதொன்றல்லவா. ஒரு ஆன்மா ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களாலும் பீடிக்கப்பட்டு மாயையுள் சிக்குண்டு தம்மைத்தாமே அழித்துக் கொள்ளும் சூழலுக்குட்படுகின்றது.

இது மேலும் ஆணவ மலத்தினால் அணுத்தன்மையாக்கப்பெற்று அழிக்கப்படுகின்றது. இவ் ஆன்மா திருவருளை அறிய முடியாது இருண்ட வாழ்விற்குள் வதைபடுகின்றது. பேரின்பமாகிய திருவருளின் நுகர்வினால் ஆன்மா மலங்களினின்றும் விடுபட்டு சுத்த சத்துவ நிலையை அடைகின்றது. இப் பஞ்ச கிருத்தியத்தின் சங்கார காலத்தின்போது ஆன்மாவும் மலங்களும் நீங்கி சுத்த சத்துவத்தை அடைகின்றது. இதுவே பேரின்ப முத்தி என கருதப்படுகின்றது. பதி பசு பாசம் எனப்படும் தத்துவத்தை ஆராயும் போது பசு என்பது ஆன்மாவையும், பாசம் என்பது மலங்களையும் பதி என்பது இறைவனையும் குறிக்கின்றது. பசுவாகிய ஆன்மா பாசமாகிய மலங்களிலிருந்து விடுபட்டு பதியாகிய இறைவனை சென்றடையும் என்பதை சைவசித்தாந்த தத்துவங்கள் சான்று பகருகின்றன. இத்தகைய தத்துவங்களின் விதிப்படி வாழும் மக்கள் தங்கள் ஒழுக்க சீலத்தினால் மதத்தையும் மதம் சாரந்த கருத்துக்களையும் சிறப்படைய செய்கின்றனர். உண்மையான சமய வழிபாட்டினை கடைப்பிடிக்கும் ஒருவர் தாம் செய்கின்ற காரியங்கள் ஒவ்வொன்றும் இறைவனுக்கே உரியன என்று கருதும்பொழுது ஐம் பொறிகளின் அடக்கத்திற்குட்பட்டு பக்குவப்படுத்தப்பட்ட ஆன்ம சுத்தியோடு நடைமுறைப்படுத்துகின்றார். இவ்வாறே ஒவ்வொரு இந்துவும் ஒழுக்க கட்டுப்பாடுகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பராயின் அச் சமூகமே தூய்மையான இந்து மத கோட்பாடுகளை தாங்கிநிற்கும் என்பது புலனாகின்றது. மனம் வாக்கு காயங்களிற்கு அப்பாற்பட்ட இறைவனை மனதுள் இருத்தி ஞான மார்க்கமாக வழிபடக்கூடிய மார்க்கத்தை உணர்த்தி நிற்பது இந்து சமயமே. சரியை, கிரியை, யோகம்,

ஞானம் எனப்படும் நாற்பாதங்களும் இறைவனை வழிபட்டு பேரின்பத்தை அடையக்கூடிய மார்க்கங்களை உணர்த்தி நிற்கின்றன. இவை முறையே சாலோப சாரூப சாமீப சாயுச்சிய முத்தி வழிகளையும் உணர்த்தி நிற்கின்றது.

இறைவன் அருவ, உருவ, அருவுருவ திருமேனிகளில் நின்று ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு அருள்பாலித்து வருகின்றார். இறைவனிடம் கருணையை புகழ்ந்து அனுபவித்தறிந்த உண்மைகளை நம் சமூக வாழ்க்கைக்கு ஏற்றவாறு தத்துவங்களையும் கோட்பாடுகளையும் இலகுவாக்கி அன்பு, கருணை, தெளிவான சிந்தனை போன்றவற்றாலும் ஒழுக்கமான வாழ்க்கையினாலும் இறைவனின் கருணையை பெறமுடியும் என்பதை பல நீதி தர்ம அறங்களின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர். இதய சுத்தியோடு இறைவனை வணங்கி உயிர்களிடத்தில் அன்போடு வாழுவோமாக இருந்தால் எம்மிடத்திலும் இறைவனை காணமுடியும் என்ற தத்துவத்தை பொய்யா மொழிப் புலவன் திருவள்ளுவன் தமது திருக்குறளிலே மிக தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் இறைவனால் பூவுலகிற்கு அனுப்பப்பட்ட சமய தேவர்கள் என்றே கருதவேண்டும். இவர்களின் வருகையே இந்து மதம் செழித்தோங்கக் காரணமாய் அமைந்தது. தங்களின் அன்பே சிவம் என்ற வாழ்க்கை நெறியில் தம் அனுபவ நிகழ்வுகளை உணர்த்தி இந்து மதத்தின் தத்துவங்களையும் தூய்மையையும் எமக்கு வழங்கிச் சென்ற மானிட அவதாரங்கள். இவர்களின் வழிகாட்டல்களிலேயே இந்து மதம் இன்றும் உயிர் பெற்று விளங்குகின்றது.

இவ்வாறே அவர்களின் வழிகளில் இறைவனைத் தேடிய ஞானிகள், முனிவர்கள், அறிஞர்கள் யாவரும் இந்து தத்துவத்தின் கட்டுப்படுகளுக்கும் விதிமுறைகளுக்குமமையவே வாழ்ந்து காட்டிய ஒவ்வொருவர் வரலாறுகளும் எமக்கு தெளிவுபடுத்தி நிற்கின்றன. இருப்பினும் உயிர்களுக்கு ஊறு விளைவிப்பதோ கொலை செய்வதோ மகாபாவம் என்பதைச் சுட்டிக்காட்டிய மதம் இந்து மதமே. இதனையே பொய்யா மொழிப் புலவரும்

**கொல்லான் புலாலை மறுத்தானைக்**
**கைகூப்பி எல்லா உயிரும் தொழும்**

என்று கூறியுள்ளார்.

புராணங்கள் இதிகாசங்கள் இந்து சமய காப்பியங்கள் ஒவ்வொன்றிலும் இறைவனையும் இந்து சமயத்தை வளர்ப்பதற்கு கருவியாயிருந்த செந்தமிழையும் போற்றிப் பாடாத புனிதர்களே இல்லை என்பது சான்று. தன்னையும் தன் சுற்றத்தையும் நல்வழிப்படுத்தி உண்மை சத்தியம் தர்மம் என்ற கட்டுக்கோப்பிற்குள் வளர்த்தவர்களால் இந்து சமயம் ஒவ்வொரு மனித வாழ்க்கையையும் புடம் போட்ட தங்கத்தைப்போல் புதுப் பொலிவடைய செய்துள்ளது என்பதற்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இந்து மதம் பல தத்துவங்களை தன்னகத்தே உள்ளடக்கிகொண்டதாயினும் அவற்றிலிருந்து தெளிவாக கையாளப்பட்ட இறை தத்துவங்கள் ஒவ்வொன்றும் மனிதர்களுடைய அடிப்படை வாழ்க்கையில் ஆதாரமாய் ஆணி வேராய் வேரூன்றி உள்ளதை காணமுடியும், பிரம்ம தத்துவத்தில் வேதங்களில் ஓதப்பெற்ற பஞ்ச பூதங்களை ஸ்தானமாகக் கொண்டு படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களால் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம் பொறிகளையும் அடக்கியாண்டு கிரியா தத்துவத்தின் வியாபித்தலால் ஆயுர்வேதம் நூற்கப்பெற்று உலகின் அதிசிறந்த வைத்தியக் கலையாக பிரிவுற்று விளங்கி வருவதை இன்று எல்லா இடமும் காண்கிறோம். இவ்வாறே, இறைவனால் ஆடப்பெற்ற நடனக் கலையானது இன்று உலகம் போற்றும் பரத நாட்டிய சாஸ்த்திரமாக வளர்ந்து விரிந்து எம்மவர்கள் மனங்களில் வியாபித்துள்ளதையும், இது ஒரு தெய்வ அநுக்கிரகம் பொருந்திய தலையாகவும் சிறந்து விளங்குவதையும் காண்கிறோம். இவை யாவும் இந்து மத தத்துவத்தின் ஒரு சிறு பிரிவு என்றே எண்ணத்தோன்றுகின்றது. இக் கலையை இறைவன் அருளிய நன்கொடை என்றே கருதவேண்டும். எமது தாய்மொழியாகிய தமிழ் இறைவனின் கலைப் பொக்கிஷங்களை வெளிப்படுத்தும் போது மகத்தினால் மொழி துய்மைப்படுதிறது. இந்த தூய்மையை வைத்தே எம் மொழியினால் அனுகூலப்படுத்தப்பட்ட தெய்வாம்சங்களை நாம் வணக்கத்திற்குரியவைகளாக கருதி வணங்கி பயன் படுத்திக் கொள்கின்றோம். எனவே இந்து மதமானது ஒரு உலக வாழ்விலே நிர்ணயித்து நீதியையும் தர்மத்தையும், உண்மையையும் உலகத்திற்கு உணர்த்தும் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

வேதங்களில் கூறப்பட்ட விதியை கடைப்பிடித்து எல்லா மக்களும் உயிர்களும் ஒற்றுமையாக வாழ நல்லவற்றைச் செய்து நாயகர்களாய் வாழ இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனின் கருணைக்காக காத்துக் கிடக்கும் மனுநீதியுடைய மக்களையும் அற வழியின்

தத்துவ வாழ்வை கண்களாக போற்றி உலகத்தை சம நீதியுடைய உலகமாக காண பல பரிகாரங்களைத் தேடி நிற்பதும் இந்துமதமே.

இன்றைய சூழலில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அற்ப வசதிகளுக்காக தங்களை மதம் மாறும் நிலைக்கு உட்படுத்தியுள்ளனர் இதற்கு காரணம் அவர்களுக்கு இந்து மத தத்துவங்களின் ஒழுக்கத்தைப் பற்றிய தெளிவு போதாமையே என்று எண்ண தூண்டுகின்றது.

இந்து மக்களின் வாழ்க்கைக்குள்ளே இரண்டறக் கலந்து விட்ட மதமானது நல்ல பழக்க வழக்கங்களையும் ஒழுக்கத்தையும் அன்பையும் சிறப்பித்து எல்லா உயிர்களிடத்திலும் புரிந்துணரக் கூடிய பக்குவத்தை மனதில் வளர்த்து பெரியோர்களையும் அறிஞர்களையும் வணங்கி தத்துவ நெறிக்குள் இடைவனுடன் ஐக்கியமாகக் கூடிய பண்பினை கற்பிப்பது இந்து மதமேயாகும்.

## நான் விரும்பும் கடவுள்

**கஜேந்திரன் கந்தசாமி**

**பிரிவு 1 – ஆறுதற்பரிசு**

நான் இந்துக்கடவுள்களில் முழுமுதற் கடவுள் ஆகிய சிவபெருமானையே மிகவும் விரும்புகின்றேன். அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது. அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர். அவர் உலகில் உயிர்களை படைத்து காத்து அருள்புரிந்து முத்தியடையச் செய்கின்றார். அவர் ஜோதிவடிவானவர். கடவுளை நம்பி வழிபடுவோர் கண்ணுக்கு காட்சி கொடுப்பார். எல்லா உயிர்களிடத்திலும் பாலில் வெண்ணெய்கலந்து இருப்பது போல் சிவபெருமான் கலந்து இருக்கின்றார். உயிர் இருப்பதால் தான் உடல் அசைகின்றது என்று உணர்வதுபோல் கடவுள்இருப்பதால்தான் உலகம் இயங்குகின்றது என்று அறிகின்றோம்.

அவர் அன்பு வடிவானவர். அவரின் இடப்பாகத்தில் சக்தி ஆகிய உமாதேவியார் வீற்றிருக்கின்றார். சக்தி இன்றி சிவம் இல்லை என்பர். அப்படி இருவரும் அர்த்தநாதீஸ்வரர் ஆன வடிவில் வீற்றிருப்பார்கள். கருணை உள்ளம் கொண்ட சிவபெருமான் நெற்றிக்கண் உடையவர். அவர் புலித் தோலை ஆடையாகவும் உருத்திராட்ச மாலையையும் பாம்புகளையும் அணிகலங்களாக அணிந்துள்ளார். கொன்றை மலர் மாலையை சூடியுள்ளார். சுடலைச்சாம்பலை மேனியில் பூசி நடாசப் பெருமானாக மக்களுக்கு அருள்பாலிப்பார். அவரை தில்லைநடாசப் பொருமான் எனக்கூறுவர்.

அவரை திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமான் சிறந்த ஒளியைத்தருகிற்ற மாணிக்க கல்லைப் போன்று அக்கல்லினுள் மறைந்திருக்கும் ஒளி பயன்படுத்துவார் கை வண்ணத்திற்கமைய போரொளியாய் வெளிப்பட்டு தோன்றுகின்றார் என பாடுகின்றார். சிவபெருமானின் பிள்ளைகள் பிள்ளையார் முருகன் ஆகிய கடவுள்கள் ஆவார்கள். சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றின. அப்பொறிகள் சரவணப்பொய்கையில் விழுந்தன அவை ஆறு குழந்தைகள் ஆக மாறின. அவற்றை உமாதேவியார் ஒன்றாக அணைத்த போது ஆறுமுருகன் தோன்றினார். அவரே ஆறுமுகக்கடவுள் எனப்பட்டார். அவர் சிவபெருமான் ஆகிய தந்தைக்கு பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்தார்.

சிவபெருமான் சிவலிங்க வடிவானவர். சிவபெருமானின் வாகனம் நந்தி ஆகும். சிவபெருமானின் சடாமுடியில் இளம் பிறைச்சந்திரனும் கங்கை நதியும் இருக்கின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மாணிக்க வாசகர் ஆகிய நாயன்மார்கள் சிவபெருமானை பக்தி உடன் வழிபட்டார்கள். திருஞானசம்பந்தர் மூன்று வயதில் ஞானப் பாலைக்குடித்தார் பின் தமது தந்தையாருக்கு தோடுடைய சேவியன் எனும் தேவாரத்தை பாடினார். திருநாவுக்கரசருக்கு திருக்கைலாச மலையில் சிவபெருமானின் திருக்கோல காட்சியைக்காட்டி அருள் பாலத்தார். பெருக்கெடுத்து ஓடிய வைகை ஆற்றுக்கு அணை கட்டுவகற்காகக் கூலியாளாக வந்தார். சிவபெருமான் பூமியில் பல அதிசயங்களை தோற்றிவித்தார். அதாவது நரியை பரி ஆக்கினார். பக்தர்கள் பலரை உலகில் தோற்றுவித்து அவர்கள் மூலம் தன்புகழை மக்கள் உணரவைத்தார். பதினாறு வயதுடைய மார்க்கண்டேயரை காலன் கவரவரும்போது சிவபெருமான் காலனை காலால் உதைத்து மார்க்கண்டேயருக்கு சாகாவரம் கொடுத்தார். இப்பிரபஞ்சத்தைப் படைத்து உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் காத்தருளும் கருணைக் கடலான ஈசனை நம்பி வழிபடும் யாவரையும் காத்தருள்வார். எல்லாம் வல்ல ஈசனின் திருவடிகளை என்றும் நினைத்து நாமும் வணங்குவோமாக.

## கோவில்கள் எங்களுக்கு தேவையா?

**கந்தசாமி சிவகாந்தன்**

**பிரிவு 2 இல் பாராட்டுப் பெறும் கட்டுரை**

உலகம் தோன்றிய போதே இந்துமதம் தோன்றியுள்ளதாக பல அறிவாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். சிந்து வெளி நாகரிகத்தின் தோற்றுவாய்களும் சமய

வழிபாட்டிற்குரிய வழிகளை உணர்த்துவதில் முத்திரை பதித்துள்ளன. இருப்பினும் இக்காலத்திற்கு பிற்பாடு தோன்றிய வழிபாட்டு முறைகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வல மாறுதல்களை பெற்றி ருக்கின்றது என்பதற்கு ஆதாரங்களும் அடையாளங்களும் சான்றுகளாக இருக்கின்றன.

இம் மாற்றமே தெய்வ வழிபாட்டிற்குரிய அடிப்படை தத்துவங்களை கொண்டவையாக அமைந்தன. ஆனால் மரங்களையும் மலைகளையும் குகைகளையும் இறைவன் அமைந்திருக்கும் ஆலயம் என்று நம்பி வணக்கத்திற்குரிய முறைகளை வளர்த்துக் கொண்ட மனிதனின் சிந்தனைக்குள் முழுமை பெற்றதே ஆலயங்கள் என இன்று பிரமிக்கத்தக்க வளர்ச்சியை கொண்டுள்ளது.

ஆதிகாலத்தில் அமைக்கப்பட்ட கோயில்கள் இன்றைய அமைப்புக்களை விட முற்றிலும் மாறுபட்டவைகளாக இருந்தன. அவை ஒரு வழி ஒரு விதி என்ற சிறு வட்டத்தை கொண்டிருந்தன. ஆனால் தற்போது வேத ஆகமங்களில் கூறப்பட்ட சிற்ப சாஸ்த்திர வடிவங்களையும் இராஜ கோபுர கலசங்களையும் கொண்ட அமைப்புக்களுடன் சிறப்படைந்து காணப்படுகின்றது. பொதுவாக கோவில்கள் குணதிசையை நோக்கியே வாசல்களை கொண்டி ருக்கும். ஆனால் வேதாகம சாஸ்த்திரம்களின்படி மூன்று, ஐந்து ஒன்பது வீதிகளுடன் புராண இதிகாச வரலாறுகளைக் கொண்டிருக்கும் இராஜ கோபுரங்க ளையும் மூர்த்தி தலம் தீர்த்தம் ஒருங்கே அமைந்த புண்ணிய ஸ்தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு கோவில் அமைப்புக்கள் பிரமிக்கத்தக்க மாறுதல்களை கொண்டுள்ளது.

கோவில்கள் என்றால் என்ன? கோவில்கள் கட்டப்படுவதன் நோக்கங்கள் யாவை? என்பதை ஆராய்வோமானால் இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் வண்ணம் அமைந்துள்ள தூய்மையான இடம் என கருதப்படுகின்றது. ஆலயம் எனப்படும் சொற்பதத்தை ஆராயும்போது ஆ-என்பது ஆன்மாவையும் லயம் - என்பது ஒன்றுகூடுதல் என்பதையும் குறிக்கின்றன. இதனால் ஆலயம் என்றால் ஆன்மாக்கள் ஒன்றுகூடும் இடம் என்பது தெளிவா கின்றது.

ஆரம்பகாலங்களில் ஆலயங்களிலேயே கல்வி கற்பிப்பது வழக்கமாயிருந்தது. இச் செயற்பாட்டினால் தூய்மையான உணர்வோடு கல்விகற்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. இறைவனின் அநுக்கிரகத்தால் கல்வியை வளர்க்க முடியும் என்று உணர்ந்து கொண்டவர்களாய் ஆலயங்கள்தோறும் பாடசாலைகளை நிறுவி கல்வி பயிற்றுவித்து வந்தனர். இது இறைவ-னின் தூய்மையையும் பெருமையையும் உணர்த்துவதோடு கல்வி அறிவையும் வளர்த்துக்கொள்ள உதவியாய் இருந்தது. ஒழுக்கம், பண்பு, ஞானம் தெளிவு, பொறுமை உறுதி போன்ற நற் பண்புகளை வளர்த்துக்கொண்டதனால் காலங்கள் தோறும் அறிஞர்களை, ஞானிகளை பன்மொழிப் புலவர்களை வேதாந்த சித்தார்த்த வித்தகர்களை உருவாக்கக்கூடிய சூழல்களை அன்றைய காலங்கள் தோற்றுவித்திருந்ததை நாம் வரலாறுகளில் இருந்து அறிகின்றோம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற பொய்யாமொழியை ஆராயும் போது சிறந்த அறிவியல் நூல்களை கற்பதனால் பெறக்கூடிய அறிவாற்றலின்படி ஒழுகுதலே சிறப்பானது, என்பதனால் கற்ற கல்வியை பயன்படுத்தும் பக்குவத்தை கொண்டிருக்க வேண்டும், என்பதனை கூட்டிக்காட்டுகிறதல்லவா! இவற்றையெல்லாம்விட ஒரு படி மேலே செல்லும்போது ஆலயம்கள் மனிதனுக்கு பல நூறு மடங்கு நன்மைகளை வழங்குகின்றது என்பதை உணர்ந்து அறியும் ஆற்றலுள்ளவர்களால் அறிந்துகொள்ள முடியும்.

இந்து மதமானது இறைவனை வழிபடுவதற்கு பல கட்டுப்பாடுகளையும் ஆசான ஆநுட்டான விதிகளையும் கோரிமிருக்கின்றது. இன்ன மார்க்கத்தில் செல்லும் ஒருவன் என்ன முத்தியை பெற்றுக்கொள்வான் என்பதற்கு அம் மார்க்கத்தின் விதிமுறைகள் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாறே ஆலய வழிபாட்டிற்குரிய தத்துவங்களை கடைப்பிடிக்கும் ஒருவன் அடையும் நன்மை தீமைகளை நாமும் தெளிவாக அறிய முடிகின்றது. பாலப்பருவம் தொட்டே கடைப் பிடிக்கப்படுகின்ற ஒழுக்க விதிகள் மனதில் ஆழமாக பதியும் போது அவன் எந்தக் காலத்திலும் நேர்மையுள்ளவனாக வாழ முடியும் என்பதனை இந்து மதம் காட்டிய வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆலய வழிபாட்டினால் அலைபாயும் ஆன்மாவின் மனமானது கடிவாளம் பூட்டப்பட்ட குதிரையைப்போல் நல் ஒழுக்க தடயங்களுக்குள் அடங்கி வாழவேண்டிய கட்டாயத்தை அக் கட்டாயத்தின் சூழலை உருவாக்கி விடுகிறது. சத்திய தர்ம விதிகளை கடைப்பிடித்தல் பஞ்சமா பாதகங்களிலிருந்து ஒதுங்குதல் வாய்மை தவறாதிருத்தல் சமய ஒழுக்க கட்டுப்பாடுகளுக்கு பணிந்து நடத்தல் போன்ற நல் ஒழுக்கங்களால் மனிதன்

தன்னை பொறுமையின் கோட்டிற்குள்ளே அடக்கி வாழ ஆலய வழிபாடு துணைபுரிகின்றது. எல்லோரும் கூடி இறைவனை தரிசிக்கக் கூடிய புனிதமான இடம் ஆலயமென்பதால் எல்லோருடைய செயற்பாடுகள் எண்ணங்கள் சிந்தனைகள் ஒரே நோக்கத்தை கொண்டவையாக இருப்பதனால், அவர்களுடைய தீர்மானங்களும் ஒரேமாதிரியானவைகளாகவே அமை கின்றன. ஏழையாயினும் சரி பணவசதி படைத்த வராயினும் சரி இறைவன் முன்னால் யாவரும் சமமான– வர்களே என்ற தத்துவத்தை விளக்கி நிற்பதும் ஆலய தரிசனங்களேயாகும். துன்பம் வருகின்றபோது எல்லாவற்றிற்கும் மேலான தெய்வத்திடம் அறிக்கை யிட்டு அதற்கு பரிகாரம் வேண்டி பணிந்துநிற்கின்றோம். எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் இறைவனின் துணை இன்றி எதையுமே சாதிக்க முடியாது என்ற இறுதி நிலைக்கு நாம் வரும்போது அவை இறைவனால்த்தான் முடியும் என்று நம்பிக்கைகள் பிறக்கின்றன. இந் நம்பிக்கைக– ளின் நிமித்தம் தன்னை அடக்கி இறைவனின் தலைமைத்துவத்திற்குள் தன் வாழ்க்கையை செலுத்தும் ஒவ்வொருவனும் நல்வழியையே காண்பான் என்பது உண்மையாகும். அலைபாயும் மனித மனங்களை அமைதிப்படுத்துவது ஆண்டவனைக் குறித்த பிரார்த்தனைகளும் வழிபாடுகளுமேயாகும்

சோழர்கால வரலாறுகளிலே ஒவ்வொரு மன்னர்களும் தமது வரலாற்று பெருமைகளை உலகிற்கு உணர்த்துவதற்காக பெரும்பெரும் கோயில்களைக் கட்டி வழிபாடியற்றி வந்துள்ளனர் என்பதற்கு பல ஆதாரங்கள் இன்றும் காணப்படுகின்றன.


இந்தியாவிலே மிகவும் பிரசித்திவாய்ந்த ஆலயமான தஞ்சைப் பெருங் கோயிலை இராஜராஜ சோழனும், மதுரையம்பதியை பாண்டிய மன்னனும், ஈழத்து நல்லூரை சங்கிலிய மன்னனும், மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை அரிதரபரவல்லியும் கட்டுவித்து சாபவிமோசனங்கள் பெற்றுக்கொண்டதை வரலாறுகள் எமக்கு சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறே உலகின் பல பாகங்களிலும் அமைந்துள்ள திருக் கோயில்கள் ஒவ்வொரு வரலாறுகளை உணர்த்துகின்றன என்பதில் ஐயமில்லை. இதனால் அன்றுதொடங்கி இன்று வரைக்கும் ஆலயவழிபாடுகள் நன்நெறிப்படுத்தி யுள்ளதாகவே அறிகின்றோம். எம் மனதிலுள்ள கனத்த எண்ணங்களையும் சுமைகளையும் வேதனைகளையும் இறைவன் முன்னிலையில் அறிக்கையிடுவதற்கு ஆலயங்கள் இன்றியமையாததொன்றாகும். பரம்பரை பரம்பரையாக வளர்ந்துவரும் சைவ பெருமக்கள் ஆலய வழிபாடுகளினாலேயே ஒற்றுமையையும் ஒன்றுகூடல்களையும் ஆலய திருப்பணிகளையும் வளர்த்துக்கொண்டதனால்த்தான் இன்று எங்களுடைய இருண்ட வாழ்க்கைக்கு வழி காட்டிகளாக திகழ்கின்றார்கள். இறைவனை மூலமாகக் கொண்டு அடியார்களின் ஆன்ம சுத்தி திடசித்தம் என்பன விருத்தியடைந்துள்ளதை உணரமுடிகின்றதல்லவா. தன்னலம் கருதாத இச் செயற்பாடுகளினால் நாமும் நம் மொழியும் இனமும் மதமும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்துவதில் பெருமைபெற்று விளங்குகின்றது. இன்றைய காலங்களில் கூட ஆலய திருப்பணிகளுக்காக தம்மை அர்ப்பணித்து அது நிறைவேறும் வரை அயராதுழைக்கும் தொண்டர்களையும் காண்கிறோம். இன்றைய ஈழத்தமிழரின் புலம்பெயர்ந்த வாழ்க்கையில் ஒற்றுமையும் ஒரே நோக்கமும் கொண்டிருந்த பெரியோர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது. வளர்ந்துவரும் இன்றைய நவநாகரீக உலகில் ஈழத்தமிழர்களின் கலாச்சார பழக்கவழக்கங்களை அழியாது கட்டிக்காப்பதற்கு ஆலயங்கள் உதவிநிற்கின்றன. பஞ்ச பூதங்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து திருத்தலங்கள் இன்றும் புதுமையும் பொலிவும் பெற்று விளங்குவதை நாம் அறிவோம்.

தன் இனம் மதம் மொழி என்பன கலாச்சார சூழல்களில் வளர்க்கப்படுகின்ற பெருமையைத் தாங்கி ஆலய வழிபாட்டின் சிறப்பினையும் உறுதிப்படுத்திக் கொண்டது இந்துமதம். எனவே இந்துமக்கள் எங்கு வாழ்ந்தாலும் இதய சுத்தி உடையவர்களாய் மனம் வாக்கு காயத்தினை ஒருநிலைப்படுத்தி இயல்பாகவே இறைவனை வழிபடும் இலய்சியத்தை உடையவர்களாதலால், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் உருண்டோடினாலும் ஆலய வழிபாடு எம் மக்களுக்கு கட்டாயமானதொன்றாகும்.



## சிறுவன் வரைந்த சித்திரம்

# Hanuman



Once there was a boy called Hanuman, who was the son of VAYU the god of the wind. His mum was the monkey princess. One day when Hanuman was older he didn't have any one to play with. So he wanted to play with the Sun; so he flew in the air and caught the Sun and started playing with the Sun. Hanuman started throwing the Sun up and down. The sun was very angry and saw INDRA on his magic elephant. The sun said "Indra, please help me." So Indra got off his magic elephant and went to Hanuman and said in a deep voice "let go off the sun," and Hanuman replied "no, I am playing with it." Now Indra got really angry so he threw his thunder bolt and killed Hanuman.

VAYU was flying over the world when he saw Hanuman dead on the ground. So he said, "I will stop the air until my son is alive again," and he did as he said. All the beings started dying and everything stopped. When all the Gods saw this, they told INDRA to go and say sorry to Vayu and bring Hanuman back to life. Indra complied. VAYU released air and Hanuman regained life. INDRA said to Hanuman "You will be stronger and powerful than I"

*-Arunan Sundarathasan-*

The teacher, the farher and mother and the elder brother must not be treated with disrespect especially by a Brahmana, though one be grievously offended(by them). The service of these three is declared to be the best austerity for they are declared to be the three worlds, the three orders, the three vedas; they the three sacred fires.

All duties have been fulfilled by him who honours these three, but to him who honours them not, all rights remain fruitless.


**- Manu Smiriti-**

### THY WILL BE DONE

I asked God for strength, that I might achieve;
I was made weak, that I might learn humbly to obey,
I asked for health, that I might do greater things
I was given infirmity, that I might be happy;
I was given weakness, that I might feel the need of God
I asked for all things, that I might enjoy life.
I was given life, that I might enjoy all things
I got nothing that I asked for but everything I had hoped for.
Almost despite myself, my unspoken prayers were answered.
I am among all women, most richly blessed

# எலும்பைப் பெண்ணாக்கிய தமிழ்ப்பாடல்

ஏழாம் நூற்றாண்டு. தமிழ்நாட்டின் தலைநகராகிய மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார் வாழ்ந்து வந்தார். இவர் சிவநெறி தவறாமல் வாழ்ந்து வந்தார். செல்வந்தரான இவர் தர்மம் செய்து வாழ்ந்து வந்தார்.




சிவபெருமான் கருணையால் நெடுங்காலமாய் மக்கட்பேறு இல்லாத சிவநேசருக்குப் பெண் மகள் பிறந்தாள். சீராட்டிப் பாலூட்டிப் பெருமையாய் வளர்த்ததோடு பூப்போன்ற மேனியைக் கொண்டவளாதலால் பூம்பாவை எனப் பெயரிட்டனர்.



திருஞானசம்பந்தர் என்ற திருநாமம் கொண்ட சிவப்பணி புரியும் சிவத்தொண்டரைப்பற்றிக் கேள்விப்பட்ட சிவநேசர் அவர்பால் அன்பு கொண்டு தம்மையும் தம் செல்வங்களையும் அருமை மகளையும் சம்பந்தருக்கு உடமையாக்கி விடுகின்றார். என்றாகிலும் ஒரு நாள் அவருடன் பாங்காக இணைந்து சிவசேவையில் ஈடுபட எண்ணங் கொண்டார்.



நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த மங்கை பூம்பாவையை ஒருநாள் அவள் மலர் கொய்து கொண்டிருந்தபோது கருநாகம் தீண்ட அவள் சில கணங்களில் உயிர் நீங்கினாள்.




பூம்பாவையை உயிர்ப்பிப்போருக்கு ஏராளமா பொற்காசுகள் தருவதாக அறிவித்தார். பலர் பலவிதமான் மந்திர தந்திரங்களைப் பாவித்தனர். எதுவுமே பூம்பாவையை உயிர் பெற்றெளச் செய்யவில்லை. இதனால் சிவநேசர் மிக மனமொடிந்து போனார்.
இனி எதுவும் நடக்காதென்று முடிவு எடுத்து பூம்பாவையின் உடலை எரித்துச் சாம்பலாக்கி எலும்பையும் சாம்பலையும் பெரிய கும்பத்திலிட்டு கன்னி மாடத்தில் பஞ்சணையில் வைத்தார் சிவநேசர். பாலும் பல்சுவைப் பதார்த்தங்களும் படைத்து விளக்கேற்றிப் போற்றி வந்தார்.
இப்படியிருக்கையில் திருஞானசம்பந்தர் திருவொற்றியூருக்கு வந்தார். பாதயாத்திரை செல்லும் இப்பெரும் சிவனடியாருக்காக திருவொற்றியூரிலிருந்து மயிலாப்பூர் வரையில் பந்தல் போடப்பட்டு ஆங்காங்கே தண்ணீர்ப்பந்தல்களும் அமைக்கப்பட்டன. சம்பந்தப் பெருமானும் கயிலைநாதன் அருளோச்சும் மயிலையை வந்தடைந்தார்.


சிவனேசர் என்ற பண்புமிக்க சிவனடியாரின் மகள் இறந்த துன்பத்தைப்பற்றி அறிந்த திருஞானசம்பந்தர் திருக்கோயிலின் வெளிப்புற மதிலின் அருகாமையில் எலும்பும் சாம்பலுமாக உருமாறிய பூம்பாவையின் குடத்தைக் கொண்டுவரப் பணித்தார். அவ்வாறே கொண்டு வந்து திருஞானசம்பந்தரைப் பணிந்து வணங்கினார்.
கபாலீச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் அளப்பரிய கருணையை நினைந்து மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை என்று தொடங்கிடும் பதிகத்தைப் பாடத் தொடங் கினார். குடம் உடைந்து தாமரை மலர்மீது திருமகள்போல பூம்பாவை வெளிப்பட்டாள். ஒவ்வொரு பதிகமாய்ப் பாடப்பாட பூம்பாவை மென்மேலும் ஒளிபெற்றுப் பருவ மங்கையின் முழுப்பொலிவுடன் தோன்றிய விந்தையை எல்லோரும் கண்டு களித்தனர்.
சிவநேசரின் அயராத தொண்டும் திருஞானசம்பந்தரின் மேன்மையான சிவ அருளும் பூம்பாவையின் சொல்லொணா பாக்கியமும் தமிழ்மொழிக்கே உரித்தான சொல்வன்மையும் எலும்பையும் பெண்ணாக்கியதன்றோ!

# திருநாவுக்கரசர்



சிவம் பெருக்கும் புண்ணிய பூமியாகிய இந்தியாவின் தென் பாகமாகிய தமிழகத்தில் திரு முனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் சைவ மரபில் கி.பி ஆறாம் நூற்றாண்டின் பிற்ப குதியில் புகழனார் என்பவ ருக்கும் மாதினியார் என்ற அம்மையாருக்கும் மகன–ாகப் பிறந்தார் திருநாவுக்கரசர். பெற் றார்கள் இவருக்கிட்ட பெயர் மருள்நீக்கியார். இவருக்குத் திலகவதியார் என்ற பெயருடைய தமக்கையார் ஒருவரும் இருந்தார்.

பெற்றார் இருவரும் சிவபதம் அடைந்த பின் திருநா வுக்கரசர் தமக்கையாரிடம் வளர்ந்து வந்தார்.

தமக்கையாரின் முயற்சியினால் இவர் கல்விகேள்விக–ளில் சிறந்து விளங்கினார். கல்வி கற்றதின் எதி–ரொலியாக திருநாவுக்கரசர் உலகப் பற்றுக்களைத் துறந்து தான தருமங்களைச் செய்யலானார். முடிவில் ஒரு துறவி யாகவும் மாறினார். அக்காலத்தில் சமணமதம் எங்கும் நன்கு பரவியிருந்தது.

இதனால் இச்சமயத்தின் கொள்கைகளை அறியும் ஆர்வம் இவருக்கு உண்டானது.

பாடலிபுரம் சென்று சமணகுருமாரின் அறிவுரைக ளைக்கேட்டு தமது சைவ சமயத்தைத் துறந்து சமணசமயத்தைத் தழுவினார்.

சமணசமய நூல்களை வேகமாக ஆர்வமுடன் கற்றார். அந்நேரத்தில் சமணசமயத்திற்கு எதிராக இருந்த புத்தசமயத்தைத் தன் அறிவாற்றலால் வாதில் வென்றார். இதனால் சமணர்கள் இவருக்குத் தர்மசேனர் என்ற பட்டத்தை வழங்கினர். தம்பியின் மதமாற்றம் திலக வதியாருக்குக் கவலையைக் கொடுத்தது. தம்பியை மீண்டும் சைவ சமயத்திற்கு மீட்டுத்தரும் பணியை வீரட்டானேச்சரத்தில் இருக்கும் சிவபெருமானிடம் ஒப்படைத்துவிட்டு அங்கேயிருந்து சிவனுக்குத் தொண்டு செய்து வரலானார். ஒருநாள் திலகவதியாரின் கனவில் தோன்றிய சிவபெருமான் **அம்மையே உம் வேண்டுதலை யாம் ஏற்றுக் கொண்டோம். உம் தம்பிக்கு சூலை நோய் வரச்செய்து அவனை யாம் ஆட்கொள்வோம்.** என உரைத்தார். நாட்கள் கடுகி விரைந்து சென்றன. தருமசேனருக்குச் சூலைநோய் வந்தது.

தருமசேனர் துடித்தார்! கதறினார்! வருந்தினார்! பல மருந்துகளை உட்கொண்டார். வயிற்று வலியால் துடிதுடித்தார். சமணர்கள் தம்மால் ஆனமட்டும் முயற்சித்தனர். சமணர்களின் எந்த மந்திர தந்திரமும் இவரின் சூலைநோயைக் குணமாக்கவில்லை. சமணர்கள் இவரின் தீராதநோயைக் கண்டு வெறுத்து ஒதுக்கிவிட்டனர்.

தமக்கையாரை அழைத்துவரும்படி தூது அனுப்பினார். சமணர்கள் வாழும் இடத்திற்கு தான் வரமுடியாதென்று தமக்கையாரான திலகவதியார் மறுத்துவிட்டார். தர்மசேனராகிய மருள்நீக்கியார் இரவோடு இரவாக தமக்கையாரின் இடத்தையடைந்து அவரது கால்களில் விழுந்து வருந்திக் கதறினார். மனம் வருந்திய திலகவதியார் தம்பியைப் பார்த்து தம்பி உன்நோய் தீர ஒரே வழி சிவன் திருவடியைப் பற்றுவதுதான். ஆகவே வீரட்டானேச்வரத்திற்குச் சென்று சிவபெருமானை வழிபடு என்று கூறி நமசிவாய மந்திரம் ஓதிய திருநீற்றைக் கொடுத்துப் பூசும்படி கூறினார். திருநீற்றைப் பூசிச்கொண்ட மருள்நீக்கியார் வீரட்டானேச்வரத்தை நோக்கிப் புறப்பட்டார். தமக்கையும் உடன் சென்றார். திருக்கோயிலை வலம்வந்து வணங்கியதும் உணர்ச்சி ஊற்றுப்போல் சுரந்து திருவருளால் தமிழ்ப்பாக்கள் இயற்றும் உணர்வு அவருக்கு உதித்தது. பாக்கள் பாடிக் கண்ணீர் விட்டுக் கதறித் தொழுதார். அப்போது திருநாவுக்கரசு என்ற பெயரால் ஏழுலகும் ஏத்தப் பெறுவாய் என்ற ஒலி கேட்டது. அவரது சூலை நோய் அகன்றது. திருநாவுக்கரசர் திருநீறும் கண்டிகையும் புனைந்தார். மனம் ஆண்டவனையே எண்ணியது. முக் கரணங்களாலும் இறைவனையே பற்றி நின்றது நாவுக்கரசரின் உள்ளம். நாவுக்கரசர் சிவநெறி சேர்ந்து விட்டார் என்ற செய்திகேட்டு மனம் பொறுக்காமல் சமணர்கள் குமுறினர். நமது சமயம் வீழ்ந்தது என மருண்டனர். தருமசேனர் சைவசமயத்தில் சேர்ந்து விட்டார் என சமணர்கள் மகேந்திர பல்லவனிடம் முறையிட்டனர்.

திருநாவுக்கரசரை அழைத்துவர ஆணையிட்டான் மன்னன். அமைச்சர்கள் சென்றனர். அழைத்தனர், அரசன் ஆணையிது எனக் கூறினர். இது கேட்டதும் திருநாவுக்கரசர் நகைத்தார். யார் எனக்கு அரசன்? என்று கூறி **நாமார்க்குங் குடியல்லோம் நமனை**

**அஞ்சோம்** எனப் பாடினார். அமைச்சர்கள் செய்வதறியாது திகைத்தனர். திருநாவுக்கரசரை வணங்கியழைத்தனர். நாவுக்கரசரும் இறைவன் திருவருள் நமக்குண்டு எனக் கூறி அரச சபை சென்றார். சினங்கொண்ட அரசன் நாவுக்கரசரை நீற்றறையில் இடுவித்தான். ஏழுநாட்களும் சுண்ணாம்பறையில் இறைவனைத் தியானித்தபடியே இருந்தார். இங்குதான் **மாசில் வீணையும்** என்ற பதிகத்தையும் பாடினார். வெப்பம் நிறைந்த நீற்றறை குளிர் நிறைந்த இடமானது. சமணர்கள் மேலும்மேலும் கோபம் கொண்டனர். பாற்சோற்றில் நஞ்சு கலந்து கொடுத்தனர். யானையை ஏவிக் கொல்லச் செய்தனர். **சுண்ணவெண் சந்தனச் சாந்தும்** என்ற பதிகத்தைப் பாடினார். கொல்ல வந்த யானை நாவுக்கரசரை வலம் வந்து பணிந்தது. கல்லிற் கட்டிக் கடலில் எறியுங்கள் என்று ஆத்திரம் மிகுந்து மன்னன் கத்தினான். கல்லிலே கட்டிக் கடலிலே தள்ளினார்கள். **சொற்றுணை வேதியன் சோதிவானவன்** எனப் பாடினார். கல்லு கப்பலாய் மிதந்தது. இப்போதான் அரசனும் கண்விளித்தான். உண்மைகளை அறிந்து தவித்தான். சைவசமயத்தைத் தன் சமயமாகக் கொண்டான். இதன் விளைவாய் சமணப் பள்ளிகள் யாவும் இடிக்கப்பெற்றன. குணபரேச்வரம் என்ற திருக்கோயில் மன்னனால் புதுப்பிக்கப்பட்டது. நாவுக்கரசர் திருவதிகையிலிருந்து பதிகள் தோறும் சென்று பதிகங்கள் பாடினார். சீர்காழியில் சம்பந்தரைச் சந்தித்தார். சம்பந்தர் அப்பரே என்றழைத்தார். அன்றுமுதல் அப்பரானார். சம்பந்த ரோடு இணைந்து பல பதிகங்கள் பாடினார். இறைவனை வழிபட்டு சம்பந்தரிடம் விடைபெற்று நல்லூர் சென்று இறைவனது திருவடித் தீட்சை பெற்றார்.

பின்னர் திங்களூர் சென்று அங்குள்ள அப்பூதியார் என்ற அந்தணரின் இல்லம் சென்றார். அப்பூதியாரின் மூத்த மகன். பாம்பு தீண்டி இறக்கவே அவன் உடலைத் திங்களூர் சிவாலயத்திற்கு எடுத்துவரச் செய்து **ஒன்று கொலாமவர்** என்ற பதிகம் பாடி உயிர்பெறச் செய்தார். இறந்தவன் உயிர்பெற்றான். யாவரும் மகிழ்ந்தனர்.

பின்னர் திருவீழிமிழலை சென்று சம்பந்தரைக் கண்டார். பின் இருவரும் பல தலங்களை வழிபட்டு திருமறைக்காடு என்ற வேதாரண்யம் அடைந்தார்கள். திறவாது அடைபட்டுக் கிடந்த திருக்கோயிலின் கதவுகளைத் திறக்கத் திருப்பதிகம் பாடுமாறு சம்பந்தர் நாவுக்கரசரை வேண்ட **பண்ணினேர் மொழியாளுமை பங்கரோ** எனத் தொடங்கிப் பாடினார். திருக்கதவும் திறந்தது. அங்கிருந்து திருக்காளத்தியை அடைந்தார். வடகயிலை செல்லும் ஆவல் அவர் மனதில் உருவானது. இதனால் வாரணாசி வந்தார். அங்கிருந்து புறப்பட்டு இரவு பகல் பாராது நடந்தார். இலை, கிழங்கு, கனி எதுவும் உண்ணாது நடந்தார். பாதங்கள் தேய்ந்தன.

இரண்டு கைகளையும் ஆதரவாகக் கொண்டு தாவித்தாவிச் சென்றார். கைகளின் மணிக்கட்டுக்களும் கரைந்து சிதைந்தன. கற்கள் நிரம்பிய வழியில் மார்பினால் நகர்ந்து நகர்ந்து சென்றார். எலும்புகள் முறிந்தன. புரண்டு புரண்டு சென்றார். உடம்பு முழுவதும் சிதைந்தது. ஆனால் உள்ளம் மட்டும் தேயவில்லை. உடல் தேய்ந்து செயலற்றுக் கிடந்தார். அப்போது சிவபெருமான் அவர்முன் தோன்றி முனிவர் வேடம் தாங்கி அவர்முன் வந்து வினவியபோது திருக்கயிலை சென்று இறைவனைக் காணச் சென்று கொண்டிருக்கின்றேன் என்றார்.

இறைவன் மறைந்தார். எழும்பு நாவினுக்கரசனே எழுந்திரு என அசரீரி எழுந்தது. நாவுக்கரசர் எழுந்தபோது உடல் பழைய நிலையிலேயே இருந்ததை எண்ணி மனமகிழ்ந்து இறைவா! திருக்கயிலையைக் காண அருள்வாய் என வேண்டினார். இறைவன் அங்குள்ள பொய்கையைச் சுட்டிக்காட்டி அதில் மூழ்குக திருக்கயிலையில் இருக்கும் எமது திருக்கோலத்தை திருவையாற்றில் காண்க என அருளி மறைந்தார். இவ்வாறு தாம் கண்ட கைலாயக் காட்சியை உலக மக்கள் உணர்ந்து அறிய **மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி** என்னும் பதிகத்தைப் பாடி அருளினார்.

இவ்வாறு பல தலங்கள் சென்று மேலும் பல பதிகங்களைப் பாடிச் சித்திரைத் திங்கள் சதய நாள் அன்று திருப்புகலூர் பெருமான் முன் நின்றார். அங்கு நெஞ்சம் கசிந்துருகி **எண்ணுகேன் என்சொரல்லி எண்ணுகேனோ** என வரும் திருத்தாண்டக திருப்பதிகத்தைப் பாடி **புண்ணியா உன்அடிக்கே போதுகின்றேன்** எனக் கூறிய வண்ணம் இறைவன் திருவடியை அடைந்தார்.

**நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்**
**என்க டன்பணி செய்துகி டப்பதே**

# MAHASIVARATHIRI

Sivarathiri means Siva's night. Sivam means happiness so it can also mean "Happy night". It can also mean very good health.

There are many who have observed Sivarathiri and attained eternal bliss. There are many stories of how this Holy day came about. One story relates to the end of the world when there was great darkness. Holy mother Uma prayed to Siva and obtained His Grace that all who observed this Holy day and night should obtain eternal Bliss.

Another story is that at the end of the world there were heavy rains and floods and the world went under the flood waters. Then Maha Vishnu turned himself into a great wild boar and lifted the world from the flood. Then He created Brahma from the lotus in his navel and told him to create the world and Vishnu went back to His Milky Ocean.

Then after creation was over He(Brahma) mounted His Swan and went to admire the world He had created. It was so beautiful that He became very proud and went to the Milky Ocean where Vishnu was immersed in Dhyana Yoga. Brahma woke Him and said "Who are you to sleep here, get up". Vishnu disturbed from His Yoga said "Who are you to ask me that question?"

Brahma in asserting his greatness, said "I am the creator of this beautiful world" Vishnu in responding declared, "I am great because I take care of this world. So this argument developed into a big fight between these two Gods, that lasted for one hundred years and it seemed like the end of the world. Siva in his mercy, to prevent the destruction of the world and the Gods, appeared between them like a great pillar of light and a voice said that whoever finds the top and the bottom of the pillar of light would be the greatest.

Brahma got onto His great swan and went to find the top of the pillar of light. Vishnu changed himself into a wild boar and went to find the bottom of the pillar of light. Brahma failed to find the top of the head of Siva. However Vishnu going below touched the feet of Siva, caused Siva to bend to offer blessing and thus Vishnu touched His head. ( The beautiful dynamic symbol of their story relates to the need for humility to achieve the greatest objectives in life)

Siva then changed from the mountain of light into a Siva Lingam and this happened on the night of Sivarathiri.

Another story is the Devi playfully closed the eyes of Siva with her two hands and the world is plunged into darkness and the Gods prayed to Siva and this night is called Sivarathiri.

The correct way to observe this fast is to take only one meal the previous day, and to fast the next day and keep awake all through the night thinking and doing auspicious things and to pray to Siva. In the morning give food to the poor and break the fast, and keep awake during the day and sleep only at night. Such fasting helps one develop will power, makes one realises the hunger of the poor and also it reduces the gross vibrations of the body and enables one to reach deeper intuitive levels of consciousness.

The greatness of this holy night was told by a Deva to the God Sooriya, Muruga, Yama, Indra, Chandra, Agni, Kubera and they observed this fast and obtained boons.

It is said that Vishnu observed this fast and obtained the chakra , and that Brahma obtained Saraswathy. The greatness of this fast is thus emphasised in the puranas.

There is another story - a hunter in the jungle, running away from a tiger climbed up a Vilva tree. The tiger waited under the tree and when night came the hunter felt sleepy. To keep awake he plucked the leaves and dropped them down one by one. Under this tree there was a Siva Lingam and it was the night of Sivarathiri so unknowingly and accidentally the hunter had kept awake and did archana

with Vilva leaves to the Lingam under the tree and he obtained the eternal Bliss of Sivaloka. When the world is heavy with sinful deeds and Siva does the dance of destruction and the world is destroyed; then Mother Uma prays to Siva to have mercy on the Jeevas, and Siva in his love and mercy creates the world again. At the end of the world even Goddess Uma(Sakthi) merges with Lord Siva in the night of Sivarathiri and the two becomes one. This fast should be observed for 24 years or 12 years continuously. In the temples there is pooja 4 times during the night:— at 6.30 p.m., 8.30 p.m.,12.30 p.m. and 5.30 a.m. These 4 poojas during the night symbolise the offering of our mind, intelligence, ego, and desire at the feet of Siva. Those who are unable to keep awake until midnight, and during this period immerse themselves in prayer and other forms of sadhana.

Divine Grace is a manifestation of the cosmic free will in operation. It can alter the course of events in a mysterious manner through its own unknown laws which are superior to all natural laws and can modify the latter by interaction. It is the most powerful force in the Universe.

It descends and acts only when it is invoked by total self-surrender. It comes from within, because God resides in the heart of all beings. Its whisper can be heard only in a mind purified by self surrender and prayer.

Rationalists laugh at it, and atheists scorn at it but it exists. It is a decent of God into the soul's zone of awareness. It is visitation of force unexpected and unpredictable. It is a voice spoken out of cosmic silence. It is Cosmic Will which can perform authentic miracles under its own laws.

"Bhagavan Sri Ramana"

Footnote

[These stories are of course highly symbolic-the Puranic stories being referred to as dynamic symbols. One must see the inner significance of the stories and the messages they convey. In the case of Brahma for example, His "consort" Saraswathy referred to as dynamic symbol. Saraswathy refers to Divine knowledge. In the case of Vishnu, "chakra" refers to Time and Luckshmy refers to the various divine powers that one can obtain by observing the tapas of fasting of all the 5 senses i.e. not food or taste alone - but fasting also the senses of sight, hearing, touch and smell.

**J. Jagadeesan.**

## SIGNIFICANCE OF OM

1. Om is a symbol representing Brahman (supreme Reality).
2. It is used as a Mantra (word-symbol) in meditation.
3. Om is considered the most potent and sacred of all mantras to invoke the Supreme Reality.
4. We can understand the unknown God by proceeding from and making use of what is known to us already. This is the reason and the necessity of using idols to represent the Ideal Brahman. The idol can be gross or subtle made of stone or metal or it can be sound or thoughts; the word symbol or sound "OM" is considered the subtlest.
5. All the things in the world are made up of different combinations of the five elements; space, air, fire, water and earth.
6. Sound is the essence of space and therefore the proper vehicle to take us from the terrestrial would to the Transcendental
7. The sound OM is chosen because this single-syllable word represents the entire phenomenon of sound.
8. It is constituted of 3 different distinct sounds A, U, M or OM.
9. A begins in the throat at the root of the tongue; U is between the root of the tongue and the lips (middle sound); M is the concluding sound produced by the closing of the lips.
10. There can be no sounds beyond sounds

beyond the limits of A and M. so all sounds are represented by a combination of these three sounds A, U, M.

11. A represents the waking state of consciousness, U represents the dream state and M represents the deep sleep state, and the silence that follows Om is called Amatra-Om and it represents the 4th state of Pure Consciousness called "Turiya" - the Transcendental Reality.

12. Silence is the substratum or background for producing sounds. When there is no sound there is undisturbed silence.

13. The 3 sounds may be considered to have emerged out of silence, existed in silence and merged back into silence.

In the same way the 2 states of consciousness emerge from Brahman, (the pure Consciousness) exist in Brahman and finally merge back into Brahman.

14. Therefore the word OM represents the entire manifested world and the unmanifest reality.

15. The seeker while meditating withdraws from A (the walking), U (the dream) and M (deep sleep) state and enters the silence. In this vital silence, the meditator experiences the supreme state of God-Realisation.

------------

Healthy mind is in a Healthy body, says an old English proverb. Thus, to have a healthy mind, our body should be healthy.

Recent researches in the medical field indicate that the meat products are the main cause for several illnesses.

Our ancesters found, through their experiences, that the vegetarian food was good for healthy livi\ng. Hence they forbid non- vegetarian food. This helped them to live longer, without killing animals and be kind to all living things.

- Anon

SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS

MAIN AGENT FOR AIRLANKA

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES

GLEN CARRIERS LIMITED

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ

Tel: 0181 740 8379/ 0181 749 0595

Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G

BONDED WAREHOUSE

LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Western Jewellers

## *Jewellers & Gem Merchants*


## *Specialist in 22ct Gold Jewllery*

உங்கள் கனவில் தோன்றும்
அத்தனை தங்க நகைகளையும்
எங்கள் பிரமாண்டமான
நகைக்கடையில் பெற்றுக்
கொள்ளலாம்.

பெண்களின் அழகிற்கு அழகு
சேர்க்கும் அத்தனை தங்க
நகைகளையும்
அசல் 22 கரட்டில்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்.

1500 ஸ்ரேலிங்
பவுண்களுக்கு ஒரே
முறையில் நகைகள்
வாங்குவோருக்கு 8 கிராம்
தங்க நாணயம் இனாமாக
வழங்கப்படும்

1000 ஸ்ரேலிங்
பவுன்களுக்கு நகைகள்
வாங்குவோருக்கு
ஒரு சோடி தோடும்
ஜிமிக்கியும் இனாம்



பொன்னுருக்கலுக்கான சகல
வசதிகளும் உரிய முறைப்படி
செய்து கொடுக்கப்படும்.

**வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்**

**230 Upper Tooting Road, Tooting, London SW17 7EW**
**Tel: 0181 767 3445 Fax: 0181 767 3753**
Web:http://www.luxmi.com/western

# WELCOME CENTRE

P.S.Ragu

## STAR MUSIC







திரை, இசை நட்சத்திரங்களின் புதிய – பழைய திரைப்பட **Original** பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, **TV** நிகழ்ச்சிகள், **TV** நாடகங்கள், ஒடியோக்களையும், வார, மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**209 HIGH STREET NORTH,**
**EAST HAM,**
*(Opposite to East Ham Under ground stn.)*
**LONDON E6 1GH**
**TEL: 0181 552 2727**
**FAX: 0181 - 692 7759**

**247 HIGH STREET NORTH,**
**MANOR PARK,**
**LONDON E12 6SJ**
**TEL: 0181 472 6084**

**Open 7 days a week 11.00 am to 11.00 pm**



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைப்பு செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 23. 01. 99 அன்று வெளியிடப்பட்டது.